# சந்திப்



SSP
ஸ்ரீ செண்பகா பதிப்பக



# சந்திப்பு

(நாவல்)

**க.மனோகரன்**

**ஸ்ரீ செண்பகா பதிப்பகம்**
32/B கிருஷ்ணா தெரு
பாண்டிபஜார்,
சென்னை – 600 017
தொலைபேசி 044–24331510
மின்னஞ்சல் : shree shenbaga@gmail.com

## நூல் விவரக் குறிப்பு


**SANDHIPPU**

சந்திப்பு

க.மனோகரன்

பதிப்பு – ஸ்ரீ செண்பகாவின் முதல் பதிப்பு – ஜூலை 2016

நூல் வகை – நாவல்

மொத்த பக்கங்கள் – 240

நூலின் அளவு –1x8 டெமி.

கணினி அச்சு – மா.ரஞ்சி, சென்னை–15
அலைபேசி : 8190075842, 9786411730

அச்சிட்டோர் :
சூர்யா பிரிண்டர்ஸ் அண்ட் பைண்டர்ஸ்,
மதுரை – 625 003.
தொலைபேசி – 0452 2373510.

**விலை – ரூ.200/–**

# ஸ்ரீ செண்பகாவின் பதிப்புரை

**ச**ந்திப்பு என்ற இந்த நாவல் இன்றைய தினம் நாம் வாழும் சமூகத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. பலரது சந்திப்புகளும் அவற்றின் விளைவுகளாக நாம் நமது அன்றாட வாழ்வில் காணும் நிகழ்வுகளுமே இந்த நாவலில் கதைப் போக்காக உள்ளன. இதில் நாம் காணும் அத்தனை பாத்திரங்களும் நாம் தினந்தோறும் சந்திக்கும் நபர்களே. பல இடங்களிலும், பல சமயங்களிலும் நிகழும் சந்திப்புகளையும் அவற்றின் தொடர்விளைவுகளையும் ஒரு கற்பனைக் கதையில் தொகுத்து சுவையான நாவலாகப் படைத்துள்ளார் திரு. மனோகரன். யாரையும் குற்றம் சொல்லாமல், நாம் வாழும் சூழ்நிலையை தெளிவாக விளக்குகிறது இந்நாவல். நடைபெறும் நிகழ்வுகளில் நம்மையும் அறியாமல் நாமும் ஒரு பாத்திரமாகி நிற்கும் நிலைமைதான் உள்ளது. நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்று எளிதில் பிரித்தறிய முடியாத ஒரு நிலையே இன்று நாம் காண்பது. தம்மையறியாமலே பலரும் சிறு தவறுகள் முதல் தேசதுரோகச் செயல் வரையிலும் ஈடுபடுகிறார்கள். இந்த நிலைமைகளை சுவையாகவும், விறுவிறுப்பாகவும் விளக்கும் 'சந்திப்பு' என்ற இந்த நாவலை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்வு கொள்கிறோம்.

பதிப்பாளர்

**ஸ்ரீ செண்பகா பதிப்பகம்**

## நூலாசிரியர் உரை

வணக்கம்!

'சேதுபதியின் சேர்வைக்காரன்', 'சக்ராயுதம்' ஆகியவற்றைத் தொடர்ந்து 'சந்திப்பு' என் மூன்றாவது நாவலாக வெளிவருகிறது. 'சந்திப்பு' நாம், நம் வாழ்வில் கேள்வியுறும், கண்ணுறும் மற்றும் அனுபவிக்கும் நிகழ்வுகளின் தொகுப்பு. இவை நம்மை நேரடியாகவும் மறைமுகமாகவும் பலவகையிலும் பாதிக்கின்றன. வாழ்வெனும் பல பட்டைகள் கொண்ட கண்ணாடியில் பிரதிபலிக்கும் சில சம்பவங்களின் தொகுப்பே 'சந்திப்பு'. உயர்கல்வி பெற முயல்வோர், வேலைக்காக அலைபவர்கள், ஏற்கெனவே பணிகளில் இருப்பவர்கள் அவை தொடர்பாக பல பிரமுகர்களைச் சந்திப்பவர்கள் போன்றோருக்கு 'சந்திப்பு' எளிதில் விளங்கும். இது போன்ற சந்திப்புகளே பலரது வாழ்வையும் தீர்மானிக்கின்றன. பல கதவுகளை அடைத்து விடுவதும் புதிய கதவுகளைத் திறந்துவிடுவதும் பெரிய இடங்களில் நடக்கும் சந்திப்புகளே. நேற்று வெறும் கையுடன் அலைந்தவர்களை இன்று கோடிகளில் புரள வைப்பதும். இன்றைய பெரிய மனிதர்களை நாளை காலி டப்பாக்களாக மாற்றிப் போடுவதும் இது போன்ற சந்திப்புகளே. நல்லவர்கள் சந்திக்கும்போது நாடு நலம் பெறுகிறது. அதேவேளை, பணப்பேய்களும், பதவிப் பசி கொண்டோரும் சந்திக்கும்போது தீயவையே நடக்கின்றன. பலரின் வாழ்வும் நாட்டின் வளமும் பறிபோய்விடுவதுதான் நடக்கிறது.

இச்சந்திப்புகளில் ஈடுபடுவோரில் பலரும் மனதில் தீய நோக்கம் இல்லாவிடினும், தம் பிழைப்புக்காகவும், வசதிகளுக்கு ஆசைப்பட்டும், இச்செயல்களைச் செய்பவர்களாக உள்ளனர். இப்படி நடந்துகொண்டால் தான் தாம் பிழைக்க முடியும், இது தான் உலகின் வழி என்ற எண்ணம் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. இப்படி நடந்துகொண்டு வளமான வாழ்க்கை வாழும் சிலரைப் பார்த்துப் பிறரும் அவ்வழியைப் பின்பற்றுகிறார்கள். இதனால் இதுதான் இன்றைய நடைமுறை என்றாகிவிட்டது. இன்றைய சூழலில் மக்கள் சூழ்நிலைக் கைதிகளாகவே இயங்கும் நிலை உள்ளது. சந்திப்புகளும் அவற்றின் விளைவாக நடக்கும் தவறுகளும் நாட்டையே சீரழிக்கும் நச்சுவளையமாக

வளர்ந்துள்ளன. இந்த வளையத்தின் துவக்கம் எது முடிவு எது என்று கூற இயலாத நிலையும் உள்ளது. உயர்ந்த லட்சியங்களுடன் உள்ளே நுழைவோரையும் ஆழத்திலிருந்து இழுத்துக்கொள்ளும் மாயச்சுழலாக இன்றைய பொது வாழ்வு உள்ளது. தவறு செய்பவர்கள் தாம் செய்வது தவறு என்ற உணர்வே இல்லாமல் அதுவே சரியானது என்று எண்ணுகிறார்கள். இந்தத் தவறுகளைச் சரியானபடி செய்வதே 'திறமை' என்று நினைக்கிறார்கள். அதன் மூலமே வலிவும் வளமும் பெற முடியும் என்று நம்புகிறார்கள்.

இந்தச் சக்கர வியூகத்தை உடைக்கவும் நடக்கும் தவறுகளை வெளிக்கொண்டு வரவும் பொது வாழ்வில் தூய்மையை விரும்பும் சிலர் பாடுபடுகிறார்கள். ஒரு சில பத்திரிகையாளர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதனால் தான் இருளில் நடக்கும் சந்திப்புகள் குறித்த விபரங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. இப்படியான ஒரு சந்திப்பையும் அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளுமே 'சந்திப்பு'. இன்றைய பொது வாழ்வில் நல்லவன் என்றும் கெட்டவன் என்றும் தனித்தனியே எவரும் இல்லை. நல்லவனே கெட்டவனாகவும் கெட்டவனே நல்லவனாகவும் இருக்கிறான். இதனால் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டாமல், நேர்மை, திறமை உள்ள பலரும் எப்படி இந்த வளையத்தின் கண்ணிகளாக மாறி விடுகிறார்கள் என்பதையே 'சந்திப்பு' விவரிக்கிறது.

'சந்திப்பு' கற்பனைக் கதை என்றாலும் நம் வாழ்வைப் பிரதிபலிப்பது. இந்நூலைச் சிறப்பாக வடிவமைத்துள்ள திருமதி.இரஞ்சிதா மாதவன் மற்றும் வெளியிடும் ஸ்ரீ செண்பகா பதிப்பகத்திற்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை – 130 அன்புடன்

15–6–2016

**க.மனோகரன்**

அலைபேசி : 9952510045

வாழ்க்கைப் பாதை என்பது சுதந்திரமானதாகவும், அழகானதாகவும் இருக்க முடியும். ஆனால், அந்தப் பாதையை நாம் தொலைத்துவிட்டோம். மனிதர்களின் ஆன்மாக்களில் பேராசை விஷத்தைக் கலந்துவிட்டது. அந்தப் பேராசை, வெறுப்பால் இந்த உலகத்துக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டது. துன்பத்திலும் துயரத்திலும் நம்மைத் தள்ளிவிட்டது........

நமது அறிவு யார் மீதும் நம்பிக்கையற்றவர்களாக நம்மை ஆக்கிவிட்டது. நமது புத்திசாலித்தனம் கடின மனம் கொண்டவர்களாகவும், இரக்கமற்றவர்களாகவும் நம்மை ஆக்கிவிட்டது. மிதமிஞ்சி சிந்திக்கிறோம். மிக மிகக் குறைவாக அக்கறை கொள்கிறோம். இயந்திரங்களைவிட நமக்கு அதிகம் தேவை மனிதமே. புத்திசாலித்தனத்தைவிட நமக்கு அதிகம் தேவை இரக்கவுணர்வும் கண்ணியமும். இந்தப் பண்புகள் இல்லையென்றால் வாழ்க்கை கொடூரமானதாகிவிடும்.

நாம் ஒவ்வொருவரும் அடுத்தவர்களின் மகிழ்ச்சியை ஆதாரமாகக்கொண்டுதான் வாழ வேண்டும். அடுத்தவர்களின் துன்பத்தை ஆதாரமாகக் கொண்டல்ல. நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் வெறுக்கவும் துவேஷம் கொள்ளவும் வேண்டியதில்லை. இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் இடம் இருக்கிறது. நம்முடைய நல்லபூமி வளம்மிக்கது, எல்லோருடைய தேவைகளையும் நிறைவேற்றக் கூடியது.

**'தி கிரேட் டிக்டேட்டர்'** திரைப்படத்தின் இறுதியில் சார்லி சாப்லின் ஆற்றும் உரை.

# 1

"அண்ணன் தான் மனசு வச்சு இந்த விஷயத்தை நல்லபடியா எனக்கு முடிச்சுக் குடுக்கணும்."

சொல்லிவிட்டு நல்லதம்பி மாசிலாமணியின் முகத்தைப் பார்த்தார். நல்ல தம்பி ஒரு ஒப்பந்தகாரர். மாநிறம். மினிஸ்டர் ஒயிட் சட்டை, தூய வெள்ளை வேட்டி. வலது கையில் முரட்டு தங்க பிரேஸ்லட், இடது வலது கைகளில் தலா இரண்டு பெரிய மோதிரங்கள், கழுத்தில் பிரேஸ்லெட்டுக்கு இணையான முரட்டு சங்கிலி என ஒரு ஒப்பந்தகாரருக்கான அத்தனை அடையாளங்களுடன் அமர்க்களமாக இருந்தார். வயது அறுபதை நெருங்கினாலும் நல்ல உடற்கட்டுடன் இருந்தார். வழுக்கை விழாத நெற்றியில் ஒரு சந்தனப்பொட்டு இருந்தது. தங்க பிரேமுடன் கண்ணாடி பளபளவென இருந்தது. தலை முடியும் மீசையும் ஓரளவு வெளுத்திருந்தது.

மாசிலாமணி நல்லதம்பியை அமைதியாக பார்த்தார். நல்லதம்பியின் மிகுந்த பணிவை அவர் கவனித்தார். மாசிலாமணியும் அறுபது வயதைக் கடந்தவராகவே தெரிந்தார். இளநீல அரைக்கை சட்டையும் சாம்பல் வண்ணத்தில் பேன்ட்ஸ்சும் அணிந்திருந்தார். சிவந்த நிறமும் முன் வழுக்கையும் அவரை எடுப்பாகக் காட்டின. வலது கையில் ஒரு மோதிரமும் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியும் இருந்தன. நெற்றியில் மெல்லிய ஒரு விபூதிக் கீற்று தெரிந்தது. முகத்தில் மீசை இல்லாமல் தெளிவாக இருந்தார். தலையை பின்நோக்கி வழித்து சீவியிருந்தார். இடது கை விரல்களிடையே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. அவர் ஒரு முன்னாள் அரசு அதிகாரி. அரசாணைகள், விதிகளுடன் தேவையான இதர நடைமுறைகளும் நன்றாக அறிந்தவர் என்பதால் அரசினரும் ஓய்வு பெற்றிருந்த அவரைத் தமக்கு ஆலோசகராக வைத்துக் கொண்டனர். மாநிலம் முழுவதிலும் அவர் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது. அவர் எந்த ஊருக்குப் போனாலும் அது அரசு முறைப் பயணம் போலவே நடந்தது. அதிகாரிகள் அவ்வளவு மரியாதை கொடுத்தார்கள். கையெழுத்துப் போடாதது மட்டுமே குறை.

மாசிலாமணிக்கு நல்லதம்பியின் பணிவு பிடித்திருந்தது.

'மொபைலை ஆப் செஞ்சு இங்கே வைச்சிடுங்க' டீபாயை காட்டினார். நல்லதம்பி அப்படியே செய்தார்.

"சரி நல்லதம்பி! இந்த வேலையை நீங்க தனியா செய்றீங்களா. இல்லை யாரோடவும் கூட்டா? பெரிய வேலைகளாச்சேன்னுதான் கேக்குறேன்."

"நான் தனியா தான் செய்றேன். நமக்கு சப்போர்ட் ஆந்திரா ரெட்டிதான். அவர்தான் உங்ககிட்டே பேசச் சொன்னார். அனேகமா அவரே உங்ககிட்டே போன்ல பேசுவாருங்க. நான் ஏற்கெனவே பல்லாவரம் பாலம் வேலை செஞ்சிருக்கேன். ஆளும் மிஷின்களும் சொந்தமாவே வச்சிருக்கேனுங்க."

"ஓ!" மாசிலாமணி சிகரெட் சாம்பலை ஆஷ் டிரேயில் தட்டினார். பிறகு ஒரு நிமிடம் யோசித்தார்.

நல்லதம்பி அந்த அறையில் இருந்த ராமானந்த பல்வாவை பார்த்தார். ஒல்லியாகவும் சிவந்த நிறத்திலும் வளர்த்தியாக இருந்த பல்வா தலையை அசைத்தபடியே மெல்லிய புன்னகையை காட்டினார். ராமானந்த் பல்வா தான் அந்தத் துறையின் செயலாளர். அவர் ஏற்கெனவே நல்லதம்பிக்கு அறிமுகமானவர்தான். பல்வா நீல நிற முழுக்கை சட்டையும் கருப்பு நிற பேன்ட்சும் அணிந்து பளிச் என்று இருந்தார். தலைமுடி பர்கன்டி நிறத்தில் இருந்தது.

நல்லதம்பி அந்த ஹோட்டல் அறையைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினார். இது ஒரு ஷெராட்டன் வகை ஐந்து நட்சத்திர ஹோட்டல். பதினெட்டாம் நூற்றாண்டின் கலை அழகுடன் ஆசனங்களும், அலங்காரங்களும் அழகாய் அமைக்கப்பட்டிருந்தன. சிறிய சர விளக்கு ஒன்று டீப்பாய்க்கு நேர் மேலே தொங்கி அறைக்கு மேலும் அழகு சேர்த்தது. அவற்றை நல்லதம்பி ரசனையுடன் பார்த்தார். ஒரு மூலையில் மதுபாட்டிலும் சில கண்ணாடி டம்ளர்களும் இருந்ததை அவர் கவனித்தார். உடனே மெல்லியதான ஒரு புன்னகை அவர் உதடுகளில் தெரிந்தது.

மாசிலாமணி தொண்டையைச் செருமினார். "நல்லதம்பி! டேர்ம்ஸ் லாம் தெரியும்ல! பத்து பெர்சென்ட் கமிஷன் மேல குடுக்கணும். எனக்கு ஒரு 'சி', செக்ரட்டரி சாருக்கு ஒரு 'சி' குடுக்கணும். ப்ராஜெக்ட் எஸ்டிமேட் மொத்தம் இரண்டாயிரம் கோடி. கமிஷன் தொகையை முன்னாலேயே கொடுத்துடணும்! அப்பதான் மேட்டரையே ஓப்பன் பண்ண முடியும்." சிரித்தார்.

செயலாளர், “நல்லதம்பிக்கு விபரம் தெரியும் சார். அது ரொம்ப கரெக்டான ஆளு!” என்று பரிந்துரை செய்தார்.

செயலாளர் தனக்கு பரிந்து பேசியது நல்லதம்பிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உடனே அவர், “இப்பவே அட்வான்ஸ் குடுத்துடறேன் அண்ணே! கொண்டு வந்திருக்கேன். கீழே கார்ல தான் இருக்கு.”

“குட்!” என்ற மாசிலாமணி, “எவ்வளவு இருக்கு? எத்தனை பெட்டி?” என்று கேட்டார்.

“அம்பது இருக்கு. அஞ்சு பெட்டி.”

“சரி! கொண்டு வரச் சொல்லுங்க. யாரும் உள்ளே வரவேண்டாம். வெளியில வைச்சுட்டுப் போகட்டும். நீங்களே வாங்கி உள்ளே வச்சுடுங்க.”

நல்லதம்பி தன் மொபைலை எடுத்து “டேய்! ராஜா! பெட்டிகளை ரூம் நம்பர் 502க்கு கொண்டு வந்துடு!” என்றார். பிறகு மறுபடியும் பணிவாக “இதை நல்லபடியா எனக்கு செஞ்சு குடுங்கண்ணே! உங்களுக்கு நான் இன்னும் செய்ய காத்திருக்கேன்!” என்றார். நல்லதம்பி இதை மாசிலாமணியை நேராகப் பார்த்து நிறுத்தி நிதானமாக சொன்னார். அவருக்குத் தெரியும், இந்த வார்த்தைகள் எவ்வளவு முக்கியம் என்பது.

மாசிலாமணி அமைதியாக புன்னகை செய்தார். அவர் அதைப்புரிந்து கொண்டார். செயலாளர், “டோன்ட் ஓரி நல்லதம்பி! சார் சொன்னால் அது மேலிடம் சொன்ன மாதிரி தான். உங்களுக்கு கான்ட்ராக்ட் கெடச்சுடுச்சுன்னு நெனச்சுக்குங்க.” “யு ஆர் வெரி லக்கி!” என்றார்.

அதைக் கேட்டதும் மாசிலாமணி பெரிதாக ‘சத்தமிட்டு’ சிரித்தார். அதில் பெருமிதமும் திருப்தியும் தெரிந்தன. நல்லதம்பிக்கும் நிம்மதியாக இருந்தது.

சில நிமிடங்களில் அறைக்கதவு தட்டப்பட்டது. நல்லதம்பி மட்டும் எழுந்து போய் கதவைத் திறந்தார். “அப்படியே வெச்சிடு. நான் உள்ளே எடுத்து வைத்துக் கொள்கிறேன். நீ போய் வண்டில இருந்து மத்த பெட்டிகளை கொண்டு வா!”

மூன்று பெட்டிகளை வைத்துவிட்டு போனவன் மறுபடியும் இரண்டு பெட்டிகளுடன் வந்தான்.

“சரி! நீ போய் வண்டில இரு. இப்ப வந்துடுவேன். எங்கேயும் போயிடாதே!”

அவன் பெட்டிகளை வைத்துவிட்டு போனான்.

ஐந்து பெட்டிகளையும் நல்லதம்பி அறைக்குள் கொண்டுவந்து வைத்து திறந்து காட்டினார். மாசிலாமணி தலையசைத்ததும் பெட்டிகளை மூடி சாவிகளை அவரிடம் கொடுத்தார். சாவிகளை வாங்கிய மாசிலாமணி அவற்றை அறையின் கப் போர்டில் வைத்துவிட்டு வந்து உட்கார்ந்தார். அவரும் செயலாளரும் ஆளுக்கொரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தனர். நல்லதம்பி அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

செயலாளர் அதிகம் பேசவில்லை. அவர் வட மாநிலத்துக்காரர் என்பதால் மொழிப்பிரச்னை வேறு இருந்தது. ஆனால் நடக்கும் எல்லாவற்றுக்கும் அவரின் சம்மதம் இருந்தது தெளிவாக தெரிந்தது. அவர் பீகார் மாநிலத்தில் ஒரு வியாபாரக் குடும்பத்திலிருந்து வந்தவர். தன் சொந்த மாநிலத்தின் சூழ்நிலையும் பணி நிலைமைகளும் மிகவும் மோசமாக இருந்ததால் வந்து சேர்ந்த இடமான தமிழ்நாடு மிகவும் பிடித்துப் போய்விட்டது. இங்கு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு இருந்த மரியாதையும் வசதிகளும் அவரை பிரமிக்க வைத்தன. வந்த வேகத்திலேயே சொந்தமாக ஒரு வீட்டை பெசன்ட் நகரில் வாங்கினார். அதில் நிறுத்துவதற்கு ஒரு கார் வாங்கினார். அரசாங்க கார் வசதியும் கிடைத்தது. மனைவிக்கு தனியாக ஒரு கார் அன்பளிப்பாகவே கிடைத்துவிட்டது. பிறகு பல துறைகளில் சேவை செய்ததற்கு பரிசாக சென்னையில் பல பகுதிகளிலும் வீடுகள் வாங்கினார். வீட்டு வேலைக்கு மட்டுமே நான்கு பேர் அரசாங்க செலவில் வைத்திருந்தார். ஆட்சிகள் மாறினாலும் எல்லோரிடமும் அனுசரணையாக நடந்து நல்ல அதிகாரி, நம்பிக்கையானவர் என்ற பேர் எடுத்தவர். "நடப்பது நடக்கட்டும். நமக்கு பங்கு வந்தால் சரி" என்ற போக்கில் செயல்படுபவர். அன்றைக்கும் அதுபோலவே அவர் இருந்தார். நமது ஆட்சியாளர்களும் நம் ஆட்களைக் காட்டிலும் வடக்கத்தி ஆட்களையே இது போன்ற விஷயங்களில் நம்பினார்கள். அவர்களின் விசுவாசமே தனி என்றார்கள் நம் ஆட்சியாளர்கள்.

மாசிலாமணி டேபிள் ட்ராயரிலிருந்து ஒரு சில அச்சிட்ட படிவங்களை எடுத்தார். தன் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு, படிவங்களை ஒரு முறை படித்துப் பார்த்தார். தனக்குத் தானே "ம்! இது தான்" என்று மெல்லச் சொல்லிக் கொண்டார். பிறகு "நல்ல தம்பி! இது தான் டெண்டர் அப்ளிகேஷன் பார்ம். ரேட் எல்லாம் டைப் செஞ்சே இருக்கு. நீங்க பாத்துட்டு கையெழுத்துப் போட்டுக் குடுத்தால் போதும். மத்ததை சார் பார்த்துக் கொள்வார்." என்று செயலாளரைக் காட்டினார்.

அந்தப் படிவங்களை டீபாயின் மேல் வைத்தார். நல்லதம்பி அவற்றை எடுத்து தன் ப்ரீப் கேசில் வைத்துப்பூட்டினார். "ரொம்ப நன்றி அண்ணே!"

"நல்லதம்பி! சீக்கிரமே டென்டர் அப்ளிகேஷனைக் குடுத்துடுங்க. அப்பவே மீதி பணத்தையும் குடுத்துடுங்க. எந்த காரணத்தினாலும் தாமதம் வேண்டாம். பிறகு காரியம் கெட்டுடும். அப்புறம் வேலையை டைம்ல முடிக்கிறது, மற்ற ஸ்டாப்களுக்கு உள்ளது எல்லாம் உங்க பொறுப்பு."

மாசிலாமணி உண்மையான அக்கறையுடன் சொன்னார். நல்லதம்பியை அவருக்கு மிகவும் பிடித்ததற்கு அவரின் பணிவு மட்டும் காரணம் இல்லை. 'இன்னும் செய்வதற்கு காத்திருக்கிறேன்' என்ற தூண்டில் வார்த்தைகளும் காரணம். நல்லதம்பி அவரைச் சந்திக்க வருவதற்கு முன்பே அவரைப் பற்றிய விபரங்கள் எல்லாம் மாசிலாமணிக்குத் தெரியும். ஆனாலும் அவரைப் பற்றி எதுவும் தெரியாதது போலவே நடந்துகொண்டார். அவரின் பேச்சும் மிகவும் குறைவாகவே இருந்தது. அவர் கவனம் முழுவதும் நல்லதம்பியை எடைபோடுவதிலேயே இருந்தது.

நல்லதம்பி தன் பக்கத்தில் இருந்த ஒரு பையின் ஜிப்பைத் திறந்து உள்ளே இருந்து ஒரு ப்ளாக் லேபிள் விஸ்கியை எடுத்து அதை டீபாயின் மேல் பவ்யமாக வைத்தார். மாசிலாமணியைப் பார்த்து புன்சிரிப்புடன், "அண்ணே" என்றார். "என் ப்ரெண்ட் நேத்துத்தான் சிங்கப்பூரிலிருந்து வந்தான்."

மாசிலாமணி "ஓ! தேங்க் யு!" என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

நல்லதம்பி எழுந்தார். "அப்ப நான் புறப்படறேன் அண்ணே!" என்று இரு கைகளையும் கூப்பினார். செயலாளரைப் பார்த்து "வர்ரேன் சார்!" என்றபடி புறப்பட்டார். செயலாளரும் நல்லதம்பியும் தலையசைத்தனர். செயலாளரும் புறப்படுவதற்காக எழுந்தார். மாசிலாமணி "நீங்க கொஞ்சநேரம் கழித்து போகலாம். ரெண்டு பேரும் சேர்ந்து போக வேண்டாம்." என்று தடுத்தார்.

உடனே செயலாளர் அப்படியே உட்கார்ந்து கொண்டார்.

முதலில் நல்லதம்பி கதவைத் திறந்துகொண்டு வெளியேறினார். பிறகு மாசிலாமணி "செகரட்டரியிடம், "சார்! நீங்க ஃபாலோ பண்ணிக்குங்க. அப்ளிகேஷனோட மீதி தொகையையும் கொடுத்துடுவாரு. தொகையை கொடுத்ததும் தாமதமில்லாமல் ப்ராசஸ் பண்ணச் சொல்லிடுங்க. சீஃப் என்ஜினீருக்கு சொல்லிடுங்க.

அமைச்சர் கிட்ட நான் பேசிடுறேன்." அமைச்சர் என்று அவர் சொன்னது அந்தத் துறையின் அமைச்சரை அல்ல. இன்னொரு அமைச்சரை. அவர்தான் எல்லா அமைச்சர்கள் சார்பாகவும் விஷயங்களைப் பேசி முடிப்பார். மேலிடத்தில் அவர்தான் முக்கியமான விஷயங்களைப் பேசக் கூடியவர்."

செயலாளர் "நான் பாத்திக்கிடும்" என்றார்.

சுமார் அரை மணி நேரம் சென்றதும்; செயலாளரும் வெளியேறினார். அறையை விட்டு வெளியே வந்ததும் அவர் ஒரு கிரிக்கெட் தொப்பியை எடுத்து தலையில் மாட்டிக் கொண்டு, தலையை லேசாக குனிந்தபடியே, தன் காரை நோக்கி நடந்தார். முடிந்தவரை எச்சரிக்கையாக இருந்தார்கள்!

# 2

"தமிழ்நாடு முழுவதற்குமான நான்கு பெருவழிச் சாலைகள் அமைப்பதற்கு தமிழக அரசால் டென்டர் கோரப்பட்டிருந்தது. தமிழ்நாட்டின் முக்கியமான பெரிய வேலைகள் பெரும்பாலும் ஆந்திர பெரு முதலாளிகளாலேயே ஒப்பந்தம் பெறப்பட்டுச் செய்யப்பட்டன. தமிழ்நாட்டின் மதுக் கடைகளுக்கான கள்ளச் சரக்குகளும் பெரும்பாலும் இவர்களாலேயே சப்ளை செய்யப்பட்டு வந்தன. சாலை ஓரங்களில் செய்யப்பட்ட டெலிபோன் கேபிள் பதிக்கும் வேலைகளும் ஆந்திரர்களாலேயே செய்யப்பட்டன. நெடுஞ்சாலைச் சுங்க வசூலும் இவர்கள் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. சில வேலைகளை இவர்கள் நேரடியாகவும், பலவற்றை அவர்கள் ஏலம் எடுத்து பிறகு தமிழ்நாட்டில் இருக்கும் சிறு ஒப்பந்தகாரர்கள் மூலமாகவும் செய்து வந்தார்கள். நம்முடைய மக்களுக்கு இதுபோன்ற விபரங்கள் தெரிவதில்லை. கவுன்டரில் உட்கார்ந்து வசூல் செய்பவர்கள் நம் ஆட்களாக இருந்ததே இதற்கு காரணம். பெரிய வேலைகளுக்குத் தேவையான முதலீடு செய்யும் வசதி அவர்களிடம் வெகு தாராளமாக இருந்தது. மத்திய அரசாங்கத்தில் அவர்களுக்கு இருந்த அதிகமான செல்வாக்கைப் பயன்படுத்தி மாநில அரசை வளைக்கவும் அவர்களுக்கு முடிந்தது. அப்படிப்பட்ட வலிமை வாய்ந்தவர்களில் முக்கியமானவர் எஸ்.கே. ரெட்டி. அவரது மைத்துனர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். மாமனார் ஆந்திராவில் ஒரு அமைச்சர். ஆந்திர மாநிலத்திலும் அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்பதாக இருந்தது. ஆந்திர அமைச்சரவை அவர்கள் தயவில்தான் இருந்தது.

ரெட்டியின் தமிழ்நாட்டு ஆட்களில் ஒருவர் தான் நல்லதம்பி. ரெட்டி ஒப்பந்தம் பெற விரும்பும் வேலைகளை தமிழ்நாட்டில் அவர் சார்பாகப் பெற்று செய்து கொடுப்பதே நல்லதம்பியின் வேலை. அதிலேயே நல்லதம்பி பெரும் கோடிசுவரனாக ஆகிவிட்டார். இப்போது தமிழ்நாட்டில் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடக்கப்போகும் நான்கு பெரிய சாலை, அதனுடன் சேர்ந்த பாலங்களின் வேலைகளை ஒப்பந்தம் பெறுவதற்காகவே

மாசிலாமணியுடன் சந்திப்பு நடந்தது. எதிர்க்கட்சிகளின் பிரச்னை எழும்பாமலும், அரசாங்கத்துக்கு சிக்கல்கள் வராமலும் வேலை ஒப்பந்தங்களை முடித்துக் கொடுப்பதில் மாசிலா மணி வல்லவர் என்பதால் ஆளும் கட்சி அவர் மூலமே இது போன்ற வேலைகளைச் செய்து வந்தது. அதன்படியே நல்லதம்பி மாசிலாமணியை சந்தித்து முறைப்படி பேசி நல்லபடியாக வேலையை முடித்துக் கொண்டார். இன்னும் பத்து அல்லது பதினைந்து நாட்களில் ஒரு மெகா கான்ட்ராக்ட் அவர் கையில் வந்துவிடும்.

நல்லதம்பி மிகுந்த திருப்தியுடன் காரில் ஏறி அமர, கார் கிளம்பியது. அது ஒரு வெள்ளை நிற புதிய மாடல் ஸ்கார்பியோ. ஒரு வாரத்துக்கு முன்புதான் புதிதாக வாங்கியிருந்தார். காரில் போகும் போதே அவரின் சந்தோஷத்தை கவனித்த டிரைவர், "என்ன மாமா! சந்திப்பு நல்லபடியா முடிஞ்சுருச்சு போல!" என்று சிரித்தக் கொண்டே கேட்டான்.

டிரைவர் அவருடைய உறவுக்காரப் பையன். ஒரு வகையில் மருமகன் முறை. நம்பிக்கையானவன், அவருக்காக எதையும் செய்யக்கூடியவன் என்பதால் அவனையே தன் டிரைவராகவும், முக்கிய உதவியாளாகவும் வைத்திருந்தார். அவரது இரகசியமான கொடுக்கல் வாங்கல்களின் போது அவனைத்தான் உடன் அழைத்துக் கொண்டு போவார்.

"ஆமாம்டா! செக்ரட்டரியும் நம்மளப் பத்தி நல்லாச் சொன்னாரு. அதுவும் ரொம்ப உதவியா இருந்துச்சு. அந்த ஆளை நல்லா கவனிச்சுக்கணும்டா!"

"மாமா! அதான் தீபாவளி வருதுல, செமயா கவனிச்சுடுவோம்."

நல்லதம்பி, இந்த ஒப்பந்தத்தால் தனக்கு கிடைக்கப்போகும் லாபத்தை மனதால் கணக்கிட்டுப் பார்த்தார். தமிழ்நாட்டில் தனக்கு சமமான கான்ட்ராக்டர் யாரும் இல்லை என்பதை நினைத்து அவருக்கு மிகவும் கர்வமாகவும் இருந்தது. பிறகு அடுத்தடுத்து ஆக வேண்டிய வேலைகளில் அவர் மனம் மூழ்கியது. கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பை சிந்தாமல் சிதறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முடிந்தால் இதன் மூலம் மேலிடத்தில் நல்ல பெயர் வாங்கி, நேரடி தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை.

# 3

“சென்னையில் அன்று காலையிலேயே வெயில் கடுமையாக ஆரம்பித்துவிட்டது. நேரம் செல்லச் செல்ல வெப்பம் அதிகமாகி 12 மணிக்கே 36° யை தொட்டது. மே மாதம் முடிந்து ஜூன் துவங்கிவிட்ட போதும் வெயிலின் கடுமை குறையாமலேயே இருந்தது. அன்று கடல்காற்று நகருக்குள் 2 மணிக்குத் தான் வரும் போல தெரிந்தது. கடல் காற்று வந்தால்தான் வெப்பம் கொஞ்சம் குறையும். வெயில் தாங்காமல் உள்ளே ஏ.சி. குளிருக்காகவே சதீஷும், ப்ரியாவும் எக்ஸ்ப்ரஸ் அவென்யுவில் இருக்கும் KFC யில் ஏதாவது சாப்பிடலாம் என்று நுழைந்தார்கள். காலியாக இருந்த ஒரு மேசையைப் பார்த்து உட்கார்ந்தார்கள். சதீஷ் நீல நிற ஜீன்சும் கறுப்பு நிற இந்தியன் டெரய்ன் முழுக்கை சட்டையும் காதுகளில் ஸ்டீல் தோடுகளும் அணிந்து ட்ரெண்டியாக இருந்தான். கையில் ஒரு பிளாட்டினம் ப்ரேஸ்லெட்டும்; கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியும் தென்பட்டன. தலையில் ஜெல் தடவி ஸ்பைக்ஸ் வைத்திருந்தான். முகத்தில் ஒரு நாள் ஸ்டப்ஸ் அவனை அழகாகக் காட்டியது. சதீஷ் மாநில அமைச்சரின் ஒரே மகன். முழுப்பெயர் சதீஷ்குமார்.

ப்ரியாவும் நீல நிற ஜீன்சும் பிங்க் நிறத்தில் கறுப்பு பூக்கள் போட்ட டாப்சும் அணிந்து கவர்ச்சிகரமாக இருந்தாள். அவளின் முழுப் பெயர் ப்ரியாமாலினி. தோள் வரை தொங்கிய தலைமுடியும், காதில் பெரிய தங்க வளையங்களும் கழுத்தில் ஒற்றை சங்கிலியும் அவளுக்கு அழகூட்டின. அவள் நடந்து வரும் போது சுற்றிலும் Jadore பெர்ப்யூம் வாசம் சுழன்றடித்து வந்தது.

நாற்காலியில் உட்கார்ந்து கைப்பையை மேசையில் வைத்த அவள், “உஸ்! இட்ஸ் ஸோ ஹாட் அவுட் சைட்” என்றாள்.

“ப்ரியா! உனக்கு என்ன வேணும்!”

“ஐ வான்ட் ஒன் பர்கர் அன்ட் கோக்!!”

பேசும் போதும் அவளின் விரல்கள் மொபைலில் விளையாடிக் கொண்டே இருந்தன.

சதீஷ் பாக்கெட்டிலிருந்து பர்சை எடுத்தபடியே கவுன்டரை நோக்கி போனான். ப்ரியா சுற்றிலும், நண்பர்கள் யாரும் வந்திருக்கிறார்களா என்று பார்த்தாள். யாரும் இல்லை. தன் மொபைலில் நம்பர்களைத் தட்டி யாருடனோ பேசினாள். “நானும் சதீஷும் இங்கே வந்தாச்சுடா. Express Avenu- வில் KFC –யில்தான் இருக்கோம். நீயும் இங்கேயே வந்துடு. We will be waiting!”

அன்று சனிக்கிழமை என்பதால் எக்ஸ்பிரஸ் அவென்யூவில் கூட்டம் அதிகமாக இருந்தது. பெரும்பாலும் இளைஞர்களும் இளம் பெண்களுமே கலகலவெனச் சிரித்தபடி நடமாடினார்கள். கார் கம்பெனி ஒன்று ஒரு புது மாடலை ஒரு அழகி மூலம் அறிமுகம் செய்து கொண்டிருந்தது.

சதீஷ் ஒரு ட்ரேயில் இரண்டு பர்கர் இரண்டு கோக் பாட்டில்களுடன் ஒரு ப்ரெஞ்ச் ப்ரை கோப்பையையும் கொண்டு வந்தான். அவைகளை மேசையில் வைத்துவிட்டு உட்கார்ந்தான். இரண்டு பேரும் மெல்லப் பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள்.

சதீஷ் சலித்துக்கொண்டே தன் வாட்சைப் பார்த்தான், “ஷிட்! இங்கேயே மணி 4.30 ஆயிருச்சு. இனி இவன் வந்து எப்போ ரிசார்ட் போய்ச் சேர்வது?” “என்னிக்காச்சும் இவன் டயத்துக்கு வந்திருக்கானா?”

ப்ரியா, “Cool டா! இன்னும் டென் மினிட்ஸ்ல ராஜேஷ் வந்துடுவான். 5 ‘O’ Clock இங்கிருந்து கிளம்பினால் 5.40க்கெல்லாம் போயிடலாம். நீ பாரேன். அங்கே எல்லாம் 6.30க்கு மேல தான் வருவாங்க. டோன்ட் ஒரி! பார்ட்டியே 7 மணிக்குத்தான் ஆரம்பமாகும்.”

ப்ரியா போக்குவரத்துத் துறை அதிகாரி ஒருவரின் மகள், ஒரே மகள்.

அவர்கள் மிக மெதுவாக சாப்பிட்டார்கள். ராஜேஷ் வரும் வரை நேரம் கடத்த வேண்டும். அந்த வெயிலில் வெளியே போக முடியாது.

“டேய்! நாளைக்கு எதுனா மூவி போலாமா? கிறிஸ்டபர் நோலன் படம் Interstellar போலாமா? சூப்பரா இருக்கும்!”

“ஏய்! உனக்கு எதுக்கு அந்தப் படமெல்லாம். எதுனா உனக்கு விளங்குமா?”

“டேய்! பாக்குறவன்லாம் விளங்கிட்டா பார்க்குறான். நீ வரியா இல்லையா?”

“பார்க்கலாம். நாளைக்கு எதுனா வேலையிருக்கான்னு செக் பண்ணிக்கிறேன். நானும் அந்தப் படம் பார்க்கணும்னுதான் நெனச்சேன். But, டிக்கட் கிடைக்குமா தெரியலை. செக் பண்ணிக்கலாம்.”

அவர்கள் பர்கரை சாப்பிட்டு விட்டு கோக் பாட்டிலை எடுத்தார்கள். அப்போது ப்ரியாவின் மொபைல் ஒலித்தது. அவள் அதை எடுத்துக் கேட்டாள். பிறகு “நீ அங்கேயே நில். நாங்க உடனே வந்துடுறோம்” என்றவள் சதீஷிடம்,

“டேய்! ராஜேஷ் வந்துட்டானாம். நாம போகலாம். எதிரில் நிக்கிறானாம்!”

அவர்கள் கோக் பாட்டிலை எடுத்து கடகடவென்று குடித்து காலி செய்துவிட்டு, வேகமாக வெளியேறினார்கள்.

லிப்டில் கீழே போய் பார்க்கிங்கில் இருந்து சதீஷின் பைக்கில் வெளியே வந்தார்கள். சாலையின் மறு ஓரத்துக்கு வந்து நின்றுகொண்டு ராஜேஷைத் தேடினார்கள். சதீஷ், “அவன் எங்கேடி நிற்கிறான்? அவன் பைக்கையே காணோமே!”

அப்போது அவர்கள் அருகில் ஒரு புத்தம் புதிய சிகப்பு நிற Ford Figo வந்து நின்றது. அதன் முன் கதவு அழகாக திறந்தது. அதில் டிரைவர் சீட்டில் ராஜேஷ்.

“ஹாய் சதீஷ்! ஹாய் ப்ரியா!” ராஜேஷ் உற்சாகமாக அழைத்தான்.

‘ஹாய் ராஜேஷ்! என்னடா இது கார்! அதுவும் புதுசா இருக்கு! கலக்குறேடா!’ ப்ரியாவுக்கு ஒரே ஆச்சரியம்.

“எங்க அப்பா எனக்கு Present பண்ணிருக்கார். நேத்து தான் எடுத்தோம்.”

ராஜேஷ் குரலில் பெருமை வழிந்தது.

‘ஓ! நைஸ் கார்!’ என்றாள் ப்ரியா சதீஷிடம். “சதீஷ்! நான் ராஜேஷ் கூட கார்ல போறேன். நீ பைக்ல வா!” அவள் காரில் ஏறி ராஜேஷின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். ராஜேஷ்! போகலாம்!” என்றபடியே கதவை சாத்தினாள். அடுத்த வினாடி கார் கிளம்பியது.

சதீஷ் ரோடில் தன் பைக்கில் தனியே நின்றான்.

சதீஷ்க்கு ஒரே கோபமாக வந்தது. காரைப் பார்த்தவுடன் தன்னை கைகழுவி விட்டு ப்ரியா ராஜேஷுடன் போனது அவனுக்கு, தன்னை அவமானப்படுத்தியதாக நினைத்தான். தன் கோபத்தையெல்லாம் ஒன்று சேர்த்து பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்தான்.

சதீஷீக்கு ப்ரியாவுடன் ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் நட்பு உண்டு. பள்ளிக்கூடத்திலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள் என்பதால் ஒரு நல்ல நெருக்கம் இருந்தது. ராஜேஷ் அவளுடன் சமீப காலமாகப் பழகும் நண்பன்தான். அவன் காரில் வந்தவுடன் ப்ரியா அவனைப் பெரிதாக எண்ணிக்கொண்டு அவனுடன் சென்றது சதீஷீக்கு வருத்தமாக இருந்தது. அவள் தன்னுடன் பைக்கில்தான் வரவேண்டும் என்று அவன் விரும்பினான்.

உண்மையில் ப்ரியாவுக்கு சதீஷ்தான் நெருங்கிய பிடித்தமான நண்பன். புதுக்காரில் போகும் குழந்தைத்தனமான ஒரு ஆர்வத்தில் மட்டுமே அவள் ராஜேஷுடன் போனாள். இதை சதீஷ் புரிந்து கொள்ளாமல் கோபப்பட்டான். 'கார் இருந்தால் தான் மரியாதை போல' என்று கோபப்பட்டான். அவனுக்கு தன் பைக்கைப் பார்க்கவே பிடிக்கவில்லை. ராஜேஷ் மேலும் அவனுக்குக் கோபமாக வந்தது.

ராஜேஷ் பிரபல ஒப்பந்தகாரர் நல்லதம்பியின் ஒரே மகன். சற்று கறுப்பாகவும் உயரமாகவும் இருந்தான். அவன் நீல நிற ஜீன்சிலும், சற்று அவன் நிறத்துக்குப் பொருந்தாத ப்ரௌன் நிற டீ ஷர்ட்டிலும் இருந்தான். கழுத்தில் ஒரு முரட்டு சங்கிலி வலது கையில் அதற்கு இணையான தங்கத்தாலான பிரேஸ்லெட்டும் அணிந்து வித்தியாசமாக காட்சியளித்தான். நண்பர்கள் என்னதான் அவனை, அவனது நகைகளுக்காக கலாட்டா செய்தாலும் அவன் அதில் எதையும் குறைத்துக்கொண்டதில்லை. அது எங்கள் குடும்பப் பழக்கம் என்று சொல்லிச் சிரித்துக் கொள்வான். கோபப்படமாட்டான்.

அவர்கள் மூன்று பேரும் அன்று மாலை அவர்களின் நண்பன் ஒருவன் கொடுக்கும் பர்த் டே பார்ட்டியில் கலந்துகொள்ள ஈ.சி.ஆர். சாலையில் இருந்த ஒரு ரிசார்ட்டுக்கு போவதற்காகவே இங்கே சந்திப்பது என்று முடிவு செய்திருந்தார்கள். சதீஷ் தன் வாட்சைப் பார்த்தான். மணி 5.10 ஆகியிருந்தது.

"அப்பாவிடம் சொல்லி உடனே நாமும் இதை விட சூப்பராக ஒரு கார் வாங்கிவிட வேண்டும்." முடிவு செய்த சதீஷ் தன் பல்சர் பைக்கின் திராட்டிலை திருகிவிட வேகம் அதிகமான பைக் சீறிப் பாய்ந்து மாநகர் போக்குவரத்தில் கலந்தது.

**ஹோ**ட்டல் ஈஸ்டர்ன் ஈகிளில் இளைஞர்கள் பட்டாளம் ஒன்று அமர்க்களம் செய்து கொண்டிருந்தது. பெரும்பாலும் பணக்காரர்களின் வாரிசுகளே அதில் அதிகம்பேர். பணக்காரப் பையன்களுடனேயே ஓட்டிக்கொண்டு வசதிகளை அனுபவிக்கும் ஒரு

சில சாதாரண குடும்பத்து இளைஞர்களும் அங்கே மகிழ்ச்சியாக திரிந்தார்கள். ஒருவன் மைக் முன்பாக கிடாரை இசைத்தபடி ஒரு ஆங்கிலப் பாடலைப் பாடினான். அவனைச் சுற்றிலும் சிலர் ஆ, ஊ, என்று சத்தமிட்டபடி ஆடினார்கள். இரு பெண்கள் இடுப்பை வளைத்து அழகாக நடனம் ஆடினார்கள். இடையிடையே ஒருவன் ஜோக்குகள் சொல்ல அனைவரும் பலத்த சத்தமிட்டுச் சிரித்தனர். ராஜேஷீம், சதீஷீம் நண்பர்களுடன் பேசி மகிழ்ந்தபடி வந்திருந்த எல்லோரையும் கவனித்துக் கொண்டு சிரித்தபடி அங்குமிங்கும் திரிந்தனர். எல்லோரும் ராஜேஷின் புதிய காரைப்பற்றியே விசாரித்தார்கள். அவனே அன்றைய ஹீரோவாக இருந்தான். இடையிடையே ப்ரியாவும் அவனது காரைப் பற்றி நண்பர்களிடம் புகழ்ந்தாள். இதையெல்லாம் சதீஷ் கவனித்தபடி நண்பர்களுடன் பேசி சிரித்துக் கொண்டிருந்தான். எல்லாவற்றையும் மீறி அவனிடம் ஒரு சோர்வு தெரிந்தது.

"நம்ம கேங்லயே புதுக்கார் வாங்கிருக்கிறது ராஜேஷ் தான்."

"அவனுக்கென்ன! அவங்க அப்பா பெரிய கான்ட்ராக்டர். நெனைச்சவுடனே புதுக்கார் வாங்கிட்டான்." அதுக்குலாம் மச்சம் வேணும்டா!"

நண்பர்கள் பலவாறாக ராஜேஷை புகழ்ந்தார்கள்.

ஒருவன், "மச்சி! டேய்! நீ புதுக்கார் வாங்கிட்டு கம்முனு இருக்கே! நீ எப்ப பார்ட்டி குடுக்குறே?" என்று ஆர்வமாக கேட்டான்.

உடனே மற்ற நண்பர்களும், "Where is the Party?" என்று கோரஸ் அடித்தார்கள்.

பார்ட்டியின் முடிவில் சில நாட்கள் கழித்து, அதே ஹோட்டலில் ராஜேஷ் ஒரு பார்ட்டி கொடுப்பது என்று முடிவு செய்தார்கள். கூட்டம் உற்சாகக் கூச்சலுடன் கலைந்தது. அவர்களுக்கு காரணம் எல்லாம் முக்கியம் கிடையாது. ஏதாவது காரணத்துக்காக வாரந்தோறும் ஒரு பார்ட்டி வேண்டும். அவ்வளவுதான்.

சதீஷ்க்கு தானும் கார் வாங்கவேண்டும் என்பது ஒரு வெறியானது.

"காரை வாங்கிவிடலாம். டிரைவிங் நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லையே! முதலில் டிரைவிங் லைசென்ஸ் வேண்டும். அப்பா இருக்கிறார். பார்த்துக் கொள்வார்."

அவனுக்கு அப்பா மேல் அப்படி ஒரு நம்பிக்கை; பாசம்.

அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. அவன் அப்பா இதுவரை அவன் கேட்ட எதையும் மறுத்ததில்லை. இப்போது அவன்

வைத்திருந்த பைக் கூட அவர் இவனுக்கு மூன்று மாதங்களுக்கு முன்புதான் வாங்கிக்கொடுத்தது. இருந்தாலும் அவன் ஒரு புதிய கார் கேட்க வேண்டும் என்று முடிவு செய்தான். "பார்த்து ஓட்டணும்ப்பா!" என்று மட்டும் சொல்வார். ஆனால் நிச்சயம் வாங்கிக் கொடுப்பார். ஒரே மகன் அல்லவா! சேர்க்கும் அவ்வளவு செல்வத்தையும் ஆளப்போகிறவன் அவன் தானே!

அன்று அங்கு இருந்த இளைஞர்கள் பெரும்பாலும் பெரிய இடத்துப் பிள்ளைகள். பணம் அவர்களுக்குப் பஞ்சமே இல்லை. படிப்பு அவர்களுக்கு ஒரு பிரச்னையே கிடையாது. விரும்பிய கல்லூரியில் லட்சங்களைக் கொட்டி, அவர்களின் பெற்றோர் சீட் வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். கல்லூரி தொடங்கிய உடனே புது பைக், மொபைல் எல்லாமே கைக்கு வந்துவிடும். வீட்டில் கார் இருந்தாலும் அதில் போகமாட்டார்கள். படிப்பு முடித்தால் வேலை கிடைக்குமா என்ற கவலையும் அவர்களுக்குத் தேவையில்லை. அமெரிக்காவில் மேல்படிப்பு அல்லது தம் சொந்த நிறுவனங்களில் வேலை என்று செட்டில் ஆகிவிடுவார்கள். படிக்கும் நான்கு ஐந்து ஆண்டுகள் இனிமையான பொழுதுபோக்கு மட்டுமே. எந்தக் கவலையும் இல்லாதவர்கள்.

# 4

புதுடெல்லியிருந்து ஹைதராபாத் வழியாக சென்னைக்கு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் பெரும் சத்தத்துடன் நுழைந்து வேகம் குறைத்து ப்ளாட்பாரம் என் 1–ல் வந்து நின்றது. பயணிகள் கூட்டம் கூட்டமாக அவசர அவசரமாக இறங்கினார்கள். சிகப்புச் சட்டை அணிந்த போர்ட்டர்கள் சுறுசுறுப்பாக வந்து நின்றார்கள். சற்று முன்பு வரை அமைதியாக இருந்த அந்த பிளாட்பாரம் பயணிகள், வரவேற்க வந்தவர்கள், போர்ட்டர்கள் என்று பலரும் ஏற்படுத்திய இரைச்சலால் நிரம்பியது. இந்த ரயிலின் வருகை பப்ளிக் அட்ரஸிங்சிஸ்டத்தில் அறிவிக்கப்பட்டது அந்த இரைச்சலில் தெளிவாக கேட்கவில்லை. இரண்டாம் வகுப்பு ரிசர்வ்ட் பெட்டியில் இருந்து இறங்கி மெதுவாக வெளியே வந்தார்கள் ஹசன், காதர் இருவரும். அந்த இளைஞர்கள் ஹைதராபாத்தில் இருந்து வந்திருந்தார்கள். அவர்கள் சென்னையில் ஒரு பொறியியல் கல்லூரியில் சேர்வதற்காக வந்திருந்தனர். கூட்டத்தில் நெருக்கியடித்துக்கொண்டு, சென்ட்ரல் ஸ்டேஷனில் இருந்து வெளியே ஒரு வழியாக கேட்டை நோக்கி நடந்து போனார்கள். வந்ததும் ஒரு ஆட்டோவில் ஏறி 'போல் ஸ்டார் லாட்ஜ், திருவல்லிக்கேணி' என்று கேட்டு உட்கார்ந்தார்கள்.

ஆட்டோவில் போகும் போது அவர்கள் வழியில் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த விதவிதமான சினிமா போஸ்டர்களை ஆர்வமாக பார்த்துக் கொண்டே போனார்கள். அதில் தெரிந்த நடிகர் நடிகைகளைப் பார்த்து தங்களுக்குள் சிரித்தபடி பேசிக் கொண்டார்கள். ஆட்டோ டிரைவரும் தனக்குத் தெரிந்த அரை குறை இந்தியில் அவர்களுக்கு சில விபரங்களைச் சொன்னார். இடையில் ஒரு இடத்தில் நிறுத்தி டீ கேட்டு குடித்தார்கள். ஆட்டோ டிரைவருக்கும் டீ வாங்கிக் கொடுத்தார்கள். வழியில் தெரிந்த பெரிய கட்டிடங்களை குறிப்பாக பார்த்து அதைப் பற்றி விசாரித்து தெரிந்துகொண்டார்கள். ஸ்டார் லாட்ஜ் வந்தவுடன் ஆட்டோவுக்கு பணம் கொடுத்துவிட்டு உள்ளே போனார்கள். ஹசன் முகமதுவும், அப்துல் காதரும் இருபத்து ஐந்துக்குள் வயதுள்ள இளைஞர்கள். ஹசன் நல்ல சிகப்பாகவும்

ஒல்லியாகவும் இருந்தான். காதர் ஓரளவு திடகாத்திரமாகவும் சிகப்பாகவும் இருந்தான். இரண்டு பேருமே நல்ல உயரமுள்ளவர் களாக இருந்தார்கள். இரண்டு பேருமே முகத்தை மீசையில்லாமல் மழித்து நாகரிக இளைஞர்களாக இருந்தார்கள். தாடி வைத்திருக்க வில்லை. அவர்களின் மூக்கு நன்றாக நீண்டு இருந்தது.

லாட்ஜில் அவர்களுக்கு ஏற்கெனவே அறை ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது. முதலில் ஹசன்தான் பேசினான். "நான் ஹசன் முகமது. இவன் அப்துல் காதர். நாங்கள் ஹைதராபாத்திலிருந்து வருகிறோம். எங்களுக்கு இங்கே அறை ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது." அவர்களுக்கு அப்போதே வேர்த்துக் கொட்டியது. காலையிலேயே சரியான வெப்பம். அந்த லாட்ஜ் ஓரளவு பழையதாகவே இருந்தது. அவர்களும் அதை பொருட்படுத்தவில்லை.

அவர்களை ஏற இறங்கப் பார்த்த ரிசப்ஷனிஸ்ட். "ஆமாம், உங்களுக்கு அறை ரிசர்வ் செய்யப்பட்டுள்ளது. உங்கள் போட்டோ ஐ.டி. ஏதாவது காட்ட முடியுமா?"

ஹசன் தன் பர்சிலிருந்து ஒரு போட்டோ ஒட்டிய ATM கார்டை எடுத்துக் காட்டினான். அதை வாங்கி கையில் வைத்துக்கொண்டு அவர் அவன் முகத்தை பார்த்தார். திருப்தியுடன் "எத்தனை நாளைக்கு ரூம் தேவை?" என்று மெதுவாக கேட்டார். ATM கார்டை அவனிடம் திருப்பிக் கொடுத்தார்.

"இரண்டு நாளைக்கு மட்டும் தேவை. நாங்கள் காலேஜ் அட்மிஷனுக்காக வந்திருக்கிறோம். சீட் கிடைத்ததும் ஹாஸ்டலுக்குப் போய்விடுவோம்."

ஹசன் தன் பர்சிலிருந்து பணத்தை எடுத்து முன்பணம் கொடுத்துவிட்டு அவர் எடுத்து வைத்த தடிமனான பதிவேட்டில் விபரங்களை எழுதி கையெழுத்துப் போட்டான். அவர் சுவரில் ஒரு போர்டில் இருந்து அறையில் சாவியை எடுத்து, ஒரு பையனை அழைத்து, அவனிடம் அதை கொடுத்தார். 'அறை எண் 302' என்றார். பையன் அவர்களின் பெட்டிகளை எடுத்துக்கொண்டு, முன்னால் போக, அவர்கள் அவன் பின்னால் லிப்ட் வழியாக அறைக்குப் போனார்கள். அது ஒரு ஏ.சி. அறை. அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அவர்கள் குளித்து காலை டிபனை முடித்துவிட்டு ஓய்வெடுத்தார்கள். பீச் பக்கத்தில் தான் என்று லாட்ஜில் சொன்னதால், அவர்கள் மாலையில் நடந்தே பீச்சுப் போய் பொழுதைக் கழித்தார்கள். அறையில் டிவி. இருந்ததால் அதில் வெகுநேரம் வரை சினிமா பார்த்து ரசித்தபிறகுதான் தூங்கினார்கள்.

மறுநாள் காலை அவர்களைத் தேடி ஒரு சாம்பல் நிற ஹூண்டாய் சான்ட்ரோ கார் வந்தது. அதில் வந்தவர் ரிசப்ஷனில் சொல்லிவிட்டு கீழேயே காத்திருந்தார். ரிசப்ஷனில் இருந்து அறை எண் 302க்கு இன்டர்காமில் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் அவர்கள் இரண்டு பேரும் கீழே வந்ததும் "ஐயா உங்களை அழைச்சிக்கிட்டு தங்கராஜ் இஞ்சினீரிங் காலேஜிக்கு வரச் சொன்னாருங்க. போலாங்களா?" அவர்கள் மேலே போய் தங்களுடைய சர்டிபிகேட்கள் இருந்த பைல்களை எடுத்துக்கொண்டு வந்து காரில் ஏறி உட்கார்ந்ததும் கார் கிளம்பியது. அவர்கள் வழியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டே தமக்குள் அவ்வப்போது பேசிக்கொண்டே போனார்கள். சுமார் ஒரு மணிநேரத்தில், பழைய மகாபலிபுரம் சாலையில் இருந்த அந்த கல்லூரிக்குள் நுழைந்தார்கள். அது மிகப் பிரமாதமான புகழ்பெற்ற கல்லூரி. பிரமாண்டமான அழகிய கட்டிடங்களுடன் கம்பீரமாக இருந்தது கல்லூரி வளாகம். உள்ளே சென்று காரிலிருந்து இறங்கி அலுவலகத்துக்குள் நுழைந்தார்கள். அங்கே அவர்களை எதிர்பார்த்து நல்லதம்பி காத்திருந்தார். நல்லதம்பி அவர்கள் இரண்டுபேரையும் அலுவலக அறைக்குள் அழைத்துக் கொண்டு போய் அங்கிருந்த நிர்வாகியிடம் சொல்லி அட்மிஷன் போட வைத்தார். நல்லதம்பி அந்த இரண்டு பேரிடமும் மிகவும் அன்பாகப் பேசினார்.

நிர்வாகி, "ஹாஸ்டல் தேவையா சார்?" என்று கேட்டார்.

நல்லதம்பி அவர்களைப் பார்த்தார். அவர்கள் "ஹாஸ்டல் தேவையில்லை சார். வெளியில் ரூம் எடுத்து தங்கிக்கிறோம்." என்றார்கள்.

நல்லதம்பி அவர்கள் இருவருக்கும் கட்டணம் கட்டுவதற்காக தயாராக பணம் எடுத்து வந்திருந்தார். ஆனால் காதர், ஹசன் இருவருமே "வேண்டாம் சார்!" நாங்க பணம் கொண்டு வந்திருக்கிறோம். தேங்கஸ்!" என்று புன்னகையுடன் மறுத்துவிட்டார்கள். பிறகுதான் கொண்டுவந்திருந்த சூட்கேசை திறந்து பணத்தை எடுத்து நல்லதம்பியிடம் கொடுத்தான் காதர். நல்லதம்பி அதை எண்ணிச் சரிபார்த்து நிர்வாகியிடம் கொடுத்தார். அதே சமயம் அவர்கள் இரண்டு பேரும் அப்ளிகேசன் படிவத்தை பூர்த்தி செய்து கொடுத்தார்கள். ஏற்கெனவே கல்லூரி திறந்து சில நாட்கள் ஆன நிலையிலும் அட்மிஷன் கிடைத்தது, அதுவும் அவர்கள் கேட்ட கம்ப்யூட்டல் சயின்ஸ் பாடத்திலேயே கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக அவர்களுக்கு இருந்தது. ஆனால் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியை அதிகம் வெளிப்படுத்தாமல் ஓரிரு வார்த்தைகளிலேயே தெரிவித்தார்கள். ஒரு இறுக்கம் அவர்களிடம் தெரிந்தது.

நிர்வாகிக்கும் நல்லதம்பிக்கும் அவர்கள் நன்றி சொல்லிவிட்டு கிளம்பினார்கள். அப்போது ஒருவன் அங்கு வந்து ஹசனிடம் ஒரு பைக் சாவியை கொடுத்து ஏதோ சொல்லிவிட்டுப் போனான். சில நிமிடங்களில் அவர்கள் இரண்டு பேரும் ஒரு பல்சர் பைக்கில் போவதை நல்லதம்பி ஆச்சரியத்துடன் பார்த்தார். "முதல் நாளே அவர்களுக்கு பைக் எப்படி கிடைத்தது?" பிறகு அவர் ஏதோ யோசித்து தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார். "ரெட்டி சமாச்சாரம். எதுவும் நடக்கும்."

அப்போது நிர்வாகியின் செல்போன் ஒலி எழுப்பியது அவர் அதை எடுத்துப் பேசினார். மிகவும் பணிவுடன் "சரி சார்! இருக்கார். இதோ குடுக்குறேன்"

"சார்! M.D ஐயா!" என்று நல்லதம்பியிடம் போனை கொடுத்தார்.

நல்லதம்பி "என்னண்ணே! வணக்கம்! ரொம்ப நன்றி. சீட் குடுத்துட்டாங்க. பணமும் கட்டியாச்சு!"

எதிர்முனையில் கல்லூரியின் எம்.டி. கார்மேகம் பேசினார்.

"ஒரு போன் செஞ்சா போதாதா தம்பி. நேரில வரணுமா?"

நல்லதம்பி பலமாகச் சிரித்தார். பிறகு, "ரெட்டி பேசினார். அதான் நான் நேரில் வந்தேன். எதும் தப்பாயிடக் கூடாதுல."

"ஆமாமா! அதுவும் சரிதான்! பிரச்னையான ஆளு! சரி பசங்க யாரு?"

நல்லதம்பி நெற்றியை சுருக்கியபடி, "யார்னு தெரியலை! பாய் பசங்க! யாரு என்னன்னு கேட்கவும் பயமா இருக்கு!

சரி அண்ணே! ஒரு நாள் நேர்ல வர்ரேன்! பாத்து ரொம்ப நாளைச்சுண்ணே!"

செல்போனை நிர்வாகியிடம் கொடுத்துவிட்டு புறப்பட்டார். கல்லூரிக் கட்டிடத்தை ஒரு முறை விரிவாகப் பார்த்தபடியே தன் ஸ்கார்பியோ காரில் ஏறினார். அவருக்கு கார்மேகத்தைப் பற்றிய பழைய நினைவுகள் தோன்றின. "எப்படி இருந்தவன்?" என்று நினைத்தார். இன்று அவர் பல கல்லூரிகளின் உரிமையாளர் என்பதை நல்லதம்பியால் நம்பவே முடியவில்லை.

நல்லதம்பியும் கார்மேகமும் சிறுவயது முதலேயே நன்றாகப் பழகியவர்கள். ஒரே பகுதியில் குடிசைகளில் வளர்ந்தவர்கள். சிறு திருட்டுகளில் ஆரம்பித்து கள்ளச்சாராய வியாபாரிகளாகி, கடத்தல் பிரமுகர்களாகி பின்னர் அரசியல் பிரமுகர்களின் இடது கரங்களாக தங்களை வலுவாக நிறுத்திக் கொண்டார்கள். பிறகு காலப் போக்கில்

இருவரும் கல்வி வள்ளல்களாகவும், தொழில் அதிபராகவும் உருமாறி சமூக அந்தஸ்து பெற்றுக்கொண்டார்கள். அவர்களை கழுத்தைப் பிடித்து இழுத்துச் சென்ற பல போலீசார், இன்று உயர்ந்த பதவிகளில் இருந்துகொண்டு கல்லூரி அட்மிஷனுக்காகவும் வேறு உதவிகளுக்காகவும் அவர்களை பார்க்க கல்லூரியிலும், அவர்கள் பங்களாக்களிலும் காத்துக்கிடந்தார்கள். அதில் நல்லதம்பி பெரிய ஒப்பந்ததாரராகவும் தொழில் அதிபராகவும் ஆகிவிட்டார். கார்மேகம் கல்வித் தந்தை கார்மேகர் என்று சமூகத்தில் பெரியமனிதர் ஆகிவிட்டார். சமூக அந்தஸ்துக்காக பல பெரிய கிளப்களிலும் அவர்கள் உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். எந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்தாலும் அந்த ஆட்சியை இவர்கள் பிடித்து விடுவார்கள். ஆனால், காலங்கள் மாறினாலும், இவர்கள் தங்களுக்கிடையே இருந்த பழைய நட்பை தொடர்ந்து பராமரித்து வந்தார்கள். ஆபத்து என்றால் ஒருவருக்கு ஒருவர் ஓடிவந்து உதவி செய்து கொண்டார்கள்.

நல்லதம்பி, காரில் போய்க்கொண்டே, அந்த கல்லூரிகளின் தொடர்ச்சியாக வந்த கட்டிடங்களை பார்த்து பிரமித்துக் கொண்டு இருந்தார். ஒவ்வொரு கட்டிடமும் வித்தியாசமாக, கலையழகுடன் இருப்பதை அவர் வெகுவாக ரசித்தார். கார்மேகத்தின் வளர்ச்சி அவருக்கு மகிழ்ச்சியையே கொடுத்தது.

நல்லவர்கள் அவ்வளவாக ஒற்றுமையுடன் இருப்பதில்லை. அடிப்படை நிலைமையில் இருக்கும் போது அவர்களுக்கிடையே இருக்கும் அன்பும் நட்பும் அவர்கள் வளர்ந்து முன்னேறி உயர்ந்த நிலைமைக்கு வந்தபிறகு, அதே போல இருப்பதில்லை. சூழ்நிலைகளாலும், உடன் இருப்பவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டும், தம் நட்பைக் குறைத்துக் கொள்கிறார்கள். மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்த பல பெரிய தலைவர்கள் கூட வளர்ந்த பிறகு பரம எதிரிகளாகக் கூட மாறிவிடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கடத்தல்காரர்களிடையே உருவாகும் நட்பு மிகவும் வலுவானதாக இருக்கிறது. அவர்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் பாதுகாவலாக இருந்து கொள்கிறார்கள். ஆபத்தில் உதவி செய்து கொள்கிறார்கள். இதனால் தான் அவர்கள் சட்டத்துக்குப் புறம்பான செயல்களைச் செய்தாலும் எதிலும் சிக்கிக் கொள்வதில்லை. அவர்களே பெரும்பாலும் நட்பை மதிப்பவர்களாக இருக்கிறார்கள். உடன்பாடுகளையும் எழுதப்படாத ஒப்பந்தங்களையும் மதித்து நடப்பதில் அவர்களே முன்னால் நிற்கிறார்கள். இதனால்தான் அவர்கள் பெரிய அரசாங்கங்களையும் எதிர்த்து செயல்பட முடிகிறது.

# 5

'புது உலகம்' பத்திரிகையின் அலுவலகம் இன்னும் அன்றைய தினத்தின் பணிகளை துவக்கவில்லை. ஒரு சில பணியாளர்களே அந்நேரத்தில் அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது மணி காலை 8.00 தான் ஆகியிருந்தது. வீடு அருகில் இருந்தவர்கள் சிலரும் உடனடி வேலைகளை முடிக்க வேண்டிய நிலையில் இருந்த ஒருவரும் மட்டுமே அப்போது அலுவலகத்தில் இருந்தார்கள். அலுவலகத்தை சுத்தம் செய்யும் வேலை நடந்து கொண்டிருந்தது. அதே சமயம் ஆசிரியரின் அறையில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பத்திரிகையின் ஆசிரியரான தர்மராஜன் அந்த நேரத்திலேயே அலுவலகத்துக்கு வந்திருந்தார். அந்த வாரத்துக்கான முக்கியமான கட்டுரையை முடிவு செய்து இறுதி வடிவம் கொடுத்து அச்சுக்கு அனுப்பவேண்டியிருந்தது. மற்றவர்கள் வந்தபிறகு அவர் அவர்கள் தொடர்பான வேலைகளை கவனிக்க வேண்டியதிருக்கும். அதனால் தன் வேலைகளை மற்றவர்கள் வருவதற்கு முன்பே வந்து முடித்து வைத்துவிடுவது அவரது பழக்கம். அன்றும் அதுபோலவே அவர் வந்து தன் வேலையை பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரது அறை அதிக ஆடம்பர அலங்காரங்கள் இல்லாமல் தேவையான வசதிகளுடன் பளிச் என்றும் அழகாகவும் இருந்தது. அங்கு இருந்த சில பொருட்களும் கலையழகுடன் இருந்து அவரின் அழகுணர்வைக் காட்டின. சுவரில் புது உலகம் என்று பத்திரிகையின் பெயரும் அதன் கீழே 'என்றும் நேர்மை; துணிவுடன் மக்கள் பணி' என்ற அதன் குறிக்கோளும் தெளிவாக பளிச் என்று காட்சியளித்தன. அவரது வலப்பக்கம் இருந்த ஒரு புத்தக அலமாரியில் காரல் மார்க்சின் தி கேபிடல், நெப்போலியனின் வாழ்க்கை வரலாறு, செகுவேரா வரலாறு, மார்ட்டின் லூதரின் பேச்சு தொகுப்புகள், காந்தியின் சத்திய சோதனை, திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள், விவேகானந்தர் உரைகள், பெரியார் பேச்சுக்கள் போன்ற புத்தகங்கள் இருந்தன. அவரது மேசையில் இடதுபுறம் ஒரு சிறிய விநாயகர் சிலையும், அதையொட்டி காந்தி, பெரியார், நேதாஜி

படங்களும் இருந்தன. "நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஒருவர் தான் இந்திய சுதந்திரத்திற்காக போராடிய ஒரே தலைவர்" என்பது தர்மராஜின் கருத்து. அந்தப் படங்கள் ஓரளவு சிறிதாக இருந்தாலும் மிக அழகாக மரச்சட்டமிடப் பட்டிருந்தன. வலது புறம் கைக்கு வாகான இடத்தில் ஒரு பென் ஸ்டாண்டு இருந்தது. அதில் ஒரு சிவப்பு நிறப் பேனா, ஒரு நீல நிறப் பேனா, ஒரு பென்சில், ரப்பர் இருந்தன. சுவரில் ஒரு அழகிய பெரிய கடிகாரம் இருந்தபோதும் தன் நீண்ட பெரிய மேசையில் ஒரு சிறிய கடிகாரம் வைத்திருந்தார். அது அவருக்கும் அவரைப் பார்க்க வருபவர்களுக்கும் தெரியும்படி அவர் வைத்திருந்தார்.

தர்மராஜனுக்கு சமீபத்தில்தான் வயது அறுபத்தி நான்கு ஆகியிருந்தது. வயதுக்கேற்ற ஒரு முதிர்ச்சியும், கம்பீரமும் அவரிடம் தெரிந்தது. தன் தொழிலில் பல எதிர்ப்புகள், ஆபத்துக்களை சந்தித்திருந்ததால், அந்த அனுபவத் தெளிவும் மன உறுதியும் அவர் முகத்தில் தெரிந்தன. ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவர் அவர். அவருக்கு நாட்டின் மீது அதிகமான பற்றும், மக்கள் படும் துன்பங்களைக் கண்டு பெரும் கவலையும் அதைத் தீர்க்கப் பாடுபடவேண்டும் என்ற எண்ணமும் இருந்தது. எந்தக் கட்சியின் நிலைமையும் அவருக்கு உடன்பாடானதாக இல்லை. மக்களின் துன்பங்களைப் போக்க பாடுபடவேண்டிய கட்சிகள் தங்கள் வளர்ச்சியை மட்டுமே பிரதானமாகக் கொண்டு செயல்பட்டதால், அவை தமது வளர்ச்சிக்காக சில சிறிய விஷயங்களில் விட்டுக் கொடுத்து, காலப்போக்கில் தங்களின் பிரதான நோக்கத்தையே மறந்து அல்லது விட்டுக்கொடுத்துவிட்டதை அவர் புரிந்து கொண்டிருந்தார்.

இந்த நிலைமையில் அவை மறைமுகமாக தவறு செய்யும் பெரிய மனிதர்களுக்கே உதவி செய்துவந்தன. எந்தக் கட்சியும் மக்களுக்காக இயங்குவதாக அவருக்குத் தெரியவில்லை. இதனால் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி எதிர்த்து விமர்சிக்க பத்திரிகைத் துறையே சரியானது என்று எண்ணி அவர் ஒரு பெரிய பத்திரிகையில் சேர்ந்தார். ஆனால் அந்தப் பத்திரிகை அரசாங்கத்துக்கு சந்தனம் பூசி அவர்களிடம் நல்ல பெயருடன் நிலைத்து நிற்பதையே முதல் நோக்கமாகக் கொண்டது என்பது அதில் சேர்ந்த சில மாதங்களிலேயே அவருக்கு விளங்கியது. அவர் எழுதிக் கொடுத்த, மக்கள் நலன் சார்ந்த, ஊழலுக்கு எதிரான கட்டுரைகள் அவற்றின் கடுமை குறைக்கப்பட்டு, வேண்டுகோள் விடுக்கும் தொனியில்

வெளியிடப்பட்டன. அரசையும், தவறு செய்பவர்களையும் கண்டிக்கும் தெம்பு அதனிடம் இல்லை. அதனால் ஒரு நண்பருடன் அங்கிருந்து வெளியேறி, ஒரு சிறிய பத்திரிகையாக 'புது உலகம்' தொடங்கினார். தொடங்கிய நாள் முதலே கடும் எதிர்ப்புகள், மிரட்டல்கள், பொருளாதார நெருக்கடிகளுக்கிடையே, முப்பது ஆண்டுகளாக உழைத்து சிறந்த பத்திரிகையாக, மக்கள் நலன் பேணும் ஒரு இயக்கமாகவே அதை வளர்த்து நடத்திவருகிறார், தர்மராஜன். பணத்தாசை, பெரிய நவீன அச்சகம் என்ற ஆசை, ராஜ்ய சபை எம்.பி. பதவி என்ற ஆசை போன்ற எதற்கும் அவர் மயங்கியதில்லை. அதே சமயம் தனிப்பட்ட முறையில் எவரையும் அவர் தரக்குறைவாக விமர்சித்ததில்லை. எப்போதும் மதிக்கும் ஒரு எதிரியாகவே அரசியல்வாதிகளுக்கு அவர் தோன்றினார்.

அவரின் முன்பு மேசையில் ஒரு கடிதம் இருந்தது. அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை எடுத்துப் படித்தார். கடிதம் தூத்துக்குடியில் இருந்து டேவிட் ஆரோக்யராஜ் என்ற ஒருவர் எழுதியிருந்தார்.

"அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம்!

தூத்துக்குடிப் பகுதி கடற்கரைகளில் மணல் மாபியாவினரின் அட்டூழியம், அளவில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. மணலில் இருந்து தாதுக்களை பிரித்து எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இது அரசாங்கம் அனுமதித்த அளவைக் காட்டிலும் பலநூறு மடங்கு அதிகம் வெட்டியெடுக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் கதிர் வீச்சால், இந்தப் பகுதி புற்றுநோய் வந்தவர்களின் முகாம் போல ஆகிவிட்டது. கடலில் கழிவுகள் கலந்து கடலின் நிறம் மாறி விஷமாக மாறிவிட்டது. உப்பு மேல் விஷப்புகை படிந்து அந்தத் தொழிலே நசிந்து வருகிறது. மீன் பிடிக்கும் தொழிலும் குறைந்து விட்டது. இதைத் தட்டிக் கேட்டவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். இத்தகைய கொலைகள் எண்ணிக்கை நூறைத் தாண்டும். ஆனாலும் விடிவு இல்லை. முத்துக்குளித்தல் தொழில் மறைந்து, இன்று பிழைப்பு அளிக்கும் உப்பளங்களும் மறையும் நிலை. ஊரே சுடுகாடாகும் நிலை. இதைப் பற்றி எவரிடமும் புகார்கூட கொடுக்க முடியாது. யோசித்துப் பார்த்ததில் 'புது உலகம்' தான் நினைவுக்கு வந்தது. நீங்கள் உங்கள் நிருபரை இங்கு ரகசியமாக அனுப்பிவைத்தால், நான் அவரிடம் நேரில் இந்த நிலைமைகளை காட்டுகிறேன். நான் உங்களுக்கு இப்படி கடிதம் எழுதியது ரகசியமாக இருக்கட்டும். வெளியில் இங்கு தெரிந்தால் என் உயிரை உடனே எடுத்துவிடுவார்கள்."

என்றது கடிதம். அவர் தன் மொபைல் போன் எண்ணை கடிதத்தின் இறுதியில் கொடுத்திருந்தார்.

அந்தக் கடிதம் வந்து ஒரு வாரம் ஆகியிருந்தது. செய்தித்தாள்களில் 'மணல் லாரி மோதி தாசில்தார் மரணம்!' 'மணல் கடத்தலை தடுத்த கிராம நிர்வாக அதிகாரி வெட்டிக்கொலை செய்யப்பட்டார்' என்பது போன்ற சில செய்திகளை அவர் பார்த்திருக்கிறார். அப்போதிலிருந்து அவருக்கு இந்த மணல் விவகாரம் குறித்த ஒரு கவலை மனதில் ஏற்பட்டிருந்தது. இது குறித்து தன் நண்பர்களிடமும் சக பத்திரிகையாளர்களிடமும் பேசியிருக்கிறார். எல்லோரும் அரசல் புரசலாகவே இந்த விவகாரம் பற்றிப் பேசினார்களே தவிர இதில் யார் யாருக்கு தொடர்பு இருக்கிறது என்பது பற்றி நேரிடையாக பேச முன்வரவில்லை. அவர்களின் இந்த தயக்கமே தர்மராஜனின் ஆர்வத்தை அதிகப்படுத்தியது. மணல் கொள்ளையை எதிர்த்து கொலையான அரசு அதிகாரிகளின் குடும்பங்களால் கூட தொடர்ந்து நிவாரணம் உடனடியாக பெறமுடியவில்லை. அந்தக் குடும்பங்களுக்கும் அரசாங்கத்தின் உதவி பெரிய அளவில் கிடைக்கவில்லை. கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்களின் குடும்பங்களுக்குக் கூட லட்சங்களில் அரசின் உதவி கிடைத்தது. ஆனால் மணல் கொள்ளையை எதிர்த்து பலியானவர் களுக்கு அது போன்ற உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த விபரங்களையெல்லாம் அவர் ஆங்காங்கே இருந்த தன் நண்பர்களிடம் போனில் பேசியதிலிருந்து தெரிந்து கொண்டார். அவர் மனதில் கடலோர மக்களுக்கு எதிரான பெரிய கொடுமை ஒன்று நடைபெற்று வருகிறது என்பது தெளிவானது. அந்த மணல் கொள்ளையைப் பற்றிய முழு விபரங்களையும் வெளிப்படுத்தி, அதில் தொடர்புடைய பெரிய மனிதர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் முக மூடியை அகற்றி அவர்களை நாட்டு மக்கள் முன் நிறுத்த வேண்டும் என்ற உறுதியான எண்ணம் அவர் மனதில் உருவானது.

அப்போதுதான் டேவிட் என்பவர் எழுதிய கடிதம் அவருக்கு வந்தது. அந்தக் கடிதத்தில் இருந்த அச்ச உணர்வு தூத்துக்குடி கடல்புர மக்களின் நிலைமையை தெளிவாக காட்டியது. டேவிட் மூலமாகவே தன் வேலையை ஆரம்பிக்கலாம் என்று அவர் நினைத்தார். முதலில் போன் மூலம் பேசி, பிறகு நேரில் ஒரு செய்தியாளரை ரகசியமாக அனுப்பவேண்டும். தன் அலுவலக செய்தியாளர்களில் யாரை அனுப்பலாம் என்பது அவர் முன் அடுத்த பெரிய கேள்வியாக நின்றது. முதலிலேயே, பெண்களை இந்த ஆபத்தான வேலையில்

இறக்கிவிடக்கூடாது என்று முடிவு செய்தார். பிறகு ஒவ்வொரு செய்தியாளராக அவர் பெயரை ஒரு பேப்பரில் எழுதி, சிறிது நேரம் அவர்களைப் பற்றி யோசித்து திருப்தி வராமல் பெயர்களை அடித்தார். எல்லாச் செய்தியாளர்களுமே திறமையானவர்களாகவும், தன்னலம் இல்லாதவர்களுமாக இருந்தாலும், இந்த வேலைக்கு அதைவிட கூடுதல் தகுதிகளை அவர் எதிர்பார்த்தார். கடைசியில் அவர் எழுதிய பெயர் ராஜ்குமார் என்பது. அந்தப் பெயரை எழுதியதும் அவர் சில நிமிடங்கள் தீவிரமாக யோசித்தார். சில முறை அதை அடிக்கோடிட்டார். அப்போது அவர் முன் ஒரு பணியாள் ஒரு கப்பில் காபி ஊற்றி வைத்துவிட்டுப் போனார். அதைக் குடித்தபடியே அவர் ராஜ்குமாரைப் பற்றி ஒரு முறை சிந்தித்தார்.

ராஜ்குமார் இருபத்தாறு வயது இளைஞன். எப்போதும் நகைச்சுவையாக பேசிக்கொண்டு, சுறுசுறுப்பாக இருப்பவன். இருபத்தி நான்கு மணிநேரமும் வேலை கொடுத்தாலும், சலிக்காமல் முணுமுணுப்பு ஏதும் இல்லாமலும் வேலையைச் செய்பவன். அவன் செய்த வேலையில் ஒரு ஈடுபாடும் முழுமையும் தெரியும். வேலையை ஆர்வமாகச் செய்வதுடன், அது பற்றி ஆசிரியரின் கருத்து என்ன, அது மக்களிடையே என்ன கருத்துக்களை உருவாக்குகிறது என்பது வரையும் தொடர்ந்து கவனிப்பவன். அவனை நினைக்கையில், அவருக்குத் தன் ஆரம்ப காலம் நினைவுக்கு வருவதை அவர் உணர்ந்திருக்கிறார். தான் நினைப்பதை நூறு சதவீதம் செய்து முடிப்பவன் அவன் ஒருவனே என்பதை அவர் நினைத்தபோது அவர் முகத்தில் சிறு புன்னகை விரிந்தது. அதேசமயம் அவனை ஒரு பெரும் ஆபத்தில் மறுபடியும் நுழைத்துவிட அவர் கொஞ்சம் தயங்கினார். ஏற்கெனவே தமிழகத்தில் நிகழ்ந்த டாஸ்மாக் சாவுகளை அவன் தான் விரிவாக ஆராய்ந்து கட்டுரை எழுதினான். அதில் அவன் எழுதிய விபரங்கள், சேகரித்துக் கொடுத்த ஆதாரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றால் பல பெரிய, வலிமையான மனிதர்களின் நிலைமை ஆட்டங்கண்டது. சிலரின் பதவிகள் பறிபோனது. அது ராஜ்குமாருக்கு பெரிய ஆபத்தைக் கொண்டு வரும் என்பதால் அவர் அவனைக் காப்பாற்ற அவன் பெயரை மறைத்து, புனைப் பெயரிலேயே கட்டுரையை வெளியிட்டார். அவனுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய பெயர் அதனால் அவனுக்கு கிடைக்கவில்லை. அது அவரின் பெரிய குற்ற உணர்ச்சியாக இருந்தது.

அதே சமயம் அதுவே அவனின் பலமாகவும் மாறியது. ‘மாயாவி’ என்ற பெயரில் அவனது கட்டுரையை வெளியிட்டால் அவனுக்கு ஆபத்தில்லாமல் செய்துவிடலாம். இப்படியான பலத்த யோசனைகளுக்குப் பின் அவரது முகம் தெளிவாகியது. ராஜ்குமார் பெயரை அவர் டிக் செய்தார். பிறகு டேவிட்க்கு தன் மொபைலில் பேசி “நான் புது உலகம்” பத்திரிகை ஆசிரியர் பேசுகிறேன். ராஜ்குமார் என்கிற செய்தியாளர் உங்களிடம் பேசிவிட்டு, உங்களை சந்திப்பார். மற்றதெல்லாம் அவர் உங்ககிட்டே சொல்வார்.” என்று சொன்னார்.

தர்மராஜன் ராஜ்குமாருக்கு போன் செய்து “10 மணிக்கு நீ அலுவலகம் வந்து என்னைப் பார். ஒரு முக்கியமான வேலை!” என்று மட்டும் சொன்னார்.

அவர் பேசி முடிக்கவும் அலுவலக பணியாளர்கள் ஒவ்வொருவராக அலுவலகத்திற்குள் நுழையவும் சரியாக இருந்தது.

❍

# 6

'புது உலகம்' வாரப்பத்திரிகை என்ற பெயர்ப்பலகை பளிச்சென்று தெரிய அதன் அலுவலக கட்டிடம் கம்பீரமாக இருந்தது. அது தனிக்கட்டிடமாக இல்லாமல் ஒரு பெரிய கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும் அது அழகாகவும் தனித்தன்மையுடனும் இருந்தது. அலுவலகத்தின் உள்ளே அனைவரும் பரபரப்பாக இயங்கினாலும் ஒரு அமைதியும் ஒழுங்கும் தெரிந்தது. அடுத்தவார இதழுக்கான வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. கம்ப்யூட்டர் திரையில் ஒவ்வொருவரும் அவரவர் வேலைகளை சரிபார்த்து தேவையான திருத்தங்களை செய்து கொண்டிருந்தார்கள்.

ராஜ்குமார் ஒரு நாற்காலியில் அமர்ந்து அலுவலக நண்பனுடன் பேசிக்கொண்டிருந்தான். அவன் இளநீல ஜீன்சும் எலுமிச்சை மஞ்சள் நிற நீள முழுக்கை சட்டையும் அணிந்திருந்தான். அவன் மும்முரமாக பேசிக்கொண்டிருந்தாலும், அவன் கண்கள் அடிக்கடி ஆசிரியரின் அறைக்கதவையே பார்த்தன. ராஜ்குமார் ஒரு இளம் நிருபர். அவனை உடனே தன்னை வந்து பார்க்கவேண்டும் என்று ஆசிரியர் சொல்லியிருந்தார். போனில் தகவல் சொன்னவர் எது சம்பந்தமாக என்று விபரம் சொல்லவில்லை. ஆனாலும் ஏதோ முக்கியமான விஷயம் என்பதை ராஜ்குமார் அறிவான். இதற்கு முன்னால் இதே போல அவர் அழைத்தபோது 'தமிழ்நாட்டில் டாஸ்மாக்கில் நடந்த முறைகேடுகள், கள்ளச் சரக்குகள் விற்பனை பற்றிய ஒரு கட்டுரை வேண்டும்' என்றார். ஒரு மாதம் கடுமையாக உழைத்து படுரகசியமாக இருந்த பல முக்கியமான தகவல்களுடன் அவன் கொடுத்த கட்டுரை அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. அந்தக் கட்டுரை தமிழ்நாட்டை அதிரவைத்தது. பத்திரிகையின் கொள்கைக்கு ஏற்ப நேர்மையாகவும் அதிக துணிச்சலுடனும் கட்டுரை அமைந்திருந்ததால், அவனை ஆசிரியருக்கு மிகவும் பிடித்தது. ராஜ்குமார்அவரது நம்பிக்கைக்கு உரிய நிருபர் ஆகிவிட்டான். இப்போது "என்ன விஷயமாக இருக்கும்?" என்ற சிந்தனையுடனே அவன் நண்பனுடன் பேசிக்கொண்டிருந்தான். பேன் காற்றில் அவனது

தலைமுடி நெற்றியில் புரண்டு கொண்டிருந்தது. அவன் மாநிறமும் நல்ல உயரமும் உடையவனாக இருந்தான்.

அப்போது ஆசிரியரின் அறைக்கதவு திறந்தது. அதிலிருந்து இனிய ப்ரெஞ்ச் பெர்ப்யூமின் வாசனை வெளிவந்து அலுவலகத்தை திணறடித்தது. அதை தொடர்ந்து அழகிய இளம்பெண் ஒருத்தி புன்னகையுடன் வந்து ராஜ்குமாரின் அருகில் உட்கார்ந்தாள். அவள் ரம்யா.

"என்ன ராஜ்! பாஸ் வரச்சொன்னாராமே! என்ன மேட்டர்?"

ராஜ்குமார் உதட்டை பிதுக்கினான். "இன்னும் பார்க்கலியே! என்ன சொல்லப்போறாரோன்னு டென்ஷனா இருக்குப்பா!"

"உனக்கென்னப்பா! நீ தான் அவரோட செல்லம் ஆச்சே!" ரம்யா கேலியாக சிரித்தாள். அவளுக்குத் தெரியும் அவனுக்கு ஒரு கஷ்டமான வேலை வரப்போகிறது என்பது.

"ஏன் சொல்லமாட்டே! நீ ஏ.சி. ரூமில் உட்கார்ந்துட்டு யாராவது ஒரு ப்லிம் ஸ்டாரின் பேட்டி எடுத்தே பேர் வாங்கிடுற. அதே ஆசிரியர் என்னைய மட்டும் ஊர் ஊரா அலையவிட்டு ஆர்ட்டிகிள் வாங்குறார். ம்! எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பினை வேணும்ல!" உடன் இருந்த நண்பனும் சிரித்தான்.

அவர்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது ஒருவர், "ராஜ்குமார்! பாஸ் வரச் சொல்றார்." என்றார். உடனே அவன் அவர்களிடம் சைகை காட்டிவிட்டு ஆசிரியரின் அறைக்குள் போனான். அங்கே அவர் காபி குடித்தபடி ஏதோ தீவிரமான சிந்தனையில் இருந்தார். அவன் 'வணக்கம் சார்!' என்றதும் அவனை எதிரிலிருந்த நாற்காலியைக் காட்டி உட்காரும்படி சொன்னார். அவனுக்கும் ஒரு கப்பில் காபி ஆவி பறக்க இருந்தது. அவர் "காபி சாப்பிடு!" என்றதும் 'தேங்க் யு சார்!' என்படி அவன் அதை எடுத்துக் குடித்தான். அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். அவனும் காபி குடித்து முடித்தவுடன் அவர் தன் மேசையிலிருந்த ஒரு செய்தித்தாளை எடுத்து அவனிடம் கொடுத்தார். அதிலிருந்த ஒரு செய்தியை அவர் சிகப்பு மார்க்கரால் அடையாளம் செய்திருந்தார்.

**"தாது மணல் கடத்தல் லாரியைஏற்றி தாசில்தார் கொலை! மணல் கடத்தலை தடுத்தபோது பயங்கரம்"**

"ராஜ்சேகர்! இதைக் கொஞ்சம் படித்துப்பார். அத்துடன் இந்தக் கடிதத்தையும் பார்!" ஒரு கடிதத்தையும் எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அதில் தூத்துக்குடியிலிருந்து ஒருவர் அங்கே நடக்கும் மணல் கொள்ளையை பற்றியும் அதனால் தூத்துக்குடி பகுதி முழுவதுமே இயற்கை வளங்கள் கொள்கை போவதையும் மக்கள் பலவகை நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதையும் விரிவாக எழுதியிருந்தார். அவற்றை ராஜ்குமார் முழுவதும் படித்து முடிக்கும் வரை பொறுமையாக ஒரு ஓரமாக இருந்த டி.வி.யில் செய்திகள் பார்த்துக்கொண்டிருந்தார். அதில் சப்தம் மிகவும் குறைவாக வைக்கப்பட்டிருந்தது. அவன் அந்தச் செய்தியையும் கடிதத்தையும் படித்து முடிந்தவுடன் நிமிர்ந்து அவரைப் பார்த்தான். அவனுக்கு அவர் என்ன சொல்லப்போகிறார் என்பது புரிந்தது. இருந்தாலும் தானாக எதுவும் சொல்லவேண்டாம் என்று அமைதியாக இருந்தான்.

“ராஜ்குமார்! தமிழ்நாட்டில் சில காலமாகவே ஆற்று மணல் கொள்ளை, தாது மணல் கொள்ளை என இயற்கை வளங்கள் வரைமுறையின்றி சூறையாடப்பட்டு வருவதை நான் அறிவேன். நீயும் கேள்விப்பட்டிருப்பாய். அதைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்திகள் என்ற அளவில் தான் நாம் அதை அறிவோம். ஆனால் இந்தக் கடிதத்தில் இருக்கும் தகவல்கள் இந்தப் பிரச்னை மிகவும் பெரியது எனச் சொல்கின்றன. மணல் கப்பல் கப்பலாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. இந்தப் பிரச்னையும் இதில் நடக்கும் முறைகேடுகளும் நாம் நினைப்பதை விடவும் மிகவும் ஆழமானதாக இருக்கவேண்டும் என எனக்குத் தோணுதுப்பா. அதனால் தான் உன்னை வரச்சொன்னேன். நீ இந்தப் பிரச்னையை, நேரில் போய் நன்றாக ஆராய்ந்து, தகுந்த ஆதாரங்களுடன் அதாவது புகைப்படங்கள், பேட்டிகள் போன்றவற்றுடன் விரிவான கட்டுரை கொடுக்க வேண்டும். அது இந்தப் பிரச்னையை அடி முதல் நுனிவரையிலும் உள்ள சகல அம்சங்களையும் சொல்ல வேண்டும். இதில் புழங்கும் பணம், நடக்கும் அரசியல் எல்லாம் வெளியில் தெரியவேண்டும்.”

“நிச்சயம் செய்கிறேன் சார்!”

“இந்த பைலில் இருக்கும் விஷயங்கள் நான் பல செய்தித் தாள்களிலிருந்து எடுத்தவை. உனக்கு உதவியாக இருக்கும்.” என்றார் ஒரு சிறு ப்ரீப் கேசை அவனிடம் கொடுத்தார். “திறந்து பார்!”

அவன் அதை திறந்து பார்த்தான். அதில் ஒரு சிறிய பைனாகுலருடன் கூடிய கேமிரா ஒன்றும், பேசுவதை சற்று தொலைவில் இருந்து ஒட்டுக்கேட்டு பதிவு செய்யும் மைக்ரோ ரெகார்டரும், டார்ச் லைட் ஒன்றும் இருந்தன.

அவன் அவரை பார்க்க அவர், "உனக்கு தேவைப்படும்" என்றார். புன்சிரிப்புடன். பிறகு, "இந்த அசைன்மென்ட் பற்றி நீ நம் ஆபீசில் யாருடனும் டிஸ்கஸ் செய்ய வேண்டாம்." "உன்னை மறுபடி ஒரு ஆபத்தான வேலைக்கு அனுப்புறோமேன்னு எனக்கு கஷ்டமா இருக்கு. ஆனால் உன்னைத்தான் இதில நான் நம்புறேன்."

"டோன்ட் ஒரி சார்! நான் இந்த வேலையை கவனமாகவே செய்வேன். உங்க நம்பிக்கையை காப்பாத்துவேன் சார்!" என்று சொல்லிவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான்.

தனக்காக அவர் கவலைப்படுவது அவனுக்கு பெருமையாக இருந்தது. அது ஒரு பத்திரிகை நிருபராக தான் சரியாக வேலை செய்வதற்கான ஒரு சான்று என்று அவன் நினைத்து திருப்தியடைந்தான். அலுவலகத்தில் அவன் சிறிது நேரம் இருந்தான். "பாஸ் என்ன சொன்னார்? என்ன விஷயம்?" என்று கேட்டவர்களிடம் "தமிழ் சினிமாவின் தற்போதைய நிலை" என்ற தலைப்பில் விரிவான கட்டுரை கேட்டார் பலபேரின் பேட்டி, புகைப்படங்களுடன் வரவேண்டும் என்றார்" என்று சீரியசான முகத்துடன் பதில் சொல்லிவிட்டு அலுவலகத்திலிருந்து தன் புது பல்சர் பைக்கில் கிளம்பினான். அதைக் கேட்டும் சிலர் பொறாமைப் பட்டார்கள்.

ஆசிரியர் தன்னிடம் சொன்னதை நினைத்தபோது அவனுக்குக் கொஞ்சம் பயமாக இருந்தாலும், தனக்கு ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் இது ஒரு சரியான சவாலான வேலை என்று சற்று உற்சாகமும் அடைந்தான். இது ஆசிரியர் தனக்கு அளிக்கும் அங்கீகாரம் என்பதை அவன் புரிந்துகொண்டான். த்ராட்டிலை திருகி பைக்குக்கு வேகம் ஏற்ற அது சென்னைச் சாலையில் சீறிப் பாய்ந்தது.

ஏற்கெனவே தமிழகத்தில் சாராயக் கடைகளில் பலர் ஒரே நாளில் இறந்தபோது, கடைகளில் விற்பனையாகும் நல்ல சரக்குகளுடன் கள்ளச் சரக்குகளும் விற்பனை செய்யப்பட்ட விபரம் வெளியில் வந்தது. இறந்து போனவர்கள் வாங்கிக் குடிக்காமல் மீதம் வைத்திருந்த சரக்குகளை சோதனை செய்தபோது அவற்றில் நவச்சாரம் அதிக அளவில் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சரக்குகள் ஆந்திராவிலிருந்து கடத்திவரப்பட்டவை என்பதையும், அவை தமிழ்நாட்டில் பல இடங்களில் பதுக்கிவைக்கப்பட்டு தமிழக கடைகளுக்கு திருட்டுத்தனமாக விற்கப்பட்டதும், இதன் பின்னணியில்பல பெரிய பிரமுகர்களும், அதிகாரிகளும் இருந்து பெரும் லாபம் சம்பாதித்து வந்ததும் 'புது உலகம்' இதழில் பல ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டது. பயன்படுத்தப்பட்ட வாகனங்களின்

புகைப்படங்கள் எண்களுடன் வெளிவந்து பலரை சிக்கலில் மாட்டியது. அந்தக் கட்டுரையை எழுதியது ராஜ்குமார்தான். அவன் கடுமையாக உழைத்து, பொறுமையாக ஆதாரங்கள் சேர்த்திருந்தது. புது உலகத்தின் விற்பனையையும், பெயரையும் உயர்த்தியது கட்டுரையில் பலரின் பதவிகளும் பறிபோயின. அரசாங்கமே ஓரளவு ஆட்டம் கண்டுவிட்டது. எதிர்க்கட்சிகளும் செய்யாத மக்கள் நலம் சார்ந்த வேலையை ஒரு பத்திரிகை செய்ததை நீதிமன்றமும் பாராட்டியது.

இதனால் ஆசிரியரின் பெரும் நம்பிக்கைக்குரியவனாக ராஜ்குமார் மாறினான். இதே காரணங்களால் தான், இப்போது மணல் கொள்ளை பற்றிய விபரங்களை ஆராய்ந்து ஒரு கட்டுரையை எழுதவேண்டும் என்று அவர் நினைத்தபோதும், அதைச்சரியாக அவர் நினைத்தபடி செய்யக்கூடியவன் அவன் தான் என்று அவர் நினைத்தார்.

"இந்த முறையும் அவரது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நாம் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று ராஜ்குமார் விரும்பினான். தன் வேலையில் சம்பளத்தைக் காட்டிலும், அதிலிருந்த இந்த சவால் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. மக்களுக்கு நன்மை செய்வது அவனுக்கு திருப்தியாக இருந்தது.

இந்த நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் தங்களின் சக்திக்கும் மேலாகவும் இரவு பகல் பார்க்காமல் உழைக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு இரண்டு வேளைக்கான நல்ல உணவும், வெயிலிலும், மழையிலும், இருளிலும் பாதுகாப்பாக தம் குடும்பத்தினருடன் தங்குவதற்கு ஒரு வீடு, உடுத்திக்கொள்வதற்கு நல்ல உடைகள் என்ற அடிப்படைத் தேவைகள் கூட அவர்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் தரமான கல்வியும் மருத்துவச் சேவைகளும் எட்டாத ஒன்றாகவே இன்றும் இருக்கிறது. நூறுகோடி மக்களின் வாழ்வையும், வசதிகளையும், வெறும் சில நூறு குடும்பங்கள் மட்டுமே பெற்று அனுபவிக்கின்றன. மற்றவர்கள் எந்த வசதிகளையும் அனுபவிக்காமல், துன்பத்தில் உழன்று காலத்தைக் கடத்துகிறார்கள். தம் கண் எதிரே தம் வாழ்வாதாரங்கள் சுரண்டப்படுவதையும் வளங்கள் கொள்ளை யடிக்கப்படுவதையும் கண்டும் ஏதும் செய்ய இயலாதவர்களாக சக்தியற்று நிற்கிறார்கள். அவர்கள் வாழவில்லை; நாட்களைக் கடத்துகிறார்கள்.

இந்த நிலைமைகளை மாற்றி எல்லா மக்களும் நன்றாக வாழவேண்டும் என்பதற்காக ஒரு சிலர் பாடுபட்டார்கள். அவர்கள்

அரசியலில் பங்கு பெறாதவர்களாகவே இருந்தார்கள். அவர்களைப் போலவே எந்த இயக்கத்திலும், கட்சியிலும் சேர அவனும் விரும்பவில்லை. அதே சமயம் 'புது உலகம்' பத்திரிகை அவனை ஈர்த்தது. அதன் மூலம் தன் நோக்கத்தை நிறைவேற்றலாம் என்று அவன் நம்பினான். வன்முறையைக் காட்டிலும் பேனாவின் வீச்சு பெரியது, வலிமையானது என்பதில் நம்பிக்கை கொண்ட ராஜ்குமார் அப்பத்திரிகையின் படைவீரர்களில் ஒருவனானான். இங்கு பணியாற்றுவதில் அவன் முழு திருப்தியடைந்தான்.

# 7

**சு**ப்பிரமணியன் காஞ்சிபுரம் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஆர்.டி.ஓ.வின் அறையில் இருந்து மகிழ்ச்சியுடன் வெளியே வந்தார். நேராக தன் அறைக்குள் போய் உட்கார்ந்தார். ஆர் டி ஓ அவரிடம் கொஞ்ச நேரம் முன்பு "அட்வான்ஸ் கன்கிராட்ஸ் சுப்பிரமணியன்! ஆர்டிஓ பேனல் அப்ரூவ் ஆயிடுச்சாம். நீங்கதான் நம்பர் ஒன்" என்று சொல்லியிருந்தார். ஒரு வருடமாகவே சுப்பிரமணியன் அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சென்னையிலே ஒரு ஆர்.டி.ஓ ரிடையர் ஆகப் போகிறார் என்பதால் தனக்கு நிச்சயம் சென்னையில் பணியமர்த்தல் கிடைக்கும் எனவும் பட்டியலில் தான் நம்பர் ஒன் என்பதால் சிரமம் இருக்காது என்றும் அவர் உறுதியாக நினைத்தார். அவரது குடும்பம் சென்னையில் இருந்தது. ஒரு மகன் திருமணமாகி அமெரிக்காவில் வேலை கிடைத்து குடும்பத்துடன் அங்கேயே இருந்தான். இன்னொரு மகள் ப்ரியா சென்னையில் என்ஜினீரிங் படித்துக்கொண்டிருந்தாள். இன்னும் சில வருடங்களில் அவளுக்கு திருமணம் செய்ய வேண்டும். இரண்டாவது பையன் மெடிக்கல் முதல் வருடத்தில் நுழைந்திருந்தான். அவனைப் படிக்க வைக்கும் செலவு இருந்தது. இதையெல்லாம் நல்லபடியாக செய்யவேண்டும் என்றால் அவர் சென்னை அல்லது திருவள்ளூரில் இருந்தால் நல்லது. இதுவரை அவர் பணியில் எந்த வித புகாருக்கும் நடவடிக்கைக்கும் ஆளானதில்லை. அதனால் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தார்.

வரிசையாக போனில் சில நெருங்கிய நண்பர்கள் வாழ்த்துச் சொன்னார்கள். "அட இருப்பா! இப்ப என்ன போஸ்டிங்கா ஆயிடுச்சு? பேனல்தானே அப்ரூவ் ஆயிருக்கு?" என்றார் சிரித்துக்கொண்டே. இருந்தாலும் அவரால் தன் மகிழ்ச்சியை மறைக்கமுடியவில்லை. ஆனால் அவரது மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. சுமார் அரைமணிநேரம் கழித்து அவரது அறைக்கதவு மெதுவாகத் திறந்தது. அந்த இடைவெளியில் மட்டமான சென்ட் வாசத்துடன் நெற்றியில் குங்குமப் பொட்டு பெரிதாகத் தெரிய ஒரு சிவந்த உருவம் நுழைந்து 'வணக்கம் சார்!' என்றது. வந்த ஆள் சுப்பிரமணியனின் அனுமதியை எதிர்பார்க்காமலேயே அவர் எதிரில் உட்கார்ந்தார். புகையிலைக்

கறை படிந்த பற்கள் தெரியும்படி சிரித்துக்கொண்டே "வாழ்த்துக்கள்!" என்றார் சத்தமாக. சுப்பிரமணியன் அதை விரும்பவில்லை.

அவர் யார் என்றே சுப்பிரமணிக்கு தெரியவில்லை. யாராக இருக்கும் என்று யோசித்தபடியே, "நீங்க யார் சார்?" என்றார். வந்த ஆள் சற்று திடுக்கிட்டது போல தெரிந்தது.

"என்ன சார்? என்னை யார் என்று கேட்கிறீர்கள்! உங்க டிபார்ட்மென்டில், சொல்லப்போனால் எல்லா டிபார்ட்மென்ட்லயும் டாப் லெவல்ல என்னைத் தெரியாதவங்களே இருக்கமாட்டாங்க. சரி! இருக்கட்டும். என் பேர் சௌந்தரராஜன். சௌந்தரம்னா ஈசியா தெரியும்."

சுப்பிரமணியனுக்கு கொஞ்சம் தெரிவது போல இருந்தது. இருந்தாலும் அவர் குழம்பினார், "இந்த ஆள் எதுக்கு இப்ப நம்மளைத் தேடி வந்திருக்கான்? நம்ம கிட்ட இவனுக்கு என்ன வேலை ஆக வேண்டியது இருக்கும்? இவன் எதுக்கு நமக்கு வாழ்த்துச் சொல்றான்?"

சுப்பிரமணியன் அந்த ஆளைப் பற்றி அரசல் புரசலாக கேள்விப்பட்டிருந்தார். ஆனால் நேரில் பார்த்ததில்லை.

சௌந்தரமே தொடர்ந்தார். "சார்! இன்னிக்கு காலையில் தான் ஆர்டிஓ பேனல் அப்ரூவல் அனது. அப்ப நான் அமைச்சர் ரூம்ல தான் இருந்தேன். சார் ஃபேமிலி சென்னைல தான் இருக்குன்னு சொன்னாங்க. அப்ப சென்னையில போஸ்டிங் கிடைச்சாத் தானே நல்லது. அது விஷயமாத்தான் சாரைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன். இந்த மாதிரி நல்லவங்களுக்கு நல்லது செய்றதுக்குனே பகவான் என்னைப் படைச்சிருக்கான்."

சுப்பிரமணியன் எதுவும் பேசாமல், அந்த ஆளையே பார்த்தார்.

அப்போது சுப்பிரமணியனின் அலுவலக உதவியாளர் வந்து சுப்பிரமணியனுக்கு ப்ளாஸ்கில் இருந்து கப்பில் காபி ஊற்றி வைத்தார். அத்துடன் சௌந்தரத்துக்கும் அதுபோல காபி ஊற்றி வைத்துவிட்டுப் போனார். அப்போது சௌந்தரம், "ஏன்யா! சார் கிட்டே நீ என்னைப் பத்தி சொல்லலையா?" என்றார் கோபமாக. சுப்பிரமணியனுக்கு கோபமாக வந்தது. தன்னை மரியாதைக்குக் கூட தன் உதவியாளர் கேட்காமல், காபி ஊற்றி அந்த ஆளுக்கு வைத்ததை அவர் விரும்பவில்லை. ஆனாலும் அமைதியாக இருந்தார். இரண்டு பேரும் காபியை குடித்தார்கள்.

சௌந்தரம் தொடர்ந்தார். "இன்னும் இரண்டு நாளில் ஆர்டர் தயாராகிவிடும். இன்னிக்கு நைட்டே பேனலில் இருப்பவர்கள்

போஸ்டிங் வாங்க சென்னைக்கு கிளம்பிவிடுவார்கள். அதுக்கு முன்னாலேயே நாம் முந்திக்கொள்ளவேண்டும். நான் சொன்னா மேலிடத்தில் ஓகேதான். சார் என்ன சொல்றீங்க?"

சுப்பிரமணியனுக்கு "இவனிடமெல்லாம் போஸ்டிங் பற்றி பேசணுமா?" என்று தோன்றியது. ஆனால், 'விஷயம்தான் என்ன என்று தெரிந்துகொள்ளலாமே' என்று நினைத்தார்.

"மிஸ்டர் சௌந்தரம்! நீங்க என்ன சொல்ல வாரீங்க? நான் தான் பேனலில் நம்பர் ஒன். சென்னையில் ஒரு வேகன்சி வருது. அதில் எனக்குத் தானே போஸ்டிங் குடுக்கணும்? இதில் சொல்றதுக்கு என்ன இருக்குது?"

சௌந்தரம் சிரித்தார். "சார்! நீங்க ரொம்ப நல்லவர்னு சொன்னாங்க! அது சரிதான். ஆனால் ரொம்ப அப்பாவியாக இருக்கீங்களே! இன்னிக்கு நிலைமை எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்க வேணாமா! நல்லவேளை! நான் நேரில் வந்தது நல்லதாப்போச்சு!"

"சரி! நான் என்ன செய்யணும்? நேரடியா சொல்லுங்க!"

"ஓகே. அப்படி கேளுங்க! சென்னை போஸ்டிங்குக்கு நாற்பது வரை கொடுக்க உங்க ஆளுங்க தயாரா இருக்காங்க. அதில் யாராச்சும் ஒரு ஆள் கொஞ்சம், கூடுதலா கொடுத்தா சென்னை அவருக்குத்தான். நீங்க சீனியர் போஸ்ட். மேலும் நல்லவராகவும் இருக்கீங்க. உங்களுக்குத்தான் சென்னைன்னு நான் முடிவு செஞ்சுட்டேன். அதனால நீங்க ஒரு இருபத்தி ஐந்து மட்டும் கொடுத்தால் போதும்."

சுப்பிரமணியன் திகைத்தார். அவர் ஓளரவு நேர்மையானவர்.

"இருபத்தி ஐந்து ஆயிரமா?"

சௌந்தரத்தால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "ஆயிரமா! எந்தக் காலத்தில் சார் நீங்க இருக்கீங்க? லட்சம் சார், லட்சம்!"

"சார்! யோசிக்க வேண்டாம். ஒரு வருஷத்தில எடுத்துடலாம். உங்களுக்கு இன்னும் அஞ்சு வருஷம் சர்வீஸ் இருக்கு. அத்தோட வெளியூர்ல திருநெல்வேலி, கன்னியாகுமரில வேலை பாத்தா குடும்பத்தைப் பிரிஞ்சிருக்கணும். ரூம் வாடகை, ஹோட்டல் சாப்பாடு போக வர செலவு எல்லாம் இருக்கு. நல்லா ஒருமுறை யோசிச்சுப் பாருங்க!"

சுப்பிரமணியன் யோசிக்க ஆரம்பித்தார். அவர் மனதில் ஒரு கணக்கு ஓடியது. தான் மறுத்தால் இன்னொருவர் எப்படியும் பணம்

கொடுத்து தனக்கான இடத்தைத் தட்டிப் பறிப்பது உறுதி. வேறு வழி இல்லை என நினைக்க ஆரம்பித்தார். சௌந்தரம், மீன் தூண்டிலை கடிக்கப் போவதை உணர்ந்துகொண்டார். எவ்வளவு பேரை பார்த்திருப்பார்!

"சார்! நான் இதுவரை யாரையும் நானாகப் போய்ப் பார்த்தது கிடையாது. உங்களை மட்டும்தான் வந்து பார்த்து பேசியிருக்கேன். சீக்கிரம் முடிவு செஞ்சு சொல்லுங்க. இந்நேரம் என்னையைத் தேடி உங்க ஆளுங்க அலைவாங்க!"

சௌந்தரம் தன் மொபைல் போனை எடுத்து நம்பர்களை தட்டினார். "ஹலோ சார்! நான் இங்க சார் கிட்ட பேசிட்டேன். ஆமா! பக்கத்தில தான் இருக்கார். பேசுங்க!"

போனை சுப்பிரமணியனிடம் கொடுத்தார். மெதுவான குரலில் "அமைச்சர் பி.ஏ." என்றார் ஒருவர்.

சுப்பிரமணியன் போனை காதில் வைத்தார். "ஹலோ! வணக்கம் சார்!" அவர் குரலில் பதற்றம். மறுமுனையில், "வணக்கம்! நான் அமைச்சர் பி.ஏ. பேசுறேன். சௌந்தரம் மாமா சொன்ன விஷயத்தை உடனே முடிச்சுருங்க. இரண்டு நாளைக்குள் முடிவு செஞ்சுடுவாங்க. டிலே பண்ணாதீங்க!" என்று அவர் சொன்னது காதில் கேட்டது. ரொம்பவும் எச்சரிக்கையாக பி.ஏ. பேசினார். எந்த விஷயம் என்று அவர் பேச்சில் குறிப்பிட்டு சொல்லவில்லை.

சௌந்தரம் திகைப்புடன் இருந்த சுப்பிரமணியனிடம், "சரி சார்! நான் வர்றேன். இன்னிக்கு நைட் 8 மணிக்குள் முடிவு செஞ்சு இந்த நம்பருக்கு பேசுங்க!" என்று சொல்லி ஒரு விசிட்டிங் கார்டை கொடுத்துவிட்டு அறையிலிருந்து கிளம்பிப் போனார். அந்த மட்டமான சென்ட் வாசம் கொஞ்சம் அங்கேயே இருந்தது.

அவர் கிளம்பிப்போன சிறிது நேரத்தில், உதவியாளர் உள்ளே வந்தார். "சார்! சௌந்தரம் உங்களைத் தேடி வந்தது உங்க நல்லநேரம் சார். இந்த ஆள் கையில தான் பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் இருக்காங்க. டாப் லெவல் போஸ்டிங் எல்லாத்திலயும் அந்த ஆள் சொல் முக்கியமாப் போச்சு. பெரிய பெரிய ஆளுங்க எல்லாம்இவர் மூலமாத்தான் காரியம் சாதிச்சுக்கிறாங்க. சம்ச்சா சௌந்தரம் ரொம்ப முக்கியமான ஆளு. செக்ரடேரியட்ல ரொம்ப முக்கியமான ஆளு சார் இவர்."

சுப்பிரமணியனுக்கு அதை கேட்கவே குமட்டியது. "சே! என்னய்யா இது! கேட்கவே அசிங்கமா இருக்கு!"

அலுவலக உதவியாளர் சிரித்தார். “சார்! அதைப் பத்தி நமக்கென்ன சார்?” நமக்கு காரியம் ஆகணும். அவ்வளவுதான். அதுக்குப் பிறகு இவனை எல்லாம் நீங்க ஏன் சார் பார்க்கப் போறீங்க!”

“அப்படி என்ன இவன் பெரிய ஆளா?” சுப்பிரமணியன் கடுப்பாக கேட்டார்.

அலுவலக உதவியாளர் காசிநாதன் சிரித்தார். அதில் வருத்தமே அதிகம் இருந்தது. “சார்! இவன் பெரிய ஆளாகவில்லை. நாம மதிக்கின்ற பெரிய மனுசங்க எல்லாம் சாயங்காலம் ஆனா சின்ன மனுசங்க ஆயிடுறாங்க. அவங்களோட வீக் பாயின்ட்ஸ் எல்லாம் இவனுக்கு அத்துப்படி. ரயிலில் இருந்து இறங்கியதும் பல பெரிய அதிகாரிகள், நம்மைக் காட்டிலும் “சௌந்தரம் எங்கே?” என்று தான் கேட்பார்கள்.”

சுப்பிரமணியனும் சிரித்தார்.

“சம்ச்சா சௌந்தரம், சௌந்தரம் மாமா என்றால் எல்லோருக்கும் தெரியும். சார்தான் இதுவரை தெரியாமல் இருந்திருக்கிறீங்க. நம்ம தலைவரையே இவன் பேர் சொல்லித்தான் பேசுவான்.”

காசிநாதன் தலைவர் என்று சொன்னது எந்த கட்சித் தலைவரையும் அல்ல. அவர்களது துறைத் தலைவரைத்தான் அப்படி குறிப்பிட்டார்.

“எந்த செக்ரட்டரி என்ன சாப்பிடுவார், எந்த சோப்பு போடுவார் என்பது போன்ற எல்லாருடைய டேஸ்டும் அந்த ஆளுக்கு அத்துபடி சார்.” காசி சிரித்துக்கொண்டே காபி கப்புகளை எடுத்துக்கொண்டு நடந்தார்.

சௌந்தரராஜன் ஆரம்பத்தில் அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கார்ப்பரேஷனில் கீழ்நிலை பணியாளராக இருந்தவர். ஒழுக்கக் கேடான நடத்தைகளுக்காக பணியிலிருந்து நீக்கப்பட்டவர். நீக்கப்பட்ட பிறகும் சில பெரிய அதிகாரிகளுக்கு வேண்டிய காரியங்களை செய்து கொடுத்து அவர்களை மெல்ல வளைத்தார். பிறகு அவர்களை ப்ளாக் மெயில் செய்து, சில தாதாக்களின் உதவியுடன் தன் காரியங்களை சாதித்துக்கொண்டார். அந்த அதிகாரிகள் மாறிப்போய் தொடர்ந்து பணிபுரியும் துறைகள் எல்லாவற்றிலும் சம்ச்சா சௌந்தரத்தின் அதிகாரம் ஏற்பட்டது. ஒரு நிலையில் அவர் அமைச்சர்களின் அறைகளிலும் நுழைந்து வந்தார். சம்ச்சாவால் பல அதிகாரிகளும் அமைச்சர்களும் பதவிகளை பறிகொடுத்திருந்தாலும், மற்றவர்களால்

அவரது மாயவலையிலிருந்து விடுபட முடியவில்லை. அவர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொண்ட பழைய அதிகாரிகளே அவரின் தயவுக்கு விலை கொடுக்க வேண்டிய ஒரு நிலைமையும் ஏற்பட்டது. நேர்மையான நல்ல அதிகாரிகளுக்கு சம்ச்சா சௌந்தரராஜன் என்ற பெயர் ஒரு பெரும் சவாலாக இருந்தது. ஆனால் பெரும் நரியான சம்ச்சா அப்படிப்பட்ட அதிகாரிகளுடன் நேரடியான மோதல் வைத்துக் கொள்வதில்லை. அவர்களையும் வளைக்கவே முயற்சி செய்தார். அதுதான் அவரின் திறமை. சொன்னதைச் செய்து கொடுக்க பல ஆட்கள், அடியாட்கள், வாகனங்கள், சில வளர்ந்து வரும் நடிகைகள், நகரின் ஒதுக்குப்புறங்களில் சில வீடுகள் என பெரிய நெட் ஒர்க்கையே சம்ச்சா சௌந்திரராஜன் நடத்தி வந்தார்.

# 8

அந்தப் பொறியியல் கல்லூரியின் கட்டிடங்கள் பிரமாண்டமாகவும், மிகுந்த கலையழகுடனும் இருந்தன. எல்லாமே மூன்றுமாடிக் கட்டிடங்கள். அலுவலகக் கட்டிடம் முகப்பிலேயே, ஐந்து மாடிகளுடன் கம்பீரமாக இருந்தது. அதன் உச்சியில் ஒரு மகுடம் போல ஒரு பெரிய கடிகார மணிக்கூண்டு காட்சியளித்தது. அதில் மணி 12-20 என தெரிந்தது. கல்லூரி வளாகத்தின் மையத்தில் பெரிய நூலகமும் அதன் பக்கவாட்டில் கேன்டினும் இருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் பூச்செடிகள், குரோட்டன்சுகள் தெரிந்தன. கேன்டீன் மாணவர்களால் நிரம்பியிருந்தது. அதில் ஒரு மேசையைச் சுற்றி சதீஷ், ராஜேஷ், ப்ரியா உட்கார்ந்து பீட்சாவை சுவைத்துக் கொண்டும், இடையிடையே டின்னில் இருந்த பெப்சியை குடித்துக்கொண்டும் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரே சிரிப்பொலியில் அந்த ஹால் முழுவதும் நிரம்பியிருந்தது. டிரஸ்கோட் இல்லாததால் மாணவர்களும் மாணவிகளும் விதவிதமான உடைகளில் காட்சியளித்தார்கள். ஆனால் கழுத்தில் அடையாள அட்டையை தொங்கவிட்டிருந்தார்கள். அது அந்தக் கல்லூரியில் கட்டாயம்.

ப்ரியா கேட்டாள். "நேத்து கேத்ரினும் ஜோசப்பும் இன்டாஸ்டெல்லர் படம் போனாங்களாமே! படம் எப்படி இருந்துச்சாம்?"

"படம் சூப்பரா இருந்துச்சாம். படம் பாத்துட்டு வீட்டுக்குப் போக வழி தெரியாமல் வேற ஏதோ ஏரியாவுக்குள்ளே போய்ட்டாங்களாம். ஜோசப்போட அப்பா மகனைக் காணோம்னு சிட்டி பூராவும் தேடி ஒரு வழியாக கண்டுபிடிச்சு வீட்டுக்கு அழைச்சிட்டு வந்தாராம்." சிரிக்காமல் பதில் சொன்னான் ராஜேஷ்.

"ஓ! அதான் அவன் இன்னக்கி காலேஜ்க்கு வரலையா!"

அவர்களுடன் இருந்த மற்ற மாணவர்களும் இதைக்கேட்டு பலமாக சிரித்தார்கள். "நம்ம ஹாஸ்டல் பசங்க பலபேர் அதைப் பார்த்துட்டு வந்ததிலிருந்தே தூக்கத்தில் நடப்பவர்களைப் போல திரிகிறார்கள்." என்றான் ஒரு மாணவன்.

"படம் மேக்கிங் ரொம்ப பவர்புல் போல" ப்ரியா சிரித்தாள். "அப்படியில்லை. படம் அருமையானதுதான். கவனமா பார்த்தால் தான் விளங்கும்" என்றான் சதீஷ்.

அவர்கள் பேசி சிரித்துக்கொண்டிருப்பதை ஒரு மூலையிலிருந்த டேபிளில் இருந்த இரண்டுபேர் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹசன், காதர். அவர்கள் இருவரும் சில நாட்களாகவே அந்த மூன்று பேரையும் கவனித்து வந்தார்கள். ராஜேஷ், கான்ட்ராக்டர் நல்லதம்பியின் மகன் என்பதும், சதீஷ் அமைச்சரின் மகன் என்பதும் ப்ரியாவின் தந்தை ஒரு ஆர்டிஓ என்பதும் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது. இப்படிப் பட்டவர்களின் நட்பு அவர்களுக்கு மிகவும் தேவையாக இருந்தது. அவர்களின் விருப்பங்கள், பொழுதுபோக்கு முதலியவற்றையும் கொஞ்சம் சிரமப்பட்டு தெரிந்துகொண்டார்கள். அந்த மூவரும் பெரிய இடத்துப் பிள்ளைகள் என்பதால் நவநாகரீக உடைகளிலும் பழக்கங்களிலும் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதும் அடிக்கடி பார்ட்டிகளில் கலந்து கொள்பவர்கள் என்பதும் அவர்கள் எதிர்பார்த்த விஷயங்களே. அந்த மூன்று பேருடன் அடிக்கடி கௌதம் என்பவனும் இருந்தான். கௌதம் ஒரு போலீஸ் எஸ்.பி.யின் மகன். அந்த குரூப்பில் பழகிய பலரும் நீதிபதிகள், டாக்டர்கள் பெரிய தொழிலதிபர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பையன், பெண்களே. அந்த குரூப்பில் நுழைய முக்கிய தகுதி கையில் பணம் வைத்துக் கொண்டு அதை தண்ணீராய் செலவழிக்கவேண்டும். அத்துடன் சொந்தமாக ஒரு பைக் அவசியம். இல்லையென்றால் அந்த கிளப்-ல் நுழைய முடியாது. அடல்ட்ஸ் ஒன்லி ஜோக் சொல்லுதல், நடனம், கிடார் வாசித்தல போன்ற சிறப்பான திறமை இருந்தால் சிலர் மட்டும் சாதாரணமாக இருந்தாலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

கௌதம் வந்து அவர்களின் அருகில் அமர்ந்தான். உடனே சதீஷ் அவனிடம் "என்னடா மச்சான்! உன் அண்ணன் யு.எஸ்.லிருந்து வந்துட்டானா?"

கௌதம் "இல்லடா! நெக்ஸ்ட் வீக்தான் வரான்."

ப்ரியா அவனிடம் ஒரு பெப்சி டின்னை தூக்கிப்போட, அவன் லாவகமாக அதைப் பிடித்துக்கொண்டான்.

அப்போது அவன் தன் மொபைலை டேபிளின் மூலையில் வைத்துவிட்டு பெப்சி டின்னை எடுத்துக் குடித்தான். அதே சமயம் காதர் அந்த டேபிளை கடந்து போய் கவுன்டரில் இரண்டு கோக் டின்கள் வாங்கிக் கொண்டு ஹசனை நோக்கி திரும்பிப் போனான்.

அப்போது கௌதமின் மொபைல் காதரின் கைக்கு மாறி இருந்தது. காதர் லாவகமாக அந்த மொபைலை தன் சீட்டில் மறைத்து வைத்துக் கொண்டான். ஹசனும் காதரும் கோக் குடிக்க ஆரம்பித்தார்கள். ப்ரியாவும் நண்பர்களும் எழுந்து வெளியே போனார்கள்.

ப்ரியா, "It is time. Let's make a move!" என்றபடி வேகமாக நடந்தாள்.

கௌதம் தன் மொபைலை மறந்துவிட்டு அவர்களுடன் போனான். இதைத்தான் காதர் எதிர்பார்த்தான். அவர்கள் கட்டிடத்தை விட்டு சில அடிகள் போனதும். காதரும், ஹசனும் வேகமாக அவர்களை நோக்கி நடந்தார்கள். ஏதோ உதவி செய்பவர்களைப் போல இருந்தது அவர்களின் நடவடிக்கை.

"ஹலோ! ஹலோ! ப்ளீஸ் ஸ்டாப்!"

அவர்கள், தம்மை நோக்கி இருவர் கத்திக் கொண்டே வருவதைக் கவனித்து ஒன்றும் புரியாமல் நின்றார்கள்.

காதர் அவர்களிடம் வந்து, "இது உங்கள் மொபைலா? நீங்கள்தான் கேன்டீன் டேபிளில் மறந்து வைத்துவிட்டு வந்தீர்கள் என்று நினைக்கிறேன்." என்று சொல்லி தன் கையிலிருந்த மொபைலை காட்டினான்.

அது ஒரு சோனி மொபைல். விலை ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம். அதைப் பார்த்ததும் பதறியபடி கௌதம் தன் பேன்ட்ஸ் பாக்கெட்டைப் பார்த்தான். "Yes it's mine" என்றான்.

காதரிடமிருந்து தன் மொபைலை வாங்கிக் கொண்ட கௌதம் 'தேங்க் யு வெரி மச்!' என்றான். பிறகு 'ஐ' யம் கௌதம். "வெரி மச் ப்ளீஸ்ட் டு மீட் யு!" என்றான். மொபைல் கிடைத்ததில் கௌதம் அதிகம் மகிழ்ச்சியடைந்தான்.

உடனே காதர் "ஐயம் அப்துல் காதர். பர்ஸ்ட் இயர் கம்ப்யூட்டர் சைன்ஸ். இவன் முகமது ஹசன் என் க்ளாஸ் மேட்" என்று ஹசனையும் அறிமுகப்படுத்தினான்.

பதிலுக்கு கௌதமும் சதீஷ், ராஜேஷ் மற்றும் ப்ரியா என்று தன் நண்பர்களை அறிமுகப்படுத்தினான். அவர்கள் புன்னகையுடன் கை குலுக்கிக் கொண்டார்கள்.

வகுப்புக்கு நேரமானதால் அவர்கள் அத்துடன் கலைந்து போனார்கள். காதர், தான் நினைத்தபடி எல்லாம் நடப்பதினால் மகிழ்ச்சியாக இருந்தான்.

மறுநாள். கேன்டீனில் அவர்கள் எல்லோரும் ஒரே குரூப் ஆக உட்கார்ந்து கலக்கினார்கள். காதர் அவர்களின் செல்போன் எண்களை வாங்கித் தன் செல்போனில் பதிவு செய்துகொண்டான். ஹசன் சொன்ன அடல்ஸ் ஒன்லி ஜோக்குகள் அவர்களை வெகுவாக கவர்ந்தது. அவன், தான் சல்மான்கானை நேரில் சந்தித்து பேசியதை விவரித்ததும் அவர்கள் ஆச்சரியத்தில் வாய் பிளந்தனர். விடுமுறையில் தான் மும்பாய் போகும் போது அவர்களையும் அழைத்துக் கொண்டு போய் சல்மானை சந்திக்க வைப்பதாகவும் கூறி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினான். “என் சித்தப்பா சல்மான்கானின் படத் தயாரிப்பாளரின் நண்பர் என்பதால் எனக்கு அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்” என்று அவன் சொன்னதும், அவன் குழுவின் பிரியமான நண்பன் ஆகிவிட்டான். அவர்களின் நண்பர்கள் வட்டமும் பெரிதாகியது.

பணம் அவர்களிடம் வெகு தாராளமாக புழங்கியது. “என் அப்பா ஒரு ஜவுளி வியாபாரி. நாங்கள் வியாபார குடும்பம். அண்ணன் லண்டனில் வேலையில் இருக்கிறான். அக்கா யு.எஸ்.சில் கணவனுடன் இருக்கிறாள்.” என்று ஹசன் சொன்னபோது நண்பர்கள் எளிதில் நம்பினார்கள். அவன் அந்த மாதம் வரும் தன்னுடைய பிறந்தநாள் அன்று ஈசிஆர் சாலையில் இருக்கும் ஒரு ரிசார்ட்டில் பார்ட்டி கொடுக்க விரும்புவதாக சொன்னதும் ஒரே உற்சாகக் கூச்சல் கிளம்பியது. அவர்கள் உடனே தங்களின் விருப்பமான ஈஸ்டர்ன் ஈகிள் ரிசார்ட்டை சிபாரிசு செய்தார்கள்.

ஹசன், காதர் இருவரும் நீலாங்கரையில் ஒரு டபுள் ரூம் ப்ளாட்டை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தார்கள். அந்த ப்ளாட்டுக்கும் அடிக்கடி நண்பர்களை அடிக்கடி அவர்கள் அழைத்து வந்தார்கள். அங்கே அவர்கள் நண்பர்களுக்கு கொடுத்த சிகரெட் அவர்களுக்கு மிகவும் பிடித்துப்போனது. அங்கு குடித்த டீ கூட கூடுதல் சுறுசுறுப்பைக் கொடுத்ததாக அவர்கள் உணர்ந்தார்கள். தங்கள் ஊர் டீ என்று அவர்கள் கொடுத்த டீ உண்மையில் கொஞ்சமாக அபின் கலந்த டீ ஆகும். அவர்களுக்கென தனியாக ஒரு சமையல்காரனும் இருந்தான். அந்த ப்ளாட் நண்பர்கள் அடிக்கடி சந்திக்கும் வசதியான இடமாகிவிட்டது.

அந்த ப்ளாட்டின் ஒரு ரூமில் மிகப்பெரிய டி.வி. ஒன்றை வாங்கி வைத்தான் காதர். யாருக்கும் கிடைக்காத சி.டி.க்களை எப்படியோ கொண்டு வந்து தன் நண்பர்களுக்கு போட்டுக்காட்டி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினான். நாளடைவில் அவர்கள் என்ன

சொன்னாலும் அந்த நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிலைமை மாறியது. எங்கே பார்ட்டி, எப்படி நடத்துவது என்பதை யெல்லாம் காதரிடமே விட்டுவிடும் அளவுக்கு நண்பர்களின் அன்பை அவர்கள் பெற்றுவிட்டார்கள். நண்பர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்கள் வீடுகளுக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் விருந்து வைத்தார்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் போகும் போது விலை உயர்ந்த வெளிநாட்டுப் பொருட்களை அன்பளிப்பாக கொண்டு சென்றான் காதர். பெரும்பாலும் நண்பர்களைப் பற்றியும், அவர்கள் வீட்டில் இருந்தவர்களைப் பற்றியும் அவன் கணிப்பு சரியாகவே இருந்தது. அவர்கள் எவ்வளவோ வசதியானவர்கள் ஆக இருந்தாலும் வெளிநாட்டுப் பொருள், அதுவும் அன்பளிப்பாக என்றதும் உடனே அதற்கு ஆசைப்பட்டார்கள். இது போன்ற ஆசைகள் தவறுக்கும், ஆபத்துக்கும் வழிகாட்டும் என்பதை யாரும் உணர்வதில்லை. ஹசனும் காதரும் இது போன்ற விஷயங்களில் மிகுந்த அனுபவப்பட்டவர்கள் என்பதால், சர்வசாதாரணமாக அவர்களைக் கையாண்டார்கள். ஹசனும், காதரும் உண்மையில் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதை தெரியாமல் நண்பர்களும் அவர்கள் வீட்டில் இருந்தவர்களும் அவர்களுடன் நெருங்கிப் பழகினார்கள்.

# 9

புனே குண்டுவெடிப்பு நடந்த பிறகு அன்றைய இந்திய அரசின் உள்துறைச் செயலாளராக இருந்த ஜி.கே.பிள்ளை பத்திரிகை நிருபர்களிடம் பேசும் போது: "'கராச்சி திட்டத்தைப்' பற்றி பேசினார். பாகிஸ்தானின் கராச்சி துறைமுக நகரில்தான் நிழல் உலக பயங்கரவாதிகளான தாதாக்கள் டைகர் மேமன், தாவூத் இப்ராஹிம் ஆகியோர் இன்றும் தங்கியிருக்கிறார்கள். அப்போது பாகிஸ்தான் அரசாங்கமும் இராணுவமும் இந்தியாவுடன் நேரடிப் போரில் பலத்த அடி வாங்கி தோல்விகளால் துவண்டு அவமானப்பட்டுப் போயிருந்தார்கள். அதனைச் சரி செய்வதற்காக அவர்கள் ஒரு புதிய சதித்திட்டத்தை தீட்டியிருந்தார்கள். அதுதான் 'கராச்சி புராஜெக்ட்' எனப் பெயரிடப்பட்டது. அதன்படி இந்தியாவில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவ பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐஎஸ்ஐ (இன்டர் ஸ்டேட் இன்டெலிஜென்ஸ்) உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படி ஊடுருவும் தீவிரவாதிகள் இந்தியாவில் வேலையற்ற, ஏழை, இளைஞர்களை தேடிப்பிடித்து அவர்களுக்கு மூளைச் சலவை செய்து ஆயுதப் பயிற்சி, வெடிகுண்டுகள் தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி கொடுத்து அவர்களை தீவிரவாத பயங்கரச் செயல்களுக்கு தயாராக வைத்திருப்பார்கள். அவர்கள் ஸ்லீப்பர் செல்கள் எனப்பட்டார்கள். அவர்கள் சாதாரண ஆட்களைப் போலவே அமைதியாக அவரவர் தொழில்களைச் செய்துகொண்டிருப்பார்கள். உத்தரவு வந்ததும் தங்களுக்கு குறிப்பிடப்பட்ட பயங்கரவாத செயல்களை செய்து முடிப்பார்கள். புனே குண்டுவெடிப்புகள் முடிந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட அப்துல் காஜா என்பவனிடமிருந்தே முதன்முதலாக இந்த விபரங்கள் இந்திய அரசால் பெறப்பட்டன. அப்துல் காஜா பாகிஸ்தான் தீவிரவாதி சகோதரர்கள் ரியாஸ் பத்கல், இக்பால் பத்கல் மற்றும் சாஹித் பத்கல் ஆகியோரின் இரண்டாம் நிலை தளபதி ஆவான். இந்த சதிச் செயல்களுக்கு வேண்டிய தகவல்களைத் திரட்ட வெளிநாட்டைச் சேர்ந்த டேவிட் ஹட்லி என்பவனை, இந்தியா முழுவதும் பயணம் செய்யவைத்து பயன்படுத்திக் கொண்டார்கள். அதன் முடிவில் அவர்கள் இந்தியாவில் மிகவும் அமைதியாக, பிரச்னைகள் அதிகம்

இல்லாமல் மக்கள் இணக்கமாக வாழும் பிரதேசங்களில் தங்கள் பயங்கரச் செயல்களை, குண்டுவெடிப்புகளை நிகழ்த்தவேண்டும், அதுதான் இந்தியாவுக்கு பெரும் வலியைக் கொடுக்கும் என்று தீர்மானித்தார்கள்.

அப்துல் காஜாவை தொடர்ந்து விசாரித்ததில், தீவிரவாதிகள் இரண்டு பேர் இந்தியாவின் தென்பகுதிக்குச் சென்றிருக்கும் தகவல் கிடைத்தது. இந்த இரண்டு பேரும் ஸ்லீப்பர் செல் உறுப்பினர்கள் அல்ல என்பதும் அவர்களுக்குப் பயிற்சிகள் அளித்த மிகவும் கடுமையான தீவிரவாதிகள் என்பதைக் கேட்ட இந்திய அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தார்கள். தென் மாநிலங்களில் எந்த மாநிலத்துக்கு அவர்கள் போயிருக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது என்றும் அப்துல் காஜா சொன்னான். இந்தத் தகவல்களை இந்திய இராணுவத்தினர் பாகிஸ்தான் இராணுவத்தின் ரேடியோ உரையாடல்களை மறித்துக் கேட்டபோது, தகவல்கள் உண்மையே என்பது தெரிந்தது. உடனடியாக அவர்களை அடையாளம் காணும் முயற்சிகளும் முழுவீச்சில் துவக்கப்பட்டன. மத்திய அரசாங்கத்திடம் இருந்து எல்லா மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களுக்கு விரிவான சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன. அதில் இந்திய அரசிடம் இருந்த பாகிஸ்தான் தீவிரவாதிகளின் புகைப்படங்கள் இருந்தன. பல்வேறு குண்டுவெடிப்புகளில் தொடர்புடையவர்கள் என்று இந்திய RAW அதிகாரிகளால் குறிப்பிடப்பட்ட தீவிரவாதிகளைப் பற்றிய குறிப்புகளும் படங்களுடன் இருந்தன. அதில் அவர்களின் பலவகையான தோற்றங்களும் காட்டப்பட்டிருந்தன.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருக்கும் அந்தச் சுற்றறிக்கை வந்தது. உடனே அவர் மாநில போலீஸ் அதிகாரிகளின் கூட்டம் ஒன்றைச் சென்னையில் நடத்தி அவரும் உள்துறைச் செயலாளரும் உடனே தீவிரதேடுதல் வேட்டை நடத்தி அப்படி தீவிரவாதிகள் யாரும் ஊடுருவியிருந்தால் எப்படியும் பிடித்துவிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். இந்த வேட்டையின்போது தேவையற்ற பரபரப்பை ஏற்படுத்தாமல் செயல்படவேண்டும் என்றார்கள். மறுநாள் முதல் தமிழகத்தின் அத்தனை நகரங்களிலும் ரயில் நிலையங்கள், பஸ் ஸ்டாண்டுகள் விடுதிகளிலும் போலீஸ் பெரும் தேடுதல்வேட்டை நடத்தினார்கள். பலரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை நடத்தி பிறகு அவர்கள் சாதாரணப் பயணிகள் என்று தெரிந்து அனுப்பினார்கள். அத்தனை லாட்ஜ்களிலும் புதிதாக சந்தேகப்படும்படி யாரும் வந்து தங்கினால் உடனே போலீசுக்கு தகவல் தரவேண்டும் என்று சொல்லி வைத்தார்கள்.

இவை எல்லாம் நடந்து சென்னையில் போலீஸ் தேடுதல் வேட்டையைத் தீவிரமாகத் துவங்கினார்கள். கார்கள், பைக்குகள், லாரிகள், ரயில்வே பயணிகள் ஆகிய எல்லோரும் சோதனை செய்யப்பட்டார்கள். எல்லா இடங்களிலும் இருந்த சி.சி. டி.வி. பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டன. விமான நிலையங்களில் வருபவர்களும் தவறாமல் கண்காணிக்கப்பட்டார்கள். போலீஸ் கையில் இருந்த படங்களில் இருந்தது போல எவரும் எங்கேயும் தென்படவில்லை.

போலீஸ் தங்கள் தேடுதல் வேட்டையை துவங்கியிருந்த போது கல்லூரிகள் துவங்கி ஒரு மாதத்துக்கும் மேல் ஆகியிருந்தது. ஒருநாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தன் டீ முடன் திருவல்லிக் கேணியில் ஹசன் காதர் தங்கிய லாட்ஜுக்கு வந்தார். அவர் வந்தபோது முதலில் இருந்த பணியாளர் அங்கே இல்லை. அவருக்கு பதில் வேறொருவர் இருந்தார். அவருக்கு ஹசன், காதர் வந்தது தெரியவில்லை. அவரிடம் இன்ஸ்பெக்டர் தன் கையில் இருந்த புகைப்படங்களைக் காட்டினார்.

“நீங்க இங்கே எவ்வளவு நாளா வேலையில் இருக்கீங்க?”

“சார்! நான் இங்கே சேர்ந்து ஒரு மாசமாகுது.”

“சரி! நீங்க இங்கே வந்த பிறகு இந்தப் படத்தில இருக்கும் ஆட்கள் எப்போதாவது வந்து தங்கியிருக்காங்களா? இந்த படங்களையெல்லாம் பார்த்து நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. இவர்களை நாங்க தேடிட்டிருக்கோம்.”

பணியாள் படங்களை நன்றாக பார்த்துவிட்டு “இல்லை சார்! இதில ஒரு ஆள் கூட பார்த்த முகமாகத் தெரியலை சார்!” என்றார்.

இன்ஸ்பெக்டர் கூட வந்த போலீசைப் பார்த்தார். “அதில ஒரு காப்பியை இவர் கிட்ட குடுங்க.”

ஒரு கான்ஸ்டபிள் அந்த படம் இருந்த பேப்பர் ஒன்றை நீட்ட, பணியாளர் அதை மரியாதையுடன் வாங்கிக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர் பணியாளை கூர்ந்து பார்த்தார். ‘இங்க பாரும்! இதில இருக்கிற அத்தனை பயலுகளும் பயங்கரமான டெரரிஸ்ட்கள். நல்லா ஞாபகப்படுத்திப் பாருங்க. இனிமேல் பார்த்தாலும் உடனே போலீசுக்கு தகவல் குடுக்கணும். சரியா?’

“சரி சார்!”

இன்ஸ்பெக்டர் அங்கே இருந்தவர்களை ஒரு நோட்டம் விட்டுவிட்டு தன் சகாக்களுடன் கிளம்பினார். சில நிமிடங்களில் ஜீப் கிளம்பியது.

# 10

அந்தச் சாலையில் முந்தின நாள் மாலையில் இருந்தே அதிகம் போலீஸ் பாதுகாப்பு இருந்தது. சாலை புதியதாக போடப் பட்டிருந்ததால் கருப்பாகவும் பளப்பளப்பாகவும் இருந்தது. சாலையின் ஆரம்பத்தில் ஒரு வளைவு ஆர்ச், அலங்காரமாக வைக்கப்பட்டு குறுக்கே நீண்ட ரிப்பன் கட்டப்பட்டு மலர்களால் இருபுறமும் அழகாக்கப்பட்டிருந்தது. பூந்தொட்டிகளும் குரோட்டன்ஸ் செடிகளும் தொட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஆர்ச்சில் அமைச்சரை வாழ்த்தி வரவேற்கும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. சாலையின் ஒரு ஓரத்தில் ஒரு அலங்காரமான மேடை போடப் பட்டிருந்தது. அதிகாரிகளும் ஆளும் கட்சிப் பிரமுகர்களும் என கூட்டம் அலைமோதியது. அன்று அந்தச் சாலை மக்கள் பயன்பாட்டுக்குப் போக்குவரத்துக்கு அமைச்சரால் திறந்து வைக்கப்படும். விழா நடக்கவிருந்தது. மேடையில் சாலையின் பெயர், செலவு மதிப்பீடு, திறப்பாளர் என அமைச்சர் பெயரும் ஒப்பந்தகாரர் திரு நல்லதம்பி எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எங்கும் ஓரே பரப்பாக அந்தப் பகுதி இருந்தது.

சாலையின் மொத்த நீளம் நூற்றி ஐம்பது கிலோமீட்டர் என்றாலும் முதலில் மாநகர எல்லையிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டருக்கு சாலை வேலையை முடிப்பது எனவும் பிறகு கொஞ்சம் கொஞ்ச தூரமாக தொடர்ந்து முடிக்கலாம் எனவும் முடிவு செய்திருந்தார்கள். தேர்தலுக்கு முன்பாக முதல் கட்ட வேலையை முடித்துவிட்டு விழாவும் நடத்திவிடவேண்டும் என்பதில் அமைச்சர் தீவிரமாக இருந்தார். அட்வான்ஸ் தொகைப் பெட்டிகள் வந்ததும், முறைப்படி உத்தரவு வழங்குவதற்கு முன்னாலேயே வேலையை தொடங்க நல்லதம்பிக்கு க்ரீன் சிக்னல் காட்டப்பட்டது. உடனேயே கற்கள், மணல் தார் பேரல்கள் வேலை நடக்கும் பகுதியில் குவிக்கப்பட்டன. நூறு பேர்களுக்கும் அதிகமாக தொழிலாளர்கள் அங்கு அழைத்து வந்து நிறுத்தப்பட்டிருந்தார்கள். சிறிதும் பெரிதுமான பலவகை எஞ்சின்கள் அந்த இடத்தில் வந்து நின்றன. பிரமாண்டமான வேலை நடக்கப் போவது போன்ற தோற்றம் காட்டப்பட்டது. இரவு பகலாக

தொடர்ச்சியாக வேலை நடந்தது. தற்காலிக மின் விளக்குகளும், ஒரு தகரக் கொட்டகையும் அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு வழியாக வேலை முடிக்கப்பட்டு விழாவுக்கு தயார் செய்யப்பட்டது.

வேலை நடக்கும் போதே அது தரமாக செய்யப்படவில்லை என்று ஒரு பத்திரிகை குறை சொல்லியது. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதில் முறைகேடுகள் இருந்தது என்று இன்னொரு பத்திரிகையில் எழுதப்பட்டது. ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து ஓய்வு பெற்றிருந்தவர் சாமிநாதன். அவர் ஒரு ஆர்வக் கோளாரால் அந்தப் பக்கம் பலமுறை வந்து வேலை நடப்பதை கவனித்தார். அங்கிருந்த ஒரு டீக்கடை கொட்டகையில் உட்கார்ந்து டீ குடித்துக் கொண்டே, சாலை வேலை பார்த்தவர்களிடம் பேச்சுக் கொடுத்தார். அவர் சாலைகள் அமைக்கும் துறையிலிருந்து ஓய்வு பெற்றபிறகு ஒரு தனியார் கான்ட்ராக்டரிடம் வேலைபார்த்தார். தனக்கு இதில் விபரம் அதிகம் தெரியும் என்று காட்டிக் கொள்வதற்காக, சாலையில் வேலை செய்தவர்களிடம் பேசினார். அவரால் சும்மா இருக்க முடியவில்லை.

“வேலையை ரொம்ப வேகமா, அவசர அவசரமா முடிக்கிற மாதிரி தெரியுது. சரியான அளவு கல் போடாம, முரட்டு முரட்டு கல்லை எல்லாம் போடுறாங்க. பல இடங்களில் இடித்த கட்டிடங்களை உடைத்து அள்ளி வந்து பள்ளங்களில் போட்டு பரத்துறாங்க. சாலை போட வேண்டிய முறைப்படி எதுவுமே செஞ்சமாதிரி தெரியலை. என்ன வேலை செய்யுறாங்க? சரளை மண்கூட தேவையான அளவு போட்ட மாதிரி தெரியலை. பெரிய பெரிய மிஷின்லாம் சும்மா ஷோ காட்டத்தான் நிறுத்தியிருக்கா மாதிரி இருக்கு. நல்லா கொள்ளையடிக்கிறானுகப்பா!” என்றார்.

அப்போது டீ கடைக்காரர் சைகை மூலம் “பேச வேண்டாம்” என்று எச்சரிக்கை செய்ததை அவர் கவனிக்கவில்லை. ஏற்கெனவே பத்திரிகைச் செய்தியால் கடுப்பில் இருந்த நல்லதம்பியின் ஆட்கள் சாமிநாதன் மேல் தம் கோபத்தைக் காட்டினார்கள். அவரை ஏதோ ஒரு பத்திரிகையின் நிருபர் என்று சிலர் சொன்னார்கள். அதனால் நிறைய அடி விழுந்தது. அடி வாங்கி முகமெல்லாம் ரத்தமுடன் காரில் ஏறி அவர் தப்பித்தால் போதும் என்று ஓடினார். அதன் பிறகு அங்கு வேடிக்கை பார்க்க மக்கள் யாரும் அதிகம் வரவில்லை. சாலை வெகு சீக்கிரம் விழாவுக்கு தயாரானது. மிச்சம் இருந்த பொருட்கள் அடுத்த கட்ட வேலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

சாலை திறப்பு விழாவுக்கும் நாள் குறிக்கப்பட்டுவிட்டது. விழா நாளுக்கு முதல்நாள் வரை வேலைகள் படுவேகத்தில் நடந்தன. ஒரு வழியாக திறப்பு விழாவுக்கு சாலை தயார் செய்யப்பட்டது. சாலை துவங்கிய இடம் அமர்க்களமாக காட்சியளித்தது. அந்த இடத்தில் கலைஞர்கள் சிலர் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். கரகாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் நடந்தன. மொத்தத்தில் ஏதோ கட்சி நிகழ்ச்சி போலவே இருந்தது.

திடீரென்று போலீஸ் பரபரப்பானர்கள். கூட்டத்தை விலக்கித் தள்ளி சாலையின் இரண்டு பக்கங்களிலும் மக்களை நிறுத்தி வைத்தார்கள். திடீரென்று பளபளக்கும் மேக்கப்புடன் கட்சிக் கலர் சேலை அணிந்த பெண்கள், மகளிர் அணியினர் கூட்டத்தின் முகப்பில் வந்து நின்றார்கள். அதுவரை அலறிக்கொண்டிருந்த கட்சிப்பாடல் சற்று நிறுத்தப்பட்டு, "மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து விட்டார்கள்" என்று கரகரப்பான அறிவிப்பு கேட்டது. மேடைக்கு முன்பாக பலவகை வேடமிட்டு ஆடிக்கொண்டிருந்தவர்களும் ஆட்டத்தை முடித்துக்கொண்டார்கள். அந்த இடத்தை பெரிய அதிகாரிகள் பிடித்துக்கொண்டார்கள். துறைச் செயலரும் நல்லதம்பியும் பூங்கொத்துக்களுடன் அமைச்சரை வரவேற்க தயாராக நின்றார்கள். பெரிய போலீஸ் அதிகாரியும் அவர்கள் அருகில் நின்றார். அவருக்கும் விரைவில் பதவி உயர்வு தயாராக இருந்தது. அவரது உடல் மொழியில் அவரது விசுவாசம் வெளிப்பட்டது.

பத்திரிகை, டி.வி. குழுவினருக்கு தனியாக இடம் ஒதுக்கப் பட்டிருந்தது. கூட்டத்தை போலீஸ் சிரமப்பட்டு ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதே சமயம் 'சாலை தரமற்றது' 'ஊழல் நடந்துள்ளது விசாரணை தேவை!' என்ற கோஷங்களுடன் அரசாங்கத்தை எதிர்த்து ஒரு சிலர் கோஷமிட்டுக் கொண்டு, திடீரென வந்து கொடி பிடித்தார்கள். போலீசார் இந்த தீடீர்ப் போராட்டத்தை எதிர்பார்க்கவில்லை போல தெரிந்தது. அவர்கள் கூட்டத்தில் மறைந்திருந்து திடீரென்று வெளிப்பட்டிருக்க வேண்டும். இதைப் பார்த்த முன்னணி ஆளுங்கட்சிக்காரர் ஒருவர் இன்ஸ்பெக்டரை நோக்கி, "யோவ் இன்ஸ்பெக்டர்! என்ன செய்றீங்க? என்னய்யா செக்யூரிட்டி குடுக்குறீங்க!" என்று கத்தினார். உடனே போலீசார் பாய்ந்து போய் அவர்களை திருப்திப்படுத்துவதற்காக மறியல் செய்தவர்களை நெட்டித் தள்ளினார்கள்.

அன்றைய அரசியல் நிலவரப்படி அடுத்த முதலமைச்சராக வரலாம் என்று கருதப்பட்ட சில அமைச்சர்களில் அவரும் ஒருவர்.

அதனால் அதிகாரிகள் மட்டத்திலும் கட்சியிலும் அந்த அமைச்சருக்கு அதிக மதிப்பு இருந்தது. அதன் காரணமாக அதிகாரிகள் அவரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று தம் செயல்பாடுகளில் ஓவர் ஆக்டிங் செய்தார்கள். அதிலும் குறிப்பாக போலீஸ் அதிகாரிகள் படுவேகமாக செயல்பட்டு, ஆர்ப்பாட்டம் செய்யவந்த மக்களை கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கி விரட்டினர். அப்பாவிகள், நியாயம் கேட்க வந்தவர்களின் மண்டை உடைந்து ரத்தம் சொட்டச் சொட்ட அலறியபடி ஓடியது பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அமைச்சர் முகம் வாடி விடக்கூடாதே என்பதே அவர்களின் ஒரே கவலையாக இருந்தது.

முதலில் பைலட் வாகனம் சைரன் அலற விட்டபடி வந்தது. சிறிது இடைவெளியில் பாதுகாப்பு போலீஸ் வாகனங்கள் வர அடுத்ததாக அமைச்சரின் வெள்ளை நிற இன்னோவா தேசியக் கொடி படபடத்துப் பறக்க வந்தது. அதன் பின் பத்திரிக்கையாளர்களின் கார்கள், கட்சிக்காரர்களின் கார்கள் என மொத்தம் இருபத்தைந்து கார்கள் புழுதி கிளப்பிக்கொண்டு சர்சர் என்று வந்து நின்றன. ஒரு மணிநேரம் அங்கு நடந்தவை மக்களாட்சியின் உண்மையான நிலைமையையும் அதில் மக்களின் நிலைமை நடைமுறையில் எப்படி உள்ளது என்பதையும் விளக்குவதாக இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் ஆளாக நின்று காரின் கதவை திறந்தார். முதலில் அமைச்சர் இறங்கினார். உடன் அவருக்கு நெருக்கமான இன்னொரு அமைச்சரும் வந்து இறங்கினார். நல்லதம்பியும் செயலாளரும் அமைச்சர்களுக்கு பூங்கொத்து கொடுத்து வணங்கி வரவேற்றனர். நல்லதம்பியைக் காட்டிலும் செயலாளர் அதிகப் பணிவுடன் நடந்துகொண்டது, அவரது பதவி, படிப்பு ஆகியவற்றின் மேல் இருந்த மரியாதையை மிகவும் குறைப்பதாக இருந்தது. போலீஸ் அதிகாரிகள்வந்து சல்யூட் வைக்க அதை அமைச்சர் ஒரு தலையசைப்பில் ஏற்றுக்கொண்டார். உடன் வந்த அமைச்சர் மரியாதைகளை சீனியர் அமைச்சர் ஏற்கும் போது புன்னகையுடன் அடக்கமாக நின்றுகொண்டார். அப்போது ஒரு ஓரத்தில் மரத்தடியில் நின்று சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த இரண்டு கட்சிக்காரர்கள் “இவன்லாம் இன்னிக்கு மினிஷ்டர். பத்து வருஷத்துக்கு முன்னால ஊர்ல இவன் என்ன செஞ்சிட்டிருந்தான் தெரியுமா?” என்று கேட்டு ஜூனியர் அமைச்சரின் பழைய வாழ்க்கையை விபரமாக மிமிக்ரி ஷோ போல சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டு சிலர் பலமாக சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் சில போலீஸ்காரர்களும்

இருந்தார்கள். ஒருவர் "அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா" என்று சொல்ல அவர்கள் பயங்கரமாக சிரித்தபடியே கலைந்து மேடையை நோக்கிச் சென்றார்கள். **மிகவும் கொடுமையான விஷயங்களைக் கூட நகைச்சுவையாகப் பேசி நம் மக்கள் பழகிவிட்டார்கள்.**

அமைச்சர் பேச எழுந்து நின்றதுமே வரிசையாய் பலர் வந்து வணங்கி, பொன்னாடைகள் போர்த்தும் வைபவம் நடைபெற்றது. அமைச்சர் வாய்ப்பு மறுக்கப்பட்ட தொகுதி சீனியர் எம்.எல்.ஏ. பல்லைக் கடித்தபடி இதை பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு அமைச்சர் பதவி கிடைக்காமல் போனதற்கு, விழாவுக்கு வந்த அமைச்சர்தான் காரணம். ஒரு வழியாக அமைச்சர் மைக் பிடித்து பேசத் தொடங்கினார். அதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் நினைவுப்பரிசு என்ற பெயரில் விலை உயர்ந்த வெள்ளிச்சிலை ஒன்றை அமைச்சரிடம் கொடுத்து, தான் ஒன்றும் விசுவாசத்தில் குறைந்தவன் இல்லை என்பதை நிரூபித்தார்.

"தெய்வங்கள் எல்லாம் ஒன்றாய் சேர்ந்து நின்றாலும் ஈடாகாத என் தங்கத் தலைமையை பாதம் நினைத்து வணங்குகிறேன். முதலமைச்சரின் கருணை மிகுந்த ஆணையால் இந்தப் பகுதி மக்களுக்காகவும், தமிழக மக்களின் போக்குவரத்து வசதிகளையும் கருதியும் இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது. உலகத்திலேயே நமது தமிழ்நாட்டில்தான் சிறந்த தரமான சாலைகள் அமைந்துள்ளன என்று பலரும் நம்மை பாராட்டும் வேளையில், அரசியல் பொறாமையால் காழ்ப்புணர்ச்சியால் ஒரு சிலர் இந்த அரசின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சியில் இறங்கி வன்முறையில் ஈடுபட்டதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். ஆட்சி அதிகாரங்களை பறிகொடுத்து புலம்பும் ஒரு சில புல்லுருவிகளின் சதிவேலைகளே இது என்பதை மக்கள் அறிவார்கள். இந்த ஆட்சியில் சாலைகள் அமைப்பதற்கு மட்டும் ரூபாய் எட்டாயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் விரைவில் மீதியுள்ள சாலை வேலைகளும் செய்து முடிக்கப்படும் என்றும் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஏழை எளிய மக்களின் அரசு என்பதால் உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று இதே இடத்தில் ஒரு டாஸ்மாக் கடை விரைவில் துவங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்" என்றார். கட்சிக்காரர்கள், மக்களும், அதிகாரிகளும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அவர் ஒரு பொத்தானை அழுத்த

பெயர்ப்பலகையை மூடியிருந்த திரை விலகியது. பிறகு செயலாளரும் நல்லதம்பியும் வெகு பவ்யமாக அமைச்சரிடம் ஏதோ சொல்லிச் சிரித்தார்கள். அதே சமயம் ஒரு புது அரசுப் பேருந்து அங்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அமைச்சர் சிரித்த முகத்துடன் அனைவரையும் பார்த்து கையசைத்துக் கொண்டே மேடையிலிருந்து இறங்கி வந்தார். நின்றிருந்த பேருந்தில் ஏறி டிரைவர் இருக்கையில் உட்கார்ந்து அதை இயக்கி புதிய சாலையில் ஓட்டிச் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பிவந்தார். அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, நல்லதம்பியின் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார். அவர் தன் காரில் ஏறி அமர்ந்ததும் அத்தனை கார்களும் சீறிப்பாய்ந்து கோட்டையை நோக்கிச் சென்றன. விழா சிறப்பாக நடந்து முடிந்தது என்று அதிகாரிகளும் நல்லதம்பியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

அங்கே ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார் ஒரு பெரியவர். அந்தச் சாலை வேலை விழாவுக்கு கொட்டகை போட்டவர்கள் சிலர் அதைப் பிரிக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவனின் செல்போனில் எப்.எம். ஒலித்துக்கொண்டிருந்தது. "எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே!" டி.எம்.சௌந்தராஜன் குரலில் பாடல் கம்பீரமாக ஒலித்தது. பெரியவர் சுருட்டுப் பிடித்தபடி அதைக் கேட்டுச் சிரித்தார்.

"ஒரு மழைக்குத் தாங்குமாப்பா நீங்க போட்ட இந்த ரோடு?"

"பெரிசு! சும்மா கிட. ஏற்கெனவே ஒருத்தனை அடிச்சு நொறுக்கிட்டானுவ. நீ வேறயா?"

வேலை பார்த்தவன் எச்சரிக்கை செய்தான்.

# 11

'முத்து நகரம்' என்று அழைக்கப்பட்ட தூத்துக்குடி நகரம். கடலின் குளிர்ந்த உப்புக் காற்றை சுவைத்தபடி மக்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். இரவு மணி 9. ஒரு பெரிய சிகப்பு நிறக் கொடி பின்புலமாக இருக்க சாலையோரத்தில் போடப்பட்டிருந்த அந்த மேடையில் சுடலைமுத்து கழுத்தில் சிகப்புத் துண்டு அணிந்தபடி உணர்ச்சி மிகுந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார். அந்த மேடை மிகவும் எளிமையாக இருந்தது. அதில் தேவையான அளவு மின்சார விளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆடம்பரமான சீரியல் விளக்குகளோ தலைவர்களின் கட் அவுட்களோ காணப்படவில்லை. மேடையிலும் இரண்டு நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டு, அவற்றிலும் இரண்டு எளிமையான, பகட்டற்ற மனிதர்கள் அமர்ந்திருந்தார்கள். மேடையின் பின்புலமாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ் மற்றும் லெனின் படங்கள் தெரிந்தன. சுடலைமுத்து மிகுந்த உணர்ச்சியுடன் பேசினார். அவரின் ஒவ்வொரு சொல்லிலும் மக்களைப் பற்றிய அக்கறை தெரிந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் உழைப்பால் நிறம் கருத்து, உரமேறிய உழைப்பாளி, மீனவ மக்களாகவே இருந்தார்கள்.

"தோழர்களே! நம் இயற்கை வளங்கள் பறிபோகின்றன. நம் கண்ணெதிரே அவை பன்னாட்டுப் பணமுதலைகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்படுகின்றன. இதைச் செய்வதற்கு ஏற்பாடும் வசதிகளும் செய்து கொடுப்பது நம்முடைய அரசாங்கம். இதற்கு ஏஜெண்டுகளாக இருப்பவர்கள் நம் ஊரில் இருக்கும் பேராசை பிடித்த பணக்காரர்கள். களத்தில் இறங்கி இந்தப் படுபாதகச் செயலை செய்ய உழைப்பவர்கள், அறியாமையிலும் வறுமையிலும் உழலும் நம் தொழிலாளி வர்க்கத்தினர் தான். முன்பு உலகம் முழுவதற்கும் விலை உயர்ந்த முத்துக்களை வாரிக் கொடுத்தோம். பின் நாளில் உப்பு மட்டுமே நமது விற்பனைப் பொருளாகி நம் வாழ்வை உறுதி செய்து வருகிறது. இப்போது அதற்கும் கேடுவந்துவிட்டது. வெள்ளை உப்பு நச்சுப் புகைபடிந்து கறுப்பாக மாறிவருகிறது. தாதுமணல் கொள்ளை நம் தூத்துக்குடிப் பகுதியை, நம் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மிக வேகமாக சீரழித்து வருகிறது. நம் கடற்கரைப்

பகுதி முழுவதும் நீரில் கருஞ்சிவப்புச் சாயம் படிந்து மீன்வளம் வேகமாக குறைந்து வருகிறது. ஆலைகளின் நச்சுப்புகை காற்றில் கலந்து அதை விஷக்காற்றாக மாற்றி வருகிறது. அதை சுவாசிக்கும் மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நோயாளிகளாக மாறி வருகிறார்கள். பிறக்கும் குழந்தைகள் கூட புற்றுநோயால் பாதிக்கப்பட்டுப் பிறக்கின்றன. இவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு தரமான மருத்துவமனைகள் கூட நம் பகுதியில் இல்லை. இவற்றையெல்லாம் நம் தோழர்களும் விபரம் அறிந்த மக்களும் நம் மக்களிடையே பிரச்சாரம் செய்து இந்த தாது மணல் கொள்ளைக்கும், நச்சு ஆலைகளுக்கும் எதிராக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக நம் கிராம மக்கள் இந்த ஆலைகளில் வேலைக்குப் போவதை தடுத்து, அவர்களை மீட்டெடுக்க வேண்டும். அதன் மூலம் நமது இயற்கை வளங்களை மேலும் அழியாமல் காப்பாற்ற வேண்டும் நமது அடுத்த தலைமுறைக்கு நாம் எதைக் கொடுப்பது? சீரழிந்த மண்ணையும், கெட்டுப்போன கடலையும் தான் கொடுக்கப் போகிறோமா? சிந்திக்க வேண்டும்."

சுடலைமுத்து பேசுவதை கூட்டத்தினர் அமைதியாக கேட்டனர். அவர் பேச்சில் இருந்த உண்மையும் அது விளக்கிய பேராபத்தும் அவர்கள் ஓரளவு அறிந்திருந்ததே. ஆனாலும் அவர் விளக்கிப்பேசிய போது அதன் கொடுமை அவர்களைச் சுட்டது; அவர்களின் அச்சம் அதிகரித்தது. நம் மக்களின் வாழ்க்கையை கெடுப்பவர்களுக்கு நாமே உதவி செய்கிறோமே என்று கவலைப்பட்டார்கள்.

அருகில் இருந்த டீக்கடையில் இருந்த மூன்றுபேர் சுடலைமுத்து பேசுவதையும் அவருக்கு மக்கள் ஆதரவு பெருகுவதையும் கவலையுடன் கவனித்தார்கள். அதில் ஒருவன் இடையிடையே செல்போனில் யாருடனோ பேசினான். மிகவும் பணிவாக அவன் பேசினான். முடிவில் "சரிங்க முதலாளி" என்றபடி போனை மூடினான்.

**இ**ந்த தாதுமணல் கொள்ளை திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி மாவட்டங்களில், அதாவது தென் தமிழக கடலோரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தாதுக்கள் அடங்கிய கடல்மணல் என்பது நமது இயற்கை லட்சக்கணக்கான ஆண்டுகளாய், பூமியானது தோன்றிய காலம் முதல் சேமித்து வைத்திருப்பதாகும். இந்த தாதுக்களை பலவகை எந்திரங்கள் மூலம் கார்னேட், ரூடைல், இலுமனைட், மானசெட் என்று கனிமங்களைப் பிரித்து அரேபியா, ஜெர்மனி, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகளுக்கு கப்பல்களில் அனுப்புகிறார்கள். இதற்கான மையமாக தூத்துக்குடி துறைமுகம் பயன்படுகிறது. இங்கு கிடைக்கும்

மோனசைட்டில் தோரியம் கலந்திருக்கிறது. இது தனியார் அணுமின் நிலையங்களில் அதிகம் பயன்படுகிறது. அணுக்களை பிளக்க இது பயன்படுத்தப்படுகிறது. இதனால் உலகின் பல நாடுகளிலும் இந்த மணலுக்கு மதிப்பு அதிகம். இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுத்துள்ளது. கடற்கரையின் பல பகுதிகளையே குத்தகையாக இவர்களுக்கு கொடுத்துள்ளது. இவர்கள் விலைக்கு வாங்கியும், குத்தகைக்கு எடுத்தும் பலவகைகளில் மிரட்டியும் பட்டா நிலங்களையும் பெரும் பரப்பில் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளார்கள். இந்தத் தொழிற்சாலைகள் பெரும்பாலும் பகலில் மந்தமாக காணப்படும். இரவில்தான் நடவடிக்கைகள் இங்கு வெகு தீவிரமாக இருக்கும். கடற்கரை முழுவதும் வெட்டி எடுத்து விற்றது போதாமல் கடலுக்குள் இறங்கியும் மணல் வெட்டி எடுக்கிறார்கள். சில இடங்களில் பெரிய குளங்கள் வெட்டியது போல் மணல் எடுத்த பள்ளங்கள் இருக்கின்றன. பிரதான சாலைகளில் இருந்து கடற்கரை போய் மணல் ஏற்றிக் கொண்டு லாரிகள் வசதியாக போய்வருவதற்காக அவர்களே தம் சொந்தச் செலவில் சாலைகள் அமைத்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு தகவல் சொல்வதற்காக ஊரில் பலர் இருந்தார்கள். ஊருக்குள் கடற்கரைப் பக்கம் புதுமனிதர்கள், வாகனங்கள் வந்தால் அவை பற்றிய விபரங்களை சேகரித்து தொழிற்சாலைகளில் இருப்பவர்களுக்கு சொல்லிவிடுவார்கள். முகப்பில் உயரமான சுற்றுச்சுவர்கள் இருக்கும். அவற்றின் பின்னால் நடக்கும் விஷயங்களை வெளியிலிருந்து யாரும் பார்க்க முடியாது. யாரிடமும் விபரங்கள் கேட்கவும் முடியாது. மறியல், உண்ணாவிரதம், போராட்டம் என பலவகைகளிலும் கடலோர மக்கள் நடத்திய போராட்டங்கள், அரசாங்கத்தால் கடுமையாக அடக்கப்பட்டன. ஒரு புறம் இந்த ஆலை முதலாளிகளின் வன்முறை மிரட்டல்கள், இன்னொரு பக்கம் அரசின் அடக்குமுறை என இரண்டு பக்கமும் மக்கள் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக எதிர்ப்புகளும், போராட்டங்களும் குறைந்தன. மத்தியமாநில அரசுகளும் நாட்டின் அத்தனை அரசியல் கட்சிகளும், தலைவர்களும், பெரும் விஞ்ஞானிகளும் எல்லோரும் சேர்ந்தே, நம் நாட்டின் வளங்களை வெளிநாட்டினருக்கு பணத்தாசையால் வாரி வழங்குவது போல காரியங்கள் நடந்துகொண்டிருந்தன. பாதிக்கப்பட்ட மக்களின் குரல் நீதி தேவதையின் காதுகளில் கூட விழாமல் போனது ஒரு பெரும் கொடுமை.

கி.பி. 1908–ஆம் ஆண்டில் எர்ஸ் ஸ்கோன்பெர்க் என்ற ஜெர்மானியர் கன்னியாகுமரிக்கு வந்து மணவாளக்குறிச்சி என்ற ஊரில் ஒரு ஆலையை நிறுவினார். அந்தக் கடற்கரைப் பகுதியின் மணலில் அதிக அளவில் இலுமனைட், ரூட் டைல், கார்னட், சிலிமினேட், சிர்க்கான், மோனசைட் என்ற கனிமங்கள் உள்ளன என்று கண்டறியப் பட்டிருந்தது. இந்தக் கண்டுபிடிப்பு பன்னாட்டு வணிக கம்பெனி களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த கனிமங்கள் உலகச் சந்தையில் பல்லாயிரம் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் வியாபார மதிப்பு உள்ளவை என்பதை இதற்கான காரணம். புதியதொரு வியாபாரச் சரக்கு கிடைத்த மகிழ்ச்சியில் பல நாட்டு வியாபாரிகளும் தென்னிந்தியாவின் பக்கம் பார்வையை திருப்பினார்கள். இந்தக் கனிமங்களை மணலில் இருந்து பிரித்தெடுப்பதற்காகவே அந்த ஆலை நிறுவப்பட்டது. பின்னர் இந்தக் கனிமங்களின் சந்தை மதிப்பை தெரிந்துகொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் இதை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. அவர்களால் ஆலை பின்னர் பெரிய அளவில் அமைக்கப்பட்டது. இந்தியா சுதந்திர நாடாக மாறிய பிறகு 1963ஆம் ஆண்டில் இந்த ஆலை முழுவதுமாக இந்திய அணுசக்தித் துறையின் கட்டுப்பாட்டில் வந்தது. ஆனால் பன்னாட்டு வணிகக் கம்பெனிகள் பின்னாலிருந்து தமது விளையாட்டை துவங்க, இப்போது இந்தியாவில் பல தனியார் ஆலைகள் இத்தொழிலில் இறங்கி இந்திய கடற்கரைகளின் தாதுமணலை கொள்ளையடித்து ஏற்றுமதி செய்து ஆயிரக்கணக்கான கோடிகளை சம்பாதித்து வருகின்றன. அந்தக் கம்பெனிகளின் திறமையான ஆட்டத்தால் இந்திய அரசாங்கம் வெறும் பார்வையாளராக மாறிவிட்டது. இதில் உள்ளூர் பணக்காரர்கள் அதிகம் சம்பாதிப்பதாக தெரிந்தாலும் அவர்களுக்கு கிடைப்பது ஆயிரத்தில் ஒரு பங்கு என்ற அளவில் தான். உண்மையில் சம்பாதிப்பவர்கள் இவர்களை இயக்கும் இந்தியப் பெரு முதலாளிகளும் அவர்களை ஏஜென்ட்களாகக் கொண்ட பன்னாட்டு கம்பெனிகளும் தான். ஒரு ஆலை மட்டும் ஆண்டுக்கு 90,000 டன் இலுமனைட், 10,000 டன் சிர்கான், 10,000 டன் கார்னெட், 3,500 டன் ரூட்டைல், 3000 டன் மோனசெட் ஆகியவற்றை தூத்துக்குடி கடல் மணலில் இருந்து பிரித்தெடுக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் இலக்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. அது இந்த ஆபத்தின் அளவை வேகப்படுத்தி அதிகரித்தது.

இந்த தாதுமணல் கதிரியக்கம் அதிகமாக கொண்டது. அதை மணற்பரப்பிலிருந்து வெட்டி எடுத்து தாதுக்களை பிரிக்கும்போது

அம்மணலில் இருக்கும் இயல்பான கதிரியக்கம் பல மடங்கு அதிகரிக்கும். இந்தக் கதிரியக்கம் இம் மணலைக் கையாளுபவர் களையும், அவர்கள் மூலம் அவர்களுடன் தொடர்பில் உள்ளவர்களையும் விரைவில் பாதித்து புற்றுநோயை உண்டாக்கும். அத்துடன் கிட்னி, எலும்பு தொடர்பான நோய்களும் மக்களை பாதித்தன. மழை கொட்டும் நாட்களில் கூட இப்பகுதியில் நிலம் சுடும். இதற்குக் காரணம் கதிரியக்கம். இதில் நடப்பவர்களும் விளையாடும் குழந்தைகளும் கூட புற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு வாரம் ஒரு குழந்தை என்ற அளவில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி, ரேஷன் கடை வேண்டும் என்று கேட்பதைப் போல மக்கள் புற்றுநோய் ஆஸ்பத்திரி வேண்டும் என்ற கோரிக்கை மனுவுடன் ஆட்சியர் அலுவலகங்களில் கூட்டம் கூட்டமாய் காத்துக்கிடக்கிறார்கள். "நாங்க பிழைக்கிற நூறு இருநூறு ரூபாய் பிழைப்பில புத்து நோயெல்லாம் வந்தா என்ன செய்யறது? எப்படி வைத்தியம் பாக்குறது? பாவப்பட்ட சென்மம் ஆகிப் போனோம்யா!" என்று மக்கள் ஆட்சியரிடம் புலம்பினர். அவரிடம் சொல்லி எதுவும் ஆகப்போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் வேறு என்ன செய்வார்கள்?

இது ஒரு புறம் இருக்க, ஆலைகளில் வேலை செய்பவர்களை மட்டும் கடற்கரை கிராமங்களில் வைத்துக்கொண்டு பாரம்பரிய மீனவர் சமுதாயத்தையே கடல் பகுதிகளிலிருந்து துரத்தவும் இந்தக் கம்பெனிகள் சதி வலைகளை பின்னத் தொடங்கிவிட்டன. இந்தக் கம்பெனிகளில் சில அரசின் சிகப்புப் பட்டியலில் உள்ளவை. ஆனாலும் எப்படியோ அனுமதி பெற்று இங்கு ஆலைகளை நிறுவிவிட்டார்கள்.

ஒரு புறம் மீன்வளம் அழிந்து வந்தது. இன்னொரு புறம் கடல் மணல் தாதுக்கள் பிரித்தெடுப்பதால் புற்றுநோய் தாக்குதல் கடுமையாகி வந்தது. இவற்றை சமாளித்து வாழ்க்கையை ஒருவழியாக நடத்தலாம் என்றால் அதற்கும் மோசம் வந்துவிட்டது. கடற்கரையை விட்டே துரத்தப்படும் நிலையும் ஏற்பட்டுவிட்டது. குடிநீரும் கெட்டு உப்பு நீராகிவிட்டது. வயதாகி உடல்நலம் கெட்டிருந்த பலரும் வாழ்ந்தது போதும்; முடிவு சீக்கிரம் வந்தால் நல்லது என்று நினைக்க ஆரம்பித்தார்கள்.

இவற்றுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஆதரவு கொடுத்தன. சில கட்சிகள் வெளிப்படையாகவும், சில கட்சிகள் மறைமுகமாகவும் முதலாளிகளுக்கு உதவி செய்தன. அவற்றின் பிரமுகர்கள் தான் இந்தக் கொடுமைகளை முன்னின்று நடத்துபவர்கள். ஒரு சில சிறுகட்சிகள், சமூக விழிப்புணர்வுள்ள இயக்கத்தினர் மட்டுமே எதிர்ப்பு

இயக்கங்களை நடத்தி வந்தனர். அதில் ஓரளவு பேச்சுவன்மையும் செயல்திறனும் பெற்றவர் தோழர் சுடலைமுத்து. ஏற்கெனவே மக்களுக்கான பல பிரச்னைகளில் முன்னின்று போராடியவர். பணக்கார முதலாளிகளிடம் விலைபோகாதவர். அதனால் அவர்களின் பகைமையை சம்பாதித்துக்கொண்டவர். அடிக்கடி கூட்டம், தெருமுனைப் பிரச்சாரம் என மக்களைப் பாதிக்கும் விஷயங்களில் முன்னால் நின்று போராடுபவர்.

கூட்டம் முடிந்து மக்கள் கலைந்து செல்லத் துவங்கினார்கள். ஒரு சில இளைஞர்கள் சுடலைமுத்துவிடம் வந்து "நீங்க சொன்னது முழுதும் உண்மைதான் அண்ணே! நாளையில இருந்து நாங்க ஆலைக்கு வேலை செய்ய போக மாட்டோம்!"

அதைக் கேட்டதும் சுடலைமுத்து அதிகம் மகிழ்ச்சியடைந்தார்.

"நீங்க போகாவிட்டால் மட்டும் போதாது தம்பிகளா! உங்க தோழர்கள் கிட்டேயும் இதை சொல்லணும். அவங்களையும் தடுக்கணும்! உடனடியா அந்த ஆலைகளை மூடணும் தம்பி! இல்லாட்டா நம்ம மக்கள் அழிஞ்சு ஒன்னுமில்லாமப் போயிடுவாங்க!" என்றார்.

"நிச்சயமா செய்றோம்." இளைஞர்கள் கிளம்பிப் போனார்கள்.

எஞ்சியிருந்த சில தொண்டர்களிடம் சில ஏற்பாடுகளைப் பற்றி பேசிவிட்டு சுடலைமுத்து புறப்பட்டார். அப்போது டீ கடையிலிருந்த அந்த மூன்று பேரும் அவரை நோக்கி வேகமாக வந்தார்கள். அதில் ஒருவன் "சுடலை அண்ணே! சூப்பரா பேசுனீங்க! கூட்டம் முடிஞ்சுடுச்சே. எங்க போறீங்க?" என்று அவரது கையை பிடித்ததான்.

அவர் "வீட்டுக்குத் தான் போகணும். தூங்கி எந்திரிச்சு காலையில சீக்கிரம் கன்னியாகுமரி போகணும். கலெக்டர் ஆபீஸ்ல ஒரு மறியல். கலந்துக்கணும்."

"சரி. நம்ம ப்ரெண்டோட டாக்சி அந்தப் பக்கம்தான் போகுது. வாங்க உங்களை வீட்ல இறக்கிவிட்டுட்டுப் போறோம்."

அவரை யோசிக்கவிடாமல் கையைப்பிடித்து டாக்சிக்குள் உட்காரவைத்தார்கள். தெரிந்தவர்கள் என்பதால் அவரும் அவர்களுடன் கிளம்பினார். டாக்சி இருளில் நின்றதால் அவர் அதில் ஏறியதை யாரும் கவனிக்கவில்லை. அதற்குப் பிறகு அவரை ஊரில் யாரும் பார்க்கவில்லை. மறுநாள் கன்னியாகுமரி மறியலிலும் அவர் பங்கேற்கவில்லை.

**த**மிழகத்தின் கடல் பகுதியை மூன்று பிரிவாகப் பிரிக்கிறார்கள். (1) பழவேற்காட்டிலிருந்து வேதாரண்யம் வரை – சோழ மண்டலக் கடற்கரை. (2) வேதாரண்யத்திலிருந்து தனுஷ்கோடி வரை – பாக்

நீரிணைப் பகுதி. (3) தனுஷ்கோடியிலிருந்து நீரோடி வரை மன்னார் வளைகுடாப் பகுதி. இப்பகுதிகள் மூன்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தால் செழிப்பானவை. அதிலும் ராமேசுவரத்தைச் சுற்றியுள்ள பகுதி மிகச் சிறப்பானதாகும். இராமேசுவரம் முதல் தூத்துக்குடி வரை உள்ள கடலில் உள்ள 21 தீவுகளையும் அதைச் சுற்றிலும் உள்ள பகுதிகளும் இந்தியக் கடல்சார் உயிர்க்கோளக் காப்பகப் பகுதி என்று சொல்லப்படுகிறது. மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்கா என்று அழைக்கப்படும் இப்பகுதி உலக அளவில் முக்கியமான உயிர்ச்சூழல் பகுதிகளில் ஒன்று. உலக சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் பெரிதும் விரும்பி புகழப்படுபவை இப்பகுதிகள்.

சுரபுன்னைக் காடுகள், காயல்கள், கடல்கோரைப் படுகைகள், மற்றும் பவளப்பாறைகள் அதிகம் இருந்ததால் எங்குமில்லாத பல வகையான கடல்தாவர வகைகளும் உயிர்களும் இங்கே அதிகம் வளர்ந்து பெருகின. முத்துச் சிப்பிகள், சங்குப் பூக்கள், கடல் வெள்ளரி போன்றவை இப்பகுதிகளில் அடர்ந்து வளர்ச்சி கண்டன. இப்படி உயிரோட்டமாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவந்த கடல், வணிக நோக்கம் கொண்டவர்களின் தீவிரமான நடவடிக்கைகளால் தன் இயல்பு கெட்டது. தூத்துக்குடி கடலைக் கெடுத்து நிலப் பகுதியையும் வணிக நோக்கம் சிறிது சிறிதாக சீரழித்துக் கொண்டிருந்தது. மற்ற மாநிலங்களில் அனுமதி மறுக்கப்பட்டவர்கள் இப்பகுதியில் எளிதாக ஆலைகளை நிறுவினார்கள். அதற்கு இங்கு இருக்கும் அரசியல்வாதி களும் அதிகாரிகளும் உதவி செய்தார்கள். அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் பணம்.

இந்த ஆலைகளில் நடக்கும் மரணங்கள் சாமர்த்தியமாக வெளியில் வராமல் மூடி மறைக்கப்பட்டன. அமைச்சர்களின் வருகை, அவர்கள் பேச்சில் அளிக்கும் சான்றிதழ் போன்றவற்றால் இந்த ஆலைகள் ஏதோ நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் பங்களிப்பது போல தோற்றம் உருவாக்கப்பட்டது. ஏழை மக்களில் ஒரு சிலரை, அவர்களுக்கு சில சலுகைகளை அளித்து அடியாட்களாக மாற்றி, அவர்கள் மூலம் மற்றவர்களை பயமுறுத்தி வைத்திருந்தார்கள். ஏழை மீனவ மக்களின் துன்பக்குரல் மக்களாட்சித் தேவதையின் காதுகளில் விழவில்லை. தேர்தல்கள் வந்து ஆட்சிகள் மாறினாலும் இந்த நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு ஆட்சி முடிந்து மறு ஆட்சி வந்தவுடன், நிலைமை இன்னும் மோசமாகவே ஆனது. புதிதாக ஆட்சியைப் பிடிப்பவர்கள் தமக்கு உதவி செய்தவர்களுக்கு அதிக விசுவாசம் காட்டினார்கள்.

# 12

**செ**ன்னையின் அந்தக் கடற்கரை நீளம் குறைவாக இருந்தாலும், கட்டிடங்கள் ஏதும் கடல் மணலின் பரப்பை மறைக்காமல் இருந்ததால் மிகவும் எளிமையாகவும் அதிக ஆழகுடனும் காட்சியளித்தது. சீரான காற்றும் மிதமான கடல் அலைகளும் அங்கு வந்தவர்களுக்கு பரவசமான அனுபவத்தை அளித்தன. கடற்கரையில் நடப்போர் சங்கத்தின் முயற்சியால் நடைப்பயிற்சி மேற்கொள்பவர் களுக்காக அன்றைய பாராளுமன்ற உறுப்பினரும், சினிமா நடிகருமான திரு. சரத்குமாரால் ஒரு நல்ல சாலை ஒரு கிலோமீட்டர் நீளத்துக்கு அமைக்கப்பட்டிருந்தது. அந்தச் சாலை இப்பகுதியில் காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு நல்ல வசதியாக இருந்தது. அதிகாலை முதலே ஆண்களும் பெண்களும் இளம் வயதினரும் முதியோருமாக ஏராளமானோர், காலைச் சூரியன் உதிக்கும் அழகையும், அதிகாலையின் சுத்தமான குளிர்ந்த காற்றையும் அனுபவித்தபடி சிலர் தனியாகவும் பலர் நண்பர்கள் குழுக்களாகவும் மகிழ்ச்சியாக நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் தம் செல்ல வளர்ப்புகளான பலவகை நாய்களையும் உடன் அழைத்து வந்தார்கள். சுவரில் இருந்த ஒரு அறிவிப்புப் பலகையில் ஒரு திருக்குறள் எழுதி அதன் பொருளும் அதன் கீழே எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்து ரசித்து அதன் பொருளையும் அதை இயற்றிய திருவள்ளுவப் பெருமானையும் வியந்து போற்றுவதும் நடந்தது.

ஒரு புறம் சில இளைஞர்கள் பல்டி அடித்தும், பல வகையில் குதித்தும் பயிற்சியில் இருந்தார்கள். அவர்கள் சினிமாவில் சண்டைக் கலைஞர்களாக முயற்சி செய்பவர்கள். ஒரு பெரியவர் சூரியனைப் பார்த்தபடி தன் ஆர்மோனியப் பெட்டியில் பல ராகங்களை வாசித்துக் கொண்டிருந்தார். சில குழந்தைகள் சைக்கிள் விட்டு விளையாடினார்கள்.

நடைப்பயிற்சி முடியும் நேரத்தில் இரு சக்கர வாகனங்களும் கார்களும் அங்கு சுமார் 9 மணியளவில் வரிசையாக வந்து நிற்பது வழக்கம். அருகிலேயே மண்டல போக்குவரத்து அலுவலகம் இருந்ததால், ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான களச் சோதனைகள்

இந்தக் கடற்கரைச் சாலையில் தான் நடக்கும். அன்றும் அதே போல வாகனங்கள் வந்து நின்றன. இளைஞர்களும் இளம் பெண்களுமே அதிக அளவில் வந்திருந்தார்கள். அவர்களுக்கு அவர்களின் பயிற்றுநர்கள் பரிசோதகர் முன்பாக செய்யவேண்டிய பயிற்சிகளை செய்வதற்கு சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தாமாகவே எட்டு போட்டுப் பார்த்தார்கள். சிறிது நேரத்தில் அலுவலக ப்ரேக் இன்ஸ்பெக்டர் அங்கு வந்து சோதனைகளை நடத்தினார். முதலில் இரு சக்கர வாகனங்களுக்கான சோதனைகள் நடத்தி முடிக்கப்பட்டது. அடுத்ததாக கார்களுக்கான சோதனை துவங்கியது. அலுவலர் பெயர்வாசித்ததும் ஒவ்வொருவராக தம் வாகனத்தை அவர் சொல்லியபடி ஓட்டிக்காட்டினார்கள். அதிகாரி முடிந்தவரை எல்லோருடனும் ஒருவகை எரிச்சலுடனேயே பேசினார். அப்படிப் பேசினால்தான் அவரை ஒரு பெரிய அதிகாரி என்று மக்கள் மதிப்பார்கள் என்பது அவர் எண்ணம்.

அலுவலர் சதீஷ்குமார் என்று பெயர் சொல்லி அழைத்ததும் சதீஷ் தன் காரில் ஏறி உட்கார்ந்தான். அவனுடன் அவனது பயற்சியாளரும், அலுவலரும் ஏறி அமர்ந்து கொண்டார்கள். அலுவலர் 'ஸ்டார்ட்' என்றதும் சதீஷ் காரை ஸ்டார்ட் செய்து ஓட்டினான். கியர் சேஞ்ச், செகண்ட் கியர், தேர்டு கியர், போர்த் கியர் என்று மாற்றச் சொன்னதும் சதீஷ் திணறினான். அவனுக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. அடிக்கடி என்ஜின் ஆஃப் ஆகி நின்றது. கியர்கள் சரியாக விழாமல் என்ஜின் உறுமியது. திணறித் திணறி மெதுவாக அவனால் ஓட்ட முடிந்தது. ரிவர்ஸ் கியரில் வரும்போது அங்கிருந்த ஒரு வீட்டின் சுற்றுச்சுவரில் இடித்துவிட்டான். அதைக் கண்ட அலுவலர் பயிற்சியாளரிடம் "யோவ்! ஏன்யா இப்படி அரைகுறை ஆட்களையெல்லாம் டெஸ்டுக்கு கொண்டு வர்ரே? இப்பவே காம்பவுண்ட் சுவரை காலி பண்றான். ரோட்ல போனா என்ன ஆகிறது? இதெல்லாம் ஆகாதுய்யா! உன் கிட்டே பல தடவை சொல்லிட்டேன்!"

அவர் இறங்கி அடுத்த ஆளிடம் போய்விட்டார். அதற்குள் சதீஷ்க்கு உடம்பெல்லாம் வேர்த்துவிட்டது. ஒரே பதற்றமாக இருந்தான். பயிற்சியாளரிடம் "என்ன அண்ணே! லைசன்ஸ் கிடைக்காதா?" என்று கவலையாகக் கேட்டான். அவனுக்கு ஒரு புறம் கோபமாக வந்தது. "அடுத்த பார்ட்டிக்கு காரில் ப்ரியாவுடன் போக முடியாதே" என்று கவலைப்பட்டான்.

பயிற்சியாளருக்கும் கவலையாகிவிட்டது. “தம்பி! டென்ஷன் ஆகாதீங்க. கண்டிப்பா லைசென்ஸ் வாங்கிடலாம். எல்லாம் நான் பாத்துக்கிறேன். ஆபீஸ்ல பேசிக்கிறேன். இங்க எதுவும் சொல்ல முடியாது.”

சதீஷிக்கு கொஞ்சம் தெம்பாக இருந்தது. புதுசுனால கொஞ்சம் டென்ஷன். “டென்ஷன் இல்லையென்றால் நான் நல்லா ஓட்டிருப்பேன் அண்ணே! நேத்துக் கூட ஓட்டிப் பார்த்தேன்!”

“சரி தம்பி! நீங்க போய் சாப்பிட்டுட்டு மதியம் 2மணிக்கு ரெடியா இருங்க. நான் பேசுவேன். உடனே புறப்பட்டு ஆர்டிஓ ஆபீசுக்கு வாங்க! இதெல்லாம் ஒரு மேட்டரே இல்லை.”

சதீஷ் தன் பைக்கில் கிளம்பிச் சென்றான். அவனுடைய காரை வேறொருவர் எடுத்துக்கொண்டு போனார். அவனுக்கு தான் எப்படியும் புதுக்கார் வாங்கி அதில் ப்ரியாவை உட்காரவைத்துக் கொண்டு ஈசிஆர் சாலையில் ராஜேஷீக்கு முன்பாக போகவேண்டும். இது தன் மானப் பிரச்னை என்று அவன் நினைத்தான்.

அவன் போன பிறகு பயிற்சியாளர் இன்ஸ்பெக்டரிடம் சதீஷ் அமைச்சரின் மகன் என்பதை சொன்னார். அதைக் கேட்ட பிறகும் அவர் முடிவை மாற்ற ஒப்புக்கொள்ளவில்லை.

“அந்தப் பையனுக்கு சுத்தமாக டிரைவிங் வரவில்லை. ரொம்ப நெர்வசாக ஃபீல் பண்றான். லைசன்ஸ் கொடுத்தால் அவனுக்கும் சிக்கல்; மத்தவங்களுக்கும் ஆபத்து. ஒரு மாசம் போனதும் பார்க்கலாம்.” “நல்லா பழக்கி, பிறகு கூட்டிட்டு வா!”

“இல்லை சார்! நீங்க ரெகமண்ட் பண்ணுங்க சார். நான் அவனுக்கு பெர்சனலா ட்ரெய்னிங் கொடுத்துக்குறேன்.”

இன்ஸ்பெக்டர் அவர் கூறியதை காதில் வாங்காமலேயே போய்விட்டார்.

சற்று யோசித்த பயிற்சியாளர் தன் மொபைலில் ஒரு எண்ணுக்கு பேசி, நடந்த விஷயத்தை கூறினார். பிறகு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடியே தன் பைக்கில் ஏறி பயிற்சி நிலையத்துக்குப் போனார். கார் பயிற்சிகள் சோதனைகள் எல்லாம் முடிந்து பீச் சாலை வெறிச் என ஆனது. வெயிலும் மிகக் கடுமையாக அடித்தது. எதையும் தாங்கும் இதயம் கொண்ட சில காதல் ஜோடிகள் மட்டுமே மணலில் குடை மறைவில் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு திரைப்பட வெளிப்புறப் படப்பிடிப்புக் குழுவினர் படப்பிடிப்புக்கான வேலைகளில் மும்முரமாக இருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கார் சோதனைகளை முடித்துவிட்டு அதற்கான பேப்பர்களை தன் குறிப்புரைகளுடன் அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு தன் இருக்கைக்கு வந்தார். பீச் ரோட்டில் வெயிலில் அதிக நேரம் நின்றதால் அவருக்கு தாகமாக இருந்தது. பாட்டிலை எடுத்துத் தண்ணீர் குடித்துவிட்டு சில நிமிடங்கள் களைப்புத் தீர, வியர்வை அடங்க மின் விசிறியின் கீழ் உட்கார்ந்தார். பிறகு ஒரு பையன் கொண்டுவந்து வைத்த டீயை குடித்தார். மேசை மேல் குவிந்து கிடந்த பேப்பர்களைப் பார்த்து அவருக்கு எரிச்சலாக வந்தது. இன்னொரு பணி இடம் காலியாக இருந்ததால் அந்த வேலையையும் சேர்த்து இவர் பார்க்க வேண்டியிருந்தது. சலிப்புடன் சில பேப்பர்களை எடுத்து படித்துப் பார்த்தார். கையெழுத்துப் போட தன் பேனாவை எடுத்தார்.

அப்போது அலுவலக உதவியாளர் வந்து "சார்! உங்களை ஐயா கூப்பிடுறார்" என்றார். இன்ஸ்பெக்டர் எரிச்சலை மறைத்துக் கொண்டு எழுந்து மண்டல அலுவலர் அறைக்குள் போனார். அவரது மேசையில் சதீஷின் விண்ணப்பம் வைக்கப்பட்டிருந்தது. அதில் மண்டல அலுவலர் சொன்னபடி சில குறிப்புகளை மாற்றி எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார். நேராக, யாருடனும் பேசாமல் தன் இருக்கையில் போய் அமர்ந்தார். அவருக்கு தலைவலிப்பதைப் போல இருந்தது. தன் மனசாட்சிக்கு விரோதமாக வேலை செய்யும் போதெல்லாம் தலைவலிப்பது போல் அவர் உணர்ந்தார்.

சரியாக மதியம் 1.30 க்கு சதீஷ்க்கு பயிற்சியாளரிடமிருந்து "தம்பி! நீங்க உடனே புறப்பட்டு ஆர்டிஓ ஆபீசுக்கு வாங்க!" என்று போன் வந்தது. அவன் தன் பைக்கில் அலுவலகத்துக்கு வந்தான். சில படிவங்களில் கையெழுத்துப் போட்டான். வரிசையில் கூட அவனை நிற்கச் சொல்லவில்லை. பயிற்சியாளர் கூடவே இருந்து அவன் வேலைகளை முடித்துக்கொடுத்தார். பிரேக் இன்ஸ்பெக்டர் வெறுப்புடன் அவர்களை பார்த்துக்கொண்டே கடந்து போனார். அவர்கள் இருவரும் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்கள்.

"ஆர்டிஓ அப்பாவுக்கு வேண்டிவர்தான் தம்பி. ஒண்ணும் சிரமம் இல்லை!"

சதீஷ் ஒரு ஆர்வத்தில் ஆர்டிஓ அறையை பார்த்தான். அதன் முன் பெயர்ப்பலகையில் கு.சுப்பிரமணியன், மண்டல போக்குவரத்து அலுவலர் என்று இருந்தது.

அவர் தான் ப்ரியாவின் அப்பா என்பது அவனுக்குத் தெரியாது.

**சி**ல நாட்களில் அவனுக்கு டிரைவிங் லைசன்ஸ் வீடு தேடி கூரியரில் வந்து சேர்ந்தது. சதீஷ்க்கு மகிழ்ச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை. பயிற்றுநருக்கு தன் நன்றியைத் தெரிவிக்க ஒரு வாட்ச் வாங்கி அன்பளிப்பாக கொடுத்தான். அம்மாவிடமும் அப்பாவிடமும் தான் கார் டிரைவிங் லைசன்ஸ் வாங்கிவிட்ட விபரத்தைச் சொல்லி அவர்களை ஆச்சரியப்படுத்தினான். தன் காரில் அம்மாவை உட்காரவைத்து அந்தக் குடியிருப்புப் பகுதியில் சில முறை வட்டமடித்தான்.

ஒரே மகனின் மகிழ்ச்சியையும், காரோட்டும் அழகையும் பார்த்து அம்மாவும் அதிகம் ஆனந்தப்பட்டார். அவருக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

# 13

மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்த வாரப் பத்திரிகையான புது உலகத்தின் அந்த வார இதழில் வெளிவந்திருந்த கவர் ஸ்டோரியைப் படித்த அந்த போலீஸ் அதிகாரிக்கு, அந்த ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட அறையிலும் வேர்த்தது. அந்தக் கட்டுரை சில நாட்களுக்கு முன்பாக நடந்த மதுக்கடை கலப்படச் சரக்கால் பலர் இறந்ததைப் பற்றியது. அரசு மதுக்கடைகளில் பக்கத்து மாநிலமான ஆந்திராவிலிருந்து கடத்தப்பட்டு வந்த கள்ளச் சரக்குகள் விற்கப்பட்டதால், அதைக் குடித்த பலர் தொடர்ச்சியாக இறந்ததைப் பற்றி கட்டுரை விரிவாக சொல்லியது. அதில் ஒரு அமைச்சர் தான் அந்த மதுக்கடைகளின் உண்மையான உரிமையாளர் என்பதைச் சொல்லி, போலி மது விற்பனையும் அவராலேயே நடத்தப்பட்டது என்றும் வாதிட்டது. கட்டுரையில் போலி மது கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் அமைச்சரின் பினாமி கம்பெனிக்குரியவைதான் என்றும் பணியாட்களும் அமைச்சரின் ஆட்கள் என்பதையும் தெளிவாக குறிப்பிட்டிருந்தது அந்தக் கட்டுரை. கட்டுரையில் இருந்த விவரங்களைப் பற்றி அதிகாரி கவலைப்படவில்லை. ஆனால் அதை முடித்திருந்த விதம் அவரது பதவிக்கு ஆப்பு வைப்பதாக இருந்தது. "அரசு மதுக்கடைகளில் போலியான தரம் குறைந்த மதுவகைகள் விற்பது ஒன்றும் புதிய விஷயம் இல்லை. இந்த மதுவைக் குடித்து மக்கள் இறப்பதும் புதிதல்ல. இந்த முறை கடையிலும், கடை வாசலிலும் சிலர் இறந்ததால் விஷயம் வெளியே பரவிவிட்டது. இந்த போலி மது விற்பனை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மதுக்கடைகளில் பல ஆண்டுகளாகவே நடந்து வருகிறது. இதை சப்ளை செய்பவர் ஒரு ஆந்திர தொழிலதிபர். அவர் நம் அமைச்சரின் நண்பர். இந்த போலி மது போக்குவரத்து இடைஞ்சல் இல்லாமல் எப்படி நடைபெறுகிறது? அது நம் காவல்துறை பெரிய அதிகாரி ஒருவரின் கைங்கர்யம். இதில் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பங்கு சென்னையில் உள்ள அதிகாரி சிவமானவர் வரையில் போகிறதாம். அவர் சமீபத்தில் சென்னை நீலாங்கரையில் நீச்சல்குளத்துடன் கூடிய புது பங்களாவை கோடிகளில் கொடுத்து வாங்கியிருக்கிறார்" என்றது

கட்டுரையின் கடைசிப் பத்தி. மேலும் இதை யாரும் மறுப்பதாக இருந்தால் ஆதாரங்களும் வெளியிடப்படும் என்றது பின் குறிப்பு. இதுதான் அதிகாரிக்கு வியர்வை வரக் காரணம். அவரது முழுப்பெயர் சிவசூரியன். ஏற்கெனவே இந்த விஷயம் பற்றி இரண்டு மாதங்கள் முன்னாலேயே புது உலகத்தில் கட்டுரை வெளிவந்து பெரிய பிரச்னைகள் ஏற்பட்டன. இப்போது மறுபடியும் அதன் தொடர்ச்சியாக அதில் லாபமடைந்த அதிகாரிகளைப் பற்றி கூடுதல் விபரங்களுடன் எழுதப்பட்டிருந்தது.

அடுத்த சில நிமிடங்களிலேயே அவருடைய மொபைல் ஒலித்தது. அமைச்சரின் பி.ஏ. பேசினார். "சார்! அமைச்சர் உங்களை பார்க்கணும்னு சொன்னார். இன்னிக்கு நைட் 10 மணிக்கு வீட்டுக்கு வரச்சொன்னார். போன்ல பேச வேண்டாம்னு சொன்னார்."

சிவசூர்யன் கையில் இருந்த பத்திரிகையை வெறுப்புடன் பார்த்தார். பிறகு "அமைச்சர் இந்த வார 'புது உலகம்' பார்த்தாரா? ஏற்கெனவே வந்த விஷயம் தானே!" "ஆமா சார்! அது விஷயமாத் தான் உங்ககிட்ட பேசணும்னார். சீக்கிரமாவே வந்துடுங்க."

"சரி சார்! அமைச்சர்கிட்டே சொல்லிடுங்க. நான் சரியா 9.30க்கே வந்திடுறேன்."

ஏற்கெனவே இந்த விவகாரம் பத்திரிகைகளில் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டு, அரசாங்கம், ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அந்த விவகாரம் அமைதியாகிவிடும் என்றும் யாரும் இதைப் பற்றிப் பேசப் போவதில்லை என்றும் நினைத்தார்கள். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களின் வாயை அடைக்க ஆளுக்கு இரண்டு லட்சம் ரூபாய் உடனடியாக அளிக்கப்பட்டுவிட்டது. நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்தால் புது உலகத்தில் வெளியான கட்டுரை அதை கெடுத்துவிட்டது. சிவசூர்யன் தன் நீண்ட அனுபவத்தில் எவ்வளவோ பிரச்னைகளைக் கடந்து வந்தவர் என்றாலும், இது கொஞ்சம் ரொம்பவே சிக்கலானது என்று உணர்ந்தார். கட்டுரையில் தன்னைப் பற்றி மட்டும் இல்லாமல் பின்னாலிருந்த பெரிய தலைகளைப் பற்றியும் எழுதி இருந்ததால் அவர்கள் தன்னைச் சும்மா விடமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அதுவே அவரின் பயம். இப்போது மறுபடியும் அதே விவகாரம் குறித்து, மேலும் ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருந்தது, அவருக்கு பயத்துடன் கோபத்தையும் ஏற்படுத்தியது.

சரியாக 9.30 மணிக்கு சிவசூர்யன் அமைச்சரின் பங்களாவில் தன் காரில் நுழைந்தார். காரிலிருந்து இறங்காமல் உள்ளேயே

இருந்து கொண்டு பி.ஏ.யுடன் செல்போனில் பேசினார். காரையும் மர நிழலில் இருளில் நிறுத்திக் கொண்டார். டிரைவர் இல்லாமல் தானே காரை ஓட்டிக் கொண்டு வந்திருந்தார். அப்போது அங்கிருந்த ஒரு பெரிய ஹம்மர் காரில் ஒரு ஆந்திர பிரமுகர் வந்து ஏறி உட்கார்ந்தார். நெற்றியில் பெரிய செந்தூரப் பொட்டு பளிச்சிட்டது. கழுத்தில் முரட்டு தங்கச் சங்கிலியும், இரண்டு கைகளின் அத்தனை விரல்களிலும் வைரக் கற்கள் பதித்த மோதிரங்கள் மின்ன ஆள் ஆறரை அடி உயரத்தில் இருந்தார். அவருக்கு பாதுகாவலாக எந்திரத் துப்பாக்கி ஏந்திய இரண்டுபேர் உடன் வந்தார்கள். அவர் பின்னாலேயே ஓடுவது போல் நடந்துவந்து வழியனுப்பி வைத்தார் நல்லதம்பி. அந்த ஆந்திரப் பிரமுகர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அவர் புறப்பட்டுப் போனதும், நல்லதம்பி சுற்றுமுற்றும் பார்த்தபடி வேகமாக உள்ளே போனார். அவரின் முகம் கலவரமடைந்து தெரிந்தது.

அமைச்சர் பங்களாவின் முன் அந்த நேரத்திலும் கட்சிக்காரர்களும் அதிகாரிகளும் உதவி கேட்டு வந்த மக்களும் ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாக நின்று தமக்குள் உதவி கேட்டு வந்தமக்களும் ஆங்காங்கே சிறு, சிறு குழுக்களாக நின்று தமக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். கொசுக்கடியையும், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் எப்படியாவது அமைச்சரை பார்த்துவிட வேண்டும் என்றும், பார்த்து தம் குறைகளை சொல்லிவிட்டால் ஏதாவது உதவி கிடைக்கும் என்ற எண்ணத்தில் நின்றார்கள் அவர்கள். அரசாங்க உதவி கிடைக்காவிட்டாலும், தனிப்பட்ட முறையில் தன்னிடம் வந்தவர்களுக்கு உதவி செய்வது அமைச்சரின் வழக்கம். அவர்கலைப் பார்க்க சிவசூர்யனுக்கு கொஞ்சம் வருத்தமாகவே இருந்தது. அவரே ஒரு காலத்தில் இப்படி நின்றவர் தான்.

சரியாக மணி 10.00 ஆனதும் அவர் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போனார். அவர் யூனிபார்மில் இல்லாமல் சாதாரண பேண்ட் சட்டையில் இருந்ததால் அவரை யாரும் கவனிக்கவில்லை. ஒருவர் வரவேற்று மாடிப்படிகளில் மேலே அழைத்துச் சென்றார். அங்கே ஒரு அறையில் ஒரு பெரிய சோபாவில் அமைச்சர் இருந்தார். அவர் முன்பு இருந்த ஒரு சோபாவில் நல்லதம்பி இருந்தார். அமைச்சர் மிகவும் கோபமாக இருந்தார் என்பது நல்லதம்பி தர்மசங்கடமாக உட்கார்ந்து இருந்ததிலேயே தெரிந்தது. ஆனால் அமைச்சர் முகம் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை.

"வணக்கம் அண்ணே!" சிவசூர்யன் பணிவாக கும்பிட்டார்.

"வாங்க சிவம்! உட்காருங்க!" அமைச்சர் சொன்னதும் நல்லதம்பிக்கு அருகில் சிவசூர்யன் உட்கார்ந்தார்.

அமைச்சர் தொண்டையை செருமிக்கொண்டார். அறையில் வேறு யாரும் இல்லை. அவரை பிளாஸ்கிலிருந்து வெந்நீர் ஊற்றி குடித்தார்.

"பனி சேர மாட்டேங்குது. தொண்டை புண்ணாயிடுச்சு!"

நல்லதம்பியும் சிவசூர்யனும் அமைதியாக இருந்தார்கள்.

"சிவம்! அந்த 'புது உலகம்' விஷயத்தில் நீங்க ரொம்ப கோட்டை விடுறீங்களே! ஏற்கெனவே நம்ம அரசாங்கத்துக்கு எதிரா அந்தப் பிரசினையைப் பத்தி அந்த பத்திரிகை நெறய எழுதி சி.எம். எங்களை கூப்பிட்டு சத்தம் போட்டாங்க. ரெண்டு மூணு அமைச்சர்கள் பதவியையும் பறிச்சாங்க. நீங்க என்னதான் பண்றீங்க? இப்ப உங்க பேரையே எழுதிட்டான்! இப்ப கொஞ்ச நேரம் முன்னால ரெட்டி வந்து கோபமா பேசிட்டுப் போறான். அவன் அவ்வளவு சாதாரணமா நேரில் வரமாட்டான். இன்னிக்கு திடீர்னு வந்துட்டான். அவன் எனக்கே கெடு வச்சிட்டு போறான். அதை நெனச்சா எனக்கு ஒண்ணுமே ஓடலை!"

"நான் ரெண்டு தடவை அவங்களை கூப்பிட்டு வார்ன் பண்ணிட்டேன். அந்த ஆபீஸ் ஆட்கள் மேல சில கேசும் போட்டிருக்கேன். ஆனாலும் அடங்கமாட்டேங்குறான்."

"எழுதுறவன் யார்னு விசாரிச்சு செய்யவேண்டியதை செய்யுங்க. உங்களை யார் தடுக்குறா? உங்களுக்கு நாங்க சொல்லித் தரணுமா?"

அமைச்சர் மெதுவாகப் பேசுவதுபோல தெரிந்தாலும் அவரின் கோபத்தை சிவம் அறிவார்.

"இந்த கட்டுரையை எழுதுனவன் யாருன்னு விசாரிச்சுட்டேன். அவன் இப்ப அந்த பத்திரிகைல இல்லை. போனவாரமே காசு குடுத்து நிறுத்திட்டாங்கன்னு ஒருத்தர் சொல்றார். இன்னொருத்தர் அவன் லீவுல போயிட்டதா சொல்றார். சரியா விசாரிச்சு வேற வழியில ஏதாச்சும் செஞ்சுடுறேன் சார். ரெண்டு நாள் டைம் குடுங்க."

சிவம், தன் பதவி கௌரவத்தை மறந்து கெஞ்சுவது போல பேசினார்.

"பாருங்க சிவம். நீங்க நம்ம ஊர்க்காரர்னுதான் உங்களை அந்த இடத்தில போட்டேன். இப்ப அவன் உங்களைப் பத்தி எழுதியதோடு, எல்லாத்தையும் இழுத்துவிட்டுட்டான். பத்திரிகையில ஏதாச்சும் மறுப்பு வாங்க முடியுமான்னு பாருங்க. அவன் ஏதாச்சும் தொகை எதிர்பார்த்தா இப்போதைக்கு குடுத்து முடியுங்க. பிற்பாடு அவனை கவினச்சிக்கலாம். அசெம்பிளி கூடுறதுக்குள்ளே இதை சரிபண்ணிடுங்க. அவன் ரெட்டி வரைக்கும் ட்ரேஸ் பண்ணி எழுதிருக்கான். "சி.எம். வெளி ஊர்ல இருக்குறது நல்லதாப் போச்சு."

“சரிங்க!”

“சி.எம்.மும் அந்த பத்திரிகை மேல ரொம்ப கோபமாத்தான் இருக்காப்ல. அதனால நீங்க தைரியமா செய்யுங்க.”

சிவம் தலையசைத்தார்.

“சரி. நீங்க போங்க. மூணு நாள்ல வந்து பாருங்க. ஏதாச்சும் செஞ்சுட்டு வாங்க.” சிவம் எழுந்து வணங்கிவிட்டு கிளம்பினார்.

“ஒரு வாரம் பார்ப்போம். இவர் ஏதாவது செய்யலைனா, இவரை தூக்கிட்டு நீங்க சொன்ன ஆளை போட்டுடலாம். அவங்களுக்கு ஒண்ணுன்னா நாம செய்யணும். நமக்கு சிக்கல்னா இவனுக எதுவும் செய்யமாட்டானுக. அந்த ரெட்டி என்னடான்னா நாம ஏதோ துரோகம் செஞ்சுட்டதா பேசிட்டுப் போறான், ம்!”

அமைச்சர் நல்லதம்பியிடம் சொல்வது சிவம் காதில் தெளிவாகவே கேட்டது. அவருக்கு புது உலகம் கட்டுரை எழுதியவர், ஆசிரியர் மேல் கோபம் வெறியாக வந்தது. சீக்கிரம் ஏதாவது செய்யாவிட்டால் கஷ்டப்பட்டு இந்த இடத்தை வாங்கியதற்கு பலனில்லாமல் போகும் என்று நினைத்தபடியே படிகளில் இறங்கினார்.

“எவனோ ஒரு சின்னப்பயல், பேனா தன் கையில் இருக்கிறது என்பதற்காக, எவ்வளவு பெரிய மனிதர்களை சந்திக்கு இழுத்து எழுதுகிறான். நம் கையில் ஆயுதம், அதிகாரம், ஆள்பலம் இருந்தும் அவனை எதுவும் செய்ய முடியவில்லை. அவன் யார் என்பதைக் கூட இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை”. அவருக்கு அவமானமாக இருந்தது.

அவமானத்துடன், தான் எதுவும் செய்யாவிட்டால், தன் அதிகாரம், செல்வாக்கு எல்லாம் செல்லாக் காசாகிவிடும் என்ற நினைப்பு அவரை சித்திரவதை செய்தது. அவர் இப்படி பல வகைகளிலும் நினைத்தபடியே படிகளில் இறங்கிச் சென்றார். வெளியில் யூனிபார்மில் பணியில் இருந்த போலீஸ் அதிகாரிகளின் பார்வையில் படாமல் விலகிச் சென்றார்.

**அ**மைச்சரே ரெட்டியைப் பார்த்து பயப்படுவதை நினைத்து சிவசூர்யன் எரிச்சல் பட்டார். அந்த ரெட்டியிடம் எல்லோருமே ஆரம்பத்தில் பிடிகொடுத்து விடுகிறார்கள். பிறகு அவன் கோபித்துக் கொள்கிறான் என்று பயப்படுகிறார்கள். சிவமும் ரெட்டியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். “ஆனாலும் அமைச்சரே பயப்படும் அளவுக்கு அவன் அவ்வளவு பெரிய ஆளா?”

# 14

"ஆந்திரப் பிரதேசத்தின் பிரபல தொழிலதிபரான எஸ்.கே. ரெட்டி அதிகாலையிலேயே எழுந்து பூஜைகளை பக்தி சிரத்தையுடன் முடித்துவிட்டு, ஏழு மணிக்கெல்லாம் காலை டிபனை முடித்தார். டிபன் முடிப்பதற்கு முன்பாக வழக்கமாக செய்யும் சில யோகாசனங் களைச் செய்தார். அவரது மனைவி அவர் சாப்பிடும்போது எதுவும் பேசவில்லை. நான்கு சப்பாத்திகள் இரண்டு இட்லிகள் மட்டுமே பருப்பு சேர்த்து அவர் சாப்பிட்டார். டிபன் முடித்தவுடன் டைனிங் டேபிளை விட்டு எழுந்து ஒரு ஊஞ்சலில் போய் உட்கார்ந்த பிறகே அவர் மனைவி காபி கொண்டுவந்து கொடுத்தார். அவர் காபியை குடிக்கும் போது தான் அவரது மனைவி பேச ஆரம்பித்தார்.

"ஏங்க! இன்னிக்கு யாரும் வி.ஐ.பி. நம்ம வீட்டுக்கு வரப் போறாங்களா?" ரெட்டி தன் மனைவியை பார்த்து "ஆமாம் ஒரு சென்ட்ரல் மினிஸ்டர் வரப்போறார். ஏன் கேட்கிற?"

"இல்லை! நீங்கள் டிபன் முடிச்சுட்டீங்க. ஒரு வேளை மதியம் சாப்பாடுக்கு வரப்போறாரா? நீங்க எதுவுமே சொல்லலையே! அதான் கேட்டேன்!"

"அவர் இப்ப 9 மணிக்கு வருவார். காபி சாப்பிட்டு, கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போயிடுவார்."

உடனே தனக்கு வேறு வேலைகள் இருப்பதால் அவர் மனைவி உள்ளே போனார்.

சரியாக ஒன்பது மணிக்கு அமைச்சரின் கார் வரும் சப்தம் கேட்டது. ரெட்டியின் பிரமாண்டமான பங்களா, ஹைதராபாத்தின் பெரிய பணக்காரர்கள் மட்டும் வசிக்கும் பஞ்சாரா ஹில்சின் ஒரு ஓரமான பகுதியில் இருந்தது. பிரதான சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தனியான சாலையின் முடிவில் இருந்த அந்த பங்களாவுக்கு போக ஏகப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகள். நூறு மீட்டருக்கு ஒரு பாதுகாவலர் வாக்கி டாக்கியுடன் நின்று வருபவரை விசாரித்து சோதனை செய்து அனுமதித்தார்கள். ஓநாய் போன்ற

சில பயங்கரமான நாய்களுடன் சிலர் நின்றார்கள். அவர்களிடம் துப்பாக்கியும் இருந்தாலும், அவர்களின் இறுக்கமான முகமும் ரெட்டியை பார்க்க வரும் யாருக்குமே மரணபயத்தைக் கொடுக்கும். ஆனால் மிகப்பெரிய பிரமுகர்களுக்கு மட்டும் இன்முகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன்படி அமைச்சருக்கு இனிய அதே சமயம் அமைச்சர், ரெட்டியைப் பொறுத்தவரை சாதாரணமான ஒரு ஆள் என்பதை தெரிவிக்கும்படியான, ஆரவாரம் எதுவும் இல்லாத வரவேற்பு அளிக்கப்பட்டது. ரெட்டிக்கு உடல் நலம் சரியில்லை என்பதாகவும் அதனால் அவரைப் பார்க்க அமைச்சர் வருவதாக செய்தி அளிக்கப்பட்டிருந்தது.

ஆறடி உயரமும் அதற்கேற்ற முரட்டு உருவமும் சிவந்த நிறமும் உடையவராக இருந்த ரெட்டி ஊஞ்சலில் உட்கார்ந்து லேசாக ஆடியபடி சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார். சரியாக ஒன்பது பத்துக்கு அமைச்சரை ரெட்டியின் பிரதான பாதுகாவலர் உள்ளே அழைத்துக் கொண்டு வந்துவிட்டு வெளியே நின்றார். அமைச்சரைப் பார்த்ததும் ரெட்டி சிரித்துக்கொண்டே எழுந்து போய் அவர் கைகளைப் பிடித்து "வாங்க, வாங்க!" என்று எதிரே இருந்த சோபாவில் உட்கார வைத்தார். ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டபின் ரெட்டி,

"வெளிநாட்டுப் பயணங்கள் எல்லாம் நல்லா இருந்துச்சா? ஜப்பானும் சீனாவும் போய்ட்டு வந்தீங்க போல!"

ரெட்டி அமைச்சரை கூர்ந்து கவனித்தார். அமைச்சர் தர்ம சங்கடமாக நெளிந்தார்.

அவர் தேர்தலில் ஜெயித்ததற்கும் அமைச்சரானதற்கும் ரெட்டி தான் காரணம். ஆனால் அமைச்சரான பிறகு ஒரே ஒரு முறைதான் ரெட்டியை சந்தித்தார். ரெட்டிக்கு அவர் முடித்துக் கொடுப்பதாகச் சொன்ன சில வேலைகள் அப்படியே கிடந்தன. ரெட்டி ஒரு நண்பரிடம் தன் அதிருப்தியை தெரிவிக்க, அலறிப் புடைத்துக் கொண்டு அமைச்சர் உடனே ரெட்டியைப் பார்க்க வந்திருந்தார்.

"ரெட்டிகாரு என்னைத் தப்பா நினைக்கவேண்டாம். பெரியவர் ரொம்ப ஸ்ட்ரிக்டா இருக்கார். யாரும் எதுவும் பேச முடியலை. அவர் குடும்பம்னு எதுவும் இல்லாதவர். அதுனால யார் மூலமாகவும் நெருங்கமுடியலை. இப்போதைக்கு அவர் தொட்டதெல்லாம் சக்ஸஸ் ஆகுது. அதனால எல்லாரும் அவருக்கு ஜால்ரா போடுறாங்க. கொஞ்சம் வெயிட் பண்ணுவோம். ஒரு சறுக்கல் வரட்டும். பத்திரிகை,

எல்லாம் கொஞ்சம் மாத்தி எழுதுவாங்க. அப்போ நாமும் நம் வேலையை முடிச்சுக்கலாம். அப்பதான் கொஞ்சம் இறங்கி வருவார்."

ரெட்டி எதுவும் பேசாமல் தன் மோவாயைத் தடவியபடி இருந்தார். அப்போது ரெட்டியின் மனைவி காபி கொண்டு வந்து கொடுத்துவிட்டு அமைச்சரை வணங்கிவிட்டு உள்ளே போனார். இரண்டு பேரும் அமைதியாக காபி குடித்தார்கள்.

சிறிது யோசனைக்குப் பிறகு ரெட்டி, "அந்த ப்ரெஞ்ச் கம்பெனிக்காரங்க ரொம்ப அவசரப்படுறாங்க. அவங்க பெரிய பெரிய ப்ராஜட் முடிவு செஞ்சிருக்காங்களாம். அதையெல்லாம் சீக்கிரம் நடத்தி முடிக்கணும்னா நாம அவங்களுக்கு கிரானைட் சப்ளையை சீக்கிரமா செய்யணும். நம்மகிட்ட இருக்குறது பழைய பார்ட்டி களுக்குத்தான் சரியா இருக்கும். புதுக் குவாரிகளுக்கு லைசன்ஸ் சீக்கிரம் வேணும்." என்றார் இறுக்கமாக.

"ஒரு மூணு மாசம் பொறுங்க. சில கஷ்டமான இடைத் தேர்தல்கள் வரப்போவுது. அதில நம்ம பார்ட்டி அவ்வளவு ஸ்ட்ராங்கா இல்லை. நம்ம ஆட்கள் தேறமாட்டார்கள். அது தான் நமக்கு சமயம். அப்ப முடிச்சுடலாம்."

ரெட்டி எரிச்சலுடன் "சரி! பார்க்கலாம்!" என்றார்.

அமைச்சர், "ரெட்டிகாரு! எனக்கு சில கேஸ்கள் இருக்குறது உங்களுக்குத் தெரியும். கொஞ்சம் அதிக செலவு இப்போதைக்கு ஏதாவது கொஞ்சம் உதவினால் நல்லது. உங்க விஷயத்தை நான் நிச்சயம் முடிச்சுத் தருவேன். சந்தேகப்படவேண்டாம்."

உடனே ரெட்டி தன் உதவியாளரைக் கூப்பிட்டு ஏதோ சொன்னார். அவர் உள்ளே போய் பெரிய சூட்கேசை எடுத்துவந்து அங்கு வைத்தார். ரெட்டி அமைச்சரைப் பார்த்து "ம்! எடுத்துக்குங்க" என்றதும், உதவியாளர் அதைக் கொண்டு போய் அமைச்சரின் கார் டிக்கியில் வைத்துவிட்டு வந்தார். அடுத்த சில நிமிடங்களில் அமைச்சர் ரெட்டியிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்து காரில் ஏறினார்.

கார் புறப்பட்டதும், பாதுகாவலர் வாக்கிடாக்கியில் காரை அனுமதிக்கும்படி தன் உதவியாளர்களுக்கு உத்தரவு அளித்தார். அமைச்சரும் கார் ரெட்டியின் பங்களா கேட்டைக் கடந்து வெளியே சாலைக்கு வந்த பிறகுதான் இயல்பாக இருந்தார்.

# 15

இருபத்தி ஐந்து வருடங்கள் முன்பு.

கிருஷ்ணப்பா விசாகப்பட்டினம் துறைமுகத்தில் வேலையை முடித்துவிட்டு அன்றைய சம்பளத்தை வாங்கி எண்ணி பார்த்து தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு வெளியே வந்தார். கொஞ்சதூரம் போனதும் இருந்த ஒரு சிறு கடையில் இரண்டு வடைகளை எடுத்து தின்றுவிட்டு, 'ஒரு டீ கொடு' என்று சொல்லிவிட்டு, ஒரு பெர்சில் உட்கார்ந்தான், கடுமையாக அதிக நேரம் வேலை பார்த்து களைத்துப் போயிருந்தாலும், அவன் முகத்தில் அது தெரியவில்லை. இரும்பைப் போல உறுதியான தேகம் இருந்ததால் எந்தக் கடினமான வேலையையும் அனாயாசமாக செய்வான். அவன் டீ குடித்துக் கொண்டிருப்பதை ஒரு ஆள் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் கடையில் வாடிக்கையாளர் கூட்டம் இல்லை. அந்த ஆள் டீக்கடைக்காரனிடம் ஏதோ மெதுவாகப் பேசினார். டீக் கடைக்காரர் எழுந்து கிருஷ்ணப்பாவை நோக்கி வந்தார்.

"கிருஷ்ணா! இவர் உனக்கு ஒரு வேலை வச்சிருக்கார். செஞ்சு குடுத்தால் உனக்கு நிறைய காசு குடுப்பதாக சொல்றார். நமக்கு வேண்டியவர்தான். உன்னால முடியுமா?" வழக்கமா வரும் ஆள் இன்னிக்கு வேலைக்கு வரலையாம். அதான்..."

கிருஷ்ணப்பா கொஞ்சம் யோசித்தான். "என்ன வேலைன்னு சொல்லு! பார்க்கலாம்!"

"இவர் மூன்று பெரிய மரப்பெட்டிகளை வச்சிருக்கார். அந்தப் பெட்டிகளைக் கொண்டு போய், மலையடிவாரக் கிராமத்தில் அவர் சொல்லும் இடத்தில பத்திரமா ஒப்படைக்க வேண்டும். சரக்கு எல்லாம் மதுபாட்டில் பாரின் துணி வகை எல்லாம் இருக்கு. உன்னால முடியுமா?"

"சரி! பணம் கொஞ்சம் அதிகமா குடுக்கச் சொல்லு. எப்ப கொண்டு போகணும்?"

“பணம் தாராளமா குடுப்பாங்க. அதுக்கு நான் பொறுப்பு. சரக்கு அதோ அங்க நிக்கிற வேன்ல தான் இருக்கு.”

கடைக்காரரர் சொன்னதும் அந்த புது ஆள் ஒரு சீட்டில் போகவேண்டிய முகவரியை எழுதி தயாராக வைத்திருந்ததை கிருஷ்ணப்பாவிடம் கொடுத்தான். செலவுக்கென முன்பணமாக ஒரு தொகையையும் கொடுத்தான். கிருஷ்ணப்பாவுக்கு அதுவே மிகவும் பெரிய தொகை. அவன் ஏதோ கேட்க நினைத்தவன், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியாக இருந்தான்.

கடைக்காரரர் புதிய ஆளிடம், “தாஸ்! கிருஷ்ணா ரொம்ப திறமையான ஆள்; நம்பிக்கையானவன். எனக்கு ஐந்து வருஷமா பழக்கம். நீ தைரியமா போகலாம்” என்றார். அந்த ஆள் கிருஷ்ணாவிடம் வண்டிச்சாவியை கொடுத்துவிட்டு “மெயின் ரோட்டில் போகவேண்டாம். போலீஸ் பிரச்னை இருக்கும்” என்றான்.

உடனே கிருஷ்ணப்பா குறுக்கிட்டான், “அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். இன்னிக்கு நைட்டே சரக்கு அங்கே போய்ச் சேந்துடும். ஆனால் நாளை மறுநாள் தான் வேன் இங்கே இருக்கும். சரியா?”

அவன் தலையாட்டினான். சாவியை கொடுத்துவிட்டு அந்த ஆள் அங்கிருந்து புறப்பட்டான்.

கிருஷ்ணப்பா வீட்டுக்குப் போய் குளித்து சாப்பிட்டுவிட்டு, உடைகளை மாற்றிக்கொண்டு கிளம்பினான். அவன் பாக்கெட்டில் கொஞ்சம் பணமும், அந்த ஆள் கொடுத்த முகவரிச் சீட்டும் இருந்தன. தன்னுடைய ட்ரைவிங் லைசென்சையும் எடுத்து வைத்துக் கொண்டான். மார்க்கெட்டுக்குப் போய் தன் தோழன் ஒருவனின் கோழிகள் கொண்டு செல்லும் ஒரு பழைய வேனை கோழிகளுடன் கேட்டு வாங்கிக்கொண்டான். அந்த வேனில் தன் வேனில் இருந்த சரக்குப் பெட்டிகளை உள்ளே வைத்து அவற்றின் மேல் கோழிகள் இருந்த கம்பி வலை பெட்டிகளை அடுக்கினான். இந்த வேலைக்கு அவனுக்கு இரண்டு மணி நேரம் ஆனது. தன்னுடைய வேனை மறைவாக ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு கோழிவேனில் கிளம்பினான். வழியில் சில பிராந்தி, விஸ்கி பாட்டில்களை வாங்கி வைத்துக்கொண்டான். நூறு ரூபாய் நோட்டுகள் சிலவற்றை பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

போகும் வழியில் மூன்று இடங்களில் செக் போஸ்ட்கள் இருந்தன. நிறுத்தச் சொன்னதும் நிறுத்தி பணிவாக வணங்கி நின்றான்.

வண்டியின் துர்நாற்றமும் கோழிகளின் சப்தமும் காவலர்களுக்கு எரிச்சலை மூட்டின. அத்துடன் அவன் பவ்யமாக எடுத்துவைத்த பாட்டில்களும், நோட்டுகளும் அவன் மிகவும் மரியாதையானவன் என்பதை அவர்களுக்கு உணர்த்தின. அன்று விடிகாலை மூன்று மணிக்கு அவன் அந்த முகவரியில் சரக்கைச் சேர்த்தான். அங்கு இருந்த ஒருவன் ஒரு பழைய கோழி வண்டியை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சரக்குப் பெட்டிகளை பெற்றுக்கொண்டு அதற்கு ரசீது போல ஒரு சிறிய அட்டையைக் கொடுத்து “இதை பத்திரமாக தாஸிடம் கொடுத்துவிடு. இது தான் சரக்கு வந்து சேர்ந்ததற்கு ரசீது” என்றான்.

கிருஷ்ணப்பா அந்த இடத்திலேயே கொஞ்சம் தூங்கிவிட்டு, நன்றாக விடிந்ததும் கோழிகளை ஒரு கடையில் விற்றுவிட்டு விசாகப்பட்டினம் திரும்பினான். கோழி வண்டியை நண்பனிடம், கொஞ்சம் பணமும் கொடுத்து திருப்பிக் கொடுத்தான். பிறகு வீட்டுக்குப் போய் குளித்துவிட்டு நன்றாக தூங்கினான். இரவானதும், கையில் பணத்துடன் ஒரு வீட்டுக்குப்போய் சந்தோஷக் கும்மாளம் போட்டான். கிருஷ்ணப்பாவுக்கு அப்போது திருமணம் ஆகவில்லை. வீடு என்பது ஒரு குடிசைதான். மறுநாள் அவன் அந்த வேனை டீக்கடை முன்பாக கொண்டுவந்து நிறுத்தினான். அந்தப் புதுமனிதனும் வந்து வேனை எடுத்துக்கொண்டு, கிருஷ்ணப்பாவுக்கு பேசியபடி ஒரு பெருந்தொகையை கொடுத்துவிட்டுப் போனான். அன்று முதல் கிருஷ்ணப்பாவின் வாழ்க்கை முறையே மாறியது. என்றாலும் யாரும் சந்தேகப்படக் கூடாது என்று துறைமுக வேலைக்குப் போவதையும் நிறுத்தவில்லை. அவன் மனதில் தன் எதிர்காலத்தைப் பற்றிய பல கனவுகள் உருவாகத் தொடங்கின. மாதம் ஒரு முறை அல்லது இரண்டு முறை அவன் கோழி வண்டியில் சரக்குகளைக் கொண்டு சேர்த்து கை நிறைய பணம் சம்பாதித்தான்.

சுமார் ஆறு மாதங்கள் இந்த வேலையை அவன் நம்பிக்கை துரோகம் செய்யாமல் உண்மையாக செய்தான். ஆனால் அவன் மனதில் குறுகுறுப்பு ஏற்படத் தொடங்கியது. அந்தப் பெட்டிகளில் உண்மையாக இருந்த சரக்கு என்ன என்பதை அவன் தெரிந்து கொள்ள விரும்பினான். ஒரு நாள் அவன் பெட்டியைத் திறக்கும் கருவிகளை எடுத்துக்கொண்டு பின்பக்கமாக திறந்து பார்த்தான். அப்போது அவன் வண்டியை ஒரு குளக்கரையில் நிறுத்தியிருந்தான். ஒரு பெட்டியைத் திறந்து பார்த்தவன் அதிர்ச்சியில் உறைந்துவிட்டான். அந்தப் பெட்டியில் இருந்தவை எல்லாம் பலவகையான

துப்பாக்கிகள், குண்டுகள். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. இவையெல்லாம் யாருக்குப் போகின்றன. யார் இவற்றை எல்லாம் சப்ளை செய்கிறார்கள்?" கிருஷ்ணப்பாவுக்கு உடல் நடுங்கியது.

செய்தித்தாள்களில் வந்த செய்திகள் மற்றும் மக்கள் பேசிக்கொண்டவை ஆகியவற்றை வைத்து அவனால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. அவர்கள் நிச்சயம் சாதாரண கொள்ளைக்காரர்கள் இல்லை. இவ்வளவு ஆயுதங்களை சேர்த்து வைத்தார்கள் என்றால் அவர்கள் நிச்சயம் தீவிரவாதிகள் ஆகத்தான் இருக்கவேண்டும். அப்படியானால் அவர்கள் நக்சலைட் தீவிரவாதிகள்தான். அவர்களை ஏதோ கடத்தல்காரர்கள் என்று சாதாரணமாக நினைத்து காசுக்கு ஆசைப்பட்டு உதவி செய்து விட்டோமே என்று நினைக்கையில் அவனுக்கு வயிற்றைக் கலக்கியது. போலீசுக்குத் தெரிந்தால் அவ்வளவு தான். தன் வாழ்க்கை முழுவதும் சிறையில் இருக்க வேண்டியதுதான் என்று பயந்தான். சிறிது நேரம் அமைதியாக இருந்தான். பிறகு இந்த முறை மட்டும் இந்த வேலையை செய்து பணத்தை வாங்கிக்கொண்டு, ஒதுங்கிவிடவேண்டும் என்று நினைத்தபடி, பெட்டியை மூடி முன்பிருந்தபடியே செய்து வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு போனான்.

அந்த இடத்தில் இரண்டுபேர் தயாராக இருந்தார்கள். சரக்கை அவர்களின் வேனுக்கு மாற்றியதும், ஒருவன் வண்டியை இயக்கினான். இன்னொருவன் கிருஷ்ணப்பாவிடம் "நீயும் வண்டியில் ஏறு!" என்றான்.

"நான் எதற்கு? பணத்தைக் கொடு. நான் போகவேண்டும். இந்தக் கோழி வண்டியை என் நண்பனிடம் ஒப்படைக்கவேண்டும். அவன் காத்துக்கொண்டிருப்பான்."

கிருஷ்ணப்பா தயங்கியபடியே இதைக் கூறினான்.

"சும்மா வா! போனதும் கொஞ்சநேரத்தில் நீ திரும்பி விடலாம்." இப்போது பேசியவன் குரலில் ஒரு கண்டிப்பு இருந்தது. கிருஷ்ணப்பா எதுவும் பேசாமல் வேனில் ஏறி உட்கார்ந்தான். உடனே இன்னொருவனும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கதவை இழுத்து ஓங்கி சாத்தினான். அவர்களின் வேன் பெரிய சாலையிலிருந்து இறங்கி ஒரு மண் சாலையில் போனது. அடர்ந்திருந்த மரங்களின் இடையே சுமார் ஒரு மணி நேரம் புழுதி கிளப்பியபடி பயணம் செய்தபின் ஒரு சிறிய கிராமத்திற்குள் போய் வேன் நின்றது. ஒரு சில ஓட்டு வீடுகளும் பல குடிசைகளும் அங்கே தென்பட்டன. அவர்கள் வேனை

ஒரு பழைய சிறு கோவிலின் பின்னால் மறைவாக நிறுத்திவிட்டு கீழே இறங்கினார்கள். உடனே சுமார் பத்து இளைஞர்கள் வந்து பெட்டிகளை இறக்கி ஒரு குடிசைக்குள் கொண்டு போனார்கள். கிருஷ்ணப்பாவை சற்றுத் தள்ளி இருந்த ஒரு தகரக் கொட்டகைக்கு கூட்டிச்சென்றார்கள். அவன் எதுவும் விளங்காமல், திகில் உணர்வுடன் அமைதியாகப் போனான். அங்கே ஒருவர் அவனைக் குளித்துவிட்டு வரும்படி, சொல்லி மாற்று உடைகள் கொடுத்தார். அவன் போய் ஒரு மரத்தடியில் மறைப்பில் குளித்துவிட்டு அவர் கொடுத்த ஒரு ஜிப்பா பைஜாமாவை மாற்றிக் கொண்டு வந்து உட்கார்ந்தான். அவனுக்கு சப்பாத்தியும் உப்புமாவும் கொடுத்தார்கள். அவனும் நன்கு பசியுடன் இருந்ததால் நன்றாக சாப்பிட்டான். பிறகு சூடான டீ கொடுத்தார்கள். அவன் அமைதியாக குடித்தான். அடுத்து என்ன செய்வார்களோ என்ற பயத்துடன் அவன் இருந்தான்.

அந்த இடத்தை சுற்றிலும் பார்வையை செலுத்தினான். அங்கே பல கோரைப்பாய்களும் தலையணைகளும் கிடந்தன. சுவரில் மாவோ, செகுவாரா, பகத்சிங் ஆகியோரின் படங்கள் தெரிந்தன. ஒரு பழைய மரமேசையில் பல புத்தகங்கள் அடுக்கப்பட்டு இருந்தன. சில பென்சில்கள், பேனாக்களும், நோட்டுப் புத்தகங்களும் பக்கத்தில் கிடந்தன. ஒரு மூலையில் ஒரு காக்கி பேன்டும், சட்டையும் ஒரு ஹேங்கரில் தொங்கின. ஒரு சுவர்க்கடிகாரம் தெரிந்தது. ஒரு நடு வயதுப் பெண் வந்து இடத்தை சுத்தம் செய்துவிட்டுப் போனாள். குழந்தைகள் சிலர் ஓடிவந்து கூச்சலுடன் விளையாடிவிட்டு ஓடினார்கள். ஆனால் அந்த இடத்தில் யாரும் குடியிருப்பதுபோல தெரியவில்லை. ஒரு டம்ளர், தண்ணீர்ப் பானையைத் தவிர வேறு பாத்திரங்கள் அங்கு இல்லை. அது ஒரு அலுவலகம் போல இருந்தது. ஒரு இளைஞன் வந்து ஒரு அறைக் கதவைத் திறந்தான். அப்போது அங்கே சுவரில் சில துப்பாக்கிகள் அடுக்கி வைத்திருந்தது தெரிந்தது. சில நிமிடங்களில் அந்த அறையை பூட்டிவிட்டு அந்த இளைஞன் போய்விட்டான். அடுத்த சில நிமிடங்களில் நான்கைந்து பேர் அந்த இடத்துக்கு வந்து தரையில் உட்கார்ந்தார்கள். பிறகு ஒருவர் வந்தார். அவர் சுமார் அறுபது வயதுக்கும் அதிக வயதுடையவராக தெரிந்தார். ஓரளவு வழுக்கையான தலையும் நரைத்த தாடி மீசையும் உடையவராக இருந்தார். அவர் ஒரு காலை சற்று தாங்கியபடி மெதுவாக நடந்து வந்தார். அவர் மட்டும் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். அந்தப் பெரியவர் அவர்களின் தலைவன் போல தெரிந்தது. அவர் எல்லோரையும் ஒரு முறை பார்த்து புன்னகை செய்தார்.

“என்ன கிருஷ்ணப்பா! நீ கொண்டுவந்த சரக்கு என்ன என்று தெரிஞ்சுக்கிட்டியா? நாங்கள்லாம் யார்னு தெரிஞ்சுக்கிட்டியா?”

தன்னை தொடர்ந்து கண்காணித்து வந்திருக்கிறார்கள் என்பதை கிருஷ்ணப்பா தெரிந்துகொண்டான். அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது.

கிருஷ்ணப்பா எழுந்து நின்றான். அவர் அவனை உட்காரும்படி சைகை செய்தார். அவன் உட்கார்ந்தான். “ஐயா! அடிக்கடி சரக்கை ரகசியமா கடத்திட்டு வந்தேன். போலீசுக்கு தெரியக்கூடாதுன்னு சொன்னதால ஒரு பயம் வந்துச்சு. அது என்னன்னு தெரிஞ்சுக்கணும்னு ஏதோ தோணுச்சு! தெரியாமல் செஞ்சுட்டேன். மன்னிக்கணும். நான் ஏதோ துணி, கேமிரா, டேப் ரெகார்டர்னு இருக்கும்னு நினைச்சேன். இப்படி துப்பாக்கி, குண்டு எல்லாம் இருக்கும்னு தெரியாது.”

“நீ சொல்லும்படியான பொருட்கள் இருந்தால் பரவாயில்லை! ஆயுதங்கள் கடத்தினால் மட்டும் தப்பா?”

அவன் அவரது கேள்விக்கு பதில் சொல்லவில்லை; பதில் தெரியவில்லை!

“நீ சொல்லும் பொருட்களைக் கடத்துவதுதான் தேச துரோகம். ஆயுதம் கொண்டுவந்து சேர்த்தது மிகவும் உயர்ந்த செயல். நீ கடத்தல்காரர்களுக்கு உதவவில்லை. இந்த நாட்டின், மண்ணின் உண்மையான மக்களுக்கு, அவர்களது உரிமைப் போராட்டத்துக்கு உதவி செய்திருக்கிறாய். இதற்காக நீ உண்மையில் பெருமைப்பட வேண்டும் தம்பி!”

அவன் “சரி ஐயா!” என்று தலையாட்டினான்.

“நீ இன்னும் கொஞ்ச நாள் மட்டும் இதை செய்தால் போதும். பிறகு நாங்கள் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டோம். இதை ரகசியமாக வைத்துக் கொள்ளவேண்டும்.”

சிறிது நேரம் கழித்து அவர்கள் அவனை தங்கள் வேனில் கொண்டு போய் கோழி வண்டி நின்ற இடத்தில் விட்டார்கள். இப்போது அவர்கள் வேறு பாதையில் வந்தார்கள். அவனிடம் பணத்தைக் கொடுத்தார்கள்.

“கிருஷ்ணப்பா! நீ இந்த விஷயம் பற்றி யாரிடமும் பேசக் கூடாது. பேசினால் உனக்குத் தான் ஆபத்து. போலீசால எங்களை எதுவும் செய்ய முடியாது. நாங்க பெரிய இயக்கம். ஆனால் நீ தனி ஆள்.”

அவர்கள் கிருஷ்ணப்பாவை இறக்கிவிட்டு கிளம்பிச் சென்றார்கள்.

கிருஷ்ணப்பா இரண்டு நாட்கள் வீட்டைவிட்டு வெளியே எங்கும் போகவில்லை. இரண்டாவது நாள் கோழிக்கடை நண்பன் அவனைத் தேடி வீட்டுக்கே வந்துவிட்டான். வேன் இல்லாததால் அவனுக்கு வியாபாரம் பாதிக்கப்பட்டிருந்தது. அவன் வரும்போதுகூட கிருஷ்ணப்பா டல்லாக படுத்துக்கிடந்தான். நண்பனைப் பார்த்தவுடன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான்.

"டேய் கிருஷ்ணப்பா! வேன் என்னடா ஆச்சு? ஏன்டா கொண்டு வந்து குடுக்கலை?" என்றவன் நண்பனின் முகத்தைப் பார்த்து, "என்னடா! உடம்பு சரியில்லையா?" என்று கரிசனமாக கேட்டான்.

"ஆமாம்! ரெண்டு நாளா ரொம்ப உடம்பு வலி. இப்ப பரவாயில்லை. வா எங்கேயாச்சும் வெளியே போயிட்டு வரலாம்."

இரண்டு பேரும் போய் நன்றாக குடித்துவிட்டு ஒரு சினிமா பார்த்துவிட்டு வந்தார்கள். அன்று இரவு கிருஷ்ணப்பா தன் வாழ்க்கையைப் பற்றி முதல் முறையாக நீண்ட நேரம் சிந்தித்தான். உறவு என்று யாரும் இல்லை. குடும்பம் எதுவும் இல்லை. தனக்கு எதுவும் ஒரு ஆபத்து என்றால் உதவி செய்ய ஒருவரும் இல்லை. இது வரையிலும் அவனிடம் பணம் என்று எதுவும் இல்லை. ஆனால் இப்போது அவன் கணக்கில் வங்கியில் இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தது. அதை நினைத்ததும் அவனுக்கு ஒரு தைரியம் வந்தது. அவன் மனதில் தன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய ஒரு திட்டம் உருவானது.

"நீ தனி ஆள். நாங்கள் ஒரு பெரிய இயக்கம்" என்று தீவிரவாதி சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அந்த வார்த்தைகள் அவனுக்கு ஒரு வழியை காட்டுவது போல உணர்ந்தான். "நானும் தனி ஆளாக இருக்கக் கூடாது" அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

தன் வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு பகுதியில் குடியேறினான். துறைமுக வேலையில் தீவிரமாக ஈடுபட்டான். மத்தியில் ஆட்சி செய்த ஒரு தேசிய கட்சியின் உள்ளூர் கிளை அலுவலகத்துக்குப் போய் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டான். அதற்கான துறைமுக, தொழில் சங்கத்திலும் சேர்ந்து தீவிரமாக வேலை செய்தான். அவன் தீவிரவாதிகளுக்கு அதன் பிறகு இரண்டு முறை மட்டுமே வேலை செய்தான். பிறகு அவர்களும் இவனை தேடுவதை நிறுத்தி விட்டார்கள். ஆனால் கிருஷ்ணப்பா தீவிரவாதிகளைப் பற்றி தொடர்ந்து தகவல்களை சேகரித்து வந்தான். சில மாதங்களில்

பொதுத்தேர்தல் வந்தது. அந்த தேர்தலுக்காக டெல்லியிருந்து மாநிலங்களுக்கு நூற்றுக்கணக்கில் ஜீப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவை மாநில கட்சிக்காரர்களால் திருப்பி அனுப்பப்படவில்லை. கிடைத்தவர்கள் அப்படியே அமுக்கிக் கொண்டார்கள். அவர்களில் கிருஷ்ணப்பாவும் ஒருவன். அதில் சில மாறுதல்களைச் செய்து வைத்துக் கொண்டான். கட்சியில் அவன் இப்போது முக்கியமான உறுப்பினர் என்பதால் அவனை யாரும் எதுவும் கேட்கவில்லை. தலைவர்களுக்கு அவன் முகம் தெரிய ஆரம்பித்தது. அவன் சேவை அவர்களுக்குத் தேவைப்பட்டது. தீவிரவாதிகளிடமிருந்து பிரிந்து வந்த ஒருவனின் பழக்கம் அவனுக்குக் கிடைத்தது. அவனுக்கும் கிருஷ்ணப்பாவின் ஆதரவு தேவைப்பட்டது. அவனைப் பயன்படுத்தி, கிருஷ்ணப்பா கட்சிக்குள் தனக்கென ஒரு அடியாள் வட்டத்தை உருவாக்கினான். கட்சிக் கூட்டங்களுக்கு ஆள்சேர்ப்பது, அவன் பொறுப்பானது. தலைவர்களுக்கும் கூட்டத்துக்கும் பாதுகாப்புப் படை போன்ற ஒன்றை கிருஷ்ணப்பா உருவாக்கினான். அதே சமயம் கட்சியிலும் தனக்கென ஒரு கௌரவமான பதவியை பெற்றுக்கொண்டான்.

இப்போது அவன் தோற்றமும் வெகுவாக மாறியிருந்தது. படிய வாரிய தலைமுடி, தங்கப்ரேம் போட்ட கண்ணாடி பளீரென்ற வெள்ளைச் சட்டை, வெள்ளை பேன்ட்ஸ்–ல் ஆளே புதியவனாக இருந்தான்.

கிருஷ்ணப்பாவுக்கு இப்போது கட்சியில் குறிப்பிட்ட அளவு தொண்டர்கள் பலம் இருந்தது. அதே சமயம் அவன் கையில் அவன் சொன்னால் எதையும் செய்யக்கூடிய ஒரு அடியாட்கள் கூட்டமும் இருந்தது. அவன் நகராட்சிக் குழுவில் ஒரு உறுப்பினராக ஆகியிருந்தான். கட்சியில் அவனை வெளிப்படையாக எதிர்ப்பதற்கு எல்லோரும் பயந்தார்கள். இந்த காலத்தில் அதே கட்சியில் இருந்த தன் ஜாதி பிரமுகர்களிடமும் நல்ல நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். ஆரம்பத்தில் கட்சி தொடர்பான நிகழ்ச்சிகளின் போஸ்டர்களில் எஸ்.கிருஷ்ணப்பா என்று பத்தோடு பதினொன்றாக அவன் பெயர் போடப்பட்டது. ஓராண்டு முடிந்தபிறகு அவன் பெயரை முதலில் போட்டு போஸ்டர் அடிக்கப்பட்டது. சில ஆண்டுகள் கழித்து அவன் வட இந்தியாவிலிருந்து மார்பிள், மின்சார பாகங்கள் முதலியவற்றை மொத்தமாக தருவித்து விற்பனை செய்யும் பெரிய வியாபார பிரமுகராகவும் மாறினான். இவற்றை வெளிப்படையாக செய்த கிருஷ்ணப்பா, தீவிரவாத குழு ஒன்றுடன் ரகசிய உடன்பாட்டில்

ஆயுத புரோக்கராகவும் இருந்தான். அவனது வளர்ச்சியைக் கவனித்துவந்த ஒரு அரசியல் பிரமுகர் தன் மகளை அவனுக்கு திருமணம் செய்து கொடுத்தார். அவனது திருமணமே ஒரு மத்திய அமைச்சர் தலைமையில்தான் நடந்தது. சில ஆண்டுகள் சட்டசபை உறுப்பினராக இருந்துவிட்டு, அரசியல் பதவி தனக்கு சரிவராது என்று நினைத்து வேண்டாம் என்று சொல்லிவிட்டான். அவன் கவனம் முழுவதும் தொழில் முன்னேற்றம் என்பதாக ஆகிவிட்டது. வைர வியாபாரம், நட்சத்திர ஹோட்டல், மதுக் கம்பெனிகள் என்று அவனது சாம்ராஜ்யம் பல வகையிலும் விரிந்து நின்றது. எல்லாக் கட்சிகளிலும் அவனுக்கு ஆட்கள் இருந்தார்கள். எல்லோருக்கும் அவன் தயவு தேவைப்பட்டது. மாநிலத்திலும் மத்தியிலும் அவன் ஆட்கள் சிலர் அமைச்சர்களாக இருந்தார்கள். நாட்டின் பிரபல அரசியல் பிரமுகர்கள் பஞ்சாரா ஹில்ஸில் இருந்த அவன் பங்களாவில் விருந்துக்கு வருவது அன்றாட நிகழ்ச்சி ஆனது. அவன் நினைத்தால், வரச்சொன்னால் வந்து பார்க்க மாநில, மத்திய அமைச்சர்களே தயாராக இருந்தார்கள்.

மாமனார் இறந்தபிறகு அந்தப் பெரிய குடும்பம் மொத்தத்துக்கும் கிருஷ்ணப்பாதான் தலைவர். மாமனாரின் பல கம்பெனிகளும் அவனது நிர்வாகத்தின் கீழ் வந்தன. இரண்டு மைத்துனர்களும் அவனுக்கு கட்டுப்பட்டே நடந்தார்கள். கிருஷ்ணப்பாவுக்கு ஒரு மகன். ஒரு மகள். தன்னுடைய நண்பன் கோழி வியாபாரியை அவன் இதயநோயில் இறக்கும் வரைக்கும் தன்னுடனே வைத்துக் கொண்டான் கிருஷ்ணப்பா. கிருஷ்ணப்பாவின் முழுப்பெயரும் பலபேருக்குத் தெரியாது. பத்திரிகைகளிலும் அழைப்பிதழ்கள், போஸ்டர்களிலும் அவன் முழுப் பெயர் போடப்படுவதில்லை. எஸ்.கே. ரெட்டி என்றே போடப்பட்டது. வீட்டின் முன் இருந்த பெயர்ப் பலகையில் இருந்த தன் பெயரைப் பார்த்த கிருஷ்ணப்பா தனக்குத் தானே சிரித்துக்கொண்டார். “நமக்கே நம் பெயர் மறந்துவிடும் போல இருக்கிறதே!”

அவர் இப்போது பிரபல ஆந்திர தொழிலதிபர். எஸ்.கே.ரெட்டி, வீட்டின் பெயர்ப்பலகையில் ‘எஸ்.கிருஷ்ணப்பா ரெட்டி’ என்று இருந்தது.

# 16

ஆர்.டி.ஓ சுப்பிரமணியன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். அது மணி 4.30 என்று காட்டியது. அலுவலகத்தில் பக்கவாட்டு சுவரில் ஒரு பெரிய கடிகாரம் இருந்தாலும் பழக்கத்தால் அவர் கைக்கடிகாரத்தையே பார்த்தார். காலையிலிருந்து தொடர்ந்து பைல்களைப் பார்த்து வந்ததால் ஓரளவு களைப்பாக உணர்ந்தார். களைப்பு என்பதைக் காட்டிலும் சலிப்பு என்பதே சரியாகும். முப்பது வருடமாக வேலை பார்த்தது சலிப்பாகவே இருந்தது. அதிலும் மனதுக்கு பிடிக்காமலும் மனசாட்சிக்கு விரோதமாகவுமே பல சமயங்களில் நடந்து கொள்ளவேண்டியதிருந்ததால், அவர் மனம் சலித்திருந்தார். பேனாவை மூடி வைத்துவிட்டு, மேசை டிராயரில் இருந்த சிறு தைல பாட்டிலை எடுத்து சிறிது தைலத்தை விரல்களில் தொட்டு நெற்றியில் அழுத்தி, தேய்த்துக்கொண்டார். இதுவும் பழக்கமாகிவிட்டிருந்தது. இப்போது கொஞ்சம் சுகமாக இருப்பது போல உணர்ந்தார்.

அப்போது அறைக் கதவு திறந்த ‘கிரீச்’ ஒலி கேட்டது. கதவைத் திறந்துகொண்டு இயல்பாக நுழைந்தார் சம்ச்சா சௌந்திரராஜன்.

“வணக்கம் சார்! எப்படி இருக்கீங்க? உங்க நல்ல மனசுக்கு ஏத்தபடி அமோகமா இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். இதில ரொம்ப சந்தோஷப் படுற முதல் ஆளு நான்தான். என்ன சார்!”

உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும் என்பதன் நாசூக்கான வடிவம்தான் அந்த வார்த்தைகள்.

சௌந்திரம் சற்று பலமாக சிரித்தார். அப்போது அலுவலக உதவியாளர் இருவருக்கும் காபி கொண்டு வந்து வைத்தார். இந்த முறையும் அந்த உதவியாளரும் தன் அதிகாரியின் அனுமதியை கேட்கவில்லை.

சுப்பிரமணியனும் “வாங்க சௌந்தரம்! சௌக்கியமா இருக்கீங்களா! பாத்து ரொம்ப நாளாச்சு!” செற்கையான புன்னகையுடன் வரவேற்றார்.

இருவரும் காபியை குடித்து முடித்தார்கள்.

“ஒண்ணும் பிரச்னை இல்லையே! எல்லாம் நம்ம பசங்கதான். சாரை நல்லபடியா கவனிச்சுக்கணும்னு சொல்லி வச்சிருக்கேன். ஏதேனும் சிரமம் இருந்தா சொல்லுங்க!”

“ஐயையோ! அதெல்லாம் ஒரு சிரமமும் இல்லை. எல்லோரும் ரொம்ப நல்லா நடத்துக்கிறாங்க. நீங்களும் சமயத்தில் உதவினீங்க. நல்லா இருக்கேன்.”

“சந்தோஷம் சார்! அப்புறம், ஒரு சின்ன ஹெல்ப் பண்ணனும். நாளைக்கு இரண்டு பசங்க வருவாங்க. ஹசன், காதர்னு பேரு. ஹைதராபாத் பசங்க. இங்க என்ஜினீரிங் காலேஜ்ல சேர்ந்திருக்கானுங்க. நம்ம அமைச்சருக்கு வேண்டியவங்க. தமிழ் அவ்வளவா பேசமாட்டாங்க. அவங்களுக்கு இங்க உள்ள அட்ரஸ்ல டிரைவிங் லைசன்ஸ் கேட்டிருக்காங்க. பேப்பர்ஸ்லாம் நான்தான் அரேஞ்ச் பண்ணிக் குடுத்திருக்கேன். சிக்கல் இல்லாம லைசன்ஸ் குடுத்துடனும். அவ்வளவுதான்.”

“வண்டி ஓட்டுவாங்கள்ல?” ஆர்டிஓ சந்தேகமா கேட்டார்.

“அதெல்லாம் எக்ஸ்பர்ட் ஆன பசங்க சார். பேப்பர்ஸ் தான் நம்ம தயாரிப்பு. கொஞ்சம் பார்த்து செஞ்சிடுங்க. அமைச்சர் இன்டரஸ்டட்; அதான்.”

சுப்பிரமணியன் சற்று யோசித்தார். “என்ஜினீரிங் ஸ்டூடன்ட்ஸ் தானே. அதுவும் வண்டி ஓட்டத் தெரிந்தவர்கள் தானே. ஒன்றும் பிரச்னை வராது.” என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார். அவருக்கு வேறு வழியும் இல்லை என்பது அவருக்குத் தெரியும் சம்ச்சா சௌந்திரத்தின் செல்வாக்கை அவர் அறிந்திருந்தார். முக்கியமில்லை என்றால் அவர் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டார் என்பது அவருக்குத் தெரியும்.

“சரி சார்! நீங்க சொல்றீங்க. அவசியம் செஞ்சிடுறேன். எனக்கு எதுவும் பிரச்னை வராம நீங்கதான் பார்த்துக்கனும்.”

“ஐயையோ! அதெல்லாம் ஒரு பிரச்னையும் வராது. இது ஒரு மேட்டரே இல்லை. சொல்லப்போனால், நான் இதுக்காகவே வரலை. உங்களை பாத்த மாதிரி இருக்குமே என்று தான் நான் வந்தேன். இப்ப நேரா அமைச்சர்கிட்ட தான் போறேன். உங்களுக்கு எதுனா சொல்லனும்னா சொல்லுங்க!”

“ஒண்ணும் இல்லீங்க! ரொம்ப தேங்ஸ்”

“அப்ப நான் கிளம்பறேன். உங்களை பார்த்தது சந்தோஷம். நன்றி!”

சம்ச்சா செளந்தரம் ஒருவழியாக கிளம்பினார்.

சுப்பிரமணியன் யோசித்தார். 'ஒன்றுமில்லாத விஷயத்துக்கு இந்த ஆள் நேரில் வரமாட்டானே' என்று சற்று கவலைப்பட்டார். பிறகு அவர் தனக்கு கீழே இருப்பவர்களிடமும் பேசியிருப்பார் என்பதால், தான் ஏதேனும் கேள்வி கேட்டால் தனக்கு சிக்கல் வரும் என்பதையும் எண்ணிப் பார்த்தார். பிறகு கீழே யாரும் எதுவும் கேட்கவில்லை என்றால் தானும் கையெழுத்துப் போடுவதில் தனக்கு ஆபத்தில்லை என்று முடிவு செய்தார். எல்லோரும் செய்யும் போது தானும் செய்யவேண்டியது தானே! இப்படிப் பல கோணங்களிலும் தனக்குத் தானே பேசிக்கொண்டதில் அவர்தான் பெரிதாக எதுவும் தவறு செய்யவில்லை என்பதாக நினைத்தார்.

மறுநாள் காதர், ஹசன் இரண்டு பேரையும் ஒரு புரோக்கர் அழைத்து வந்தார். அவர்கள் டிரைவிங் டெஸ்டில் தேறிவிட்டார்கள். இங்கேயுள்ள ஒரு முகவரி, அதற்கு ஆதாரமாக ரேஷன் கார்டு எல்லாம் கொடுத்தார்கள். கீழே வேலை செய்த ஒருவர் கூட அதில் எந்த ஒரு கேள்வியோ சந்தேகமோ எழுப்பவில்லை. எந்த விதமான ஒரு சந்தேகத்துக்கும் இடமில்லாதபடி ஆவணங்கள் தயாரிக்கப் பட்டிருந்தன. எனவே இதில் தனக்கு எந்த சிக்கலும் வரப்போவதில்லை என்பது சுப்ரமணியனுக்கு உறுதியானது.

சம்ச்சா செளந்திரராஜனுக்கு அரசாங்க மட்டத்தில் நல்ல செல்வாக்கு இருப்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அமைச்சருக்கு இவனையெல்லாம் பழக்கம் இருக்குமா? அமைச்சர் பெயரைச் சொல்லி அவனும் அதிகாரிகளும் பல வேலைகளைச் செய்கிறார்களோ? நமக்கே இந்த ஆளைக் கண்டால் எரிச்சலாக இருக்கிறது. அப்படியிருக்க அமைச்சரெல்லாம் இவனுடன் சகவாசம் வைத்துக் கொள்வாரா!" அவருக்கு கொஞ்சம் குழப்பமாக இருந்தது.

சில நாட்களில் அவர்களுக்கு டிரைவிங் லைசன்ஸ் அளிக்கப் பட்டது. எவ்வளவு பெரிய தவறை தான் செய்கிறோம் என்பதை சுப்பிரமணியம் அப்போது அறிந்திருக்கவில்லை.

# 17

'ஹேப்பி பர்த் டே டு யு! ஹேப்பி பர்த் டே டு யு!!' என்ற குரல்களுடன் இளைஞர்களும் இளம் பெண்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து நிற்க வண்ணமெழுகு வர்த்திகளை ஊதி அணைத்து ஹசன் தன் பிறந்தநாள் கேக்கை வெட்டினான். சதீஷ், ராஜேஷ், கௌதம் மூவரும் அந்தக் கேக்கை சிறு துண்டுகளாக வெட்டி வந்திருந்த நண்பர்களுக்கு பேப்பர் தட்டுகளில் வைத்துக் கொடுத்தார்கள். அவர்களின் ஆனந்த ஆரவாரக் கூச்சல்களாலும், இளம் பெண்களின் கீச் கீச் என்ற பேச்சாலும் சிரிப்பொலிகளாலும் அந்த ரிசார்ட்டின் புல்வெளி நிறைந்திருந்தது. அந்த ரிசார்ட் ஈசிஆர் சாலையில் மகாபலிபுரத்துக்கு ஐந்து கிலோ மீட்டர் முன்பாக இருந்தது. சமீப காலமாக சதீஷ் நண்பர்கள் குழுவின் விருப்பமான சந்திப்பு மையமாக அந்த ரிசார்ட் ஆகியிருந்தது. Hotel Eastern Eagle என்ற எழுத்துக்கள் சற்று உயரத்தில் இரத்தச் சிகப்பான விளக்குகளில் ஒளிர்ந்தன.

அந்த பார்ட்டியில் காதரும் ஹசனும் பணத்தை தண்ணீராக செலவழித்தார்கள். அவர்கள் வாங்கிய கேக்கின் விலை பத்தாயிரம் ரூபாய். மேலும் விலையுயர்ந்த ஷாம்பேன் மதுவை ஆர்டர் செய்திருந்தார்கள். ஒரு சிலரைத் தவிர அங்கு வந்திருந்த அனைவருமே மதுவை அருந்தி நடனமாடி மகிழ்ந்தார்கள். பல இளைஞர்களும் தம் கேர்ள் ப்ரண்டுகளுடன் வந்திருந்தார்கள். அது தவிர அந்த பார்ட்டியில் ஒரு வெளிநாட்டு புதுவகையான சிகரெட் வைக்கப்பட்டிருந்தது. அதையும் அனைவரும் பெண்கள் உட்பட புகைத்து மயங்கினர். எல்லோரும் அரை மயக்கத்தில் இருந்தார்கள். ஆனால் காதர், ஹசன் இரண்டு பேரும் மிகவும் குறைவாக குடித்து நிதானமாக செயல்பட்டார்கள். ஹோட்டல்காரர்கள் அங்கு நடந்த எதையும் கண்டுகொள்ளவில்லை. அந்த நிகழ்ச்சிகளை அங்கு பார்ட்டிக்கு வந்திருந்த இரண்டு வட இந்திய சாயல் இருந்த இளைஞர்கள் தமது சிறு கேமிராவில் ரகசியமாக படம் பிடித்தார்கள். அவர்கள் வழக்கமாக அந்த நண்பர்கள் வட்டத்தில் இல்லாதவர்கள்,

புதியவர்கள். அவர்கள் இரண்டு பேரும் தன் உறவினர்கள் என்று நண்பர்களிடம் அறிமுகப்படுத்தி வைத்திருந்தார்கள். காதரும், ஹசனும் அந்த இரண்டு பேரும் சிறுவயது முதலே சென்னையில் வளர்ந்து வருபவர்கள்.

ஹசனும் காதரும் கல்லூரியில் சேர்ந்த பிறகு தோற்றத்தில் வெகுவாக மாறியிருந்தார்கள். தங்களின் பழைய ஹேர் ஸ்டைலை கொஞ்சம் மாற்றிக்கொண்டு ஸ்பைக் மட்டும் வைத்துக்கொண்டு சென்னைப் பையன்களைப் போல நடமாடினார்கள். ப்ராண்டட் சட்டை, ஜீன்ஸ், நைகி ஷூக்கள், விலைஉயர்ந்த ப்ரென்ச் சென்ட்கள் என நவநாகரீக இளைஞர்களாக மாறியிருந்தார்கள். தமிழிலும் கொஞ்சம் கொஞ்சமாக பேசுவதற்கு பழகிக் கொண்டார்கள். நண்பர்கள் வட்டத்தை கொஞ்சம் பெரிதாக்கிக் கொண்டார்கள். சென்னையின் முக்கிய இடங்களுக்கு அடிக்கடி போய் வந்து பழகிக் கொண்டார்கள். முக்கியமான பெரிய நிகழ்ச்சிகளில் பார்வையாளராக சென்று வந்தார்கள். முடிந்த அளவு எல்லாவற்றையும் தங்கள் வீடியோ கேமிராவில் படம் பிடித்துக்கொண்டார்கள். இவை எல்லாவற்றிலும் சென்னை நண்பர்களுடனேயே சென்று வந்தார்கள். அவர்களின் நண்பர்கள் எல்லோரும் அவர்கள் ஏதோ சேட் பையன்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். நண்பர்கள் வட்டத்தில் போலீஸ் அதிகாரிகளின், டாக்டர்கள், நீதிபதிகளின் குழந்தைகளும், மிக முக்கிய மாநகர பிரமுகர்களின் வாரிசுகளும் இருந்தார்கள். அவர்கள் இரண்டுபேரும் தம் நண்பர்களை கவனமாக தேர்ந்தெடுத்து அவர்களிடம் நெருங்கிப் பழகினார்கள். இந்த நண்பர்கள் வட்டத்தில் பெண்களும் இருந்தார்கள். பெண்களுக்கு பிரான்சின் வெர்சாஸ் போன்ற விதவிதமான வெளிநாட்டு பெர்ப்யூம்களையும், Lottusse ஹேண்ட் பேக்குகளையும் கொடுத்து அவர்களின் நட்பை பெற்றார்கள். அதுபோல இளைஞர்களுக்கு ரெமி மார்ட்டின் போன்ற வெளிநாட்டு உயர்ரக மதுவகைகளையும், அவர்கள் வீட்டு பெரியவர்களுக்கு Rado போன்ற வாட்ச்கள் பெர்ப்யூம் பாட்டில்களையும் கொடுத்து கவர்ந்து வைத்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகள் தொடர்பான விருந்துகள் நிகழ்ச்சிகளிலும் சகஜமாகக் கலந்துகொள்ளும் அளவுக்கு பழகிவிட்டார்கள். அவர்களுடன் பழகுவதில் நண்பர்களிடையே ஒரு வகை போட்டியே ஏற்பட்டுவிட்டது.

ஒருவழியாக பார்ட்டி முடிந்தது. நண்பர்கள் ஒவ்வொருவராக கிளம்பிச் சென்றனர். காதர், ஹசன் மற்றும் அந்த இரண்டு புதியவர்கள்

மட்டும் இருந்தார்கள். அதில் ஒருவன் காதரிடம் கேட்டான். "நீங்கள் இரண்டுபேரும் மிகவும் வசதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் எதற்காக சென்னை வந்தீர்கள் என்பது நினைவிருக்கிறதா?"

"நன்றாக நினைவிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாங்கள் அதற்கான முயற்சியில் தான் இருக்கிறோம். தினம் ஒரு அடி அதை நோக்கி முன்னேறிப் போகிறோம். அதில் உங்களுக்கு சந்தேகம் தேவையில்லை. இப்போது நாங்கள் பெரிய போலீஸ் அதிகாரிகள், அமைச்சர்கள், நீதிபதிகளின் மகள் அல்லது மகனின் வகுப்புத் தோழர்கள், நெருங்கிய நண்பர்கள் ஆகியிருக்கிறோம். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் வீட்டுக்கு போய்வரும் அளவுக்கு உரிமை பெற்றவர்கள். எங்கள் மோட்டார் பைக்குகளை போலீஸ் காலனியிலேயே தினம் பார்க் செய்ய முடியும். அந்தப் பையன்களுடன் எந்த இடத்துக்குள்ளும் போய்வர எங்களால் முடியும். ஒரு நாள் அதிகாரியின் மகனுடன் அந்த ஜீப்பிலேயே சென்ட்ரல் ஸ்டேஷன் போய் இறங்கினேன். யாரும் கேள்வி கேட்கவில்லை; சந்தேகப் படவில்லை. இது இங்கேயே பிறந்து வளர்ந்த உங்களால் முடியுமா?"

இதைக் கேட்டதும் அவர்களின் முகம் மலர்ந்தது. கண்கள் வியப்பால் விரிந்தன. அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை.

"இப்போது சொல்லுங்கள். எதற்காக வந்தோம் என்பதை நாங்களா மறந்துவிட்டோம்?"

"சாரி. வெரி சாரி! உங்களை தவறாக எண்ணிப் பேசிவிட்டோம்!" என்றான். ஒல்லியாக இருந்த ஒருவன். சற்று பருமனாகவும் குள்ளமாகவும் இருந்த மற்றொருவன். "சரி, காதர். நீங்கள் இங்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. நிலைமைகளும் உங்களுக்கு சாதகமாகவே இருக்கின்றன. எப்போது வேலையை செய்யப் போகிறீர்கள்? ஏன் தாமதம் செய்கிறீர்கள்? உடனே செய்து முடிக்க வேண்டியது தானே!"

காதருக்கு அவன் பேசியது எரிச்சலை ஏற்படுத்தியது. அவனை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தான்.

'ஒரு ஆள் அல்லது இரண்டு பேரை வேலை முடிப்பது என்றால் உடனடியாக முத்துவிட்டு ஊருக்கு திரும்பி விடலாம். ஆனால் அது போன்ற வேலைக்கெல்லாம் இயக்கத்தில் இருந்து எங்களை அனுப்ப மாட்டார்கள். இது ஒரு பெரிய வேலை. நீண்ட காலமாக ஆசைப்பட்டு செய்யமுடியாத வேலை. சரியான திட்டம் தயாரிக்காமல்

அவசரப்பட்டதால் நம் ஆட்கள் சிலர் போலீசில் சிக்கிக்கொண்டார்கள். இதெல்லாம் உனக்குத் தெரியுமா, தெரியாதா?'

அவர்கள் அமைதியாக 'தெரியும்' என்பது போல் தலையசைத்தார்கள்.

"அதனால் தான் எங்களை அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் செய்யும் வேலையின் விளைவு பெரிய அளவிலும் பயங்கரமானதாகவும் இருக்கவேண்டும். அதனால் இயக்கத்துக்கு உலக அளவில் பேர் கிடைக்கவேண்டும். நாங்களும் மாட்டிக்கொள்ளக் கூடாது. இங்கு இருப்பவர்களின் உதவியைக் கொண்டே நாங்கள் அதைச் செய்யப் போகிறோம். அப்போது தான் அவர்கள் முழுவதுமாக நம்மேல் பழிபோடவோ தேடிப் பிடிக்கவோ மாட்டார்கள். இங்குள்ள நமது ஆட்கள் யாரும் பிடிபடமாட்டார்கள்." இப்போது புரிகிறதா எல்லாவற்றுக்கும் காரணம்?

அவர்கள் காதரை கட்டிப்பிடித்துக்கொண்டு சிரித்தார்கள்.

அப்போது ஹசன், "இப்போது செப்டம்பர் மாதம். அடுத்த மாதக் கடைசியில் இங்கு ஆயுத பூஜை என்று ஒரு வாரம் சாமி கும்பிடுவார்களாம். நவராத்திரித் திருவிழா நடக்கும். அது உங்களுக்குத் தெரியும். அப்போது இங்கே போலீஸ் துறை தலைமை அலுவலகத்தில் பெரிய அளவில் ஒரு பூஜை நடக்கும். அதில் இந்த மாநகரத்தில் இருக்கும் அவ்வளவு போலீசும் குடும்பத்தோடு கலந்துகொள்வார்கள். அந்த பூஜை தினம் தான் நம்முடைய டார்கெட். நாங்கள் நுழைந்தால் அது பெரிய இடமாகத்தான் இருக்கும்."

அவர்கள் இருவரும் திகைத்து நின்றார்கள்.

"அந்த சமயத்தில் பத்து நாட்கள் இங்கே தொடர்ந்து விடுமுறையாகவும், இருக்கும். அதனால் நாங்கள் அன்று ஊருக்குப் புறப்பட்டாலும் யாரும் சந்தேகப்படமாட்டார்கள். எல்லாம் முடிந்து கல்லூரி திறந்த பிறகும் நாங்கள் வராதபோதுதான் எங்களை ஒருவேளை தேடலாம். அப்போதும் அவர்களின் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக எங்களைப் பற்றி யாரும் மூச்சுவிட மாட்டார்கள்."

"உங்களுக்குத் தேவையான பொருட்கள்? எப்போது கொடுக்க வேண்டும்?" குட்டையாக இருந்தவன் கேட்டான்.

"நான், தேவைப்படுவதற்கு மூன்றுநாள் முன்பாக வாங்கிக் கொள்கிறேன். நீ தயார் செய்து வைத்துக்கொள். இடையில் என்னை

ஒரே ஒரு முறை சனிக்கிழமை பார்ட்டியில் சந்தித்துப் பேசு. அந்த ஸ்பெஷல் சிகரெட் பாக்கெட் நாளைக்கு கொஞ்சம் அனுப்பி வை."

அத்துடன் அந்த இரண்டு பேரும் புறப்பட்டுச் சென்றார்கள். இந்த முறை நிச்சயம் இயக்கம் வெற்றிகரமாக நினைத்ததை முடித்து விடும் என்று நம்பினார்கள். இதுவரை பல பேருக்கு இதுபோல உதவி செய்து எதுவுமே நடக்காததால், இயக்கத்தின் திறமை மீது நம்பிக்கை இழக்க ஆரம்பித்திருந்தார்கள். இப்போது நம்பிக்கையுடன் உற்சாகமாக போனார்கள்.

காதரும், ஹசனும் பாகிஸ்தான் தீவிரவாதக் குழுவான 'லஸ்கர்–இ–தொய்பா' என்ற இயக்கத்தினரால் இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்ட தீவிரவாதிகள். மற்ற இரண்டு இளைஞர்களும் அவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்லீப்பர் செல் உறுப்பினர்கள். அவர்கள் மாணவர்கள், வியாபாரிகள், அரசாங்க பணியாளர்கள் என்ற பல உருவங்களில் இருப்பார்கள். பணம் அவர்கள் கையில் தாராளமாக புரளும். தீவிரவாதத் தலைவரின் ரகசியக் கட்டளை கிடைக்கும் வரை அவர்கள் அமைதியாக தம் வேலையைப் பார்த்தபடி இருப்பார்கள். கட்டளை கிடைத்ததும் வெளியில் வந்து கட்டளையில் சொல்லப்பட்ட தீவிரவாத செயல்களைச் செய்து முடிப்பார்கள். அதற்காக தம் உயிரைக் கூட தியாகம் செய்ய உறுதி பூண்டிருப்பவர்கள். அவர்கள் இறந்துவிட்டால், அவர்களது குடும்பங்களை இயக்கம் கவனித்துக்கொள்ளும் என்று அவர்கள் நம்பினார்கள்.

சென்னையில் பெரிய அளவில் குண்டுவெடிப்பு நிகழ்த்த வேண்டும் என்பது பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் நீண்டநாள் திட்டம். Strike where it hurts என்ற கருத்தின்படி இந்தியாவுக்கு வலிக்க வேண்டும் என்றால் இங்கு அமைதியான பகுதியாக, எந்த மதக் கலவரமும் நடக்காத பகுதியான தமிழ்நாட்டில் அடிக்கவேண்டும் என்பது அந்த அமைப்பின் முடிவு. ஆனால் அதை செயல்படுத்துவது அவர்களால் பலகாலமாக எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இந்து முஸ்லீம் மக்களின் சிறப்பான ஒற்றுமை மற்றும் சகோதர உறவு தமிழ்நாட்டில் நீண்டகாலமாக பேணப்பட்டு வரும் ஒன்று. தமிழ்நாட்டின் திறமைமிக்க காவல்துறையையும் அவர்களால் ஏமாற்றி எதையும் செய்ய முடியவில்லை. இங்கு இவற்றை ஊடுருவி உடைத்து தம் திட்டத்தை அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. மலேஷியா, இலங்கை நாடுகளிலிருந்து வருவது போல தீவிரவாதிகள் இங்கு வந்தாலும், இங்குள்ள

திறமையான போலீஸ் அவர்களை அடையாளம் கண்டு, சிறையில் அடைத்துவிடுகிறது. பல முறை தம் முயற்சியில் தோல்வியடைந்த தீவிரவாதிகள் இந்த முறை காதர், ஹசன் இருவரையும் தேர்வு செய்து சிறப்புப் பயிற்சிகள் அளித்து சென்னைக்கு அனுப்பிவைத்தது. அவர்களும் திடீர் என்று எதையும் செய்யாமல் இங்கேயே தங்கியிருந்து, இங்குள்ளவர்களின் நம்பிக்கையைப் பெற்று தம் திட்டத்தைச் செயல்படுத்திவிட்டு தாமும் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதே திட்டம். தமிழ் மக்களின் அன்பையும் எளிதில் நம்பும் குணத்தையும் இம்முறை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்திருந்தார்கள்.

திட்டத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய இங்கே சிலரும் இருந்தார்கள். அவர்கள் தேவையான பணம், வாகனங்கள், வெடிமருந்து, போலி ஆவணங்களை கொடுத்து உதவுவார்கள் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்களின் திட்டம் சரியான பாதையில் போய்க்கொண்டிருந்தது. அவர்கள் ஆயுத பூஜை நாளுக்காக பொறுமையுடன் காத்திருந்தார்கள்.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் இங்குள்ள மக்களில் சிலரை பல காரணங்களைச் சொல்லி பாதை மாற்றியிருந்தன. பொருளாதாரத் தேவையுள்ளவர்கள், போதை மருந்துக்கு அடிமையானவர்கள் போன்றவர்கள் அவர்களின் எளிய இலக்குகள். வெகு சிலரே தெரிந்தே தேசத் துரோக சக்திகளுக்கு உதவி செய்தார்கள். பலபேர் யாருக்கு நாம் உதவி செய்கிறோம் என்ற விபரம் தெரியாமலேயே, நட்பு, தொழில் காரணங்களால் தேசவிரோத சக்திகளுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். தீவிரவாதிகளுக்கு உதவி செய்து ஆதரவு கொடுத்தவர்களில் பெரும்பாலோருக்கு தாம் தீவிரவாதிகளுடன் தொடர்பில் இருக்கிறோம் என்பதே தெரியாது.

# 18

ஹோட்டல் ஈஸ்டர்ன் ஈகிளின் புல்வெளியில் சதீஷின் பிறந்தநாள் அமர்க்களமாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரே ஆரவாரமும், சிரிப்பொலியுமாக ஆனந்தமயமாக இருந்தது. ஒரு இளைஞன் கிடார் இசைக்க இன்னொரு இளம்பெண் இனிய குரலில் ஆங்கிலப் பாடல் ஒன்றைப் பாடினாள். அவர்கள் இரண்டு பேரையும் சேர்த்து இன்னும் சிலர் கிண்டல் செய்து சிரித்தார்கள். இளைஞர்களின் கொண்டாட்டம் எப்படி இருக்கும் என்பதற்கு உதாரணமாக அந்த நிகழ்ச்சிகள் நடந்தன. சிலர் மட்டும் பீர் ஆர்டர் செய்து வாங்கிக் குடித்தார்கள். பெரும்பாலோர் கோக், பெப்சி என்பதுடன் நிறுத்திக் கொண்டார்கள். இளம் பெண்களும் இருந்ததால் அவர்கள் வரம்பு மீறாமல் நாகரிகமாகவே நடந்து கொண்டனர். ஹசனும் காதரும் தங்கள் ஊர் நிகழ்வுகளை ஜோக் போல சொல்ல மற்றவர்கள் அதைக்கேட்டு அதிர்ந்து சிரித்தார்கள்.

இடையிடையே சமையலறையில் இருந்து சிக்கன், மட்டன், மீன் என்ற சிறப்பான உணவு வகைகளை பணியாளர்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். அத்துடன் அவர்களும் சில நிமிடங்கள் நின்று அந்த அமர்க்களங்களை ரசித்தார்கள். அந்தப் பணியாளர்களில் ஒருவன் முகமது ரசூல். அவன் அந்த ஹோட்டலில் ஐந்து ஆண்டுகளாக வேலை செய்து வருபவன். அவன் ஒரு தட்டு நிறைய கிரில்ட் சிக்கன் கொண்டு வந்து ஒரு மேசையில் வைத்துவிட்டு நிமிர்ந்தவன் தீயை மிதித்தது போல திடுக்கிட்டான். சில அடிகள் தள்ளி சிரித்து பேசிக்கொண்டிருந்த காதரைப் பார்த்தே அவன் அப்படித் திடுக்கிட்டான். அந்த முகம் அவனுக்கு மிகவும் பரிச்சயமான, ஆனால் எப்போதுமே மறக்கமுடியாத அதிர்ச்சி தரடிக்கூடிய முகம். அந்த முகத்தை இங்கே சென்னையில் பார்த்ததை அவனால் நம்பமுடியவில்லை. சில அடிகள் பின்னால் சென்று செடிகளின் மறைவில் நின்றபடி மீண்டும் பார்த்தான். "ஆம் அவனே தான். சந்தேகமே இல்லை. அவன் அந்தப் பாதகன் எப்படி சென்னையில், அதுவும் பொறியியல் கல்லூரி மாணவர்களுடன்

இருக்க முடியும்? ஒருவேளை அவனைப் போல தோற்றமுடைய வேறு ஒருவனோ?"

ரசூல் குழம்பினான். அவனது குழப்பம் சில நிமிடங்களில் தீர்ந்தது. அவனுடன் வந்து பேசிய இன்னொருவனைப் பார்த்ததும் ரசூலின் சந்தேகம் முற்றும் தெளிவானது. அந்த இன்னொருவன் ஹசன். இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்த ரசூலின் குழப்பம் நீங்கியது. அவன் உறுதியாக நினைத்தான். "இவர்கள் இருவரும் அந்தப் படுபாவிகள்தான். எந்தச் சந்தேகமும் இல்லை." அவர்களின் நண்பர்கள் அவர்களை ஹசன், காதர் என்று பெயர்கள் சொல்லி அழைத்ததையும் அவன் கவனித்தான். அவை அவர்களின் உண்மையான பெயர்கள் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். அவன் சிந்தனை செய்தபடியே சமையலறைக்குச் சென்று ஆசுவாசப்படுத்திக்கொண்டு சில நிமிடங்கள் கழித்து மறுபடியும் வந்து நின்று அவர்களை, அவர்கள் அறியாதபடி கவனித்தான். அவர்களை அவன் பார்த்து ஐந்தாண்டுகளுக்கும் மேல் ஆகியிருந்தது. அவர்கள் சற்று மாறியிருந்தார்கள். முகம் கொஞ்சம் முதிர்ச்சியடைந்திருந் தாலும் பெரிதாக எந்த மாற்றமும் தெரியவில்லை. அதிலும் அந்த ஒருவனின் வித்தியாசமான நடை அவர்களை தெளிவாக அடையாளம் காட்டியது. அவர்கள் எந்த மொழியில் பேசுகிறார்கள் என்று கவனித்தான். ஆங்கிலத்திலேயே தம் நண்பர்களுடன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் தன்னைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வார்களோ என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. உடனே உள்ளே சென்று ஒரு கண்ணாடியை எடுத்து போட்டுக் கொண்டான். தொப்பியையும் முன்புறம் இழுத்து விட்டுக்கொண்டான். அடுத்த முறைகள் வரும்போது அவர்கள் பார்வையில் படாமல் மறைவாக நின்றுவிட்டு திரும்பினான். ஹோட்டல் மேனேஜரிடம் எதுவும் சொல்வதா வேண்டாமா என்று யோசித்தான். பிறகு, வந்திருக்கும் இளைஞர்கள் எல்லாம் பெரிய இடத்துப் பிள்ளைகள். தான் சொன்னது ஏதாவது தவறாகிப் போனால் தன் வேலை போய்விடும் என்று பயந்தான். எப்படியும் இன்னொரு தடவை இங்கு வருவார்கள். அப்போது இன்னும் சரியாக உறுதி செய்து கொண்டு அவரிடம் பேசலாம். அதுவரை எதுவும் பேச வேண்டாம் என்று முடிவு செய்தான்.

**ஐ**ந்து ஆண்டுகளுக்கு முன்பாக ரசூல் காஷ்மீருக்கு தான் வேலை செய்த ஒரு ஹோட்டல் சார்பாக, சுற்றுலாக் குழுவினருடன் சுற்றுலா போயிருந்தான். அதில் ஐந்து பேர் அமெரிக்கர்கள். சில

பிரிட்டிஷ்காரர்கள் ஜப்பானியர்களுடன் இந்தியர்களுமாக மொத்தம் இருபது பேர் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஸ்ரீநகரில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து விட்டு காலையில் புறப்பட்டு சோன்மார்க், என்ற இடத்துக்கு ஒரு வேனில் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த மலைச் சிகரம் பனிமூடாத நிலையில் இருக்கும்போது, சூரிய ஒளிபட்டால் தங்கம் போல் தகதகக்கும் என்பதால் அதற்கு அந்தப் பெயர் வைத்திருந்தார்கள். தங்க மலை என்று அதற்குப் பொருள். ஒரு நீண்ட சாலையில் பனிபடர்ந்த இமயமலைச் சிகரங்களின் அழகை ரசித்தபடியே, புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். இடையிடையே வேனை நிறுத்தி டீ குடித்தார்கள். அந்தப் பெரிய வேனில் டிரைவர் இந்தி, காஷ்மீரி பாடல்களை ஒலிக்கவிட்டபடி மிதமான வேகத்தில் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் கட்டிடங்கள் மேலும், சாலை சந்திப்புகளிலும் இந்திய ராணுவவீரர்கள் நின்றார்கள். சோன்மார்க்கில் பகல் பொழுதை உல்லாசமாக அனுபவித்துவிட்டு மாலையில் அவர்கள் ஸ்ரீநகரை நோக்கி திரும்பினார்கள். மாலை 7மணிக்குக் கூட லேசான சூரிய வெளிச்சம் இருந்தது. 71/2 மணிக்கு இருட்டத் தொடங்கியது. திடீரென்று ஒரு திருப்பத்தில் சில இந்திய ராணுவ வீரர்கள் ஆயுதங்களுடன், சாலையின் குறுக்கே நின்றார்கள். வேனை நிறுத்தும்படி அவர்கள் சைகை காட்டியதும் வேன் சாலையில் ஒரு ஓரமாக நின்றது. உடனே டிரைவரை இறங்கச் சொல்லிவிட்டு வேனில் ஒரு ஆள் ஏறி உட்கார்ந்தான். வேன் டிரைவர் அந்த வீரர்களுடன் பேசி ஏதோ கேட்டார். உடனே ஒரு வீரன் அவனை மண்டையில் அடித்துத் தரையில் தள்ளினான். வேனில் உட்கார்ந்தவன் வேனை பாதையை விட்டு விலகி காட்டுக்குள் செலுத்தினான். அப்போது தான் பயணிகள் அந்த இராணுவ வீரர்களை சரியாகக் கவனித்தார்கள். ஒரு சிலர் மட்டுமே இந்திய ராணுவ உடையில் இருந்தார்கள். மற்றவர்கள் தாடி வளர்த்து சாதாரண உடையில்தான் இருந்தார்கள். பயணிகளுக்கு திகில் ஏற்பட்டது. அவர்களுக்கு அப்போது தான் தாங்கள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருப்பது புரிந்தது. அவர்களின் வேனுக்குப் பின்னால் தீவிரவாதிகள் வேன்களிலும், பைக்குகளிலும் தொடர்ந்து வந்தார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் பெரும் ஆரவாரத்துடன் தங்கள் கையிலிருந்த துப்பாக்கிகளை வானத்தை நோக்கி சரமாரியாக சுட்டு உற்சாகக் கூச்சலிட்டார்கள். அங்கே மேலும் பலர் வந்து பெருங்கூட்டமாகச் சேர்ந்து கொண்டார்கள்.

சூரியன் மறையும் அரையிருட்டில் இந்தப் பயணிகள் கடத்தப்பட்டதால், அது இந்திய ராணுவத்தின் கவனத்துக்கு உடனே வரவில்லை.

பயணிகள் எல்லோரும் வேனிலிருந்து இறக்கப்பட்டு ஒரு பழைய கட்டிடத்தில் அடைத்து வைக்கப்பட்டார்கள். இறங்கிய மறுநிமிடமே அவர்களிடமிருந்த கேமிராக்கள், பேனாக்கள், மொபைல் போன்கள், பணம் எல்லாம் பறித்துக்கொள்ளப்பட்டன. எதிர்த்துக்கேள்வி கேட்டவர்கள் மூர்க்கமாக அடித்து நொறுக்கப் பட்டார்கள். இதனால் மற்றவர்கள் பயந்து நடுங்கி அமைதியாகி விட்டார்கள். அவர்களுக்கு ஒரு வேளை உணவு மட்டும் கொடுத்தார்கள். அவர்களின் பாஸ்போர்ட்டுகளை பறித்துக்கொண்டு அவர்களை அடையாளம் தெரிந்து வைத்துக்கொண்டு அதன்படி அவர்களை கூப்பிட்டுப் பேசினார்கள். சுமார் ஒரு மணிநேரம் கழித்து அவர்களுக்கு டீ கொடுத்தார்கள். அமைதியாக இருந்தவர்களை அவர்கள் துன்புறுத்தவில்லை. அவர்களில் முஸ்லீம்களை மட்டும் தனியே பிரித்து உட்காரவைத்தார்கள். அவர்களுக்கு தொழுகைக்கு வசதி செய்து கொடுத்தார்கள். ரசூலும் அந்தச் சிலருடன் சேர்ந்து அமைதியாக தொழுகையை முடித்துக்கொண்டான். அவர்களும் பயத்துடனே இருந்தார்கள். ரசூலும் பயத்துடன் இருந்து நடப்பதை கவனித்து வந்தான். தீவிரவாதிகளைப் பற்றி பல பயங்கரமான செய்திகளை அவன் கேள்விப்பட்டிருந்தான். அவை எல்லாம் அவன் நினைவில் வந்து அவனை பயமுறுத்தின. அல்லாவை வேண்டியபடி அமைதியாக இருந்தான். களைப்பாக இருந்தாலும் எளிதில் தூக்கம் வரவில்லை. பெண் பயணிகள் அழுதபடியே கடவுளை வேண்டியபடிட இருந்தார்கள்.

அன்று மாலை அவர்கள் இருந்த ஹாலின் கதவு திறக்கப்பட்டது. சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒரு முரட்டு மனிதன் வந்தார். அவருடன் சற்று இடைவெளி விட்டு வயதில் சற்று இளையவர்களாக தெரிந்த சிலரும் வந்தார்கள். அந்த முரட்டு மனிதன் கேட்ட கேள்விகளுக்கு, அவர்கள் பணிவாக பதில் அளித்ததால், அவர் அவர்களின் தலைவராக இருக்கலாம் என்று தெரிந்தது. அவர் வந்ததும் பயணிகள் எல்லோரும் அவர் முன்பாக நிறுத்தப்பட்டார்கள். அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். ஒருவன் பயணிகளை மொத்தமாகவும் தனித்தனியாகவும் படம் பிடித்தான். பின்னணியில் ஒரு உருது வார்த்தைகள் இருந்த பேனர் தெரியும்படி படம் பிடிக்கப்பட்டது. பிறகு ஒரு தீவிரவாதி அவர்களுடன் நின்றபடி தங்கள் இயக்கத்தின் கோரிக்கைகளை வாசித்து அவை நிறைவேற்றப்படா

விட்டால் பயணிகள் ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் கொல்லப் படுவார்கள் என்று பேசி ஒரு கேசட்டில் பதிவு செய்தார்கள். இந்த விபரங்களை பயணிகளிடமும் தெரிவித்தார்கள். உடனே அந்த ஹாலை அடைத்து பூட்டிவிட்டார்கள்.

மறுநிமிடம் முதல் பயணிகளுக்கு மரணபயம் துவங்கிவிட்டது. பல நாடுகளில் இருந்த சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பயங்கர தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதும், காஷ்மீரை தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்பதுமே அவர்களின் முக்கிய கோரிக்கைகளாக வைத்தார்கள். இவற்றை தங்களது அரசுகள் ஏற்றுக்கொள்ளாது என்பதை பயணிகள் நன்றாக அறிவார்கள். அதனால் தாங்கள் இறப்பது உறுதி என்று நினைத்தார்கள். தங்களின் முடிவு தவிர்க்கமுடியாத நிலையில், அதிக வேதனை இல்லாமல், சட்டென்று நடந்தால் நல்லது என்று நினைத்து கடவுளை வேண்டினார்கள். இரண்டு நாட்களிலேயே பயணிகள் சரியான உணவு இல்லாமலும் வெளியில் எங்கேயும் போகாமல் உள்ளேயே அடைத்து வைக்கப்பட்டதாலும் மன உளைச்சலால் மிகவும் சோர்வடைந்து விட்டார்கள். வயதானவர்கள்தான் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

அவர்களுக்கு உணவு கொண்டுவரும் போதும் டீ கொண்டு வரும் போதும் இரண்டு இளம் தீவிரவாதிகள் வந்தார்கள். அவர்களுக்கு வயது இருபதுக்குள் தான் இருக்கும். முகத்தில் இன்னும் சிறுவர்களாயிருந்த பருவத்தின் மிச்சம் இருந்தது. அவர்கள் முகத்தில் தாடி மீசை அப்போதுதான் உருவாக ஆரம்பித்திருந்தது. தீவிரவாதிகளின் முகத்தில் காணப்பட்ட கடுமை இன்னும் இவர்கள் முகத்தில் குடியேறவில்லை. அவர்கள் தோளில் ஏ.கே.47 போன்ற எந்திர துப்பாக்கியையும் கைகளில் ஒரு பிஸ்டலையும் இடுப்பில் கத்தியையும் வைத்திருப்பதைப் பார்த்த ரசூலுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது. அவனுக்கு அவர்கள் ஏதோ நாடகத்துக்காக தீவிரவாதிகள் போல வேசம் போட்டிருப்பது போலவே தோன்றியது. ரசூலின் இதழ்களில் ஒரு புன்சிரிப்பு தோன்றியது.

அவர்களில் ஒருவனிடம், "சகோதரனே! நீயும் இந்த தீவிரவாதிகளில் ஒருவனா?" என்று கேட்டான். அவன் உருதுவில் பேசியது அந்த தீவிரவாதிக்கு ஆச்சரியமாக இருந்தது. பதிலுக்கு அவன் சிரித்தான். பிறகு, "என்னை தீவிரவாதி என்று சொல்லாதே! நாங்கள் முஜாஹிதின்கள்" என்றான். பிறகு "நீ முஸ்லிமா?" என்று தயங்கியபடியே கேட்டான்.

ரசூல் "ஆம்" என்று தலையசைத்தான். என் பேர் முகமது ரசூல்.

அந்த இளைஞன் சற்று அமைதியாக இருந்தான். முஸ்லிமாக இருந்து கொண்டு ஏன் நீங்களெல்லாம் காஷ்மீர் என்ற முஸ்லிம் நாடு அமைவதை எதிர்க்கிறீர்கள்?"

அவன் தீவிரவாதிகள் காஷ்மீரை ஒரு சுதந்திரமான தனி முஸ்லிம் நாடாக மாற்றுவார்கள் என்ற நினைப்பில் இருந்தான். தீவிரவாத இயக்கங்கள் இப்படி ஆளுக்கு ஒரு விதமாக ஆசைகாட்டி, சிறுவர்களையும் தங்களுடன் சேர்த்திருந்தார்கள். தீவிரவாதிகளின் உண்மையான நோக்கங்களையும் திட்டங்களையும் புரிந்து கொள்ளும் வயதும் பக்குவமும் அவர்களுக்கு இல்லை.

ரசூல் அன்புடன் அவனைப் பார்த்தான். அவனுடைய தோழன் அவனிடம் "சீக்கிரம் வா! யாராவது நீ இவருடன் பேசுவதை பார்த்தால் தொலைந்தாய்!" என்று அவசரப்படுத்தினான்.

உடனே அவன் ரசூலிடம், "நாங்கள் உங்களுடன் இப்படி பேசக்கூடாது. உங்களுக்கு எதுவும் வேண்டுமா? சாப்பிட, போர்த்திக் கொள்ள எதுவும்?" என்று கேட்டான்.

ரசூல் "ஒன்றும் வேண்டாம்" என்றதும் அவர்கள் போய் விட்டார்கள். கதவுகள் அடைத்து பூட்டப்பட்டன. ரசூலுக்கு அந்த இரண்டு பேரையும் பார்க்க பரிதாபமாக இருந்தது. வாழ்வை அனுபவித்து வளர வேண்டிய வயதில் – இப்படி துப்பாக்கியுடன் தீவிரவாதிகளாக திரிகிறார்களே!

**இ**ரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாவது நாள் காலைதான் கதவு மறுபடியும் திறந்தது. தலைவனும் இன்னும் இரண்டு பேரும் வந்தார்கள். அந்த இளைஞர்கள் இரண்டு பேரும் கூடவே வந்தார்கள். தலைவன் மிகவும் கோபமாக இருந்தான். அதைப் பார்த்த பயணிகள் என்ன நடக்குமோ என்று பயந்து நடுங்கினார்கள்.

"உங்கள் அரசாங்கங்கள் எதுவும் பதில் கொடுக்கவில்லை. எங்களை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. உங்கள் உயிர்களையும் மதிக்கவில்லை. நாங்கள் இனிமேல் அவர்களுக்குப் புரியும் வகையில் பேசப்போகிறோம்!"

அவன் வீடியோ எடுப்பவனைப் பார்த்தான். அவன் ஒரு ஸ்டான்டை நிறுத்தி அதில் கேமிராவை பொருத்தினான். தலைவன் எல்லா பயணிகளையும் ஒரு முறை கூர்ந்து கவனித்தான். பிறகு, "முதலில் யுனைடட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா, த சோ கால்ட் லீடர் ஆப் த மாடர்ன் வோர்ல்ட் ஃபர்ஸ்ட்" என்று தெளிவான ஆங்கிலத்தில் உரத்த குரலில் சொன்னான். மற்ற தீவிரவாதிகள் அவன் ஏதோ ஜோக் சொன்னது போல மெல்லிதாக சிரித்து அவன் சொன்னதற்கு தலையசைத்தார்கள்.

உடனே ஒரு அமெரிக்கப் பயணியை இழுத்து வந்து, அவரது கைகளை பின்புறம் கட்டினார்கள். அவரை அவர்கள் இயக்க பேனரின் பின்னணியில் மண்டியிட்டு நிற்க வைத்தார்கள். வீடியோ கேமிரா இயங்க ஆரம்பித்தது. தலைவன் அந்த இளைஞர்களில் ஒருவனைப் பார்த்து ஏதோ சொன்னான். உடனே அந்த இளைஞன் தலைவனின் கையை முத்தமிட்டான். நேராக அமெரிக்கப் பயணியிடம் போய் பின்புறமாக நின்று தன் கையிலிருந்த பிஸ்டலால் இரண்டு முறை சுட்டான். தலையில் குண்டுகள் பாய்ந்ததால் அவர் உடனே இறந்து சரிந்து விழுந்தார். தரையில் இரத்தம் வழிந்து பரவியது. இளைஞன் தலைவனிடம் வந்து சலாம் செய்து பக்கத்தில் நின்றான். தலைவன் அவன் முதுகில் தட்டிக்கொடுத்தான். அப்போது அந்த இளைஞன் ரசூலை ஓரக்கண்ணால் பார்த்ததை ரசூல் கவனித்தான். அவனுக்கு இரத்தம் உறைவது போலிருந்தது. நெஞ்சில் கை வைத்து அழுத்திக் கொண்டான். அங்கு இருந்து அந்த பயங்கரத்தை பார்த்த பயணிகளில் சிலர் மயங்கி விழுந்தார்கள். அழுவதற்குக் கூட மற்றவர்கள் பயந்தார்கள்.

தலைவன் பார்த்ததும் இறந்த பயணியின் உடல் அப்புறப் படுத்தப்பட்டது. கேமிரா நிறுத்தப்பட்டது. தீவிரவாதிகள் எதுவும் பெரிதாக நடக்காதது போல சாதாரணமாக இருந்தார்கள். அவர்கள் முகபாவங்கள் ஏதோ அலுவலக வேலையை அக்கறையோடு செய்வது போலவே இருந்தன. தலைவன் "இதற்கு ஏதாவது பலன் இருக்குமா என்று பார்ப்போம்!" என்றபடி கிளம்பினான். இளைஞன் ரசூலை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு நடந்தான். அவன் மனதில் என்ன நினைத்தான் என்பது ரசூலுக்கு தெரியவில்லை.

மறுநாள் ஒரு பிரிட்டிஷ்காரரரை அதே போல கொன்று வீடியோ படம் பிடித்தார்கள். மறுநாள் தன்னுடைய முறையாக இருக்குமோ என்று ஒவ்வொருவரும் பயந்து நடுங்கினார்கள். ஒருவரும் அன்று இரவு உறங்கவில்லை. ஆனால் மறுநாள் விடிவதற்கு முன்பாக அரையிருட்டில் அந்தப் பகுதியில் ஒரே பரபரப்பு. எங்கும் துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. பணயக் கைதிகளுக்கு வெளியே என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை. தமக்குள் கவலையுடன் பேசிக்கொண்டார்கள். திடீரென அந்த ஹாலின் கதவு திறந்தது. சில தீவிரவாதிகள் வேகமாக வந்தார்கள். "வெளியே சண்டை நடக்கிறது. நாங்கள் உங்களை வேறு இடத்துக்கு கொண்டு செல்லப் போகிறோம். தப்பிக்க ஏதாவது முயற்சி செஞ்சிங்கன்னா சுட்டுக்கொன்னுடுவோம். உடனே புறப்படுங்கள்" என்றார்கள். அதில் அந்த இரண்டு

இளைஞர்களும் இல்லை. பயணிகளுடன் ரசூலும் தன் பையை எடுத்துக்கொண்டு போவதற்கு தயாரானான். அப்போது திடீரென்று பெரிய வெடிச்சத்தத்துடன் அந்த ஹாலின் பின்புறச் சுவர் இடிந்து சிதறியது. தீவிரவாதிகள் சரிந்து விழுந்து இறந்தார்கள். இந்திய ராணுவ வீரர்கள் இரண்டுபேர் இடிந்த சுவரில் எந்திரத் துப்பாக்கியுடன் நின்றார்கள்.

"ம்! நாங்கள் இந்தியன் ஆர்மி! உடனே கிளம்புங்கள்!" என்று அவர்களை அழைத்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தபடி வெளியே வந்தார்கள். கண்ணில் பட்ட தீவிரவாதிகளை துப்பாக்கியால் சுட்டுக் கொண்டுவந்து வெளியே தயாராக நின்ற ஹெலிகாப்டரில் ஏற்றி அனுப்பிவைத்தார்கள். அப்போதும் ரசூலின் கண்கள் அந்த இளைஞர்களைத் தேடின. ஆனால் அவர்கள் எங்கேயும் தென்படவில்லை.

**அ**ந்தப் பழைய நினைவுகள் ரசூலின் மனதில் அப்படியே பதிந்துபோய் இருந்தன. மறக்கவே முடியாது.

அன்றைய பர்த் டே விருந்தில் அவர்களை மீண்டும் பார்ப்போம் என்று ரசூல் கனவிலும் நினைக்கவில்லை. பல கோணங்களிலும் நின்று அவர்களை கவனித்துப்பார்த்தான். அது அவர்களேதான்; சந்தேகமே இல்லை. இருந்தாலும் அவசரப்பட்டு விடக்கூடாது. அவர்கள் ஒரு வேளை தீவிரவாதிகளிடமிருந்து விலகி திருந்தியிருக்கலாம். உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அவசரப்பட்டு அவர்களை எந்த சிக்கலிலும் மாட்டிவிட்டுவிடக்கூடாது.

அதே சமயம் ரசூலும் காதரின் கழுகுக் கண்களுக்குத் தப்பவில்லை. பார்ட்டி முடிந்ததும் பில் செட்டில் செய்ய சதீஷுடன் அவனும் ரிசப்ஷனுக்கு வந்து அமர்ந்திருந்தான். அப்போது யாரோ ஒருவர் ஹசனை மறைந்தபடி பார்ப்பதை அவன் அங்கிருந்த பெரிய கண்ணாடியில் பார்த்தான். உடனே அவன் எழுந்து போய் ரசூல் அறியாத வகையில் ஒரு இடத்தில் நின்று கவனித்தான். தன் மொபைலால் ரசூலை சில படங்கள் பிடித்துக்கொண்டான். சிறிது யோசனைக்குப் பின் ரசூலை அவன் யாரென்று தெரிந்துகொண்டான். அவனும் ரசூலை அன்று அந்த ஹோட்டலில் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

○

# 19

“என்ன என்ஜினீயர், இன்னும் எவ்வளவு நாள் வேலை நடக்கும்? எப்போது முடிப்பீங்க?” அமைச்சர் கேட்டுக்கொண்டே அந்த பங்களாவை சுற்றிப்பார்த்தார். அமைச்சருடன் அவரது அம்மாவும் வீட்டைப் பார்க்க வந்திருந்தார். இரண்டு பேரும் தூசி படிந்திருந்த படிகளில் மெதுவாக ஏறிச்சென்று பால்கனியில் நின்று பார்த்தார்கள். கடல் பரப்பு கருநீல நிறத்தில் வெயிலில் தகதகவென்று நுரைபொங்க மின்னியபடி அழகிய காட்சியாகத் தெரிந்தது. அந்தச் சிறிய சாலையின் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக பிரமாண்டமான அழகிய பங்களாக்கள் இருந்தன. அமைச்சரின் பங்களாவில் தொன்னூறு விழுக்காடு வேலை முடிவடைந்து இறுதிக்கட்டமாக வர்ணம் பூசுதல், கதவுகளுக்கு பாலிஷ் வேலைகள் தரைக்கு பாலிஷ் போடுதல், ஆகியவை மட்டும் மீதி இருந்தன. செக்யூரிட்டியாக வேலைபார்த்த ஒரு பெரியவர் வந்து அமைச்சருக்கு வணக்கம் தெரிவித்தார்.

“சார், வேலைகள் எல்லாம் இறுதிக் கட்டத்தில் தான் இருக்கின்றன. பினிஷிங் ஸ்டேஜ்ல கொஞ்சம் டைம் ரொம்ப இழுக்கத்தான் செய்யும். இன்னும் ரெண்டு மாசத்தில கம்ப்ளீட்டா முடிச்சுக் குடுத்துடுவேன் சார். நான் மத்த வேலையெல்லாம் நிறுத்தி வச்சுட்டு நம்ம வேலையை மட்டும்தான் இப்போ பாத்திட்டுருக்கேன். ஐயாவும் முதல்ல இதை முடிச்சுக்குடுன்னு கண்டிப்பா சொல்லிட்டார்.” நல்லதம்பியைத்தான் அவர் “ஐயா” என்று குறிப்பிட்டார்.

மாடியில் நின்றபோது கடல்காற்று இதமாக வீசியதை அவர்கள் ரசித்தார்கள். வீட்டைச் சுற்றிப் பார்த்தவரையில் அமைச்சருக்கு முழு திருப்தியாக இருந்தது என்பது அவர் முகத்தில் தெரிந்தது. மரம்லாம் தேக்கு தானே போட்டிருக்கீங்க?”

‘பர்ஸ்ட் குவாலிட்டி தேக்கு சார். இப்பவே பாருங்க எப்படி வழவழன்னு இருக்குது! இன்னும் பாலிஷ் போட்டாச்சுன்னா பிரமாதமா இருக்கும் சார். முன்னாலயே சொல்லி வைச்சு செங்கோட்டைல இருந்து நமக்குன்னு கொண்டு வந்தது. அது மாதிரி, ஓயர்லாம் ஃபினோலெக்ஸ் தான் போட்டிருக்கு. ப்ளம்பிங் மெட்டிரியல்

எல்லாமே ப்ராண்டட் ஒரிஜினல்ஸ் சார். டைல்ஸ் மார்பனைட் தான். ஒவ்வொன்னும் பார்த்துப் பார்த்து பண்றோம் சார்!'

"கிச்சன் வேலைகளை அம்மாவிடம் கொஞ்சம் கேட்டுக்கிட்டு செய்யுங்க!" அமைச்சர் இப்போது அம்மா என்று சொன்னது தன்னுடைய மனைவியை. உடனே என்ஜினீயர், "போன மாசமே அம்மா வந்து பாத்தாங்க சார். அவங்க சொன்னபடி சில சேஞ்ச் லாம் பண்ணிட்டோம். கதவு கைப்பிடிகள் கூட அம்மாவே செலக்ட் பண்ணியதுதான்."

அமைச்சரின் அம்மாவும் "ஆமாம் தம்பி. எல்லாம் நல்லாவே வந்திருக்கு" என்று சொன்னார்.

மேற்கொண்டு அமைச்சர் ஏதோ கேட்க வாயெடுத்தார். அப்போது அவர் மொபைல் ஒலித்தது. அதை எடுத்துக்கேட்டவர், "அண்ணே! ஒண்ணுமில்லை அண்ணே. அம்மா ஊரில இருந்து வந்திருக்காங்க. இங்க ஒரு கோவிலுக்கு வந்தோம்." என்றார். பிறகு சற்று இடைவெளிவிட்டு "சரிண்ணே! ஒரு அரை மணிநேரத்தில வந்துடுறேன். ஆபீசுக்கா? வீட்டுக்கா? சரி அண்ணே! வீட்டுக்கே வந்துடுறேன்."

பிறகு "அம்மா! ஸ்பீக்கர் பேசுறார். அவசரமா அவர் வீட்டுக்கு வரச் சொல்றாரு. நான் கிளம்புறேன். நீங்க கொஞ்சநேரம் இருந்து பாத்திட்டிருங்க. வேற எதுனா தேவையின்னா இவர்கிட்ட சொல்லிடுங்க. வீட்டிலிருந்து வண்டி அனுப்பச் சொல்லுறேன். அதில நீங்க வீட்டுக்குப் போகலாம்." என்றவர் உடனே புறப்பட்டார்.

அப்போது ஒரு கார் வந்து நிற்க அதிலிருந்து நல்லதம்பி இறங்கினார். அமைச்சர் வந்திருக்கும் விஷயம் தெரிந்துதான் அவர் வந்தது போல் இருந்தது.

"என்ன சார்! எல்லாம் நீங்கள் விரும்பியபடியே செஞ்சுட்டேன். ஏதாவது மாத்தணும்னா சொல்லுங்க. உடனே செஞ்சுடலாம்."

"எல்லாம் நல்லா இருக்கு நல்லதம்பி! குவாலிட்டியை மட்டும் நீங்க பாத்துக்குங்க. அது நமக்குத் தெரியாது. பப்ளிக்குக்கு செய்ற மாதிரி செஞ்சுடாதீங்க! கொஞ்சம் அவசரமா வரச் சொல்லி ஸ்பீக்கர் போன் பண்ணினார். நான் வர்றேன். அப்புறம் பேசலாம்!"

அமைச்சர் ஏறியதும் கார் கிளம்பியது.

"பங்களாவே ஓசியில கட்டிக் குடுக்குறோம். இதுல குவாலிட்டி கேக்குது இவருக்கு!" என்று தனக்கு மட்டும் கேட்கும்படி மெதுவாகச் சொன்னார் நல்லதம்பி.

"அம்மா! நல்லா இருக்கீங்களா? எப்ப வந்தீங்க?" என்று செயற்கையான பாசமுடன் அழைத்தபடி உள்ளே சென்றார்.

மனதில் என்ன நினைத்தாலும், எதிரில் இருக்கும் ஆளுக்கு ஏற்றபடி சிரித்து, புகழ்ந்து பேசுவது என்பது நல்லதம்பிக்கு கைவந்த கலையாகியிருந்தது. அது அவரது இயல்பாகவே மாறிவிட்டிருந்தது.

அமைச்சரின் அம்மா, வீட்டை நன்றாக சுற்றிப் பார்த்துவிட்டு சிறிதுநேரம் வீட்டிலிருந்து கார் வரும்வரை ஓய்வெடுத்தார். எவ்வளவோ வசதிகள் இருந்தபோதும் அவர் முன்புபோல, ஒரு எளிய பள்ளி ஆசிரியையாக எளிமையாகவே இருந்தார். ஒரு சாதாரண நீல நிற காட்டன் புடவையும் ஒரே ஒரு தங்கச் சங்கிலி, கைகளில் ஒவ்வொரு வளையல்களுமாக சாதாரணமாக. பகட்டில்லாமல் சாந்தமான முகத்துடன் இருந்தார். கடற்கரைக்கு எதிரில் பங்களா அமைந்தது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், அவர் முகம் ஏதோ ஒரு ஆழ்ந்த கவலையைக் காட்டியபடி இருந்தது. இடையிடையே எதையோ நினைத்து பெருமூச்சுவிட்டார்.

வீட்டிலிருந்து கார் வந்ததும் அம்மா என்ஜினீயரிடமும் நல்லதம்பியிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டார். சிறிது தூரம் போனதும் ஒரு இடத்தில் போக்குவரத்துத் தடையால் கார் நின்றது. டிரைவரிடம் கேட்க, "அவர் ஏதோ பிரச்னைக்காக மக்கள் கூட்டமா நின்று போராட்டம் நடத்துகிறாங்க. இப்போ சரியாயிடும் அம்மா" என்றார்.

அப்போது சாலையோர சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் அவரது கண்களில் பட்டன. சிலர் கைகளில் அட்டைகளிலும் அதை போஸ்டர்களாக ஒட்டி ஏந்தியிருந்தார்கள்.

"தமிழக அரசே! ஊழல் மந்திரியை வெளியேற்று!

பாழ்பட்ட சாலைகளை சீராக்கு. இடிந்து விழுந்த பாலம் கட்டிய ஒப்பந்தகாரரைக் கைதுசெய்! விசாரணைக் கமிஷன் தேவை!"

வெளியில் வெயில் அதிகமாக இருந்தாலும் அதை பொருட் படுத்தாமல் மக்கள் கூட்டமாக இருந்தனர். பல கட்சிக் கொடிகளும் கூட்டத்தில் தென்பட்டன. ஆண்களும் பெண்களும் அதிகமாகக் கூடி பலத்த குரலில் முழக்கமிட்டுக்கொண்டிருந்தார்கள். போலீஸ் அவர்களைக் கலைந்து போகச் சொல்லி கடுமையான குரலில் எச்சரித்துக் கொண்டிருந்தார்கள். போலீசும் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். அமைச்சரின் கார் என்பது அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை; தெரிந்தால் விபரீதமாகிவிடும் என்பது டிரைவருக்கும்

தெரியும். சீக்கிரம் கிளம்பிவிடலாம் என்று பொறுமையாக இருந்தார். அதே சமயம் அம்மா ஒரு ஆர்வத்தில் காரின் சன்னல் கண்ணாடியை இறக்கிவிட்டு, மக்களின் முழக்கம் என்ன என்பதை கவனித்தார். மக்கள் பேசிக் கொள்வதையும் கேட்டார். நிலவரம் அதிகம் பதற்றமாக தெரிந்தது. அம்மாவுக்கும் பதற்றம் அதிகமானது.

"மந்திரிலாம் மக்களுக்கு சேவையா செய்யவராங்க. அவனவன் கான்ராக்டர்களுடன் டீல் பேசிட்டு, கமிஷன் வாங்கிட்டு 'நீ என்னத்தை செஞ்சாலும் சரி'ன்னு இருந்துடுறாங்க. அதான் கான்ட்ராக்டர்களும் தரமில்லாமல் பாலம் கட்டி இப்படி இடிஞ்சு, பத்துப் பேரு சாகுறமாதிரி ஆயிடுச்சு. எல்லாம் காசுக்குத்தான்" என்று ஒருவர் சொன்னார்.

அதற்கு இன்னொருவர் பலமாக சிரித்தார். "யோவ்! நீ சொல்றது எல்லாம் பழைய காலம். இப்ப கான்ட்ராக்டர்லாம் மந்திரிகளுக்கு கமிஷன் குடுக்குறது கிடையாது. அதுக்குப் பதிலா அவங்களே மந்திரி ஆயிட்டாங்கய்யா. பாலங் கட்டுறவன், ரோடு போடுறவன்லாம் மந்திரிகளோட பினாமிகள் தான்யா! மொத்தக் காசே கெடைக்கும் போது கமிஷன் எவனாவது வாங்குவானா?"

"இன்னிக்கு பாலம் இடிஞ்சதால சேதம் ஆச்சு. ரெண்டு நாள் முன்னால ரோட்டுல கல் தடுக்கி ரோட்டுப் பள்ளத்தில் விழுந்து ஒருவர் அந்த இடத்திலேயே இறந்துபோனார், தெரியுமா?"

பைக்ல போறவனெல்லாம் பாவப்பட்டவங்களான மாதிரி இருக்குய்யா ரோட்டோட நிலைமைலாம். எவனுக்கும் மனச்சாட்சி இல்லைய்யா! இவனுக இப்படி கொள்ளையடிச்சு சேத்துவக்கிறானுகளே இவனுங்க வம்சம் விளங்குமாய்யா!"

அவர் கடைசியாகச் சொன்ன இந்த வார்த்தைகள் அம்மாவுக்கு சுளீர் என தைத்தன. நெஞ்சை அடைப்பது போல இருந்தது. அதைச் சொன்ன பெரியவர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவராகத் தெரியவில்லை. மனவேதனை தாங்காமல் வயிறெரிந்து சொன்னார் என்பது அம்மாவுக்கு நன்றாக விளங்கியது.

அம்மாவுக்கு அதற்கு மேல் கேட்க முடியவில்லை. கண்ணாடியை இறக்கிவிட்டார். சிறிது நேரத்தில் போலீஸ் கூட்டத்தை தடியடி நடத்தி ஒரு ரத்தக் களரி நடத்தி விரட்டி ஓளரவு போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். காரில்போகும் போதே அம்மாவுக்குத் தலைசுற்றுவது போலிருந்தது. அந்தக் கூட்டத்திலிருந்த மக்கள் அவ்வளவு பேரும் சாபமிட்டது தன் ஒரே மகனைத் தான்

என்பதை உணர்ந்த பெற்ற மனது பெரிதும் வேதனைப்பட்டது. விரதங்கள் இருந்து, கோவில் கோவிலாகப் போய் சாமிகளை வேண்டிப் பெற்ற ஒரே மகன், இப்படி ஏழை எளிய மக்களின் சாபத்தைப் பெறுவதை அவரால் தாங்கமுடியவில்லை. அவர் தன் மகனைப் பற்றி ஒரு முறை நினைத்துப் பார்த்தார். அவருக்கு கண்களில் நீர் தளும்பியது.

அவரது கணவர் ஒரு காலத்தில் இதே கட்சியின் நகரச் செயலாளராக மிகுந்த செல்வாக்குடன் இருந்தார். அந்தக் காலத்திலேயே பட்டதாரியாக அரசியலில் இருந்தார். தன் சொந்த, பரம்பரைச் சொத்துக்களை விற்று கட்சியை வளர்த்தவர். தொகுதியில் கட்சி சார்பாக யார் நிறுத்தப்பட்டாலும் முகம் சுளிக்காது உழைத்து அவரை வெற்றிபெறச் செய்தவர். அமைச்சராகவோ சட்டமன்ற உறுப்பினராகவோ பதவியில் இல்லாமலேயே தம் சொந்த செல்வாக்கால் தம் ஊரில் பள்ளி, பாலம், சாலைகள் என பல வசதிகளைக் கொண்டுவந்தவர். தினந்தோறும் உதவி கேட்டு வருபவர்களாலும் உதவி பெற்று நன்றி சொல்ல வருபவர்களாலும் அவர்கள் வீட்டு முன்புறம் உள்ள தென்னங்கீற்றுப் பந்தல் நிறைந்திருக்கும். தம் மனைவி பள்ளி ஆசிரியையாக வேலைபார்த்ததால் வீட்டின் அன்றாட செலவுகளைப் பற்றி அவருக்கு கவலை இல்லை. தம் வருமானத்தைப் பொதுச்சேவைக்கும், கட்சிக்குமே செலவிட்டார். அவர் இறந்தபோது பெருந்திரளாக மக்கள் வந்து கண்ணீருடன் அஞ்சலி செலுத்தியது அம்மாவின் நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது. மக்கள் அந்தக் குடும்பத்தின் மேல் அதிக மரியாதையும் அன்பும் காட்டினார்கள்.

தன் ஒரே மகனை கட்சியில் சேர்த்தாலும் அவனை அவர் முன்னிலைப்படுத்தியதில்லை. அவனை படிப்பில் கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தி படிக்கவைத்தார். மகனும் நன்றாகப் படித்து பட்டம் பெற்றார். மகனை விவசாயத்திலும் பழக்கிவிட்டார். தன் உடல் நலத்தை மட்டும் அவர் சரியாக கவனிக்காததால், திடீரென்று எதிர்பாராத சமயத்தில் அவர் இறந்துவிட்டார்.

அவர் இறந்தபிறகு, கட்சித் தொண்டர்களின் வற்புறுத்தலால் அவர்களின் ஒரே மகன் தீவிரமாக கட்சிவேலைகளில் ஈடுபடத் தொடங்கினார். கட்சி வேலைகள் என்பது அவர்களைப் பொறுத்தவரையில் கட்சிக்காரர்களுக்கு உதவிகள் செய்வது, கட்சிக் கூட்டங்கள், மாநாடுகளுக்கு, அவை சிறப்பாக நடக்க உழைத்து ஏற்பாடுகள் செய்வது, அந்த ஊருக்கு வரும் கட்சித் தலைவர்களுக்கு தங்கும் வசதிகள் செய்து கொடுப்பது ஆகியவையாகும். ஒரு தேர்தலில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெயர் கெட்டுவிட்டதால்,

இவரை தேர்தலில் நிறுத்தினால் தான் கட்சி ஜெயிக்கமுடியும் என்ற நிலையில் இவரை நிறுத்தினார்கள். அவரும் தேர்தலில் வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார். முதல் முறை அவர் வெறும் உறுப்பினராக இருந்தவரைக்கும் எல்லாம் நன்றாக இருந்தது. இரண்டாம் முறை வெற்றிபெற்றதும் அவரை அமைச்சர் ஆக்கினார்கள். அதன் பிறகு அவரது இயல்பும் நடவடிக்கைகளும் சுத்தமாக மாறிப்போயின. சாதாரண தொண்டர்கள் மற்றும் எளிய மக்களின் தோழன் என்ற பெயர் மாறி பெரும் பணக்காரர்கள், தொழில் அதிபர்களின் சகவாசம் அதிகமானது. அந்தக் காலகட்டத்திலும் கட்சித் தலைமையும் மாறிவிட்டது. புதிதாக வந்த மேலிடத்துக்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதாலும் அரசியல் போட்டியில் தன் இடத்தை தக்கவைத்துக் கொள்ளும் நிலையிலும் அவர் தன்னையறியாமலேயே தடம் மாறலானார். தன் சொத்துக்களை விற்று கட்சிக்கு உழைத்த அப்பாவின் மகன் தமிழ்நாடு முழுவதிலும் சொத்துக்களை வாங்கிப்போட்டார். கூடவே மக்களின் சாபங்களையும் வாங்கினார்.

அம்மா அன்று இரவு உணவின்போது மகனிடம் பேசினார். "வீடு அருமையாக இருக்குது தம்பி. அதில குடியிருந்தா ரொம்ப வசதியா இருக்கும். ஆனால், நாம் நம்ம ஊரில் முன்பு ஒரு சாதாரண ஓட்டு வீட்டில இருந்தபோது கிடைச்ச நிம்மதி இப்போ எனக்கு இல்லைப்பா. அது அந்தப் புது பங்களாவிலும் கிடைக்கப் போவதில்லை."

அமைச்சர் திடுக்கிட்டார். "என்னம்மா ஏன் இப்படி சொல்றீங்க?"

அம்மா மகனை பரிவுடன் பார்த்துப் பேசினார். "தம்பி! உங்க அப்பாவும் அரசியலில் இருந்தார். இதே கட்சியில் இருந்து மக்களுக்காக உழைச்சார். அவரை எதிரிக்கட்சியில் இருந்தவர்களும் வாழ்த்தினார்கள். எந்தப் பதவியும் இல்லாமலேயே ஊருக்கு நெறய நல்ல காரியங்கள் செஞ்சார். ஆனால் இப்ப நீ அமைச்சராவே இருக்கே! ஆனால் மக்கள் உன்னை வாழ்த்தலையே! உன்னைக் கண்டிச்சுத்தான் போஸ்டர் ஒட்டியிருக்காங்க. சாதாரண மக்கள் திட்டி சாபம் விட்டதை நான் காதால கேட்டேன். என்னால அதை தாங்க முடியலை தம்பி. இது தப்புப்பா. மக்கள் சபிக்கிற ஒரு வாழ்க்கையும் செல்வமும் நமக்கு தேவையில்லை தம்பி! இருக்கிறது நமக்கு போதும். நீ மந்திரியா இருக்கவேணாம்ப்பா. நான் சொல்றதைக் கேளு!"

அமைச்சர் அமைதியாக இருந்தார். அவர் கண்கள் கலங்கி இருந்தன. அம்மாவை நிமிர்ந்து பார்த்தார். "அம்மா! நீங்க சொல்றது

சரிதான். ஆனால் என் நிலைமை புலிவால் பிடிச்சவன் நிலைதான். இடையில் நானாக இதை விட முடியாது. நான் எப்போ, எதில் சறுக்குவேன்னு என் கூட இருக்கிறவங்களே எதிர்பார்த்துட்டு இருக்காங்க. மந்திரி பதவி போச்சுன்னா, கட்சியிலயும் ஊர்லயும் மரியாதை போயிடும். நானா விலகுனா தலைமை என் மேல் சந்தேகப்பட்டு, இருக்கிறதையும் புடுங்கிக்கிடுவாங்க, மேற்கொண்டும் நிம்மதியா இருக்கவிடாம, அசிங்கப்படுத்துவாங்க. இது ஒரு சுழல். நாம தெரியாம சிக்கிக்கிட்டோம். கடைசிவரை அவங்களோடயே போய் அவங்களை பாத்து விடுதலை கொடுக்கும் வரை பொறுமையா இருக்கணும். அப்பா காலத்தில இருந்த மாதிரி இப்போ கட்சி இல்லை. எல்லா சாபமும் சங்கடமும் சகஜம்னு இருக்கணும். வேறு வழியில்லை!”

மகனைப் பார்த்து கோபப்படுவதா பரிதாபப்படுவதா என்று அந்த தாய்க்குத் தெரியவில்லை.

# 20

**ச**தீஷீக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. அப்பா தான் கேட்டதும் மறுப்பு எதுவும் சொல்லாமல் ஒரு கார், அதுவும் பெரிய காரே வாங்கிக்கொடுத்து விட்டார் என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த கறுப்புநிற டஸ்டர் காரை ஓட்டுவது மிகவும் பெருமை தந்தது. அருகில் ப்ரியாவை வைத்துக்கொண்டு அவன் காரை ஓட்ட ஸ்டீரியோவில் ப்ரையன் ஆடம்ஸ் பாட்டை அலறவிட்டுக் கொண்டு, ஈசிஆர் சாலையில் வண்டி பறந்தது. அதன் 1800 சி.சி. இன்ஜின் தொட்டதும் தூள் கிளப்பிக்கொண்டு பறந்தது. ப்ரியாவும் சிஸ்டத்தில் ஒலித்துக்கொண்டிருந்த பாடலுடன் சேர்ந்து தன் மெல்லிய குரலில் உரக்கப்பாடினாள். நேரம் காலை பத்தரை மணி. வழக்கமாக அந்த நேரத்தில் ஈசிஆர் சாலையில் போக்குவரத்து குறைவாகவே இருக்கும். ஆனால் அன்று சனிக்கிழமை என்பதால் ஐ.டி கம்பெனிகளுக்கு விடுமுறை தினம். எனவே டூ வீலர்களும் கார்களும் அதிகம் தெரிந்தன. கோடி கோடியாக இளைஞர்களும் இளம் பெண்களும் பைக்குகளில் பறந்த வண்ணம் இருந்தார்கள். இளைஞர்கள் ஹெல்மெட்டாலும் இளம்பெண்கள் துப்பட்டாவாலும் தம் முகங்களை மறைத்தபடி லேட்டஸ்ட் மாடல் பைக்குகளில் பறந்தார்கள். அன்று அவர்கள் குழுவின் கூட்டம் எதுவும் இல்லை. அவர்கள் மறுநாள் தான் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எனவே சனிக்கிழமை சதீஷ் ப்ரியாவை மட்டும் உடன் வைத்துக்கொண்டு தன் புதிய காரில் ஒரு Long Drive போய் வரலாம் என்று விரும்பினான். நண்பர்கள் வட்டத்தில் புது டங்டர் காரால் அவனது மதிப்பு உயர்ந்திருந்தது. சில பெண்கள் அவனுக்கு புதிதாக அறிமுகம் ஆனார்கள். இதனாலெல்லாம் சதீஷ் தன்னை புதிய ஒரு ஆளாக உணர்ந்தான். வானத்தில் பறப்பது போன்ற நினைப்புடன் காரை வேகமாக ஓட்டினான். ப்ரியாவும் தன் நண்பன் பெரிய புதிய கார் வாங்கியதில் அதிகம் மகிழ்ச்சியாக இருந்தாள்.

அப்போது ஒரு ஹூண்டாய் அக்செண்ட் கார் அவர்களை முந்திக் கொண்டு ‘விஷ்’ என்று போனது. உடனே ப்ரியா “ப்ஷ்”

என்று சலித்தபடி கையை விமானம் போவது போல் காட்டி, அவனைப் பார்த்தாள். அவள் அவனை உசுப்பேற்றுவதற்காக அதுபோல் செய்தாள். அடுத்த வினாடி அவன் கால் ஆக்சிலேட்டரை அழுத்த கார் திடீரென்று சீறி இன்னும் வேகத்தைக் கூட்டியது. அக்சென்ட் ம் சளைக்கவில்லை. அதிலும் ஒரு இளைஞர் பட்டாளம். சனி, ஞாயிறு என்றாலே ஈ.சி.ஆர் சாலை இளைஞர்களின் கட்டுப்பாட்டில் வந்துவிடும். இரண்டு கார்களும் மாறி மாறி முந்திச் செல்ல சில நிமிடங்கள் அப்படியே போயின. ஒரு திருப்பத்தில் அகசென்ட் ஐ சதீஷ் முந்திக்கொண்டு போகும்போது, ஓரமாக வந்த ஒரு பழைய சைக்கிளை கவனிக்கவில்லை. டஸ்டரில் இடது ஓரம் சைக்கிளை லேசாக தட்டிவிட்டது. அடுத்த வினாடி சைக்கிளுடன் அதிலிருந்த ஒரு முதியவர் பத்தடி தள்ளி, சாலை போடுவதற்காக குவிக்கப்பட்டிருந்த கற்குவியலில் போய் விழுந்து கிடந்தார். கற்கள் கிழித்து அவர் உடலில் பல இடங்களில் இரத்தம் வழிந்தது. வலிதாங்காமல் கத்தினார். சதீஷின் கார், அவன் ப்ரேக் பிடித்தாலும் ஒரு பத்து அடி தள்ளியே நின்றது. நல்லவேளையாக பெரியவர் தன் சைக்கிளுடன் பக்கவாட்டில் தூக்கி வீசப்பட்டதால், உயிர் பிழைத்தார். சாலையில் அந்த இடத்தில் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லை. சதீஷ் கீழே இறங்கிப் பார்த்தான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. முதியவர் பயத்தில் உறைந்து அரை மயக்க நிலையில் இருந்தார்.

உடனே அவன் தன் மொபைலில், தன் அப்பாவின் கட்சியில் இருந்து நியமிக்கப்பட்ட உதவியாளரை அழைத்து விபரத்தை சொன்னான். பதற்றத்தில் அவனால் திணறியபடியே பேசமுடிந்தது.

அவர், "தம்பி! அந்த ஆள் எப்படி இருக்கான்? உயிர் இருக்கா?"

"அண்ணே! பாத்துட்டு சொல்றேன்" என்படியே அவரது அருகில் போய் பார்த்தான்.

"உயிருக்கு ஆபத்தில்லை. ஆனால் அடி பலமா இருக்கும் போல இருக்கு! இப்ப நான் என்ன செய்ய?"

"வேற ஆட்கள் யாரும் இருக்காங்களா தம்பி?"

"இல்லை அண்ணே! யாருமே இல்லை!"

"நீ அங்க நிற்கக்கூடாது தம்பி. அவர் கையில ஒரு ஆயிரம் ரூபாயை குடுத்துட்டு உடனே கிளம்பு. யாரும் ஆளுக வருவதற்குள்ளா நீ அங்கிருந்து கிளம்பிடு. நான் இன்ஸ்பெக்டர்

கிட்டே பேசிட்டு உன்னை கூப்பிடுறேன். நீ நேரா 'ஸ்டார்ஷிப்' ஹோட்டலுக்குப் போய் வண்டியை அங்கேயே விட்டுட்டு எம்பேரைச் சொல்லி அவங்களோட டாக்சியில் வீட்டுக்குப் போயிடு. சீக்கிரம் கிளம்பு. அங்கே நிக்க வேண்டாம்."

"சரி அண்ணே! அப்பாகிட்ட எதுவும் சொல்லிடாதீங்க அண்ணே!" என்ற சதீஷ் தன் பர்சிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாயை எடுத்து அந்த முதியவரின் சட்டைப் பாக்கெட்டில் வைத்தான். தன் காரிலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து அவருக்கு கொஞ்சம் குடிக்க வைத்தான். அந்த பாட்டிலை அவரிடமே கொடுத்துவிட்டு உடனே காரில் கிளம்பிச் சென்றான். அவன் கிளம்பும் போது சற்று தூரத்தில் சிலர் ஏதோ சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவருவதை பார்த்தாலும், அவன் நிற்காமல் காரை கிளப்பிசென்றான்.

**அ**தற்குள் ஸ்டார்ஷிப் ஹோட்டல் மேனேஜருக்கு போலீஸ் அதிகாரி சிவசூர்யனிடம் இருந்து தகவல் வந்திருந்தது. அவர் சதீஷை வரவேற்று அவன் காரை மறைவாக நிறுத்திவிட்டு, உடனே அவனைத் தம் ஹோட்டல் காரில் ஏற்றி அமைச்சர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். சிவசூரியன் பெரியவர் அடிபட்டு விழுந்த இடத்துக்கு ஒரு போலீசை அனுப்பி, அவருக்கு சிகிச்சைக்கு உடனே ஏற்பாடு செய்தார். அதற்கு ஏற்படும் செலவை நல்லதம்பி கொடுத்துவிட்டார். பெரியவரின் மகளிடம் உடனே ஒரு தொகையை கொடுத்து அவனை அமைதியாக்கிவிட்டனர். பெரியவரை நகரில் ஒரு பெரிய மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள். ஒரு வரியாக அந்தப் பிரச்னையை சமாளித்துவிட்டார்கள். பெரியவர் வீட்டிலும் கையில் கணிசமாக பணம் வந்ததால் அமைதியாக இருந்தார்கள்.

சிவசூர்யனும், தன்மேல் அமைச்சருக்கு கோபம் ஏற்பட்டிருந்த வேளையில், அவருக்கு இந்த உதவியைச் செய்து கொடுத்து நல்ல பெயர் வாங்க தனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாகவே நினைத்து, அதை மிகவும் அக்கறையாக செய்து முடித்தார். நல்லதம்பியும் அமைச்சருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள இந்த விபத்தை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டார். அமைச்சரின் மனைவியும் இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தார். அமைச்சர் செய்தியை அறிந்து மிகவும் பதறிப்போனார். தன் அம்மா பயந்தது போலவே நடந்துவிட்டதே என்று கவலைப்பட்டார். இருந்தாலும் தன் ஒரே மகனுக்கு எதுவும் அடிபடவில்லை என்பதை நினைத்து ஆறுதல் அடைந்தார்.

அந்தக் கார் மிகவும் சக்தி வாய்ந்த என்ஜின் பொருத்தப்பட்டது என்பதையும் அதனைத் தான் இன்னும் முழுதாக கட்டுப்படுத்தி இயக்க முடியவில்லை என்பதையும் சதீஷ் உணரவில்லை. ஏதோ அந்தப் பெரியவர், தவறாக குறுக்கே வந்துவிட்டதாகவே அவன் நினைத்தான். அவர், தான் ப்ரியாவுடன் ஒரு லாங் ட்ரைவ் போய் அனுபவிக்கும் அருமையான வாய்ப்பை அநியாயமாகக் கெடுத்துவிட்டார் என்றுதான் பெரியவர் மீது அவன் கோபப்பட்டான். இதில் தன்னுடைய தவறு இருப்பதை அவன் உணர விரும்பவில்லை.

# 21

ராஜ்குமார், Boss தனக்குக் கொடுத்திருந்த புதிய வேலையைப் பற்றி பல முறை யோசித்துப் பார்த்தான். அது ஓரளவு ஆபத்தான வேலை என்றே தோன்றியது. இந்த வேலை, தான் ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் தனக்கு சவாலானதாகவும் அதே சமயம் சமுதாயத்துக்கு பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதாலும் தான் அவன் உடனே Boss-இடம் சரி சொன்னான். அதே சமயம் தான் சரியான தயாரிப்புகளைச் செய்து கொண்டே களத்தில் இறங்க வேண்டும் என்றும் நினைத்தான். முதலில் ஆசிரியர் கொடுத்த தூத்துக்குடி காரரின் அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தான். அவருடைய செல்போன் நம்பரைத் தன் மொபைலில் சேமித்து வைத்தான். அவன் அப்போது ஒரு ஹோட்டலில் காபி ஆர்டர் செய்துவிட்டு அதற்காக காத்திருந்தான். சூடான காபியும் வந்தது. அவன் அதை இரண்டு முறை ஆற்றிக் கலந்து குடித்தபடியே யோசித்தான். சில நிமிடங்களில் ஒரு முடிவுக்கு வந்தான்.

தன் மொபைலில் அந்த தூத்துக்குடி எண்ணை அழுத்தினான். மறுமுனையில் ஒருவர் அதை எடுத்து "ஹலோ! யார் பேசுறீங்க?" என்று கேட்டார்.

"வணக்கம். நான் ராஜ்குமார். புது உலகம் ஆபிசில் இருந்து பேசுறேன். உங்க கடிதம் கிடைத்தது. நீங்க டேவிட் ஆரோக்யராஜ் தானே!"

"ஆமாம் சார்! டேவிட் தான் பேசுறேன். சொல்லுங்க சார். எப்போ வாரீங்க?"

ராஜ்குமார் கொஞ்சம் யோசித்தபடி, "போனில் எதுவும் பேச வேண்டாம். நான் நாளைக்கு இரவு தூத்துக்குடி கிளம்புறேன். மறுநாள் காலையில் அங்கே உங்களை எங்கே பார்க்குறது?"

"நீங்க பஸ் ஸ்டாண்டில் இறங்க வேண்டாம். அதற்கு முந்திய ஸ்டாப்ல இறங்கிடுங்க. நேரா பார்ட்டி ஆபீசுக்கு வந்திடுங்க. லாட்ஜுக்கெல்லாம் போகவேண்டாம். இறங்கினவுடன் எதிரில் இருக்கும்

ஜீவா டீ ஸ்டாலுக்கு முதலில் வாங்க, அங்கே நான் இருப்பேன். மத்த விஷயம் எல்லாம் நேர்ல பேசிக்கலாம் சார்."

அதன்படி மறுநாள் இரவு ஒரு தனியார் பஸ் மூலம் புறப்பட்டு காலையில் தூத்துக்குடியில் இறங்கினான். டேவிட் சொன்னபடி அவன் பேருந்து நிலையத்துக்கு முந்திய ஸ்டாப்பில் இறங்கினான். அப்போது மணி காலை 6.

"ஜீவா டீ ஸ்டால். அந்தக் காலை வேளையில் மிகவும் பரபரப்பாக இருந்தது. ஜீவா டீ ஸ்டால் என்ற சிகப்பு நிறபெயர்ப்பலகை பளிச் சென்று தெரிந்தது. அவனுடைய டிராவல் பேக்கைப் பார்த்ததுமே ஓரமாக நின்று சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத் தக்க கறுத்த உடம்புடைய ஒருவன் சிகரெட்டைக் கீழே போட்டுக் காலில் மிதித்து தேய்த்து அணைத்தான். மடித்துக் கட்டியிருந்த லுங்கியை கீழே இறக்கி விட்டபடியே அவனை நோக்கி வந்து "சார்! ராஜ்குமார் தானே!" என்றான்.

"ஓ டேவிட். வாங்க! பஸ் கொஞ்சம் முன்னாலேயே வந்துடுச்சு!"

டேவிட் டீ மாஸ்டரிடம், "ஸ்ட்ராங்கா ரெண்டு டீ போடுங்கண்ணே!" என்றான். ராஜ்குமார் 'ஒரு கோல்ட் பில்டர்!' என்று சொல்லி சிகரெட் வாங்கி பற்றவைத்துக் கொண்டான்.

இருவரும் டீ யை குடித்துவிட்டு கட்சி ஆபீஸ் நோக்கி நடந்தார்கள். அந்தக் காலை வேளையின் குளிருக்கு சூடான டீ மிகவும் சுகமாக இருந்தது.

கட்சி ஆபீசில் இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். "இவர் யார்?" என்பது போல் டேவிடை பார்த்தார்கள். "சொந்தக்காரர் ஒருவர் சொல்லி இவர் வந்திருக்கார். ஸ்பிக் ல ஒரு வேலை கேட்டு வந்திருக்கார். நாளைக்கு இன்டர்வியூக்கு வரச் சொல்லிருக்காங்களாம். கொஞ்சம் முன்னாலயே வந்துட்டார். யாரையோ பாக்கணுமாம்." என்று பொருத்தமாக ஒரு காரணம் சொல்லி சமாளித்தான் டேவிட்.

கட்சி ஆபீசில் ஒரு மேசை, சில நாற்காலிகள் ஒரு பெஞ்ச் இருந்தன. போஸ்டர் ஒட்டப்பட்ட சில தட்டிகள், சுவர்ல சாத்தி வைக்கப்பட்டிருந்தன. பசை வாளிகள் சில இருந்தன. ஒருவர் உட்கார்ந்து லெனின் படம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தார். அந்த சிறு இடத்தில் போஸ்டர்களும், நோட்டீசுகளும் பல இடங்களில் கிடந்தன.

அந்த இளைஞர்கள் போன பிறகு ராஜ்குமார் குளித்தான். பளிச்சென்று வித்தியாசமாக தெரியக்கூடாது என்பதற்காக ஷேவ்

செய்து கொள்ளவில்லை. ஒரு செட் பேன்ட்ஸ் சட்டை ஒரு லுங்கியும் ஒரு ஜோடி செப்பல்களும் அவன் பையில் இருந்தன. குளித்துவிட்டு ஒரு லுங்கியைக் கட்டிக்கொண்டான். டிபனை டேவிட் ஆபீசுக்கே வாங்கிக் கொண்டு வந்துவிட்டான். சாப்பிடும் போதே அவன் அங்கு நடக்கும் தாதுமணல் கொள்ளை விவரங்களை விபரமாக சொன்னான். அதைக் கேட்ட ராஜ்குமாரின் மனம் பதைத்தது. இறுதியாக "இந்த அக்கிரமங்களை செய்வது நம் மக்கள்தான். ஆனால் அவர்களுக்குக் கிடைப்பது தினக்கூலியும் குடிக்க மதுவும்தான். இவனுக்கு வெறும் நூறுகள், சென்னையில் இருப்பவர்களுக்கு சில லட்சங்கள் அல்லது கோடிகள். அதே சமயம் வெளிநாட்டினர், பன்னாட்டு கம்பினெகள் கொள்ளையடிப்பது ஆயிரக்கணக்கான கோடிகள். நம் இளைஞர்களையும் குடிப் பழக்கத்துக்கு அடிமையாக்கி, எதையும் யோசிக்க முடியாமல் செஞ்சுவச்சிருக்காங்க. இது நம் ஆட்களுக்குப் புரியவில்லை. எதிர்ப்பவர்கள் காணாமல் போகிறார்கள், அல்லது கடல்ல பிணமா மிதக்கறாங்க. யார்கிட்டேயும் இதைப் பத்திப் பேசவும் பயமா இருக்குது. யாருடனும் நான் இது பற்றிப் பேசினால் அவர்களுக்கும் இடைஞ்சல் வருகிறது. இது வரைக்கும் தகவல் உரிமைச்சட்டத்தில் நாங்க ஆயிரத்துக்கும் மேல கடிதம் அனுப்பியிருக்கோம். எதுக்குமே பதில் இல்லை."

ராஜ்குமார் டேவிடைப் பார்த்தான். நீங்க எங்க கிட்ட என்ன எதிர்பார்க்குறீங்க?"

"இங்கே நடப்பது சாதாரணமான மணல் வியாபாரம் கிடையாது. படு பயங்கரமான கனிம வளங்களின் கொள்ளை. மணல் வெட்டி எடுப்பதால் உருவாகும் கதிர்வீச்சின் பாதிப்பால் மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அநியாயமாக சாகிறார்கள். அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் பல நூறு மடங்கு வெட்டி எடுத்து நம் இயற்கை வளங்களையே இல்லாமல் செய்கிறார்கள். இதன் பின்னால் பல வெளிநாடுகளின் சதி இருக்கிறது. செய்பவர்கள் நம் மாநில, தேசிய அரசியல் தலைவர்கள். எதிர்ப்பவர்கள் இந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள், சாதாரண மக்கள். இந்த மக்களையும் இங்கிருந்து அகற்றப் பார்க்கிறார்கள். இந்த விஷயங்கள் நாடு பூராவும் தெரியச் செய்ய வேண்டும். எங்கள் மக்களையும் மண்ணையும் ஏன் கடலையும் கூட அழிக்கும். இந்தக் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும். இதைத்தான் நாங்கள் பத்திரிகைகளிடம் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக உங்களிடம்."

"சரி டேவிட்! என்னை அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். இங்கே நடக்கும் எல்லா விஷயங்களையும் நீங்கள் சொல்வதுடன், இங்கே வாழ்கின்ற பலரும் என்னிடம் சொல்ல வேண்டும். அது முக்கியம். நான் நேரில் பார்த்து உரிய ஆதாரங்களோடு, எங்கள் பத்திரிகையில் விபரமாக எழுதுகிறேன். மேலும் நெறய விபரங்களும் நான் சேகரித்து அதில சொல்லுவேன். நிச்சயம் அதுக்கு பலன் இருக்கும். நான் இங்கே மூன்று நாட்கள் இருக்கப் போறேன். அதுக்கு மேல தங்கியிருந்தால், சந்தேகம் வரும். பிறகு உங்களுக்கும் ஆபத்து."

டேவிட் அமைதியாக கேட்டுக்கொண்டான்.

பிறகு டேவிடும் அவனும் லுங்கியிலேயே பல இடங்களுக்கும் போய் பார்த்தார்கள். லுங்கியின் உள்ளே அவன் ஒரு ஷார்ட்ஸ் அணிந்து அதில் கேமிராவை வைத்துக்கொண்டான். சர்ச்சுக்குப் போய் ஒரு பாதிரியாரிடம் பேசினார்கள். மருத்துவமனைக்குப் போய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்தார்கள். சாதாரணமாக விசாரிப்பது போல குழந்தைகளிடமும் அவர்களின் பெற்றோர்கள், உறவினர்களிடமும் மருத்துவமனை பணியாளர்களிடமும் பேசி பல தகவல்களை சேகரித்தார்கள். தேவையான இடங்களில் அவர்கள் அறியாமல் படம் பிடித்துக் கொண்டான். உப்பளங்களுக்குப் போய் பார்த்தார்கள். உப்பின் நிறம் வெள்ளையாக இல்லாமல் பழுப்பாக மாறியிருப்பதை அங்க வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர்களுக்கு காட்டினார்கள்.

ஏன் இப்படி நிறம் மாறியிருக்கிறது? என்று ஒருவரை ராஜ்குமார் கேட்டான். அவர் "இங்கே கருமணலிலிருந்து தாது மணல் எடுக்கிறார்கள். அதை கப்பல் கப்பலா வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். அதை வெட்டும் போது ஏதோ எக்ஸ்ரே கதிர் வருதாம். அப்புறம் ஆலைப்புகை உப்புல படியுது. அதான் உப்பு இப்படி நிறம் கெட்டுக் கெடக்குது. எல்லாம் எங்க உடம்பையும் கெடுக்குது. உப்பையும் கெடுக்குது. வீட்டில புள்ளைகள் பெரியவங்க எல்லாத்துக்கும் உடம்பு சொகமில்லாமத் தான் இருக்கு. என்ன செய்யிறதுனே தெரியலை. எங்களுக்கு விதிச்ச வாழ்க்கை இதுதான் போல" என்று இருமியபடியே சொன்னார்.

ஒரு பாதிரியாரை அவர்கள் பார்த்தபோது அவர், "தம்பி! இங்கே தினந்தோறும் கிட்னியில் புற்றுநோய், கர்ப்பப்பையில் புற்றுநோய், எலும்பு, ரத்தத்தில் புற்றுநோய் என்று மக்கள், சின்னக் குழந்தையிலிருந்து பெரியவங்க வரை எங்கிட்ட வந்து சொல்றாங்க. அழறாங்க.

இங்கே இதுக்கான ஆஸ்பத்திரி எதுவும் கிடையாது. சென்னைக்குத் தான் போகணும். நான் சர்ச் மூலமா திருவனந்தபுரம் ஆஸ்பத்திரிலே சொல்லி சிலருக்கு சிகிச்சைக்கு உதவி செய்றேன். அதுக்கு மேல நான் என்ன பண்ணுவேன். இவங்களோட சேர்ந்து நானும் ப்ரேயர் செய்றேன். அதான் முடியும்! என்று கண் கலங்கினார்."

"இந்தக் கொடுமையை அரசாங்கம் தான் தம்பி தடுத்து நிறுத்தணும்." இன்னொரு பெரியவர்.

"கிராமங்களுக்குள்ளே போய்ப் பாருங்க தம்பி! நெறய வீடுகள் கடலரிப்பால இடிஞ்சு போயிக் கிடக்குது. சில கிராமங்களே இன்னும் ரெண்டு மூணு வருசத்தில இருக்காது போல. எல்லாத்துக்கும் இந்த ஆலைகள் தான் காரணம்." என்று கோபத்தில் குமுறினார்.

❍

# 22

இரண்டாம் நாள் மாலை. சூரியன் மறைந்ததும் டேவிட் ராஜ்குமாரை அழைத்துக்கொண்டு கடலோரமாகப் போனான். ஒரு நீண்ட காம்பவுன்ட் சுவர் தெரிந்தது. அது ஒரு ஆலை. அதன் முதலாளி குஜராத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். நிறைய விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. உயரத்திலிருந்து புகைபோக்கி வழியாக அடர்த்தியாக புகை அந்த நேரத்திலும் வெளியேறிக் கொண்டிருந்தது. ஒரு இடத்தில் இருவரும் நின்று பார்த்த பிறகு அவர்கள் ஒரு பூவரச மரத்தின் மேல் ஏறி மறைந்து நின்று கொண்டு கவனித்தார்கள். கருமணல் மலை மலையாக பல இடங்களிலும் குவிந்து கிடந்தது. வாகனங்கள் அங்குமிங்குமாக பெரும் சப்தத்துடன் நகர்ந்து கொண்டிருந்தன. ஆட்கள் பலவகையாக பேசிக்கொண்டே வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். கடல் நுரை பொங்கும் அலைகளுடன் பரந்து கிடந்தது. குளிர் காற்று கொஞ்சம் வேகமாகவே வீசியது.

“இப்படி மணலை குவித்து வைத்து – இதிலிருந்து தாது மணலை பிரித்தெடுத்து கப்பல்களில் ஏற்றி வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். வெட்டி எடுத்து பிரிக்கும் போது வெளியாகும் கதிரியக்கம் தான் இங்கு வேலை செய்பவர்களையும் நடமாடுபவர் களையும் பாதித்து புற்றுநோயை கொடுக்கிறது. நீங்க பார்க்கிறது ஒரு ஆலைதான். இன்னும் பல ஆலைகள் கடற்கரை நெடுகிலும் இருக்கு.”

டேவிட் மெதுவான குரலில் பேசியதை ராஜ்குமார் அமைதியாகக் கேட்டுக்கொண்டான். அவன் கவனமெல்லாம் அந்த ஆலைப் பக்கமே இருந்தது. திடீரென்று உள்ளே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அதிகப் பளீரென்ற வெளிச்சம் தெரிந்தது. ஒரு வெள்ளை நிற ஸ்கார்பியோ கார் உள்ளே வந்து வட்டமடித்து ஒரு விளக்குக் கம்பத்தின் அடியில் நின்றது. அதிலிருந்து ‘பளிச்’ என்ற வெள்ளைச் சட்டை வேட்டி அணிந்து ஒருவர் இறங்கினார். ஒருவன் ஓடிவந்து ஒரு நாற்காலியைப் போட்டதும் அவர் அதில் உட்கார்ந்தார். அவர்

நிதானமாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்து புகைவிட்டபடி "எங்கேடா அவன்?" என்று கேட்டார்.

அவர் பேசியது எதுவும் மரத்தில் இருந்த இருவருக்கும் கேட்கவில்லை. அவர் பேசியதைக் கவனித்த ராஜ்குமார் பரபரப்பானான். அவன் கைலிக்குள்ளே இருந்த ஷார்ட்ஸின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து தன் கேமராவை எடுத்தான். அதை ஜூம் செய்து வந்திருக்கும் ஆளை பார்த்தான். அவனுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. அவன் டேவிடை திரும்பிப் பார்த்தான்.

"என்ன ராஜ்குமார்?"

"இந்த ஆள் எப்படி இங்கே வந்தார்?"

"இவரை உங்களுக்குத் தெரியுமா? இவர் இங்கே அடிக்கடி வருவார்."

"இவரை எனக்குத் தெரியும் டேவிட். இவர் சென்னைக்காரர். அங்கே பெரிய கான்ட்ராக்டர். இங்கே தூத்துக்குடியில் என்ன செய்கிறார்னு தெரியலை. ஆச்சரியமாகத்தான் இருக்கு. இவர் மந்திரிகளுக்கு ரொம்ப வேண்டியவர். பெயர் நல்லதம்பி."

"இதுக்கே ஆச்சரியப்பட்டால் எப்படி? இன்னும் நெறய இருக்கும். தோண்டினால் பெரிய பெரிய பூதமெல்லாம் வெளியே வரும்!" டேவிட் சொல்லிவிட்டுச் சிரித்தான்.

இராஜ்குமார் பேச்சை நிறுத்திவிட்டு நடப்பதை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். மூன்று பேர் ஒரு நடுத்தர வயது ஆளை முதுகைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அந்த ஆளை நாற்காலியில் உட்கார்ந்திருந்த நல்ல தம்பிக்கு முன் நிறுத்தினார்கள். அவரது கைகள் பின்புறம் கட்டப்பட்டிருந்தன.

"இவன் தானா அது! ஏன்டா நீ தான் கவர்மென்டுக்கு, கோர்ட்டுக்குலாம் கம்ப்ளெயின்ட் அனுப்புறியா? ஏன் இந்த தேவையில்லாத வேலை உனக்கு? இந்த ஆலையால உனக்கு என்ன நஷ்டம்? ஊர்ல உள்ளவனுக்கெல்லாம் வேலை குடுக்குறோம். எல்லாம் மூணுவேளை நல்லா சாப்புடுறாங்க. உனக்கு அது புடிக்கலையா? ஒரு சிகப்புத் துணியை கம்புல கட்டிட்டா பெரிய ஆளு ஆயிடுவியாடா?" அந்த ஆளால் எதுவும் பேசமுடியவில்லை. உடல் எங்கும் காயங்கள். உடன் இருந்த ஒருவர், "சட்டசபை, பார்லிமென்ட்ல எல்லாம் இந்த விஷயம் பற்றி கேள்வி கேட்கச் சொல்லி ஏற்பாடு பண்றானுங்க இவன். இவனால இங்க நடக்குற வேலையெல்லாம் ரொம்ப கெடுதுங்க. பெரிய தலைவலியா

இருக்கானுங்க." என்று தூபமிட்டார். அப்படி தூபமிட்டுப் பேசியவர் உள்ளூர் ஆள் போல இருந்தார்.

டேவிடுக்கும், ராஜ்குமாருக்கும் அந்த ஆளின் முதுகுதான் தெரிந்தது.

'இவர் யாருன்னு தெரியுதா, பாருங்க டேவிட்!'

"முகம் தெரியலையே" என்றார் டேவிட். அந்த ஆளின் உடம்பில் சட்டை இல்லை. ஒரு வேட்டி மட்டுமே கட்டியிருந்தார். யாருக்கும் அடையாளம் தெரியக்கூடாது என்பதற்காக அவரது சட்டையைக் கழற்றியிருப்பார்கள் போல.

அப்போது நல்லதம்பி, "இவன் இருந்தாத் தானே இடைஞ்சல் செய்வான். இவனை முடிச்சூடுங்கடா. இவன் மட்டுமில்லை; தொழிலுக்கு எவன் இடைஞ்சலா நின்னாலும், ஒரு தரம் ரெண்டு தரம் சொல்லிப் பாருங்க. கேட்கலைன்னா போட்டுருங்க. மேல எல்லாம் நம்ம ஆளுங்கதான். நான் பாத்துக்குறேன்."

நல்லதம்பி ஒரு சூட்கேசைத் திறந்து கட்டுக்கட்டாக பணத்தை எடுத்து, கூட நின்றவரிடம் கொடுத்தார். "இதை வழக்கப்படி குடுக்குறவங்களுக்கு சேர்த்துடுங்க. மேல்கொண்டு எதுவும் தேவையானா போன் பண்ணுங்க. நான் வர்ரேன். எந்தப் பிரச்னையானாலும் உடனுக்குடனே சரி பண்ணிடனும். பெரிசா வளர விடக்கூடாது."

அவர் காரில் ஏறி கதவை சாத்தினார். அடுத்த வினாடி கார் சீறிப்பாய்ந்து வெளியேறியது. அந்த ஆள் அதே இடத்தில் நின்றிருந்தார். அவர் மிகவும் பலவீனமாக இருந்தார் என்பது அவர் தடுமாறியபடி நின்றதிலிருந்தே தெரிந்தது. அவர் யார் என்பதை தெரிந்து கொள்ள மரத்திலிருந்தவர்கள் ஆவலாக இருந்தார்கள்.

லுங்கியும் 'டி' சட்டைகளும் அணிந்திருந்த மூன்று முரட்டு அடியாட்கள், கைகள் இரண்டும் பின்னால் வைத்து கட்டப்பட்டிருந்த அந்த மெலிந்த ஆளை காம்பவுண்ட் சுவரை நோக்கி தள்ளிக் கொண்டு வந்தார்கள். அந்த ஆளின் தலை துவண்டு முன்புறமாக கவிழ்ந்திருந்தது. அவரால் கால்களை எடுத்து வைக்க சுயமாக நடக்க முடியவில்லை. அந்த ஆடியாட்கள் அவரை வலுவாக இழுத்து தள்ளிக்கொண்டுதான் வந்தார்கள். ஒரு முறை அவர் முகத்தை நிமிர்த்திய போது அந்த ஆளின் முகத்தை ஓரளவு பார்க்க முடிந்தது. டேவிட் கூர்ந்து கவனித்தான், அதிர்ந்தான்.

அவன் அதிர்ச்சியால் சத்தமாகப் பேசினான். "ஐயோ! இது சுடலைமுத்து ஆச்சே!" பதறினான். "ஐயையோ இப்ப என்ன செய்யிறது?"

ராஜ்குமாருக்கு அவன் ஏன் திடீரென்று பதறுகிறான் என்பது புரியவில்லை.

"சுடலைமுத்துவா? யார் அவர்?" என்று கேட்டான்.

டேவிட் பதற்றம் தணியாமலேயே, "சுடலைமுத்து என்னை மாதிரி இன்னொரு கட்சியைச் சேர்ந்த தோழர். மணல் கொள்ளைக்கு எதிராக மக்களைத் திரட்டுவதில் தீவிரமாக வேலை செய்பவர். பல முறை ஏற்கெனவே கள்ளச்சாராயம் வித்தவர்களை போலீசில் பிடிச்சுக் குடுத்தவர். இப்ப மூணு நாளைக்கு முன்னால கூட கடைத்தெருவில மணல் கொள்ளைக்கு எதிராக கூட்டம் நடத்திப் பேசினாரே!"

அவன் பேசுவதை நிறுத்திவிட்டு பதை பதைப்புடன் கவனித்தான். ராஜ்குமாரும் கவலையுடன் கவனித்தான். அந்த ஆட்கள் ஒரு பள்ளத்துக்கு அருகில் சுடலைமுத்துவைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். டேவிட் பதறினான்.

"டேவிட்! நாம் இப்ப அமைதியாக இருந்து கவனிப்போம். நாம் சத்தம் போட்டால் அவர்கள் நம்மைக்கண்டு பிடித்துவிடுவார்கள். நமக்கும் ஆபத்தாகிவிடும். அவசரப்படக்கூடாது. அவர்கள் என்ன செய்கிறார்கள், அவரை எங்கே கொண்டு போகிறார்கள் என்று பார்ப்போம். அவர்கள் போனதும் நாம் உள்ளே இறங்கி அவரைக் காப்பாற்ற முயற்சி செய்யலாம். இல்லாவிட்டால் வேறு ஏதாவது முயற்சி செய்து அவரைக் காப்பாற்றலாம்." ராஜ்குமார் டேவிடை கொஞ்சம் அமைதிப்படுத்தினான்.

அவன் சுடலைமுத்துவை அவர்கள் அடித்து உதைத்து ஏதாவது ஒரு அறையில் அடைத்து வைப்பார்கள்; காப்பாற்றிவிட முடியும் என்று எண்ணினான்.

ஆனால் அவர்கள் சுடலைமுத்துவை அங்கிருந்து தள்ளிக்கொண்டு போனார்கள். அதன் பிறகு அவர்கள் டேவிட், ராஜ்குமாரின் பார்வையில் படவில்லை. மணல் குன்றுகள் அவர்களை மறைத்தன. அதன் பிறகு என்ன நடந்தது என்பதை அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

**சு**டலைமுத்து களைத்துப் போய் தலை தொங்கியபடி நின்ற நிலையிலேயே ஒருவன் அவரை கழுத்தில் கையை வைத்து பிடித்தபடி நிற்க வைத்தான். ஒருவன் அவர் முன்பாக வந்து நின்றான்.

"ஏன்டா! உனக்கு எத்தனை தடவை சொன்னாங்க. கேட்டியாடா! அரசாங்கம், போலீஸ் எல்லாமே இவங்கதான்டா. பெரிய ஆளுங்களை பகைச்சுக்கிறதே உனக்குப் பொழப்பாப் போச்சு! இப்ப என்ன செய்யப் போறே! யார் உன்னைக் காப்பாத்துவா?ம்! உன் கட்சி வருமா? இல்லை சூப்பரா பேசுனீங்கண்ணேன்னு சொன்னாங்களே அவங்க வருவாங்களா? சொல்லுடா!"

சுடலைமுத்துவின் வாயிலிருந்து எச்சில் ஒழுகியது. அப்போதும் அவர் ஏதோபேச முயற்சி செய்தார். ஆனால் அவரால் முடியவில்லை. வெறும் முனகல் சத்தம் மட்டுமே கேட்டது.

அதே சயமம் ஒருவன் பின்னாலிருந்து ஒரு நீண்ட கத்தியால் அவர் கழுத்தில் அழுத்திக் கீறினான். பிறகு அப்படியே அவரை பள்ளத்தில் தள்ளிவிட்டார்கள். அவர் அலறக்கூட இல்லை. அவர் பள்ளத்தில் விழுந்ததும் அருகில் மலையாகக் குவிக்கப்பட்டிருந்த மணல் குன்று பெரிய சத்தத்துடன் பள்ளத்தில் சரித்துவிடப்பட்டது. சில நிமிடங்களில் பள்ளம் மணலால் மூடப்பட்டு, எல்லாம் முடிந்துவிட்டது. சுடலைமுத்து என்ற ஒருவர் என்ன ஆனார் என்ற விபரம் ஒருவருக்கும் தெரியப்போவதில்லை. இதற்கு முன்னால் இதுபோல பலரை பலிகொண்ட அந்தப் பள்ளம் சுடலைமுத்துவையும் விழுங்கியது.

இப்படி சுடலைமுத்து கொலை செய்யப்பட்ட விபரம் டேவிடுக்கும், ராஜ்குமாருக்கும் தெரியாது. அவரை அவர்கள் எங்கேயோ கொண்டு போய் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றே நினைத்தார்கள். இருவரும் அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்தபடியே மரத்தின் மேலேயே இருந்தார்கள். ராஜ்குமார் கேமிராவால் இன்னும் சில படங்கள் எடுத்தான்.

அவனுக்கு தாங்கள் எப்படிப்பட்ட பெரும் ஆபத்தில் சிக்கப் போகிறோம் என்பது அப்போது தெரியவில்லை.

# 23

**ரா**ஜ்குமாரின் கேமிரா ப்ளாஷ் சில முறை விட்டுவிட்டு ஒளிர்ந்ததால், அந்த மணல் சுத்திகரிப்பு நிலையத்தில், இருந்த சிலரின் கவனத்தைக் கவர்ந்தது. சிலர் அவனும் டேவிடும் ஒளிந்திருந்த மரத்தை நோக்கிப் பார்வையைச் செலுத்தினார்கள். அவர்கள் எச்சரிக்கையடைந்தார்கள்.

"டேய்! அந்த காம்பவுண்ட் சுவருக்கு அப்பால இருக்குற ஒரு மரத்தில இருந்து ஏதோ வெளிச்சம் மின்னிட்டு மின்னிட்டு போகுதுடா. எவனோ பேட்டரி லைட் வச்சு அடிச்சு அடிச்சுப் பாக்குற மாதிரி தெரியுதுலே"

அவர்கள் வேலைகளை நிறுத்தினர். அந்த மரத்தை நோக்கி பார்வையை செலுத்தி, காதுகளையும் கூராக்கி கவனிக்க ஆரம்பித்தார்கள். சில நிமிடங்களில் ப்ளாஷ் மீண்டும் சிலமுறை மின்னியது.

"டேய்! இது பேட்டரி லைட் இல்லை. கேமரா ப்ளாஷ் லைட். எவனோ அந்தப் பூவரசு மரத்தில் ஒளிஞ்சுட்டு இருக்கான். நம்ம பேக்டரியை போட்டோ எடுத்திட்டிருக்கான்லே."

உடனே ஒருவன் "இப்பத்தான் எடுக்குறானா இல்ல முதலாளி இருக்கும் போதே எடுத்தானான்னு தெரியலையே!" என்றான் பதற்றமாக.

"ஓடுங்கடா! போய் புடிங்கடா அவனை. யார்னு தெரியலையே! எவனா இருந்தாலும் புடிச்சு கண்டங் கண்டமா வெட்டி கடல்ல வீசுங்கடா! முக்கியமா அவனோட கேமிராவை பறிக்கணும்டா! ம்! சீக்கிரம்!" என்று ஒரு முரட்டுக்குரல் உத்தரவு இட்டது.

"அவனை தப்பிச்சுப் போக விட்டுடாதீங்கடா" "பிடிங்கடா" என்று சில குரல்கள் ஓங்கிக் கேட்டன.

மூன்று நான்கு பேர் கையில் வீச்சரிவாள், கத்திகளுடன் அவர்கள் ஒளிந்திருந்த பூவரசு மரத்தை நோக்கி ஓடினார்கள். விளக்குகளின் ஒளியில் அவர்கள் ஓடும் போது அவர்களின் நிழல்கள் நீண்டும், குட்டையாகவும் பக்கவாட்டிலுமாக மாறி

அவர்களின் வேகமான நடமாட்டத்தை மரத்தில் இருப்பவர்களுக்குத் தெரிவித்தது. அந்த மாற்றங்களாலும், திடீரென ஏற்பட்ட கூச்சலாலும் அவர்களுக்கு தாங்கள் ஒளிந்திருப்பது தெரிந்துவிட்டது என்று ராஜ்குமார் தெரிந்துகொண்டான். அவர்கள் கைகளில் ஆயுதங்கள் இருப்பது ஒளியில் அவை மின்னியதால் தெரிந்தது. கொலை வெறியுடன் ஓடி வரும் அந்த அடியாட்களிடம் சிக்கினால் தங்கள் உயிர் தப்பாது என்பதை அவன் அறிவான்.

“டேவிட்! நாம் இந்த மரத்தில் இருப்பதை அவர்கள் தெரிந்து கொண்டுவிட்டார்கள். நம்மைத் தேடித்தான் ஓடி வருகிறார்கள்.”

“எப்படித் தெரிந்துகொண்டார்கள் ராஜ்குமார்?”

“என் கேமரா ப்ளாஷ் லைட் மின்னியதை எவனோ பாத்துட்டான் போலிருக்கு. நாம் தூரத்தில் தான் இருக்கோம். தெரியாதுன்னு நெனச்சேன். அதான் தப்பாய் போயிடுச்சு. சரி சட்டுனு இறங்குங்க. சிக்கினா செத்தோம். அவன் கேமிராவை பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.”

டேவிட்டுக்கு வயிற்றைக் கலக்கியது. சட்டென்று கீழே குதித்தான். அவனுக்கு இப்போது சுடலைமுத்துவைப் பற்றிய கவலையுடன் தன் உயிரைப் பற்றிய பயமும் பெரிதாகிவிட்டது. பின்னாலேயே ராஜ்குமாரும் குதித்தான். இரண்டு பேரும் மரங்களின் ஊடே மறைந்தபடி தலைதெறிக்கும் வேகத்தில் ஓடினார்கள். சற்று தூரத்தில் பஸ்போவதை வைத்து மெயின் ரோடு அருகில் வந்துவிட்டதைத் தெரிந்துகொண்டார்கள். கொஞ்சம் நிற்கும்படி சொல்லி ராஜ்குமார் டேவிடுக்கு சைகை காட்டினான். அவனுக்கு கடுமையாக மூச்சு வாங்கியது. சமாளித்தபடி பேசினான். அவன் ஓடும்போதே அடுத்துச் செய்ய வேண்டியதை திட்டமிட்டிருந்தான்.

“டேவிட்! மரத்தில யாரோ ஒரு ஆள்தான் இருக்கிறான் என்றுதான் அவர்கள் நினைத்திருப்பார்கள். இரண்டு பேர் என்பது அவர்களுக்குத் தெரியாது!”

“எப்படி சொல்றீங்க தோழர்?”

“எல்லாம் ஒரு கணிப்புத்தான். அதனால, நாம ஆளுக்கு ஒரு பக்கமா போயிடலாம். நீங்க கொஞ்சதூரம் ஓடுங்க, பிறகு மெதுவாக நடந்துபோய் ஏதாவது டீக்கடையிலேயே சினிமா தியேட்டரிலோ போய் மக்களுடன் சேர்ந்து சாதாரணமா இருந்து கொள்ளுங்கள்.”

“அப்போ தான் நீங்க உயிர் தப்பிக்கலாம்!”

"நீங்க?"

"நான் இப்படியே மெயின்ரோடுக்கு போய் ஏதாவது பஸ் பிடிச்சு சென்னைக்கு போயிடுறேன். இந்த ஊரை விட்டு வெளியேறியாச்சுன்னா எனக்கு பயம் இல்லை."

"உங்க பை? எப்படி வாங்கிக்குவீங்க?"

"அதைப் பத்திக் கவலைப்படாதீங்க! அதில ஒரு செட் ட்ரெஸ் மட்டும்தான் இருக்கு. அதில வேற எதுவும் இல்லை. அந்தப் பையை எங்காவது கடாசிடுங்க. இல்லைனா நீங்க சென்னைக்கு வரும்போது கொண்டு வாங்க! கேமிராவும் பணமும் தான் முக்கியம். ரெண்டும் என் கையில இருக்கு. சரி! பேச நேரமில்லை. போங்க! நாளைக்கு காலை 8 மணிக்கு எனக்கு போன் பண்ணுங்க!"

அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை.

அவன் வேகமாக சாலையின் ஓரத்திலேயே மரங்களின் மறைவில் ஓடினான். இடையில் ஒரு இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தான். டேவிட் ஓடுவது ஒரு சில நிமிடங்கள் தெரிந்தது. பிறகு எதுவும் தெரியவில்லை. கடற்கரையை நோக்கிப் பார்த்தான். அவர்கள் இன்னும் வரவில்லை. அவர்கள் அந்த இடத்தில் தங்களைத் தேடிப்பார்த்துவிட்டு, பிறகு தான் வெளியே வருவார்கள் என்று அவன் நினைத்தது சரியாக இருந்தது. நிலவொளி அதிகம் இல்லாதது அவனுக்கு வசதியாக இருந்தது. மரங்களின் ஊடே மறைந்தபடி ஓடினான். அவன் தன் வாழ்க்கையில் அப்படி ஒரு வேகத்தில் அதுவரை ஓடியது கிடையாது.

டேவிட் சமாளித்துக் கொள்வான் என அவனுக்குத் தோன்றியதால் அவனுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. தன் நிலைமைதான் மிகவும் ஆபத்தானதாக தெரிந்தது. அவனது உருவம், சிகப்பு நிறம். நாகரிகமான தோற்றம், பேச்சு எல்லாமே அவனை எளிதில் வெளியாள் என்று காட்டிக்கொடுத்துவிடும் என்று அவன் பயந்தான். ஏதோ மொட்டைத் தைரியத்தில் இதில் இறங்கி விட்டோமோ என்று நினைத்தான்; உடனே அவன் முகத்தில் கூடுதலாக வியர்வை ஊற்றெடுத்தது. சாலையை கடந்து மறுபக்கமாக ஓடினான். சாலையின் அருகே போகாமல், கொஞ்சம் கீழே இறங்கி, தள்ளியே, வேகமாக நடந்தான். ஏதாவது பஸ், கார் வந்தால் கைகாட்டி நிறுத்தி உதவி கேட்டுப் போய்விடலாம் என்று நினைத்தான். இதிலேயே சுமார் பதினைந்து நிமிடங்கள் போனது. அவர்கள் கடற்கரையை விட்டு வெளியேறி வந்து தேட

ஆரம்பித்திருப்பார்கள் என்று கணக்கிட்டான். அப்போது கடல் காற்று கொஞ்சம் பலமாக வீசியதால் தென்னை மரங்களும் மற்ற பெரிய மரங்களும் பலத்த சத்தத்துடன் ஆடி அந்த சூழ்நிலையை அவனுக்கு மேலும் பயங்கரமாக காட்டின. அவர்கள் ஐந்துபேர். ஒரு சக்திவாய்ந்த நீண்ட டார்ச் லைட்டை அடித்து மரங்களின் மேலேயும் கீழேயும் தேடிப்பார்த்தார்கள். யாரும் சிக்கவில்லை. ஒருவன் கீழே கடந்து ஒருபொருளை காட்டினான். ஒருவன் குனிந்து அதை எடுத்துப் பார்த்தான். அது ஒரு கேனன் கேமிராவின் கவர். அதனுடன் ஒரு மாயாஜால் தியேட்டர் கேன்டீன் மெம்பர்ஷிப் கார்டு. அதில் பெயர் விபரம் எதுவும் இல்லை.

“எவனோ வெளியூர்க் காரன் வந்து போட்டோ பிடிச்சுருக்கான்ல.”

“டேய்! அவன் எப்படியும் சென்னைக்குத்தான் பஸ் புடிச்சுப் போகனும். வாங்க முதல்ல பஸ் ஸ்டாண்டுக்கு நம்ம ஆள்களை போகச் சொல்லு. நீயும் அங்கே போ. ஒரு பஸ் விடாம செக் பண்ணுங்க. நாங்க மெயின்ரோடுக்கு போய் பஸ்களை நிறுத்திப் பாக்குறோம். அவனை தூத்துக்குடியில இருந்து உசுரோட போகவிடக்கூடாது வாங்கடா!”

“அண்ணே! அவனை எப்படி அடையாளம் காண்றது?”

“அவன் கிட்ட கவர் இல்லாத கேனன் கேமிரா இருக்கும். காமிராவ காட்டச்சொல்லிப் பாருங்கடா!” பஸ் ஸ்டாண்டில புதுசா ஆள் சென்னைக்குப் போறவனைலாம் புடிச்சு கேளுங்கடா. யோசிக்க வேணாம்.

ஒருவன் மட்டும் பஸ் ஸ்டாண்டை நோக்கி ஓட மற்ற நான்கு பேரும் மெயின்ரோடை நோக்கி ஓடினார்கள். அதற்குள் டேவிட் வேகமாக கொஞ்சதூரம் ஓடி, ஒரு டீக்கடையில் டீ குடிப்பவர்களுடன் சேர்ந்து இயல்பாக அரட்டையடிக்க ஆரம்பித்தான். அவனுக்கு ராஜ்குமார் என்ன ஆனானோ என்று கவலையாக இருந்தது. டீ குடித்துவிட்டு அந்த இடத்திற்கு முன்பாக நடந்து கொண்டிருந்த ஒரு கோவில் இசை நிகழ்ச்சியில் போய் உட்கார்ந்து கொண்டான். தன் பதற்றத்தை மறைத்துக்கொண்டு இயல்பாக காட்டிக்கொண்டான்.

ராஜ்குமார் தான் நின்ற இடத்திலிருந்து தூரத்தில் பார்த்தான். அடிவானத்தில் ஒரு இடத்தில் பெரும் வெளிச்சம் தெரிவதைப் பார்த்து, அங்கே ஒரு ஊர் இருக்கிறது என்பதை கணித்தான். அதை நோக்கி விரைவாக எச்சரிக்கையுடன் நடந்தான். சாலையில் தூரத்தில்

தூத்துக்குடியில் இருந்து எதிர்திசையில் ஒரு கார் வருவது தெரிந்தது. ராஜ்குமார் பரபரப்பானான். அதை மறித்து ஏறிவிட்டால் வேகமாக தூத்துக்குடியை விட்டு வெளியேறிவிடலாம் என்று நினைத்தபடி வரும் காரை நோக்கி மூச்சிரைத்தபடி ஓடினான். அவனுக்கு மயக்கமே வந்துவிடுவது போல இருந்தது. ஒரு பெரிய ஆலமரத்தின் பின்னால் மறைந்தபடி நின்றான். அப்போது எதிர்த்திசையிலிருந்து ஒரு கார் பிரகாசமான விளக்கொளியுடன் வருவதைப் பார்த்து ஒளி தன் மேல் படாதபடி மறைந்து கொண்டான். இரண்டாவதாக வந்த கார் அந்த இடத்தைக் கடந்தவுடன் சாலையின் குறுக்கே போய் நிற்கவேண்டும் என்று தயாரானான்.

அப்போது அவன் ஆச்சரியப்படும்படி எதிரெதிரே வந்த இரண்டு கார்களும் தமது வேகத்தைக் குறைத்து அருகருகே நின்றன. அதில் இருந்தவர்கள் காரிலிருந்து இறங்கிவந்தார்கள்.

“என்னலே! அந்த ஆள் சிக்கினானா இல்லையா?”

அந்த இடம் ஒரே வெளிச்சம் நிரம்பியதாக மாறியது.

“இல்லைண்ணே! ரோடு பூரா ட்ரிப் அடிச்சுப்பாத்தாச்சு. காணலை! அவன் வெளிய போயிருக்க முடியாதுண்ணே! ஊருக்குள்ளே தான் எங்கயாச்சும் இருப்பான்.”

“டேய்! பாத்த இடத்திலயே அவன முடிச்சுடுங்கடா! அவன் கிட்ட கவர் இல்லாத கேமிரா இருக்கும். அத மட்டும் பத்திரமா கொண்டு வந்துடணும்!”

ஒரு கட்டைக் குரல் உத்தரவிட்டது. உடனே இரண்டு கார்களும் தம் பயணத்தைத் தொடர்ந்தன. அந்த இடம் மறுபடியும் இருளில் மூழ்கியது.

ஆலமரத்தின் பின்னால் மறைந்திருந்துபார்த்துக்கொண்டிருந்த ராஜ்குமாருக்கு உடம்பிலிருந்த இரத்தம் முழுவதும் நெஞ்சுக்குள் பாய்ந்து நெஞ்சை அடைப்பது போல இருந்தது. ஆலமரத்தின் வேர் மேல் அப்படியே உட்கார்ந்தான்.

“நல்லவேளை! ஒரு வினாடியில் உயிர் பிழைத்தோம்! ஆலமரத்தை விட்டு வெளியில் வந்து வெளிச்சத்தில் நின்றிருந்தால், இந்நேரம் இந்த இடத்தில் பிணமாக இல்லயா கிடப்போம்!”

நினைத்ததுமே அவனுக்கு நெஞ்சம் நடுங்கியது. கொஞ்சநேரம் மரத்தின் அடியிலேயே உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அவன் ஊருக்குள் தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டது அவன் காதில் விழுந்திருந்ததால், அவர்கள்

மறுபடியும் அந்தச் சாலையில் அவனைத் தேடமாட்டார்கள். அது அவனுக்கு கொஞ்சம் நிம்மதியைத் தந்தது. தொடர்ந்து பதற்றமாகவே ஓடிக்கொண்டிருந்ததாலும் அதிகமாக வியர்த்து ஊற்றியதாலும், அவன் களைத்துப் போயிருந்தான். நாக்கு வறண்டிருந்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. தன் செல்போனை எடுத்து ஆசிரியரின் எண்ணை அழுத்தினான். பலமுறை முயற்சித்தும் தொடர்பு கிடைக்கவில்லை. உடனே அதை 'ஆப்' செய்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். ஒரு அரைமணிநேரம் அப்படியே உட்கார்ந்திருந்துவிட்டு, மெல்ல எழுந்து நடக்க ஆரம்பித்தான். சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்ததும், சிறிது தூரத்தில் சிறு வெளிச்சம் ஒன்று தெரிந்தது. சற்று யோசித்தவன், 'வருவது வரட்டும்' என்று துணிந்து அந்த வெளிச்சத்தை நோக்கி மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து போனான்.

கொஞ்சம் நெருங்கிப் போனதும் ஒரு மரத்தின் பின்னால் நின்றுகொண்டு பார்த்தான். அங்கே சிலர் அறுவடை முடிந்திருந்த வயலில் அடுப்பு வைத்து உணவு சமைத்துக்கொண்டிருந்தார்கள். சற்று தள்ளி ஆடுகள் பட்டியில் அடைக்கப்பட்டு, சத்தமிட்டுக் கொண்டிருந்தன. அவை இன்னும் உறங்கவில்லை. அந்த அடுப்பைச் சுற்றி சுமார் பத்துப்பேர் அளவில் ஆண்களும் பெண்களும் இருந்து மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஒரு சிலர் மட்டும் சமையலைக் கவனித்துக்கொண்டார்கள். சட்டென்று ராஜ்குமார் புரிந்துகொண்டான். அவர்கள் கீதாரிகள், பயப்படவேண்டியதில்லை.

விவசாய நிலங்கள் இடையிடையே சில காலம் தரிசாக விடப்படும். அப்படித் தரிசாக விடப்படும் நிலங்களில் ஆட்டுக்கிடை வைத்திருப்பவர்கள், தங்கள் ஆடுகளை அந்த வயல்களில் பட்டிகள் போட்டு சில நாட்கள் தங்க வைப்பார்கள். அந்த நாட்களில் ஆடுகளின் கழிவுகள் அந்த வயல்களுக்கு நல்ல உரமாக கிடைக்கும். இதற்கு அந்த ஆட்டுக்கிடைக் காரருக்கு நிலத்தின் உரிமையாளர் சன்மானமாகப் பணம் கொடுக்கவேண்டும். தங்கள் ஊர்களில் மேய்ச்சலுக்கு நிலம் கிடைக்காத காலங்களில், இந்தக் கீதாரிகள் பல ஊர்களுக்கும் தங்களுடைய கிடை ஆடுகளை ஓட்டிக்கொண்டு போவார்கள். அதே சமயம் ஒரு மாட்டுவண்டியில், தேவையான பொருட்களுடன் தங்கள் குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு போவார்கள். போகும் இடங்களில் அந்த ஊர் மக்களும் இவர்களை அன்புடன் வரவேற்று வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். தங்கள் கிடைகளின் ஆடுகளை காவல்காக்க நாய்களையும் உடன்

வைத்திருப்பார்கள். அது போல அங்கும் சில நாய்கள் இருந்தன. அவை ராஜ்குமார் வந்ததை உணர்ந்து குரைத்தபடியே அவனை நோக்கி ஓடின. அதைக் கவனித்த அந்த கீதாரிகளில் ஒருவன், ஒரு இளைஞன், கையில் ஒரு தடிக் கம்பை எடுத்துக்கொண்டு நாய்களின் பின் வேகமாக நடந்தான். நாய்கள் தன்னை நோக்கி வருவதைப் பார்த்த ராஜ்குமார் சட்டென்று மரத்தின் பின்னாலிருந்து வெளியே வந்து நின்றான். அவனது முகத்தில் டார்ச் விளக்கை அடித்த இளைஞன், நாய்களை அதட்டி அமைதிப்படுத்தினான். அந்த இடத்திலேயே ராஜ்குமார் களைப்பால் உட்கார்ந்துவிட்டான். தன் கையால் "தண்ணீர் வேண்டும்" என்று சைகை செய்தான்.

உடனே அந்த இளைஞன் "டேய்! யாராச்சும் ஒரு சொம்புல தண்ணி கொண்டாங்கடா!" என்று கூட்டத்தைப் பார்த்து கத்தினான். ஒருவன் ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க ராஜ்குமார் அதை வாங்கி கடகடவெனக் குடித்தான். இளைஞன் அவனைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு பெரியவர் முன் நிறுத்தினான். தண்ணீர் குடித்தவுடன் ராஜ்குமார் கொஞ்சம் தெம்பாக உணர்ந்தான். அமைதியாக அந்தப் பெரியவரைப் பார்த்தான்.

ஒரு வேப்பமரத்தடியில் ஒரு கயிற்றுக்கட்டிலில் அந்தப் பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவரிடம் மற்றவர்கள் அதிக மரியாதையுடன் நடந்துகொண்டதைப் பார்த்து, அவர்தான் அந்தக் கீதாரிக் கூட்டத்தின் தலைவன் என்பது தெரிந்தது. பெரியவர் பெரிய வெள்ளை மீசையும் தாடியும் வைத்து கழுத்தில் தாயத்துடன் கூடிய கருப்புக் கயிறு போட்டிருந்தார். லுங்கியும் கை வைத்த பனியனும் ஒரு பெரிய துண்டும் அவரது உடையாக இருந்தன. இடுப்பில் பட்டையான ஒரு பச்சை நிற பெல்ட் மாட்டியிருந்தார். அவர் ராஜ்குமாரை ஒரு முறை தீர்க்கமாக பார்த்தார். ஏதோ தனக்குள் யோசிப்பவன் போல இருந்தார்.

இளைஞன் "அய்யா! அந்த ஆளுங்க இவரைத் தான் தேடி வந்தாங்க போல!" என்று மெதுவாக சொன்னான்.

உடனே ராஜ்குமார் பதறினான். "இங்கே என்னைத் தேடி வந்தாங்களா?"

பெரியவர் தலையசைத்தார். "ஆமாம். தம்பி! நீ அந்த மணல் வெட்டி விக்கிறவங்களுக்கு எதிரா எதுவும் செஞ்சுட்டிருக்கியா?"

ராஜ்குமார் அமைதியாக தலையாட்டினான்.

"அய்யா! அவங்க என்னைக் கொலை செஞ்சுடுவாங்க. என்னைய நீங்கதான் காப்பாத்தணும்."

"சரி தம்பி! நீ எந்த ஊர் போகணும்?"

"ஐயா! நான் உடனே சென்னைக்குப் போகணும். ஏதாச்சும் சென்னை பஸ்சில என்னை ஏத்திவிட்டால் போதுமுங்க. நீங்கதான் உதவி செய்யணும்."

"தம்பி! இப்ப நீ சென்னைக்குப் போவது ஆபத்து. சென்னை பஸ் பூராவும் அவங்க ஆட்கள் தேடுவாங்க. அதனால அது வேண்டாம். நீ கேரளா பஸ் ஏறி அங்கே போய் அங்கே இருந்து சென்னைக்குப் போயிடலாம்." பெரியவர் தன் இடது கையால் மீசையை ஒதுக்கி விட்டபடி பேசினார்.

அந்த இளைஞனும் "ஆமாங்க, அய்யா சொல்றதுதான் சரி. கேரளாவுக்கு நீங்க போயிடுங்க." என்றான்.

அது அவர்களின் சாப்பாட்டு வேளை.

ஒரு பெண் வந்து "அய்யா! சாப்பிடலாங்க!" என்று அழைத்தாள்.

எல்லோரும் சாப்பிடுவதற்குத் தயாரானார்கள். கருவாட்டுக் குழம்பின் வாசம் காற்றில் பரவி அங்கே இருந்தவர்களை இழுத்தது. பலரும் சாப்பாடு பரிமாறும் இடத்தை நோக்கிப்போனார்கள். பெரியவர் ராஜ்குமாரைப் பார்த்து "தம்பி சைவமா, அசைவமா? கருவாட்டுக் குழம்பு வச்சிருக்காக, அதான் கேக்குறேன்!" என்றார் சிரித்தபடி. தாடி மீசைக்கு இடையே அவரது வெற்றிலைக் கறைபடிந்த பற்கள் தெரிந்தன.

"அசைவம் சாப்பிடுவேன் ஐயா!" என்ற ராஜ்குமார், உண்மையில், பசியாலும், கருவாட்டுக் குழம்பின் வாசத்தாலும் சீக்கிரம் சாப்பிட விருப்பமாகவே இருந்தான்.

"அப்ப வாய்யா சாப்பிட்டுவிட்டுப் பேசலாம்." என்று பெரியவர் எழுந்து நடந்தார். ராஜ்குமாரும் எழுந்து அவருடன் நடந்தான்.

எல்லோரும் தட்டுக்களில் வாங்கிக்கொண்டு தரையில் உட்கார்ந்து சாப்பிட, ராஜ்குமாருக்கு மட்டும் ஒரு பாய் போடப்பட்டு அதில் அவன் உட்கார்ந்ததும், ஒரு தட்டில் சாப்பாடு போடப்பட்டது. அவனுக்கு ஒரு அவித்த முட்டையும் வைக்கப்பட்டது. நல்ல பசியாக இருந்ததாலும், மண் சட்டியில் வைக்கப்பட்ட குழம்பு தனி சுவையாகவும் மணமாகவும் இருந்ததாலும் ராஜ்குமார் வயிறார சாப்பிட்டான். சாப்பிட்டு முடித்ததும் பெரியவரும் அவனும் அந்த இளைஞனும் மீண்டும் அந்த மரத்தடிக்குப் போய் உட்கார்ந்தார்கள்.

இப்போது பட்டியில் அவ்வளவாக சத்தம் இல்லை. ஆடுகள் அமைதியாக உறங்கினதுபோல் தெரிந்தது.

அந்த கூட்டத்தில் இருந்த இளைஞர்களில் சிலர் இரவுக் காட்சி ரஜினி படம் ஒன்றுக்குப் போவதாக பேசிக்கொண்டிருந்தார்கள். பெரியவர் தன்னுடன் இருந்த இளைஞனிடம், “கோபாலு, நீயும் படத்துக்குப் போறியா?” என்றார்.

“ஆமாய்யா! நானும் போகலாம்னுதான் இருக்கேன். நீங்க இருக்கச் சொன்னா நான் இருந்துக்குறேன். அவங்க போகட்டும்.”

“அதுக்கில்லப்பா! நீ போறதானா இந்தத் தம்பியை உன் கூட பத்திரமா கூட்டிட்டுப் போய் திருவனந்தபுரம் பஸ்ல ஏத்திவிட்டு போகலாம்ல. அதுக்குத்தான் கேட்டேன்.”

“சரிங்க அய்யா!”

உடனே அவர் அவனுடைய சட்டைக் கழற்றி சுருட்டி வைத்துக் கொள்ளும்படி சொல்லி அவர்களுடைய போர்வையை கொடுத்து போர்த்திக் கொள்ளச் சொன்னார். தலையை கலைத்துவிட்டு அவனைப் பார்த்து திருப்தியாக தலையை அசைத்தார். பிறகு “கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கய்யா. இவனுக படத்துக்குப் போறானுக. அவனுகளோட நீயும் போய்யா. உன்னைய இவங்க பத்திரமா கொண்டு போய் கேரளா போற பஸ்சில ஏத்திவிட்டுறுவாங்க.”

அவன் “சரிங்கய்யா!” என்றபடி உட்கார்ந்தான்.

அந்தப் பெரியவர், “நாங்க கீதாரிங்க தம்பி! அப்படின்னா தெரியும்ல்ல?”

உடனே அவன் “தெரியுமுங்க! நான் தஞ்சாவூர்தான்” என்றான்.

“அப்படியா! நீ என்ன வேலை செய்யிற! இவனுகளுக்கும் உனக்கும் என்ன பிரச்னை? இவங்க ரொம்ப மோசமான ஆட்களாச்சே!”

“நான் புது உலகம்னு ஒரு பத்திரிகையில வேலையில் இருக்கேன். கொஞ்சநாள் முன்னால கள்ளச்சாராயத்தை அரசு மதுக்கடைகளில் வித்தது பத்தி எழுதினேன். இப்போ மணல் கொள்ளை பத்தி எழுதுறதுக்காக, இங்கே விசாரணை செஞ்சுட்டு இருக்கேன். இவங்க இடத்தில மரத்து மேல ஒளிஞ்சிருந்து பார்த்தேன். அது இவங்களுக்கு தெரிஞ்சுடுச்சி. அதான் என்னைய தேடுறாங்க!”

“இவங்க இங்க மட்டுமா மண் வெட்டுறாங்க, இந்த கடல்கரை முழுக்கவுமே நாசப்படுத்திட்டாங்க. இந்த ஊர் சனங்களே வெளியூர் மீன வாங்கும்படி ஆயிடுச்சு. மீன், தண்ணி, உப்பு எல்லாமே வெஷமாயிடுச்சு. பொறந்த குழந்தைக்குக் கூட புத்துநோய் வருது. என்ன சொல்லி என்ன பிரயோசனம்? எவன் கேக்குறான்?

விவசாயம் போச்சு, கடல் தொழிலும் போச்சு! சனங்க எப்படித்தான் பொழைக்கிறது?"

பெரியவர் நொந்துபோய் பேசினார்.

"தஞ்சாவூர் பக்கம் போனா காவேரிக்கரை பூராவும் மணல் வெட்டி பள்ளமா ஆக்கி வச்சிருக்கான். கரூர், சேலம் எல்லாப் பக்கமும் ஆயிரம் ஆயிரம் லாரிகள்ல விடிய விடிய மணல் ஏத்திட்டுப் போகுது. பாலாறு இன்னம் கொஞ்ச நாள்ல இருக்கவே இருக்காது போல. எல்லாப் பயலுகளும் கூட்டு வச்சுத்தான் எல்லாம் நடக்குது போல தெரியுது."

ஏன்யா! கோர்ட்டுக்குப் போற வழியில மாடு ரோட்ல நிக்கிதுன்னு மாட்டைல்லாம் புடிச்சு பவுண்டுல அடைடான்னு கார்ப்பரேஷனுக்கு உத்தரவு போட்டு மாட்டை எல்லாம் புடிச்சு அடைக்கத் தெரியுது. போற வழியில கோயில்ல கூழ் ஊத்துற கூட்டம் எடஞ்சலா இருக்குன்னு தமிழ்நாடு பூரா நெறய கோயில்களை இடிச்சித் தள்ளுன்னு உத்தரவு போட முடியுது. அது மாதிரி இந்த மண்ணையெல்லாம் இப்படி வெட்டி விக்கிறதை தடுத்து நிறுத்த ஒரு உத்தரவு போட முடியாதா?"

மணலை மட்டும் தான் வெட்டி விக்கிறானுகன்னு பார்த்தால் மதுரைப்பக்கம் மலையவே வெட்டி வித்து காணாம ஆக்கிட்டானுக. அரசாங்கம் நெனச்சா இதை நிப்பாட்ட முடியாதா தம்பி! எல்லாம் ஏமாத்துறானுக! எல்லாரும் கூட்டு! எல்லாம் ஒரே பயலுக!"

"அதனால தான் அய்யா நான் என்னால முடிஞ்சதை பத்திரிகை மூலமா செஞ்சிட்டு இருக்கேன். எங்க ஆசிரியர் ரொம்ப நேர்மையும் தைரியமும் உடையவர். யாரையும் எதிர்த்து நிப்பார். மக்கள் நன்மை தான் அவருக்கு முக்கியம். பணத்தையோ, பதவியையோ அவர் பெரிசா நினைக்கமாட்டார்."

"தெரியும் தம்பி! உங்க பேப்பரைப் பத்தி நான் கேள்விப் பட்டிருக்கேன். ஒரு சில தடவை படிச்சிருக்கேன். உங்க ஆசிரியரைக் கூட போலீஸ் கைது செஞ்சு சிறையில போட்டாங்கள்ல. கேஸ் லாம் கூட நடந்துச்சுல்ல. எனக்குக் கொஞ்சம் நாட்டு நடப்பு தெரியும் தம்பி. என்ன! எவ்வளவு பேர் பேசியும் உங்களைப் போல பேப்பர்கள் எவ்வளவோ எழுதியும் எதுவும் மாறமாட்டேங்குது. அதான் பிரச்னையே!"

ராஜ்குமார் ஆச்சரியப்பட்டான். ஒரு விபரமும் தெரியாத ஆடு மேய்க்கும் பாமர மனிதன் என்று முதலில் அவரைப் பார்த்ததும் நினைத்தான். அவர் நாட்டில் நடக்கும் அக்கிரமங்களையும் அதை

எதிர்த்து போராடுபவர்களையும் பற்றி தெளிவாக தெரிந்து வைத்திருப்பதும், அதைக்காட்டிலும் அவர் மக்கள் மேல் வைத்திருந்த அக்கறையும் கவலையும் அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. தன்னுடைய நல்லநேரம் இப்படிப்பட்ட ஒரு மனிதரை தான் அந்த ஆபத்தான சூழ்நிலையில் சந்தித்தது, என்று அவனுக்கு நிம்மதியாக இருந்தது. பெரும் அறிவாளிகளும், விஞ்ஞானிகளும் இயற்கையை அழிக்க துணை போகும்போது, பாமர மக்கள் என நினைக்கும் சிலர், சரியான புரிதலுடன் இருப்பது அவனுக்கு ஆச்சரியத்தையும் ஆறுதலையும் அளித்தது.

“சரி தம்பி! கொஞ்சநேரம் ஓய்வா இருந்துக்க!” என்ற பெரியவர் தன் ஆட்கள் வேலைகளை முடித்துவிட்டார்களா என்பதை பார்த்து வரப் போனார். அந்த பட்டியை சுற்றிவந்து பார்த்தார். ஒருவனிடம் “நாய்களுக்கு சாப்பாடு வச்சிங்களாய்யா?” என்று கேட்டார். சுமார் அரைமணி நேரம் சென்றதும் அவர் ராஜ்குமாரிடம் வந்தார். அப்போது சில இளைஞர்களும் அங்கே வந்து நின்றார்கள்.

“தம்பி! பசங்க கௌம்பிட்டாங்கய்யா! நீயும் கௌம்புய்யா. பாத்து போங்க. வழியில ஆட்கள் வந்தாலும் எதுவும் பேசவேண்டாம். உங்க பேச்சு வித்தியாசமா தெரியும். எங்க பசங்க மட்டும் பேசட்டும். சட்டைய பஸ் ஏறும் வரை போட்டுக்காதீங்க. கீதாரி மாதிரியே இருந்துக்குங்க.” என்றார். “டேய் தம்பிகளா, முதலில் இவரை பத்திரமா கொண்டுபோய் பஸ் ஏத்திவிட்டுட்டு அப்புறமா படத்துக்குப் போங்க!” என்றார் அக்கறையுடன்.

ராஜ்குமாரிடம், “இந்தா இதை பஸ்சுக்கு வச்சுக்க” என்று ஒரு ஐநூறு ரூபாயை கொடுக்க, அதை அவன் “என்னிடம் தேவையான பணம் இருக்குங்க அய்யா!” என்று சொல்லி மறுத்தான்.

“சரி! அப்ப நீ புறப்படுய்யா!” என்று அனுப்பி வைத்தார்.

ராஜ்குமாரும் அவரை வணங்கி நன்றிசொல்லிவிட்டுக் கிளம்பினான். சிறிது தூரம் வரை அவர்களுடன் அந்த நாய்கள் வந்துவிட்டு பிறகு திரும்பிச் சென்றன. சிறிது தூரம் நடந்தபிறகு ராஜ்குமார் அந்த இடத்தை திரும்பி நன்றியுடன் பார்த்தான். ஒரு சிறு விளக்கு வெளிச்சம் மட்டும் தெரிந்தது.

அவர்களுடன் ராஜ்குமார் இருளில் நடந்து போனான். அவன் ஏதும் பேசாமல் நடந்ததைப் பார்த்த ஒருவன், “அண்ணே! நீங்க கவலைப்படாதீங்க. உங்களை பத்திரமா பஸ் ஏத்திவிட்டுடுவோம்.” என்றான்.

"தம்பி! இங்கிருந்து பஸ் ஸ்டான்ட் எவ்வளவு தூரம்?" என்றான் ராஜ்குமார்.

உடனே ஒருவன், "நாம பஸ் ஸ்டான்ட் போகலை. கேரளா போற ரூட்ல, வழியில ஒரு இடத்தில் பஸ் நிக்கும். அங்கே உங்களை ஏத்திவிடுவோம். பஸ் ஸ்டாண்ட் போனா சிக்கல். இந்த இடத்தில உங்களுக்கு வந்த பிரச்னையும் இருக்காது."

அரைமணி நேரம் நடந்தார்கள். வழியில் வேகமாய் வந்த ஒரு கார் தன் வேகத்தைக் குறைத்து அவர்களை நோட்டமிட்டது. "அவங்க அந்த கீதாரிப் பசங்கப்பா!" என்றது ஒரு குரல்.

"இந்நேரத்துல எங்கலே போறீங்க?"

உடனே ஒருவன், "லட்சுமி தியேட்டருக்கு செகண்ட் ஷோவுக்கு போறோம்னே!" என்றான். பிறகு அந்தக் கார் வேகமாகப் போய்விட்டது. ராஜ்குமார் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான். இப்போது அவன் கறுப்பு பனியன் அணிந்து தலையில் ஒரு முண்டாசுடன் இருந்தான். முகமும் மூன்று நாட்கள் சவரம் செய்யாமல் முடியுடன் இருந்தது அவன் முகத்தின் சிகப்பு நிறத்தை மறைத்திருந்தது. அதனால் அவர்கள் முன் அவன் வித்தியாசமாக தோன்றவில்லை. அவர்கள் அவனை கீதாரிப் பையன் என்றே நினைத்துவிட்டார்கள்.

ஒரு சிறு கோவில் முன்பாக விளக்குக் கம்பத்தின் அடியில் சிலர், சுமார் பத்துப் பேர் மூட்டை முடிச்சுக்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோருமே கிராமவாசிகளாக இருந்தார்கள். எல்லாரும் பஸ்சுக்காகத்தான் நிற்கிறாங்கண்ணே" இதான் நான் சொன்ன பஸ் ஸ்டாப். நாம கொஞ்சம் தள்ளியே நிற்போம். பஸ் வந்ததும் போய் ஏறிக்கலாம். "கோபால் நின்றதும் எல்லோரும் அங்கேயே நின்றுகொண்டார்கள். அவன் சொல்லுக்கு அவர்கள் பணிந்து நடந்தார்கள். அவர்கள் வெகு எச்சரிக்கையுடனும், புத்திசாலித்தனமாகவும் நடந்துகொண்டார்கள். முன்பின் தெரியாத தனக்காக அவர்கள் காட்டிய பரிவும், பட்ட கஷ்டமும் அவனை நெகிழச் செய்தது. அவர்களிடம் ஒரு கட்டுப்பாடும், ஒழுங்கும் இருந்ததுடன் மனிதநேயமும் இருந்ததை ராஜ்குமார் கவனித்தான். சில நிமிடங்கள் அவர்கள் வெளிச்சத்தைத் தவிர்த்து நின்றார்கள். அப்போது தூரத்தில் பெரிய விளக்குகள் தெரிய ஒரு பேருந்து வந்தது. அது அருகில் வந்து நின்றதும் அவர்கள் அதை நோக்கி ஓடினார்கள். அங்கிருந்த அனைவரும் அடித்துப் பிடித்து பேருந்தில் ஏறினார்கள். அவர்கள் அப்படி ஏறியதும் ராஜ்குமாருக்கு வசதியாகவே

இருந்தது. பேருந்து உடனே கிளம்பியது. அவன் அந்தக் கீதாரி இளைஞர்களுக்கு கைகாட்டிவிட்டு உள்ளே போய் கிடைத்த இடத்தில் உட்கார்ந்து கொண்டான். பேருந்து உறுமியபடி வேகமெடுத்து ஓடியது.

பேருந்தில் வாடைக் காற்றைத் தடுக்க பக்கவாட்டில் திரையிடப்பட்டிருந்தது. மேலும் உள்ளேயும் வெளிச்சம் குறைவாகவே இருந்தது. நேரம் போகப் போக ராஜ்குமாருக்கு நிம்மதி ஏற்படத் தொடங்கியது. அந்தப் பெரியவரையும், இளைஞர்களையும் அவன் மிகுந்த நன்றியுடன் நினைத்துக்கொண்டான். அந்த அனுபவம் வாழ்நாளில் அவனால் மறக்கமுடியாத ஒன்றாகும். பின் நாளில் அவன் தன் அனுபவங்களை புத்தகமாக எழுதும் போது இந்த சம்பவம் அதில் முக்கிய இடம் பெறும்.

இதுபோன்ற எளிய மனிதர்களிடம் தான் மனிதத்தன்மை எஞ்சியிருக்கிறது. அவர்களால் தான் நாட்டில் இன்னும் மழை பெய்கிறது. சக மனிதர்களிடம் அன்பும், துன்பத்தில்இருப்பவர்களுக்கு உதவி செய்யும் எண்ணமும் கொண்ட மனிதர்கள் அரிதாகிவிட்ட காலத்தில், அந்தக் கீதாரி இளைஞர்கள் அவன் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள். தனக்கு அவர்கள் உதவி செய்தது மட்டும் அந்த மணல் வியாபாரிகளுக்குத் தெரிந்தால் அந்த இளைஞர்களுக்கு பெரும் ஆபத்து ஏற்படுவது உறுதி. அது தெரிந்தும், அவர்கள் தனக்கு உதவி செய்ததை அவன் மிகவும் பெரிதென எண்ணி, தான் மக்களுக்காக செயல்படுவதில் ஒரு ஊக்கமும் நம்பிக்கையும் பெற்றான். உலகில் தீயவர்கள் இருப்பது உண்மை என்பதைப் போல நல்லவர்களும் அங்கங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள்தான் இந்த உலகம் இருப்பதற்கும் இயங்குவதற்கும் உயிர் மூச்சாய் இருக்கிறார்கள்.

இந்த நினைப்புகளுடன், டிக்கட் வாங்கிய சில நிமிடங்களிலேயே அவன் அயர்ந்து தூங்கிவிட்டான். இடையில் பேருந்து இரண்டு இடங்களில் நின்றபோதும் அவன் விழிக்கவில்லை. காலையில் திருவனந்தபுரம் பேருந்தில் பஸ் நுழைந்தவுடன் தான் அவன் கண் விழித்தான். தான் பாதுகாப்பாக வந்து சேர்ந்ததை நினைத்து பெருமூச்சுவிட்டபடியே இறங்கினான். அப்போது தான், அவன் இன்னும் லுங்கியை கட்டிக்கொண்டிருப்பதை உணர்ந்து சிரித்தபடியே அதை கழற்றி தன் டிராயருடன் நின்றான்.

அங்கிருந்தபடியே Bossக்கு மொபைலில் பேசினான். Boss! இப்ப திருவனந்தபுரத்தில் இருந்து பேசுறேன். ராஜ்!

திருவனந்தபுரமா? உன்னை கேரளாவுக்குலாம் யார் போகச் சொன்னது?" அவர் பலமாகச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கமாட்டீங்க? அவனவன் உயிர் பிழைச்சதே பெரிய பாடாய்போச்சு!"

பிறகு "விபரமா நேரில் வந்து சொல்றேன்" என்று சொல்லிவிட்டு, இணைப்பை துண்டித்தான். ஆசிரியரின் குரலில் முதலில் பதற்றம் தெரிந்தது. பிறகு நிம்மதி தெரிந்தது. ராஜ்குமார் ஒரு லாட்ஜில் அறை எடுத்து குளித்து, சாப்பிட்டுவிட்டு, உடனே சென்னைக்குப் பஸ் ஏறினான்.

அவனுக்கு இன்னும் நிறையவேலைகள், சவாலான வேலைகள் இருந்தன.

# 24

**தா**துமணல் ஏற்றுமதி வியாபாரத்தின் மதிப்பு இன்னும் யாராலும் சரியாக மதிப்பிடப்படவில்லை. அதில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு மட்டுமே அந்த வியாபாரத்தின் அளவும் மதிப்பும் தெரியும். அவ்வளவு பிரமாண்டமான வியாபாரமாக அது கருதப்படுகிறது. அந்த பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு எடுபிடியாக இங்கே செயல்படுபவர்களே நூற்றுக்கணக்கான கோடிகளை சம்பாதித்து விடுகிறார்கள். இதனால் அதில் ஈடுபட்டுள்ளவர்கள் எல்லோருமே ஒரு வகையான வெறித்தனத்துடன் இயங்கிவருகிறார்கள். ஒரு மத யானையின் பலத்துடன் அந்த மாபியா செயல்படுகிறது. எதிர்ப்பவர்களையும், இடைஞ்சல் செய்பவர்களையும் அது யாராக இருந்தாலும் சரி; அவர்கள் அனுமதிப்பதில்லை. ஒரு பெரிய யானை எறும்பை நசுக்குவது போல அவர்களை ஈவு இரக்கம் பார்க்காமல் நசுக்கிவிடுவார்கள். அதே போல உலகின் மிகப்பெரிய கார்பரேட் நிறுவனங்கள் இந்தியாவில், தமிழ்நாட்டில் கட்டிடங்கள் கட்டும் தொழிலில் முதலீடு செய்தவுடனேயே ஆற்று மணலுக்கும் ஆபத்து வந்துவிட்டது. பாலாறு, தாமிரபரணியாறு, காவிரியாறு என தமிழகத்தின் இரத்த நாளங்களாக ஓடி உயிரூட்டிவரும் ஆறுகளின் மணல் கேட்க ஆளில்லாமல் கொள்ளை போக ஆரம்பித்தது. ஆண்டின் முன்னூற்று அறுபத்தி ஐந்து நாட்களிலும், இருபத்தி நான்கு மணிநேரமும் ஆயிரக்கணக்கான லாரிகள் ஆற்றுப்படுகையில் வரிசைகட்டி நின்று ஆற்றுமணலை வாரிக் கொண்டு போன வண்ணம் இருந்தன. உரிமம் பெற்ற ஒப்பந்தகாரர்கள் அனுமதிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் பல மடங்கு மணல் வெட்டி எடுத்தார்கள். அனுமதிக்கப்பட்ட ஆழத்தைவிட கூடுதலான ஆழத்துக்கு வெட்டியதால் ஆறுகளில் பெரும் பள்ளங்கள் ஏற்பட்டன. சோதனை செய்ய வந்த அதிகாரிகள் தக்கபடி கவனித்து திருப்பி அனுப்ப பட்டார்கள். எதிர்த்துக் கேட்டவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். சிலர் லாரி ஏற்றியே நசுக்கிக் கொல்லப்பட்டார்கள். 2014ஆம் ஆண்டில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியில் நடந்த கொலைகள்

அறுபத்தி ஒன்பது. அதில் பெரும்பாலானவை மணல் கொள்ளை விவகாரத்தில் நடந்தவைதான். ஓய்வுபெற்ற ஆசிரியர், தாசில்தார், கிராம அதிகாரி, சமூக சேவகர் எனப் பலரும் கொலையுண்டவர்களில் அடக்கம். சில நாட்கள் இந்தக் கொலைகள் பற்றி செய்தித் தாள்களில் பார்க்கலாம். அப்புறம் வழக்கம் போல எல்லாம் தொடர்ந்து நடக்கும்.

தாதுமணல் ஆலைகள் மேல் பொது நல வழக்குகள் தொகுக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுகளால் அவை மூடப்பட்டாலும், சில மாதங்களில் அவை மறுபடியும் புகையைக் கக்கிக்கொண்டு சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தன. இது மக்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. ஆலைக்குத் தொடர்புடைய பிரமுகர்கள் மத்திய மாநில அமைச்சர்கள், கவர்னர்களுடன் விருந்து. சாப்பிட்டுப் பேசி மகிழும் படங்கள் பல பத்திரிகைகளில் சகஜமாக வெளிவந்தன. சிலர் அரசின் மதிப்புக்குரிய பிரமுகர்களாகவே மாறிவிட்டார்கள். காற்றில் கந்தகம் முழுவதும் கலந்து வீசியது. வயல்கள், தோட்டங்களில் நச்சுப் புகை படிந்து தூளாக தெரிந்து துயரப்படுத்தியது. உப்பளங்களிலும் அது படிந்து உப்பு நிறம் கெட்டது. வெளியில் நடந்த ஒரு சில கொலைகள் மட்டுமே பத்திரிகைகளில் வந்து பரபரப்பை ஏற்படுத்தின. ஆனால் ஆலைகளின் உள்ளே உலை வெடித்துவிட்டது. நச்சுப்புகை வெளியேறியது. அமிலத் தொட்டி ஒழுகிவிட்டது என்ற பல பல காரணங்களால், நடக்கும் பல கொலைகளும் விபத்து மரணங்களாக மாற்றப்பட்டு வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டன. இது போல் செய்துவிட்டு அவற்றை மறைப்பதற்கும், மக்கள் அவற்றை மறக்கச் செய்வதற்கும் ‘மது’ பெரிதும் உதவி செய்தது.

சிறுவர்களுக்கான சீரியல்களில் மந்திரவாதியின் பிடியில் சிக்கி மக்கள் தங்களை மறந்து இருப்பதுபோல மக்கள் மதுவின் பிடியில் இருந்தார்கள். தமக்கு நடக்கும் தீமைகளை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

பாரம்பரியத் தொழிகளான மீன்பிடித்தல், விவசாயம் இரண்டையும் மணல் வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமாக சிதைத்தது. இருக்கும் நில வளங்களையும், நீர் வளங்களையும் நிரந்தரமாக அழிக்கும் செயல் நடக்கிறது. கடலையும் நஞ்சாக்கி வருகிறார்கள். இதன் முடிவு தான் என்ன? இந்த விபரங்களை டேவிடுடன் பேசிய ராஜ்குமார் நடக்கும் மாபெரும் அழிவைத் தடுக்க தன்னால் ஆனதை செய்துவிட வேண்டும் என்று உறுதியாக நினைத்தான்.

சென்னை வந்து இறங்கியதும் சூடாக ஒரு டீ குடித்தான். உடனே அவன் மூளை சுறுசுறுப்பானது. அவனுக்கு முந்தைய இரண்டு நாள்

நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. உடனே ஆசிரியரை மொபைலில் அழைத்தான்.

"ஹலோ ராஜ்! வந்துட்டியா! ரொம்ப சீக்கிரமா திரும்பிட்டபோல! போன வேலை சரியா நடக்கலியா?"

"இல்லை பாஸ்! போன வேலை நானே எதிர்பாக்காத அளவில் ரொம்ப நல்லாவே நடந்துருச்சு. சீக்கிரமாவே முடிஞ்சுடுச்சு! உடனே கிளம்பிட்டேன்."

"பாஸ் நமக்குத் தெரிஞ்சது ஒரு பனிப்பாறையின் நுனி போன்றதுதான். பனிப்பாறை வெளியே தெரியாமல் இருக்கு!"

"அப்படியா! நானும் அப்படி நெனச்சுத்தான் பயந்தேன்! நான் பயந்தது சரியா இருக்கு!"

"பாஸ்! நான் சரியா பத்தரை மணிக்கு ஆபீஸ்ல உங்களை பாக்குறேன். எல்லா விவரமும் நேர்ல சொல்றேன்."

"நோ! ராஜ்குமார்! நீ ஆபீசுக்கு வரவேண்டாம். நாம ஏற்கெனவே கள்ளச்சாராயம் பற்றி எழுதுன ஃபாலோ அப் ஆர்டிகிள் சரியான படி சரியான ஆட்களை காயப்படுத்திருக்கு. அவங்க இதை எழுதியது நீதான் என்று சந்தேகித்து உன்னைப் பற்றி விசாரிக்கிறார்கள்."

"யார் விசாரிக்கிறார்கள்? கட்சிக்காரர்களா? போலீசா?"

"போலீஸ்தான். அதிகாரி சிவசூர்யன் என்னிடம் போனில் பேசினார். நான் நீ நம் பத்திரிகையிலிருந்து நின்றுவிட்டதாக சொல்லியிருக்கிறேன். அதை நீ எழுதவில்லை என்றும் வேறொருவர் தான் அதை எழுதினார் என்றும் சொல்லிவிட்டேன்.

கட்சிக்காரர்களும் மப்டி போலீசும் ஆபீசை சுத்தி அப்பப்ப வந்துட்டுப் போறாங்க!"

"அவர் அதை நம்பிவிட்டாரா?"

"அவர் அனுபவசாலி! நம்ப மாட்டார். அதனால்தான் உன்னை வரவேண்டாம் என்று சொல்கிறேன். கட்டுரையை நீ இமெயிலில் எனக்கு அனுப்பிவிடு. முக்கியமான பேப்பர்களை, ஆதாரங்களை பேங்க் லாக்கரில் வைத்துவிடு. உன்னுடைய இந்த நம்பரை கொஞ்ச நாளைக்கு பயன்படுத்தாதே. பாய் கடையில் சொல்லி வேற சிம் வாங்கிக்க. இனிமேல் அதுலயே பேசு. மேட்டரை எப்ப அனுப்புற?"

"பாஸ்! இந்த மேட்டர்ல நல்ல தம்பி சம்பந்தப்பட்டிருக்கார். ஆமாம்; கான்ட்ராக்டர் நல்லதம்பிதான். அதனால ஒரு ரெண்டு நாள் மட்டும் டைம் குடுங்க. அவரைப் பத்தியும் விசாரிச்சு சேர்த்து

ஸ்ட்ராங்கா எழுதிக் குடுக்கிறேன்." என்றவன் சுடலைமுத்துவை பற்றிச் சொல்லி அவரை அடைத்து வைத்திருப்பதைப் பற்றியும் சொன்னான். "அவரை காப்பாற்ற வேண்டும் பாஸ்" என்றான்.

"சரி! நீ உடனே சிம்மை மாத்திக்க!"

"நான் அவரை காப்பாற்ற முயற்சி செய்கிறேன். லோக்கல் இன்ஸ்பெக்டர்கிட்ட பேசுறேன். பை!"

அத்துடன் பாஸ் முடித்துக் கொண்டார்.

# 25

**ரா**ஜ்குமார் தன் லேப்டாப்பை எடுத்து திறந்து எழுத ஆரம்பித்தான். கோர்வையாக எழுதினான். தூத்துக்குடிப் பக்கம் உள்ள கடல் மண்ணின் தன்மை அதில் உள்ள கனிமங்கள் விபரம். அவற்றைப் பிரித்தெடுக்கும் போது கதிரியக்கம் வெளியாவது, அது மக்களிடையே புற்றுநோயை உருவாக்குவது அதனால் அவர்கள் படும் துயரம் போன்றவற்றை முதலில் விரிவாக எழுதினான். பிறகு அந்த மண்ணுக்கு வெளிநாட்டு கம்பெனிகள் கொடுக்கும் விலை, அந்தப் பணத்தாசையில் விலைபோகும் உள்நாட்டு பிரமுகர்கள் என எல்லாவற்றையும் விபரமாக எழுதினான். உரிய ஆதாரங்கள் மக்களின் கவலை மிகுந்த பேச்சுக்கள், கோரிக்கைகள் முதலியவற்றை கட்டுரையில் ஏற்றினான். புற்றுநோய் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் பெரியவர்களையும் குழந்தைகளையும் பற்றி புகைப்படங்களுடன் விபரங்கள் சேர்த்தான். மீண்டும் சரி பார்த்த போது அதில் ஏதோ குறை இருப்பதாக அவனுக்குப்பட்டது. யோசித்த போது நல்லதம்பிக்கும் மணல் கொள்ளைக்கும் இருந்த தொடர்பை மட்டும் தான் எழுதியிருப்பதைக் கண்டுபிடித்தான். அதே சமயம் நல்லதம்பியின் தொடர்புகளை ஆதாரங்களுடன் கட்டுரை விளக்கவில்லை என்பதை உணர்ந்தான். நம்மிடம் பெரிய மனிதர்கள், தலைவர்களாக நடக்கும் பலர் எப்படி இந்தக் கொள்ளைக்கு உதவுகிறார்கள் என்பதையும் மக்களுக்குத் தெரிவிப்பது தன் கடமை என்று அவன் நினைத்தான். எனவே தான் ஆசிரியரிடம் ஏற்கெனவே சொன்னதுபோல, நல்ல தம்பியைப் பற்றி முழுவதுமாக விசாரித்துவிட்டே கட்டுரையை அனுப்பலாம் என்று முடிவு செய்தான். அவரின் பின்னால் இன்னும் பெரிய திமிங்கிலங்கள் நிச்சயம் இருக்கும் என அவனுக்குத் தெரியும்.

அரசாங்கத்துறை ஒன்றின் பொதுப்பணித்துறையில் இருந்த தன் நண்பன் ஒருவனிடம் நல்லதம்பி பற்றிக் கேட்டான். “நல்லதம்பியா! அவர் தான் இப்ப தமிழ்நாட்டில் ரொம்பப் பெரிய கான்ட்ராக்டர். நடக்குற பெரிய ப்ராஜக்ட் எல்லாமே அவரோடதுதான்பா. பெரிய

ஆளுங்க எல்லாமே அவர் கையில தான் இருக்காங்க. மணல் கான்ட்ராக்டல கூட அவர் பேர்தான் அடிபடுது. ஹைவே டோல்கூட அவரோடதுதான். அப்படித்தான் பேச்சு. பல பேர்ல அவர் பிசினஸ் பண்றார். ஏன்டா எதுனா ரெகமண்டடேஷன் வேணுமா?"

"இல்லை. இது வேற விஷயம்மா! நேர்ல சொல்றேன்."

"அவர் அட்ரஸ் தெரியுமா?"

"அவர் வீடு பெசன்ட் நகர் 3வது தெரு. அங்கே கேட்டாலே சொல்வாங்க!"

கொஞ்சம் பாத்து விசாரிச்சுக்கடா! டேக் கேர், பெரிய இடம்!

"ரொம்ப தேங்ஸ்டா!"

"அப்புறம் நைட் எட்டு மணிக்கு அண்ணாசாலை புகாரிக்கு வந்துடு. சாப்பிட்டுட்டே பேசலாம். முடிஞ்சா நைட் ஷோ எதுனா போகலாம். பை!"

மறுநாள் காலையில் ராஜ்குமாரின் பைக் பெசன்ட் நகரில் மூன்றாவது தெருவிலிருந்த ஒரு டீ ஸ்டாலில் நின்றது. நல்லதம்பியின் பிரமாண்டமான பங்களா அங்கிருந்து பார்த்தால் தெளிவாக தெரிந்தது. வடை தின்று, டீ குடித்தபடியே அங்கிருந்து வெளியேறும் கார்களைக் கவனித்தபடி நின்றான். டீ குடித்த பின் பேப்பர் படித்தான். அப்படியே சுமார் ஒரு மணிநேரம் போனது. அப்போது அவன் எதிர்பார்த்தபடியே நல்லதம்பியின் வெள்ளை ஸ்கார்பியோ கேட் திறந்து வெளியேறியது. உடனே ராஜ்குமார் தன் பைக்கில் அதை பின்தொடர்ந்தான். கார் ஒரு பிரபல ஹோட்டலுக்குப் போனது. அந்த ஹோட்டலில் ஒரு மணிநேரம் இருந்தபிறகு மொபைலில் பேசியபடியே வெளியே வந்தார். பிறகு செக்ரடேரியட்டுக்குப் போனது.

செக்ரடேரியட்டிலிருந்து மதிய உணவு நேரத்துக்கு நுங்கம் பாக்கத்தில் ஒரு வீட்டுக்குப் போனது அந்த வீட்டிலேயே மாலை முழுவதும் இருந்தார். இரவு 9 மணிக்குத் தான் பெசன்ட் நகருக்கு மறுபடி திரும்பினார். மறுநாள் காலையில் ஹோட்டலுக்குப் போய்விட்டு ஒரு மணிநேரம் கழித்து அங்கிருந்து ஈ.சி.ஆர் சாலையில் வேகமெடுத்தது. தொடர்ந்து சிறிது தூரம் இடைவெளி விட்டு ராஜ்குமார் அந்த ஸ்கார்பியோவை பின் தொடர்ந்தபடி இருந்தான். அவன் அவர் போன நுங்கம்பாக்கம் வீட்டின் முகவரியை தன் டைரியில் குறித்துக்கொண்டான். அவன் டி ஷர்ட் ஜீன்சில் இருந்ததுடன் முகம் தெரியாதபடிக்கு ஹெல்மட் போட்டிருந்தான். ஈசிஆர் சாலையில் பெபிள் பீச், ஷெல் பீச் என்று வரிசையாக

பக்கவாட்டில் கடலை நோக்கிய சாலைகள் வந்தன. அவற்றைக் கடந்து போன ஸ்கார்பியோ திடீரென்று வேகம் குறைந்து ஒரு பீச் நோக்கிய சாலையில் திரும்பி குறைவான வேகத்திலே போனது. ராஜ்குமார் தொடர்ந்து போகாமல், பைக்கை திருப்பத்திலேயே நிறுத்திக்கொண்டான். அங்கிருந்தபடியே ஸ்கார்ப்பியோ எதுவரை போகிறது என்று கவனித்தான். அது ஒரு இடத்தில் ஒரு வீட்டின் முன் ஓரம் கட்டி நின்றது. அதிலிருந்து நல்லதம்பி இறங்கிப் போனார். சில நிமிடங்கள் கழித்து ராஜ்குமார் தன் பைக்கை ஸ்டார்ட் செய்து, நேராகப் போய் ஸ்கார்பியோவை கடந்து கடற்கரையை நோக்கி வேறு ஏதோ வேலையாகப் போவது போல் வேகமாக, அதே சமயம் நல்லதம்பி எந்த வீட்டுக்குப் போகிறார் எனக் கவனித்தபடியே போனான். போய் தெருமுனையில் திரும்பி அடுத்த சாலைக்குப் போய் ஒரு மர நிழலில் நின்று சிறிது யோசித்தவன், அங்கிருந்து கிளம்பி ஈசிஆர் சாலையில் ஒரு சிறிய ஓட்டலுக்குப் போய் காபி ஆர்டர் செய்து குடித்தான். சுமார் ஒரு மணி நேரம் கடத்திவிட்டு, மறுபடியும் ஸ்கார்பியோ நின்ற தெருவுக்கு வந்தான். இப்போது ஸ்கார்பியோ அங்கு இல்லை. நல்லதம்பி இங்கு யார் வீட்டுக்கு வந்துவிட்டு போகிறார் என்று தெரிந்து கொள்ள அவன் விரும்பினான்.

பைக்கை சற்றுத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு சாலையிலிருந்து இறங்கி கவனித்தான். பல வீடுகள் புதிதாக அங்கே கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. எல்லாமே தனித்தனி வீடுகள், பங்களாக்கள். அவற்றில் ஒன்று பெரியதாகவும் அழகாகவும் முன்புறம் நிறைய இடம் விட்டும் தெரிந்தது. அவன் முதலில் வேறு ஒரு வீட்டுக்குப் போய் எதையோ விசாரிப்பது போல் பார்த்தான். பிறகு அந்தப் பெரிய வீட்டுக்குப் போனான். செக்யூரிட்டி பெரியவர் அவனை நோக்கி வேகமாக வந்தார்.

“யார் வேணும்?”

“ஐயா! இங்கே ஜட்ஜ் ராமநாதன் வீடு கட்டுறாரே அது இந்த வீடுதானே!”

“இல்லை சார்! இது வேற ஒருத்தர் வீடு. நீங்க அடுத்த தெருவில் போய் கேளுங்க!”

ஒரு வேளை அங்கே இருக்கலாம். எல்லாமே இங்கே பெரிய ஆளுங்க வீடுதான்.

“ஐயா! இந்த வீடுன்னு தான் சொன்னாங்க!” அவன் தயங்கியபடிபேசினான்.

“இல்லை சார்!” என்றவர் சற்று தாழ்ந்த குரலில் “இது மினிஸ்டர் வீடுங்க.”

கான்ட்ராக்டர் நல்லதம்பி தான் கட்டுறார். இப்பத்தான் அவர் கூட வந்துட்டுப் போனார்.”

“ஓ! மினிஸ்டர் வீடா! அதான் சூப்பரா இருக்கு. உள்ளே பார்க்கலாமா?”

“பாருங்க சார்! அதில என்ன இருக்கு?” பெரியவருக்கு அவன் அவரை மரியாதையாக ஐயா ஐயா என்று அழைத்தது பிடித்துவிட்டது. மேலும் அவன் ஏதோ தேடுவது போல பர்சை விரித்தபோது தெரிந்த ரூபாய் நோட்டுகளும் அவருக்கு பிடித்துப்போனது. ஏதாவது தேறும் என்று நினைத்தார்.

அவரைப் பார்க்க அவனுக்கும் பரிதாபமாக இருந்தது.

அவன் அவருடன் பேசியபடியே உள்ளே நுழைந்தான். உள்ளே வீடு பிரமாண்டமாக இருந்தது. “உஷ்! என்ன வெயில்! நாக்கை வறட்டுது. அவரிடம் கொஞ்சம் தண்ணீர் கொடுங்க ஐயா!” என்று கேட்டான். அவர் தண்ணீர் பாட்டிலை எடுக்கப் போனார். அவர் திரும்பி வருவதற்குள் அவன் தன் மொபைலால் வீட்டை சில படங்கள் எடுத்துக்கொண்டான். “மொத்தம் நாலு பெட்ரூமுங்க. கீழே ரெண்டு மேல ரெண்டு. வாங்க பார்க்கலாம்” என மாடிக்கு அழைத்துக் காட்டினார்.

“வீடு அரண்மனையாட்டம் இருக்குது ஐயா!” என்றவன் ஒரு நூறு ரூபாய் நோட்டை அவரிடம் கொடுத்துவிட்டு கிளம்பினான். பெரியவர் மிகவும் மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்டார். அவர் திரும்பியதும் வீட்டின் முகப்பை சில படங்கள் எடுத்துக்கொண்டு பைக்கை நோக்கி நடந்தான். சாலையில் நின்று அந்த வீட்டை ஒரு படம் எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான். நேராக பாய் கடைக்கு வந்து புது சிம் ஒன்று வாங்கிக் கொண்டான்.

அன்று மாலை நீண்டநேரம் உட்கார்ந்து லேப்டாப்பில் வேலை செய்து கட்டுரையை தயார் செய்தான். அன்று இரவு, அமைச்சருக்கு ஈசிஆர் சாலையில் நல்லதம்பி பங்களா கட்டிக்கொடுப்பது, நல்லதம்பி அமைச்சரின் துறையில் பெரிய பெரிய வேலைகளை ஒப்பந்தம் பெற்று செய்து வருவது ஆகியவற்றையும், நல்லதம்பி லாட்ஜில் யாரோ ஒருவரை சந்திப்பது பற்றியும், மணற் கொள்ளையுடன் இணைத்து ஒரு பெரிய கட்டுரை தயாரித்து ஈமெயிலில் ஆசிரியருக்கு அனுப்பினான். இரவு பதினொரு மணிக்கு ஆசிரியர் அவனை

மொபைலில் கூப்பிட்டார். புது நம்பர் ஆக்டிவேட் ஆகாததால், பழைய நம்பரிலேயே அவர் கூப்பிட்டிருந்தார். "ராஜ், ஆர்ட்டிகில் பிரமாதமா வந்திருக்குப்பா. வர்ர திங்கள்கிழமை அடுத்த இதழ் நியூஸ் ஸ்டான்டுகளில் கிடைக்கும். அதில் கவர் ஸ்டோரி இதுதான். திங்கள் கிழமை இங்கே ஒரே ரகளை, கலவரமா இருக்கும். நீ ஒரு பதினைஞ்சு நாள் பெங்களூருக்கு போயிடு. இங்கே என்னைத் தேடுவாங்க. அதனால நீ அங்கே இருக்குறதுதான் நல்லது. இங்கே நிலைமை கொஞ்சம் கூல் ஆனதும் நீ திரும்ப வரலாம். என்ன?"

"சார்! என்ன நீங்களுமா? இதுக்கெல்லாம் பயந்தா எப்படி சார்?"

ஆசிரியர் சிரித்தார். "ஏய்! இது பயம் இல்லைப்பா. முன்னெச்சரிக்கை, தற்காப்பு. நாம எழுதுனதை பிரசுரிக்கலைன்னா தான் அது பயம்; இது பயமில்லை. எதிர்த்தாக்குதலுக்கு தயாராகும் உத்தி. நீ சின்னப் பையன். வேகம் மட்டும் இருக்கு. நான் கொஞ்சம் அனுபவசாலி. அதுதான் வித்தியாசம். ஓ.கே. டேக் கேர்!" பை தபை, மறுபடியும் வாழ்த்துக்கள்!" அவர் குரலில் மிகுந்த உற்சாகம் தெரிந்தது.

ஆசிரியர் என்னதான் சொன்னாலும். அவன் சென்னையிலேயே இருப்பது என்று முடிவு செய்தான். என்ன தான் நடக்கிறது என்று பார்க்க அவனுக்கு மிகவும் ஆசையாக இருந்தது. வைத்த வெடி எப்படி வெடிக்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரு நண்பனை வரச்சொல்லியிருந்தான். அவனுடன் புகாரி ஹோட்டலில் போய் நன்றாக பரோட்டாவும் மட்டன் சாப்சும் சாப்பிட்டுவிட்டு சத்யத்தில் Exodus பார்த்துவிட்டு வந்து நிம்மதியாகத் தூங்கினான். எவ்வளவோ ஆங்கிலப்படங்கள் வந்தாலும் அவற்றின் டைட்டில் ஒரு படம் போல் இன்னொன்றில் வருவது கிடையாது. ஒவ்வொன்றிலும் வித்தியாசம் இருக்கும். எப்படி இது போல எல்லாம் தயாரிக்கிறார்கள் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது

❍

# 26

அன்று ப்ரியா கல்லூரிக்கு வரவில்லை. சதீஷ் நண்பர்களிடம் கேட்டான். யாருக்கும் காரணம் தெரியவில்லை. அவளிடமிருந்து இதுவரை ஒரு போன்கூட வரவில்லை. வகுப்பு முடிந்ததும் சதீஷ் அவளுக்கு போன் செய்தான். இரண்டு முறை ரிங் போயும் அவள் எடுக்கவில்லை. மூன்றாவது முறைதான் அவள் எடுத்துப் பேசினாள். "ஹலோ சதீஷ்!" என்ற குரலில் அதிக சோர்வு தெரிந்தது. அவள் எப்போதும் உற்சாகமாக இருப்பவள். இந்த முறை போல் சோர்வாக எப்போதும் பேசியதில்லை. சதீஷுக்கு கவலை ஏற்பட்டது.

"ப்ரியா! என் காலேஜுக்கு வரலை? ஒண்ணும் சொல்லவேயில்லை!"

"போன் கூடப் பண்ணலை!"

"ஆமாம் சதீஷ். கொஞ்சம் உடம்புக்கு சரியில்லை. ரெண்டு நாள் கழிச்சு வரேன்." அவள் மூக்கு சிந்தும் சத்தம் கேட்டது. அவன் சந்தேகப்பட்டான். அவள் அழுது கொண்டிருப்பது போல தோன்றியது. ஏதோ பிரச்னை, எப்படி உடம்புக்கு சரியில்லை என்றாலும் சமாளித்துக்கொண்டு கல்லூரிக்கு வருபவள் அவள். அவன் சற்று யோசித்தான்.

"ஓகே. ப்ரியா! கிளாஸ் முடிஞ்சதும் நான் மறுபடி பேசுறேன். டேக் கேர்!"

அவள் இல்லாமல் அவனுக்கு கல்லூரியில் இருப்பு கொள்ளவில்லை. மற்ற நண்பர்களிடமும் அவன் எதுவும் சொல்லவில்லை.

வகுப்புகள் முடிந்தவுடன் மற்ற நண்பர்களிடம் சொல்லிவிட்டு சதீஷ் மட்டும் தன் காரில் ப்ரியா வீட்டுப் பக்கம் விரைந்தான். தெரு முனையில் சாலையோரம் காரை நிறுத்திக்கொண்டு அவளை போனில் கூப்பிட்டான். ஓரிரு முறைகள் அவள் வீட்டுக்கு நண்பர்களுடன் அவன் போயிருந்தாலும், இந்த சமயம் அவன் போக வேண்டாம் என்று நினைத்தான்.

"ப்ரியா! நான் இப்போ உங்க வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் மெக்டொனால்ட் பக்கத்தில் தான் காரில் இருக்கிறேன். நீ உடனே வா!"

சரியாக பத்து நிமிடங்களில் அவள் அங்கு வந்தாள். அவள் காரில் ஏறியதும் அவன் காரை கடற்கரையில் காந்தி சிலை அருகில் கொண்டு போய் நிறுத்தினான். வழக்கமாக 'ஹாய்' அல்லது 'டேய்' என்ற படியே வரும் உற்சாகம் அவளிடம் அன்று இல்லை.

"என்ன ப்ரியா! எதுவும் பிரச்னையா?" என் கிட்டே சொல்ல லாம்னா, சொல்லு! நான் உதவி செய்ய மாட்டேனா?"

அவள் சில வினாடிகள் அமைதியாக இருந்தாள். "வா! கீழே போகலாம்!"

அவனை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள். சிமெண்ட் சுவரின் படிகளில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் கடலையே பார்த்தபின், உட்கார்ந்திருந்தாள். அவளின் கண்கள் கலங்கியிருந்தன. கடலில் அன்று அலைகள் அதிக உயரமாகவும், சீற்றமாகவும் வந்தன.

"எங்க அப்பா எனக்கு கல்யாணம் செய்ய முடிவு செஞ்சுட்டார். அவள் குரலில் எந்த உணர்ச்சியும் இல்லை."

"என்ன ப்ரியா! இது நேச்சுரல் தானே! இதில என்ன தப்பு?" என்றவன் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். "மாப்பிள்ளையை உனக்குப் பிடிக்கலையா?"

"ஒரு மாப்பிள்ளையை பேசியிருக்காங்க போல. அவங்க முதலில் ஒப்புக்கொண்டவர்கள், பிறகு மறுத்து என்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டார்களாம்."

சதீஷ் அமைதியாக இருந்தான். பிறகு, "உனக்கு என்ன குறை, ப்ரியா? படிச்சவள், அழகு வசதி எல்லாம் இருக்கு! ஏன் வேண்டாம்னு சொன்னாங்க?"

"எல்லாம் சரியாத்தான் இருக்கு. ஆனால் முக்கியமான ஒண்ணு சரியா இல்லையாம். எங்க அம்மாவும், அப்பாவும் வேற வேற ஜாதியாம். எங்க அம்மா, அப்பாவுக்கு முறையான மனைவி இல்லையாம். அது தெரிஞ்சதனால மாப்பிள்ளை வீட்ல மறுத்துட்டாங்களாம்."

மனிதன் நிலவில் இறங்கிவிட்டான். புதன் கிரகத்துக்கு போய் இறங்கப் போகிறான். ஆனாலும் திருமணம், பெண் என்று வரும் போது நம் ஆட்கள் காலங்காலமாக இருந்து வரும் எண்ணங்களுக்கு கட்டுப்பட்டுத்தான் நடக்கிறார்கள். சாதியை இவர்களால் மறக்க முடியவில்லை. அதன் கட்டுப்பாடுகளில் இருந்து வெளியே வர முடியவில்லை.

அவள் லேசாக அழ ஆரம்பித்தாள். "அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நேத்து முழுவதும் ஒரே சண்டை. அம்மா அழுதுட்டே இருக்காங்க. அதான் அம்மாவுக்கு துணைக்கு நானும் வீட்டிலேயே இருந்துட்டேன். அம்மாதான் பாவம். ரொம்ப கஷ்டப்படுறாங்க!"

"சரி! உனக்கு இந்த விஷயம் தெரியாதா?"

"ஓரளவு தெரியும். அவங்க வீட்டில் பெண் குழந்தைகள் இல்லையாம். அதனால அப்பா என் மேல ரொம்ப பிரியமா இருப்பாங்க. அப்பா உறவுல என்னை ஏத்துக்கமாட்டாங்களாம். அம்மா வீட்டில் ஆரம்பத்திலேயே பகையாகிடுச்சாம். அப்பாவும் ரொம்பவே கவலைப்படுறாங்க. வீடே சோகமாயிடுச்சு சதீஷ்!"

ப்ரியா நண்பர்களிடம் மிகுந்த பாசம் காட்டிப் பழகுவதன் காரணம் சதீஷீக்கு இப்போதுதான் தெளிவாக விளங்கியது. அவள் பாசத்துக்காக ஏங்குபவள் என்பதை புரிந்துகொண்டான்.

திடீரென்று சதீஷ் சிரித்தான். "ஹூசு, ஹூசு!"

"ஏன் சிரிக்கிறே சதீஷ்?" புரியாமல் கேட்டாள் ப்ரியா.

"இது ஒரு பெரிய விஷயமே இல்லை. இந்த விஷயத்தில் நீயும் நானும் ஒரே நிலைமையில் தான் இருக்கிறோம். We are sailing in the same boat. "அதுதான் சிரித்தேன்."

"ஒரே படகிலா! எப்படி சதீஷ்?"

"என்னோட அப்பாவுக்கும் ஊரில் இன்னொரு குடும்பம் இருக்கிறது. சென்னையில் என் அம்மாவைக் காதலித்து திருமணம் செஞ்சுக்கிட்டாராம். நான் ஊரில் அந்த வீட்டுக்கும் போய் வருவேன். அங்கே ரெண்டு அக்கா இருக்காங்க. பிரியமா இருப்பாங்க. எதுவும் பிரச்னை ஆகலை. அம்மாவும் வேற ஜாதிதான்."

"நீ லக்கி பாய் சதீஷ். எங்க சொந்தத்தில் தான் பிரச்னை பண்றாங்க." என்றவள் திடீரென்று உடைந்து கேவி அழ ஆரம்பித்தாள். சதீஷுக்கும் கவலையாகிவிட்டது. "சரியாயிடும் ப்ரியா. அழாதே! ரெண்டு நாள் போனால் இதெல்லாம் மறந்துடலாம்."

திடீரென்று ப்ரியா "சதீஷ். நான் உன் ப்ரெண்ட் தானே. என்னைப் பற்றி உனக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். நான் உன் கூட மட்டுமே நெருங்கிப் பழகுவேன். நீ வரலைன்னா நான் எந்த பார்ட்டிக்கும் போகமாட்டேன். பார்ட்டிலயும் நான் ட்ரிங்க்ஸ் எடுத்துக்க மாட்டேன். சரியா?"

சதீஷ் தலையசைத்தான் 'ஆம்' என்று. நீதான் என்னோட பெஸ்ட் ப்ரெண்ட்!"

“நீ என்னை கல்யாணம் செஞ்சுக்குருவியா?”

சதீஷ் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. திணறிப் போனான்.

“சொல் சதீஷ்! நீ என்னை கல்யாணம் செஞ்சுக்குவியா?”

அவள் மீண்டும் கேட்டாள். அவள் கண்கள் அவனைக் கூர்ந்து கவனித்தன.

“கொஞ்சம் டைம் குடு ப்ரியா! யோசிச்சு சொல்றேன்.”

“பார்த்தியா! நீயே யோசிக்கணும்னு சொல்றியே!” அவள் அழுதாள்.

“ஏய் லூசு! யோசிக்கணும்னு தானே சொன்னேன். மாட்டேன்னா சொன்னேன்! கொஞ்சம் அழாமல் தான் இரேன்.”

அவள் இப்போது அழவில்லை. தெளிவாக இருந்தாள்.

அவன் யோசித்தான். ப்ரியா தன்னுடன் வராமல் ஒரு நாள் ராஜேஷுடன் காரில் போனதும் அவன் கோபப்பட்டது அவன் நினைவுக்கு வந்தது. தான் வரவில்லை என்றால் அவளும் எந்த பார்ட்டி, சினிமாவுக்கும் போகமாட்டாள் என்பதும் அவனுக்கு இப்போதுதான் உறைத்தது. தான் புதுக் கார் வாங்கியதே அவளுக்காகத்தான் என்பது அவன் மட்டுமே அறிந்த விஷயம். அவள் எல்லா நண்பர்களுடனும் பழகினாலும் யாருடனும் வரம்பு மீறவில்லை என்பது அவனுக்குத் தெரியும். மேலும் குரூப் போட்டோவில் கூட அவன் பக்கத்தில் அவன் கையை கோர்த்தபடி தான் அவள் நின்றிருந்தாள். அந்த போட்டோவில் ப்ரியாவைப் பார்த்த அவன் அம்மா “யார்டா இந்தப் பொண்ணு? உன் கேர்ள் ப்ரண்டா? சூப்பரா இருக்காளே! வீட்டுக்கு ஒரு நாள் அழைச்சுட்டு வாடா!” என்றதும் அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது. ப்ரியாவின் நல்ல இனிமையான இயல்புகள் வரிசையாக ஒவ்வொன்றாக அவன் நினைவுக்கு வந்தன. அவள் எல்லோருக்கும் பிடித்தமான இனிய பெண்.

அவள் கண்களைத் துடைத்தான். “நான் கடைசி வரையிலும் உன் நண்பனாகவும், துணைவனாகவும் இருப்பேன். நீ கேட்டபடி நான் உன்னை கல்யாணம் செஞ்சுக்கிறேன். அடுத்த வாரம் உன்னை எங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன். ஓ.கே!”

அவளால் நம்பவே முடியவில்லை. Really? Are you serious, suresh?

'Yes! Priya! hundred percent sure' என்று அவன் கைகளை உறுதியாகப் பற்றினான். பிறகு அப்படியே சிறிது தூரம் நடந்துவிட்டு காருக்குத் திரும்பி வந்தார்கள். சதீஷ் அவளை வீட்டிற்கு அருகில் கொண்டுபோய் விட்டுவிட்டு தன் வீட்டுக்குப் போனான்.

அவள் காரிலிருந்து இறங்கும் போது "ப்ரியா! நீ கவலைப் படாமல் மகிழ்ச்சியாக இருக்கணும். எங்க வீட்டில் அம்மாவும் அப்பாவும் கண்டிப்பா என்னை ஏத்துக்குவாங்க. அம்மா ஏற்கெனவே ஒரு நாள் உன்னை வீட்டுக்கு அழைச்சுட்டு வரச் சொன்னாங்க!" என்று சொல்லி வழியனுப்பினான்.

அவள் மனதில் நிம்மதியுடனும் முகத்தில் புன்னகையுடனும் வீட்டை நோக்கி நடந்து போனாள். 'இனிமேல் அம்மா அழத் தேவையில்லை' என்பதே அவள் முதல் மகிழ்ச்சி. இரண்டாவது சதீஷ் எப்போதும் அவள் கூடவே இருப்பான்; இப்போது போலவே!

# 27

அந்த கம்ப்யூட்டர் திரையில் ரசூலின் உருவம் பெரிதாக தெரிந்தது. முகத்தை தனியாக பெரிதாக்கிப் பார்த்தார்கள். காதரின் மொபைலில் எடுக்கப்பட்ட படங்கள் தான் அவை. திரும்பத் திரும்ப பலமுறை பார்த்தார்கள்.

"ஹசன்! உனக்கு இவன் யார் என்பது நினைவுக்கு வருகிறதா?" ஐந்து வருடங்களுக்கு முன்பு ஸ்ரீநகர் பக்கத்தில் பணயக்கைதியாக நம்மிடம் சில நாட்கள் இருந்தவன். நீ கூட அவனிடம் கொஞ்சம் பரிவுடன் பேசி, நான் உன்னைக் கண்டித்தேன். ஞாபகம் இருக்கிறதா? பிறகு இண்டியன் ஆர்மி வந்து அவர்களை மீட்டுக்கொண்டு போனார்கள்!"

"நீ முதலில் சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால் படத்தைப் பார்த்ததும் பளிச் என்று ஞாபகம் வந்துவிட்டது. அந்த ஆளேதான்."

"அப்படியானால் நாம் ஆபத்தில் இருக்கிறோம். அவன் யாரிடமும் பேசுவதற்கு முன் நாம் அவனை முடித்துவிடவேண்டும். சரியா!"

"ரொம்ப சரி காதர்! எப்படி செய்யப் போகிறோம்?"

ஸ்ரீநகரில் முதலில் ரசூல் பார்த்தபோது பயிற்சிபெறும் நிலையில் இருந்த இரண்டு பேரும், அதற்குப்பின் வந்த ஐந்து வருடங்களில் மிகவும் கைதேர்ந்த கொடூரமான தீவிரவாதிகளாகி விட்டார்கள். கொலை செய்வதையும், குண்டு வைப்பதையும் எந்த மனக் கஷ்டமும் இன்றி இயல்பாக செய்பவர்களாக மாறிவிட்டார்கள். அவர்கள் சார்ந்திருந்த லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் மதிப்பு மிக்க, திறமைவாய்ந்த உறுப்பினர்களாகி விட்டார்கள். உள் நாட்டில் மட்டுமில்லாமல், போலி பாஸ்போர்ட்கள் மூலம் வெளிநாடுகளுக்கும் போய் வேலைகளை முடிப்பதில் வல்லவர்கள் ஆகியிருந்தார்கள். ஒரு இடத்தில் வேலை செய்வதற்கு முன் தேவையான பொருட்கள், ஆட்கள், நேரம் முதலியவற்றைச் சரியாகத் திட்டமிடுவதே இவர்களின்

சிறப்பு அம்சம். வேலை முடிந்து போலீஸ் குற்றவாளிகளைப் பற்றி விசாரிக்கும் போது இவர்கள் போலீசுக்கு எட்டாத தூரத்தில் இருப்பார்கள். எல்லாவற்றையும் விட தங்களின் கொடூர இயல்பு கொஞ்சம் கூட தெரியாதபடி இவர்களின் முகமும், செயல்களும் இருக்கும் என்பதே இவர்களின் பெரிய திறமை.

சதீஷின் பிறந்தநாள் பார்ட்டி முடிந்ததும் திட்டம் தீட்டி, அதனை நிறைவேற்ற, சரியாக இரண்டு நாளுக்குப் பிறகு, இரவு ஒன்பது மணிக்கு பைக்கில் அந்த ரிசார்ட்டுக்கு போனார்கள். அது அவர்களுடைய பைக் இல்லை. வேறொரு திருட்டு பைக். இரண்டு பேரும் ஜெர்கின்ஸ் அணிந்து தலையில் கிரிக்கெட் கேப்புடன் இருந்தார்கள். அவர்கள் பைக்கில் வந்ததால் கைகளில் க்ளவுஸ் அணிந்திருந்தது யாருக்கும் வித்தியாசமாகப் படவில்லை. உள்ளே போய் டிபன் சாப்பிட்டு காபி சொல்லிவிட்டு காத்திருந்தார்கள். அவர்கள் கண்கள் ரசூல் வருகிறானா என்பதையே கவனித்தபடி இருந்தன. சிறிது நேரம் கழித்து ரசூல் ஒரு ட்ரேயில் உணவு கொண்டு வந்து ஒரு மேசையில் வைத்துவிட்டு போவதை பார்த்தார்கள். அப்போது ஹசன் பில்லுக்கு பணத்தை டேபிளில் வைத்துவிட்டு எழுந்து வெளியே போனான். அப்போது ரசூலின் பார்வையில் படும்படி வேண்டுமென்றே உரசியபடி போனான். ஆனால் ரசூலை கவனிக்காதவன் போல நடந்து போனான்.

ஆனால் ரசூல் சரியாக அவனைக் கவனித்துவிட்டான். ஹசன் எதிர்பார்த்ததும் அதைத்தான். ரசூலை வெளியே வரவைக்கவேண்டும் என்பதே அவன் திட்டம். அவனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று வேகமாக அவன் பின்னால் போனான். அதே சமயம் இதைக் கவனித்துக் கொண்டிருந்த காதர் எழுந்து பைக் நின்றிருந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்தான். அவன் கொஞ்சம் கூட பரபரப்பில்லாமல் சீரான வேகத்தில் நடந்து போனான். தன் முன் விழுந்த நீண்ட நிழலை வைத்து ரசூல் தன்னைப் பின் தொடர்ந்து வருவதை ஹசன் தெரிந்து கொண்டான். செடிகள் அடர்த்தியாக இருந்த ஒரு மறைவான இடத்துக்குப் போனான். ரசூலும் தொடர்ந்து வந்து இருளில் நுழைந்ததும், ஹசன் மின்னல் வேகத்தில் திரும்பி, தன் வலது கையை வலுவாக ரசூலின் கழுத்தில் வீசினான். அடியின் வலுவை தாங்காமல் அவன் சரிந்ததும் கழுத்தைத் திருகினான். 'சடக்' என்ற சத்தத்துடன் ரசூலின் வாழ்க்கை முடிந்தது. அப்படியே அந்த உடலை தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு மறைவாக நடந்தான். அப்போதும் அவனிடம் எந்த பரபரப்பும் இல்லை.

அப்போது ஹோட்டலுக்கு சரக்கு கொண்டு வந்து இறக்கிவிட்டு நின்று கொண்டிருந்த ஒரு சிறிய ட்ரக்கில் ரசூலின் உடலை தூக்கிப் போட்டுவிட்டு மறைவிலிருந்து வெளியே வந்து ஹோட்டல் கேட்டை நோக்கி நடந்தான். காதர் பைக்கை ஸ்டார்ட் செய்து சரியாக கேட் அருகில் கொண்டு வந்தான். ஹசனை ஏற்றிக்கொண்டு கிளம்பிச் சென்றான். அவர்கள் கிளம்பிச் சென்ற சிறிது நேரத்தில் ட்ரக்கும் ரசூலின் உடலைச் சுமந்தபடி வெளியே புறப்பட்டுச் சென்றது. ட்ரக் டிரைவருக்கு ஒரு உடல் தன் ட்ரக்கில் கிடந்தது தெரியாது.

கேட்டில் இருந்த ஒருவர் பைக் எண்ணையும் ட்ரக் எண்ணையும் நேரம் குறிப்பிட்டு வெளியேறிய வாகனங்கள் பதிவேட்டில் குறித்துக்கொண்டார். அவருக்கு பைக் எண் போலி என்பது தெரியாது.

**தெ**ற்கே இருந்து வடக்கே காஷ்மீர் வரை போய் பயங்கரமான காஷ்மீர் தீவிரவாதிகளிடம் பணயக்கைதியாக சிக்கிகொண்டு, சில நாட்கள் அவர்களுடன் இருந்து உயிரோடு மீண்ட ரசூல் அதே தீவிரவாதிகளின் கையால் ஐந்து வருடங்கள் கழிந்தபின் சென்னையில் உயிரை இழப்போம் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டான். அதே போல தம்மிடம் கைதியாக இருந்து தப்பிச் சென்ற ஒருவரை ஐந்து வருடங்கள் கழித்து இங்கு வந்து கொல்லும்படி ஆனது என்பது தீவிரவாதிகளுக்கும் விசித்திரமாக தெரிந்தது. ரசூலைக் கொல்ல அவர்கள் விரும்பவில்லை. ஆனால் இரக்கம் காட்டினால் ரசூல் அவர்களை காட்டிக்கொடுத்துவிடுவார். இரக்கம் காட்டுவது அவர்களின் பழக்கம் இல்லை. அது ஜிகாதிகளுக்கு தேவையில்லாத இருக்கக்கூடாதே குணம், என்பதே அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி.

# 28

தூத்துக்குடி அருகில் உள்ள ஒரு போலீஸ் ஸ்டேஷனின் இன்ஸ்பெக்டர் முருகதாஸ். தூத்துக்குடிக்காரர் தான் என்றாலும் தூத்துக்குடியில் வேலை பார்க்காமல் பக்கத்தில் இருந்த ஒரு ஸ்டேஷனில் வேலைபார்த்தார். நேர்மையான துணிச்சலான அதிகாரி; வாங்கும் சம்பளத்துக்கும் அணிந்திருக்கும் உடுப்புக்கும் உண்மையாக நடந்துகொள்பவர். அவர் இருந்த பகுதியில் மட்டும் மணல் கொள்ளையர்களின் அட்டகாசம் கட்டுக்குள்ளே இருந்தது. அவர் எதற்கும் விலை போகாதவர் என்று பெயர் வாங்கியிருந்தார். தாஸ் அப்போது தான் தன் பைக்கில் வந்து இறங்கி ஸ்டேஷனுக்குள் வந்து தன் இருக்கையில் அமர்ந்தார். ரைட்டர் வந்து ஒரு பைல் பேடை அவர் முன் வைத்தார். அவர் அதை பிரித்து அன்றைய தபால்களை பார்த்து கையெழுத்துப் போட்டார். தாஸ் சரியான உடற்கட்டுடன், நல்ல போலீஸ் அதிகாரிக்கான மாதியாக இருந்தார். சற்றே கருத்திருந்தாலும், களையாக, கம்பீரமாக இருந்தார்.

அவரது செல்போன் ஒலித்தது. எடுத்துக்கேட்டவர் முகத்தில் புன்னகை விரிந்தது. தன் பெரிய மீசையை தடவியபடியே பேசினார். “சார்! நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?” என்றவர் சிறிதுநேரம் எதிர்முனையில் பேசியவரை கூர்ந்து கேட்டார். பேசியது புது உலகம் ஆசிரியர்தான். அவர் சுடலைமுத்து தூத்துக்குடியில் மாயமாகிவிட்டதைப் பற்றியும் அவர் அந்த ஆலைக்குள் கட்டி வைக்கப்பட்டிருந்ததைப் பற்றியும் விபரமாகக் கூறினார். “சார்! சுடலைமுத்து அங்கேஇருந்ததை எங்க ஸ்டாப் ஒருத்தர் நேரில் பார்த்திருக்கார். இன்னும் சுடலைமுத்துவை ஊருக்குள் காணவில்லை. அவர் என்ன ஆனார் என்பது யாருக்குமே தெரியவில்லை. அவரை எப்படியாவதுகாப்பாற்ற வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு நீங்கள் உதவ வேண்டும்.”

எதிர்முனையில் சற்று மௌனம். “சார்! இங்கே இருக்கிற மணல் மாபியா படு பயங்கரமானவங்க. உங்களுக்கு அவங்களைப் பற்றி சரியாக தெரியாது. கொடுமையான அவங்களோட செயல்பாடுகளை உங்களால நெனச்சுக்கூட பார்க்கமுடியாது. எதிர்த்தவங்களை

உசுரோட விட மாட்டாங்க. இந்தப் பகுதி மக்கள் தினமும் பயந்து பயந்துதான் வாழுறாங்க. நிறைய கொலைகள் நடந்துருக்கு சார். தாசில்தார், போலீஸ்னா விஷயம் வெளியில தெரியுது. மத்ததெல்லாம் தெரியாமலே போகுது."

"நீங்கள்லாம் இருந்தும் எப்படி இதெல்லாம் நடக்குது சார்? நீங்க எதாச்சும் ஆக்ஷன் எடுக்கலாமே!"

"நான் எவ்வளவோ செஞ்சிட்டிருக்கேன் சார். ஆனால் நான் என்னோட ஜுரிஸ்டிக்ஷன்ல தானே எதுவானாலும் செய்ய முடியும்? களத்தில இருக்குறவங்க எல்லாம் பெரிய நேஷனல், இன்டர்நேஷனல் லெவல் ப்ளேயர்ஸ் சார். கவர்மென்டையே பாக்கெட்ல வச்சிருக்கவங்க சார். கொலை நடந்ததை கண்ணால பார்த்தவன்கூட சாட்சிக்கு வரமாட்டான். கேஸ் போட்டாலும் நடத்த முடியலை. பல சமயங்களில் இப்படி இந்த வேலையை பாத்துத்தான் பொழைக்கனு மான்னு தோணுது சார்."

"அப்படியா!"

"ஆமாம் சார்! நான் என்னால முடிஞ்ச அளவு போராடிட்டு இருக்கேன். நான் ஒவ்வொரு நாளும் பெரிய ஆபத்தான நிலைமையில் தான் இங்கே வேலை பாத்திட்டு இருக்கேன். நீங்க சொன்ன சுடலைமுத்துவை எனக்குத் தெரியும் சார். நான் ரகசியமா விசாரிச்சு உங்களுக்கு தகவல் சொல்றேன். அது என் ஏரியா இல்லை. இருந்தாலும் உங்களுக்காக செய்றேன்."

போனை கட் செய்த தாஸ் தீவிர யோசனையில் ஆழ்ந்தார்.

தனக்கு தகவல் தரும் இன்பார்மரான ஒரு டீ மாஸ்டரைப் பிடித்து விபரத்தைச் சொல்லி சுடலைமுத்துவைப் பற்றி விபரம் தெரிந்து சொல்லும்படி சொன்னார். டீ மாஸ்டர், அந்த ஆலையில் வேலை செய்யும் ஒரு ஆளிடம் நைசாகப் பேசி விபரம் கேட்டார். அந்த ஆளும் "எங்க ஆலையில் ஒரு ரூமில ஒரு ஆளை அடைத்து வைத்திருந்தார்கள் என்பது தெரியும். அந்த ஆள் யார் என்று சரியாகத் தெரியவில்லை. நாங்க அந்த ரூம் பக்கம் போக முடியாது. முதலாளிகளுக்கு வேண்டாதவர்களை அடைச்சுவச்சு மிரட்டி அனுப்புறது அங்கே வழக்கமான ஒண்ணுதான். ஆனால் அந்த ஆளை ஒரு நாள் ஒரு முதலாளி வந்து விசாரிச்சார். அதுக்குப் பிறகு அந்த ஆளை நான் ஆலையில் பார்க்கவேயில்லை. என்ன ஆனார்னு தெரியலை!"

இந்த விஷயத்தை டீ மாஸ்டர் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தார்.

"சுடலைமுத்து ஆலையிலும் இல்லை. ஊருக்குள்ளும் காணப்படவில்லை. இன்ஸ்பெக்டர் உடனே தூத்துக்குடி போலீஸ்

ஸ்டேஷனில் அந்த வாரத்தில் ஏதாவது மர்டர் நடந்ததா, டெட்பாடி ஏதாவது கடலோரம் அல்லது வேறு பகுதிகளில் கிடந்ததா? என்று விசாரித்தார்.

'அப்படி எதுவும் இல்லை' என்று பதில் கிடைத்தது.

இன்னும் சிலரிடம் அதே போன்று தகவல்களை திரட்டினார். கடைசியில் அவர் ஒரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது. சுடலைமுத்து உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்பதே அது. அந்தப் பகுதியில் மணற்கொள்ளையை தைரியமாக தட்டிக் கேட்டதுடன், தன் தோழர்களை திரட்டி மத்திய அரசு, சி.பி.ஐ. வரையிலும் தொடர்ந்து கோரிக்கை மனுக்களை அவர் அனுப்பிவந்தார். சமீபத்தில் அவரின் மனு ஒன்றின் மேல் சுப்ரீம் கோர்ட் நடவடிக்கை எடுத்து, மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்டது. இதனால் மணல் மாபியா அவரை குறிவைத்து செயல்பட்டிருக்கும் என்பது தாஸின் கணிப்பு.

தனக்குக் கிடைத்த விபரங்களை தாஸ் ஆசிரியருக்கு ஒரு வாரம் கழித்து தெரிவித்தார். "சார்! கிடைத்திருக்கும் தகவல்களை வைத்துப் பார்க்கும் போது சுடலைமுத்து உயிருடன் இருப்பாரா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவருக்கு குடும்பம் எதுவும் இல்லாதது ஒரு துரதிருஷ்டம். யாரும் அவரைப் பத்தி கவலைப்படவில்லை. நீங்க எதாச்சும் ஸ்டோரி பண்றீங்களா சார்?"

"ஆமாம் சார்! அதுக்காக விசாரிச்சபோது தான் சுடலை முத்துவைப் பற்றியே எனக்குத் தெரியவந்துச்சு. நீங்களே ஆபத்தில இருக்கிறேன்னு சொன்னால் மத்தவங்க நிலைமை என்ன சார் ஆகிறது?"

"என்ன சார் சொல்லுறது! இதுதான் நிலைமை!" என்று வருந்தினார் இன்ஸ்பெக்டர் தாஸ்.

சார்! உங்க ஸ்டோரியில் சுடலைமுத்துவைப் பத்தி எழுதுங்க சார்.

அந்த விஷயம் அப்படியாவது மக்களுக்குத் தெரியட்டும்! I am very sorry sir! வேற எதாச்சும் தகவல் கிடைச்சா உடனே பேசுறேன் சார்"

தாஸ் இணைப்பை துண்டித்தார். அன்று இரவு அவர் சென்னையில் இருந்த தன் நண்பர்களான அதிகாரிகள் சிலருடனும் தன் கவலையை பகிர்ந்து கொண்டார். அந்த நண்பர்கள் பல பெரிய மனிதர்களும் அதில் ஈடுபட்டுள்ளதைச் சொல்லி, அவரை எச்சரிக்கையாக இருக்கும்படி சொன்னார்கள்.

❍

# 29

அமைச்சர் அயர்ந்து ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். ஒரு இடைத்தேர்தல் தொடர்பாக திருநெல்வேலி போய்விட்டு மூன்று நாட்கள் கழித்து முதல் நாள் இரவு இரண்டு மணிக்குத் தான் சென்னைக்கு வந்திருந்தார். பிரச்சார அலைச்சலால் ஏற்பட்ட அசதி தீர உறங்கினார். காலையில் அவர் வீடு முழுவதும் சாம்பிராணிப் புகையும், கந்த சஷ்டி கவசமும் நிறைந்து மங்களகரமாக இருந்தது. மணி 7 அடித்தபோது பரப்பரப்பாக அவரது கட்சி நேர்முக உதவியாளர் வந்தார். அவர் கையில் ஒரு புது உலகம் பிரதி. அமைச்சரின் மனைவி "அவங்க ரொம்ப லேட்டாதான வந்தாங்க; கொஞ்சநேரம் தூங்கட்டுமே. எதுவானாலும் ஒரு மணிநேரம் கழிச்சு எழுப்பி சொல்லிக்கலாம்" என்றதால் பி.ஏ. ஹாலிலேயே காத்திருந்தார். அவரால் அமைதியாக ஒரு நிலையில் இருக்கமுடியவில்லை. அமைச்சர் வீட்டில் கொடுத்த காபியைக் கூட அவரால் சுவைத்துக் குடிக்க முடியவில்லை. சுமார் அரை மணி நேரம் கழித்து அமைச்சரின் மனைவி காபியுடன் வந்து கணவரை எழுப்பினார். அமைச்சர் காபி குடித்து முடித்ததும் "மணி வந்திருக்கார்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே அந்த அம்மா போனார். பிறகு பி.ஏ. உள்ளே போனார், கலவரமான முகத்துடன்.

"வா மணி! ராத்திரி ரொம்ப லேட் ஆகத்தான் வந்தேன். நல்ல அசதி!" என்ன விஷயம்? அமைச்சர் இன்னும் களைப்பாகவே இருந்தார்.

"அண்ணே! மறுபடியும் அந்த 'புதுஉலகம்' நம்மளப் பத்தி எழுதிருக்கான். போன தடவையாச்சும் நம்மளப் பத்தி லேசா எழுதியிருந்தான். இந்த தடவை ரொம்ப எழுதிட்டான். டேமேஜிங் ஆக இருக்கு."

சொல்லிக்கொண்டே பத்திரிகை இதழை அவரிடம் நீட்டினார் மணி. அமைச்சர் அதை வாங்கிப் படித்தார். "ஏற்கெனவே அந்த சிவசூர்யனிடம் சொல்லி வச்சோம். அவர் ஒண்ணும் செய்யலை. உடனே ஏதாச்சும் செஞ்சிருந்தா இப்ப மறுபடி எழுத தைரியம் வந்திருக்காது. ஏதாச்சும் உருப்படியா பண்ணியாகணும் மணி!"

சற்று யோசித்தவர், “சரி! எல்லாக் கடைகளிலும் இந்த பத்திரிகையின் பிரதிகளை நம்ம ஆட்களை வாங்கி எரிச்சுடச் சொல்லு!” என்றதுடன் சில கெட்டவார்த்தைகளைச் சொல்லி பத்திரிகையை திட்டி, தன் கோபத்தைக் காட்டினார். அவர் அப்படி என்றுமே பேசியதில்லை.

“அண்ணே! நான் நம்ம ஆட்களை அனுப்பி அவங்க போறதுக்குள்ளே எல்லாம் வித்துப் போச்சு. எதிர்கட்சிக்காரனுக, போஸ்டரைப் பாத்ததுமே வந்து வாங்கிட்டானுகளாம். டீக் கடைகள்ல எல்லாம் இதைத்தான் பேசுறாங்களாம். டிரைவர் சொன்னார்.”

அமைச்சர் யோசித்தார். அடுத்து வரிசையாக என்னவெல்லாம் நடக்கும் என்பது அவருக்குத் தெரியும். முதலமைச்சர் கூப்பிட்டுக் கேட்பார். பத்திரிகைக்காரர்கள் போகும் இடங்களில் எல்லாம் இதையேதான் கேட்பார்கள். இதற்கெல்லாம் அவர் தயாராக வேண்டும். எந்த நேரமும் முதல்வரின் போன் அழைப்பு வரலாம். உடனே குளித்து சாமி கும்பிட்டுவிட்டு பலவகை பிரசாதங்களையும் நெற்றியில் இட்டுக் கொண்டு பக்திப் பழமாக தயாராக இருந்தார். எதுவும் நடக்காதது போலவும் எதையுமே கேள்விப்படாதது போலவும் நடந்துகொண்டார். சொந்தக்கட்சிக் காரர்களை சமாளிக்க வேண்டுமே!

சிறிது நேரத்தில் அவர் எதிர்பார்த்தபடியே முதலமைச்சரின் நேர்முக உதவியாளர் பேசினார். போன் வந்ததும் புறப்பட்டு முதல்வரின் வீட்டுக்குச் சென்றார். அதற்குள் செய்தி பரவி, முதல்வர் வீட்டின்முன் பத்திரிகையாளர்கள் பலர் கூட்டமாக நின்றார்கள். அவர்களை ஒரு வழியாக விலக்கிக்கொண்டு, காவலர்கள் உதவியுடன் ஒரு வழியாக முதல்வர் வீட்டுக்குள் சென்றார்.

எப்போதும் மணிக்கணக்கில் காக்க வைக்கும் முதல்வர் அன்று உடனடியாக கூப்பிட்டுவிட்டார்.

“என்னய்யா நீங்க! ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமா! இடைத்தேர்தல் வேற வரப்போகுது! அவங்க சாராய மேட்டர் எழுதுனப்பவே உங்களை வார்ன் பண்ணினேன்! இவ்வளவு கேர்லஸ் ஆக இருக்கீங்களே! சீனியர் நீங்களே இப்படி இருந்தால், மத்தவங்களை என்ன சொல்ல? என்ன செய்யப் போறீங்க?” நீங்க கட்டுற பங்களாவோட போட்டா எல்லாம் தெளிவா, அழகா போட்டிருக்கானே! பில்டிங் ரொம்ப அழகா இருக்குது!”

“அதில உள்ள வீடு என் பேரில இல்லை. யாரோ கட்டுற பங்களாவை என்னோடதுன்னு பொய்யா எழுதிருக்கான் அந்த பேப்பர்காரன்.”

அப்பாவி போல முகத்தை வைத்துக்கொண்டு அவர் சொன்ன பதில் முதல்வரின் கோபத்தைக் கிளறியது.

"சும்மா இருங்க! எல்லாம் எனக்குத் தெரியும். உடனே, பத்திரிக்கைச் செய்தி முழுக்க பொய். ஆதாரம் இல்லாமல் என் பெயரையும் அரசின் புகழையும் கெடுக்க எதிர்க்கட்சிகள் செய்த சதின்னு உடனே ஒரு மறுப்பு அறிக்கை கொடுத்துடுங்க. மற்றதைப் பிறகு பாத்துக்கலாம்." முதலமைச்சர் சீறினார். அதற்கு மேல் எதுவும் பேச அமைச்சருக்கு தைரியம் வரவில்லை. மிகவும் பவ்யமாக ஒரு வணக்கம் போட்டு விட்டு, பயத்துடன் கிளம்பினார்.

அமைச்சர் கிளம்பிச் சென்று அதே போல ஒரு அறிக்கை வெளியிட்டார். கட்சித் தொண்டர்கள் புது உலகம் அலுவலகத்தை முற்றுகை இட்டு கற்களை வீசி ஜன்னல்கள், வாகனங்களை சேதப்படுத்தினார்கள். அலுவலகத்துக்கு வந்த சில பணியாளர்களையும் தாக்கி காயப்படுத்தினார்கள். சிலர் வெளியில் நின்ற ஒரு வேனுக்கு தீ வைத்துவிட்டு ஓடினார்கள். போலீஸ் வருவதற்குள் எல்லாம் நடந்துவிட்டது. வெகுநேரம் கழித்து போலீஸ் வந்து ஆசிரியரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று கடுமையாக மிரட்டினார்கள். வன்முறையை தூண்டும் வகையில் அவதூறாக எழுதியதாகவும் அவர் மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவரை அன்று முழுவதும் ஸ்டேஷனிலேயே வைத்திருந்து இரவு தான் வெளியே அனுப்பினார்கள். அதுவும் பிரஸ் கவுன்சில் தலையிட்ட பிறகே நடந்தது. அவர் வீடும் கல்வீசி தாக்கப்பட்டது. அவர் முன்னெச்சரிக்கையாக குடும்பத்தை பெங்களூருக்கு அனுப்பியிருந்ததால் அவர் நிம்மதியாக இருந்தார். ஆசிரியர் கொஞ்சமும் கலங்கவில்லை. அவர் இதையெல்லாம் எதிர்பார்த்தே இருந்தார்.

மறுநாள் பொதுமக்கள் என்ற பெயரில் சிலரிடம் இருந்து புகார்கள் பெறப்பட்டு பத்திரிகை அலுவலகத்திலும், ஆசிரியர் வீட்டிலும் போலீசாரால் சோதனைகள் நடத்தப்பட்டன. சோதனைகளை சிவசூர்யனே தலைமை தாங்கி நடத்தினார். ஆனால் எந்த முக்கிய ஆவணங்களும் சிக்கவில்லை. ஆனால் பணியாளர்கள் மிகவும் பயந்துபோய்விட்டார்கள். ஒரு சிலர் மறுநாள் முதல் வேலைக்கு வரவில்லை.

"அமைச்சர், கட்டுரையில் குறிப்பிட்டுள்ள பங்களாவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தரேசன் என்வருக்குச் சொந்தமானது. என் புகழையும் இந்த அரசின் நற்பெயரையும் களங்கப்படுத்தும் நோக்கத்துடன்

எதிர்க்கட்சிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, இந்த மஞ்சள் பத்திரிகை இந்தக் கட்டுரையை வெளியிட்டுள்ளது. இதற்கு அந்தப் பத்திரிகை மறுப்பு வெளியிடாவிட்டால், நான் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்வேன்.” என்று அறிக்கை வெளியிட்டார்.

அவரது கட்சி ஆதரவுப் பத்திரிகைகளும் அவரது கருத்தை பெரிய அளவில் வெளியிட்டு அவருக்கு ஆதரவாக நின்றன. அதே சமயம் ‘புதுஉலகம்’ ஆசிரியர், “எங்கள் கட்டுரையில் உள்ள ஒவ்வொரு விஷயமும் முழுவதும் உண்மை. எங்கள் அடுத்த இதழில் இதை விரிவாகத் தெரிவிப்போம். அமைச்சர் வழக்கு தொடரட்டும். நாங்கள் அதை தைரியமாக சந்திப்போம். எங்களுக்கு எந்த பயமும் இல்லை” என்றார்.

மறுநாள் ‘புதுஉலகம்’ அலுவலகத்துக்கு மின்சாரம் துண்டிக்கப் பட்டது. தண்ணீர் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. அடுத்த இதழ் அச்சாக விடாமல் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் ரகசியமாக கிராமத்திலிருந்து பத்திரிகை அச்சிட்டு கொண்டுவந்து கடைகளுக்கு வினியோகிக்கப்பட்டது. அதில் “பங்களாவின் சொந்தக்காரரான சுந்தரேசன் வேறு யாருமல்ல. அமைச்சரின் துணைவியின் தம்பிதான் என்பதும் அவருக்கு அரசாங்கத்தின் பெரிய ஒப்பந்தகாரர் ஏன் பங்களா கட்டிக் கொடுக்கிறார்? என்றும் கேள்வி எழுப்பப்பட்டது. கட்டுரை, மறுப்பு, கேள்விகள் என விஷயம் கணினி மூலமாகவும் இதர எலக்ட்ரானிக் ஊடகங்கள் மூலமாகவும் நாடு முழுவதும் பரவியது. எதிர்க்கட்சிகள் கிடைத்த மேடைகளிலெல்லாம் இதைப் பற்றியே பேசினார்கள். எல்லா டி.வி. சேனல்களிலும் விவாதங்கள் இதைப்பற்றியே தினமும் நடத்தப்பட்டன. வாரப் பத்திரிகைகளில் இதைப் பற்றியே ஜோக்குகள் தாராளமாக எழுதப்பட்டன. இவை எல்லாம் முதலமைச்சருக்கும் பெரிய தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. தன் முக்கியமான அமைச்சர் இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக்கொள்வார் என்று அவரும் எதிர்பார்க்க வில்லை. அமைச்சர் உரிய முறையில் சரியான மறுப்பு அறிக்கை வெளியிட்ட பிறகும் இதை பெரிய விவகாரமாக பேசுவது, அந்தப் பத்திரிகை எதிர்க்கட்சியின் சதிவலையில் சிக்கியுள்ளது என்பதையே காட்டுகிறது. எங்கள் ஆட்சிக்கு களங்கம் கற்பிக்க முயல்வோரின் முயற்சி வெற்றியடையாது” என்ற ரீதியில் அறிக்கைகளை வெளியிட்டு, பிரச்னைக்கு தற்காலிக தடுப்பு ஏற்படுத்தினார். தனக்கு உதவியாக இருப்பார் என்று அவர் எதிர்பார்த்த மூத்த அமைச்சர் புதுப்பிரச்னையை ஏற்படுத்தியது அவருக்கு அதிகம் எரிச்சலை எற்படுத்தியிருந்தது.

அமைச்சரை மறுபடியும் அழைத்த அவர், "சட்டசபை கூடுவதற்குள் ஏதாவது செய்து அந்த பத்திரிகையின் வாயை மூடுங்கள். இந்நேரம் எதிர்கட்சிகள் புது ஆதாரங்களை தேடிக்கொண்டிருப்பார்கள். உங்களுக்கு இன்னும் ஒரு மாதகாலம் அவகாசம் இருக்கிறது." என்றார். இந்த முறை முதல்வர் அவரிடம் சரியாக முகம் பார்த்துப் பேசவில்லை என்பது போல அமைச்சர் உணர்ந்தார்.

"ஒரு மாதம் பார்த்துவிட்டு, பிரச்னை தொடர்ந்தால் பதவியைப் பறித்துவிடுவேன்" என்று மிரட்டுகிறாரோ முதல்வர் என்று அமைச்சர் குழம்பினார். பிறகு "நம்மை பதவியை விட்டு நீக்கும் அளவுக்கு அவருக்கு தைரியம் வராது" என்று நினைத்து நிம்மதியானார். கட்சியையும், முதல்வரையும் பற்றிய எல்லா விபரங்களையும் அறிந்தவர் தாம் என்பதால் தன் பதவிக்கு உடனே ஆபத்து வராது என்பது அவர் எண்ணம். ஏற்கெனவே பலமுறை இது போல அவர் சிக்கி, ஒரு வழியாக சமாளித்து மீண்டுவந்திருந்தார். இதையும் சமாளிப்போம் என்று அவர் நினைத்தார். அதே சமயம் இந்த முறை அவரும் கொஞ்சம் கலவரமாக இருந்தார்.

இந்த விஷயத்தில் அவரது வீழ்ச்சியை எதிர்க்கட்சியைப் போலவே ஆளும் கட்சியில் உள்ள அவரது எதிரிகளும் ஆவலோடு எதிர்பார்த்தனர் என்பது அவருக்கும் தெரியும். அவர்களும் மறைமுகமாக எதிரிகளுக்கு இவரைப் பற்றிய தகவல்களை ரகசியமாக ஆதாரங்களுடன் அனுப்பி உதவினார்கள். அது தான் அமைச்சருக்குப் பெரிய கவலையைக் கொடுத்தது. அவரும் அவர் ஆதரவாளர்களும் எப்படியாவது சட்டசபை கூடுவதற்குள் இந்தப் பிரச்சினையை முடித்துவிடவேண்டும் என்று பிரயாசைப்பட்டார்கள். புது உலகம் பத்திரிகைக்கு ஒரு குழுவினர் பயங்கர மிரட்டல்களை அனுப்பினர். அதே சமயம் ஆட்சிக்கு நெருக்கமான ஒரு பத்திரிகை மூலம் நட்பாகவும், நன்மைகள் செய்வதாகவும் விலைபேசினர். ஆனால் அவைகளால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

எதிர்க்கட்சியினரும் சட்டசபை கூடுவதற்கு முன்பாக இந்தப் பிரச்னை சுமுகமாக முடிந்துவிடக்கூடாது என்று எல்லா வகையிலும் பாடுபட்டனர். தினந்தோறும் புதுப்புதுக் கேள்விகளை, அமைச்சரின் சொந்த வாழ்க்கை பற்றியும் பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டு பிரச்னையின் சூடு குறையாதபடி பார்த்துக்கொண்டனர். இதில் அமைச்சர் கொஞ்சமும் எதிர்பார்க்காத வகையில், அவரது ரகசியமான சொந்த வாழ்க்கையும் பத்திரிகைகளில் மறைமுக

வார்த்தைகளில் விமர்சிக்கப்பட்டது. இது அவரது வீட்டிலும் குழப்பங்களை ஏற்படுத்தியது. அமைச்சரின் அம்மா மௌனமாக அழுதார்.

அமைச்சரின் பி.ஏ. ஆளுநர் அலுவலக அதிகாரியிடம் தொடர்பு கொண்டு தினந்தோறும் முதலமைச்சர் ஆளுநரிடம் சந்திப்பு நேரம் எதுவும் கேட்டிருக்கிறாரா என்று விசாரித்து வந்தார். அதுபோல் ஒரு நாள் அவர் கேட்டபோது, "இந்த முறை முதலமைச்சர் நேரம் கேட்கவில்லை. அவர் கேட்காமலேயே ஆளுநர் தானாகவே நேரம் குறித்து முதலமைச்சரை தன்னை சந்திக்க வரச்சொல்லியிருக்கிறார். இன்று சரியாக மாலை 5 மணிக்கு சந்திப்பு நடக்கவிருக்கிறது." என்று ஆளுநரின் நேர்முக உதவியாளர் சிரித்துக்கொண்டே ஒரு குண்டை வீசினார். அவருக்கு இதுபோன்ற விபரங்கள் அன்றாட நகைச்சுவை மட்டுமே.

"என்ன விஷயமாக சந்திப்பு?"

உதவியாளர் பெரிய ஜோக்கை கேட்டதுபோல வெடித்துச் சிரித்தார்.

"என்ன பி.ஏ. சார், தெரியாதது போல கேட்கிறீங்க! இப்ப ஹீரோ தமிழ்நாடு அரசியலில் உங்கள் ஆள் தானே! அவர் தான் மேட்டர்,"

தமிழ்நாடு அரசில் நடக்கும் மாற்றங்களை முதலில் அறிபவர்கள் ஆளுநர் அலுவலக அதிகாரிகளே. முதல்வருக்கு ஆளுநர் சந்திப்புக்குநேரம் கொடுத்திருக்கிறார் என்றதுமே இதன் காரணம் என்ன? சந்திப்பின் விளைவாக யாருடைய தலை உருளப்போகிறது என்ற விவரங்கள் வரிசைகட்டி வலம் வர ஆரம்பித்துவிடும். பலர் பதவி ஏற்பதையும் பலரது பதவிகள் பறிக்கப்படுவதையும் தினம் பார்த்து ரசித்து சிரிப்பவர்கள் அவர்கள். அங்கே எதுவும் தெரியாததது போல நிற்கும் டவாலிக்கு பல முக்கியமான அரசாங்க ரகசியங்கள் தெரியும். அவர் நினைத்தால் ஆளுநரின் செயலாளரான ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பதவிக்கே ஆப்பு வைக்க முடியும்.

○

# 30

சிவசூர்யன் கடும் கோபத்தில் இருந்தார். அவர் தன் ஸ்டேஷனிலிருந்து மாற்றப்பட்டுவிட்டார். அமைச்சர் இந்த விஷயத்தில் சொன்னபடி செய்துவிட்டார். செழிப்பான ஒரு இடத்திலிருந்து வறட்சியான ஒரு ஸ்டேஷனுக்கு அவரை தூக்கியடித்தது அவருக்கு மிகவும் கவலையாகவும் அவமானமாகவும் இருந்தது. பதவி உயர்வை எதிர்பார்த்து இருந்த நேரத்தில், இப்படி அமைச்சரின் கோபத்துக்கு ஆளாக வேண்டியதாகிவிட்டது என்று கவலைப்பட்டார். எல்லாவற்றுக்கும் காரணம் புதுஉலகத்தில் வந்த அந்தக் கட்டுரைகள்தான் என்பதை நினைத்து அந்த பத்திரிகை மேல் அவருக்கு கோபம் தலைக்கேறியது. அவர் பலவாறாக முயற்சி செய்தும் அந்தப் பத்திரிகையை ஒன்றும் செய்யமுடியவில்லை. அந்தக் கட்டுரையை எழுதியவரையும் பார்க்கமுடியவில்லை. அதிகாரத்துக்கும், பணத்தாசைக்கும் அந்தப் பத்திரிகை அடிபணிய மறுத்தது. ஒரு அளவுக்கு மேல் அதிகாரத்தை பயன்படுத்தினால் ப்ரஸ் கவுன்சில், எதிர்க்கட்சிகள் என்று எதிர்ப்பு வருகிறது. சிவசூரியனுக்கு அமைச்சர் மேலும் ஒரு வகையில் அதிக கோபம் வந்தது. "இவர் எந்தவிதமான எச்சரிக்கை உணர்வும் இல்லாமல் மானாவாரியாக திரும்பிய பக்கமெல்லாம் சொத்துக்களை வாங்கிக் கொண்டு விடுவார், சிக்கலில் மாட்டாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றால் எப்படி? இப்படி அவமானப்படுத்திவிட்டாரே!" என்று அவர் எரிச்சல் பட்டார்.

அடுத்தது அவர் நல்லதம்பியுடன் போனில் பேசினார். அவர் "நேரில் வாங்க! பேசணும்!" என்றார். சிவசூர்யன் உடனே ஹோட்டலுக்குப் போனார். அங்கே அவரை எதிர்பார்த்து நல்லதம்பி தயாராக இருந்தார்.

"வாங்க வாங்க" என்ற நல்லதம்பி "இப்ப வருத்தப்பட்டு என்ன செய்றது? அமைச்சர் ஏற்கெனவே உங்களை வார்ன் பண்ணினார். அந்த 'புது உலகம்' நிருபரை சரிக்கட்டலைன்னா உங்களை தூக்கிடுவேன்னு சொன்னார். நீங்க கொஞ்சம் கேர்லெசா இருந்துட்டீங்க. உட்காருங்க!"

"என்ன அண்ணே! நீங்களும் இப்படிப் பேசுறீங்க! அந்த பேப்பர்காரன் எதுக்கும் ஒதுத்துவரமாட்டேங்றான். கேசும் போட்டுப் பாத்தாச்சு. தண்ணீர், மின்சாரம் எல்லாம் துண்டிச்சும் பாத்துட்டோம். அவனை அசைக்க முடியலை. அந்த நிருபரும் இப்போ அந்த பத்திரிகையில் இல்லையாம். சொல்லுங்க! என்னால என்ன பண்ண முடியும்? சத்தமில்லாம ஏதாச்சும் செய்யலாம்னு பார்த்தால், இவங்க கட்சிக்காரங்க பெரிய ரகளை பண்ணி, விஷயத்தை பெரிசாக் கிட்டாங்க!"

"நீங்க சொல்றதும் சரிதான். ஏற்கெனவே பழைய கவர்மெண்டிலும் பல அமைச்சர்கள் இந்தப் பத்திரிகையால தான் பதவி இழந்தாங்க! அது தான் அமைச்சர் ரொம்ப சங்கடப்படுறார்."

"அண்ணே! இவங்க எங்கெங்க சொத்து வாங்குறாங்கன்னு எனக்கு எப்படி தெரியும்? இவங்க விபரமில்லாம மச்சான் பேரில வாங்கிட்டு, இப்ப எம் மேல கோபப்பட்டா எப்படி? இவங்களுக்காக நாம மனசாட்சியை வித்துட்டு எவ்வளவு வேலை பண்ணிருக்கோம். விசுவாசத்துக்கு மதிப்பில்லையே!"

"சரி சார்! வருத்தப்படாதீங்க. ஒரு ரெண்டு மாசம் போகட்டும். சரி பண்ணிடலாம்." நல்லதம்பி அவரை சமாதானப்படுத்தினார்.

"அண்ணே! அந்த பங்களாவைப் பத்தி புதுஉலகத்தில எழுதியது யார்னு நாம கண்டுபிடிக்கணும். நாம நாளைக்கு அங்கே போகலாம். போட்டோலாம் எடுத்திருக்கிறதால, யாரோ ஒருத்தன் அங்கே நேரில் வந்து உள்ளே போய் பாத்திருக்கணும். அங்கே இருக்குற செக்யூரிட்டி எப்படியும் அந்த ஆளை பாத்திருப்பார் இல்லையா. நாம அந்த செக்யூரிட்டியிடம் கொஞ்சம் விசாரணை நடத்துவோம். அந்த நிருபரைப் பத்தி நிச்சயம் ஏதாச்சும் தகவல் கிடைக்கும். சின்னதா க்ளு கிடைச்சாலும் போதும். அவன் மட்டும் யாருன்னு தெரியட்டும்."

கோபத்தில் பற்களைக் கடித்தார் சிவசூர்யன்.

நல்லதம்பியும் கட்டிடத்தின் வேலை நிலவரத்தையும் பார்த்து வரலாம் என்பதற்காக அவர் சொன்னதற்கு ஒத்துக்கொண்டார். அத்துடன் அங்கே வேலை செய்பவர்களுக்கு இனிமேல் விழிப்பாக இருக்கவும், புதியவர்களை வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் எனவும் கடுமையாக எச்சரிக்கவும் விரும்பினார். மேலும் சிவசூர்யன் வற்புறுத்தியதையும் மறுக்கவேண்டாம் என்பதற்காகவும் அவர் அங்கு போய்வர ஒப்புக்கொண்டார். சிவசூரியனின் உதவியும் அவருக்கு எப்போதும் தேவைப்படலாம்.

மறுநாள் மாலை நல்லதம்பியின் காரிலேயே ஈ.சி.ஆர். சாலையில் இருந்த அந்த பங்களாவுக்குப் போய்வர முடிவு செய்தார்கள்.

**சி**வசூர்யன் மிகவும் திறமையான அதிகாரிகளில் ஒருவர். துறைப் பயிற்சியில் தன் பேட்சிலேயே சிறந்தவராக தேர்ந்தெடுக்கப் பட்டவர். நடுத்தரமான வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து தன் படிப்பாலும் விளையாட்டில் இருந்த திறமையாலும் போலீஸ் துறையில் இடம் பெற்றவர். பயிற்சி முடிந்து பணியில் சேர்ந்தது முதலில் தூத்துக்குடி மாவட்டத்தில்தான். மிகுந்த வலிமையும், முரட்டுத்தனமும் உடைய மீனவ மக்கள் நிறைந்த அந்தப் பகுதியில், உணர்ச்சிவசப்படும் மக்களால் குற்றங்களும் அதிகம் நடைபெற்றன. அங்கு வேலையில் வந்த சிவசூர்யன் அந்த மக்களில் இளைஞர்களிடம் பேசிப் பழகி அவர்களின் உதவியுடன் குற்றங்களின் எண்ணிக்கையை குறைத்தார். ஒரு முறை மக்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்து, கொடுமைகள் செய்த ஒரு முரடனை கடைத்தெருவில் சண்டைபோட்டு, துவம்சம் செய்தார். அந்தப் பகுதியில் மக்களை அச்சுறுத்திய பெரும் கொள்ளையனை காலில் சுட்டுப்பிடித்தார். அதனால் மக்களிடமும் உயர் அதிகாரிகளிடமும் நல்ல பெயர் எடுத்தார். அதே சமயம் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த சிலரின் கோபத்துக்கும் ஆளானார். அவர்களால் கொலைசெய்யப்பட்ட ஒருவரின் மகளுக்கு சிவசூர்யன், வழக்கில் உதவி செய்தார். ஆனால் அவர்கள் அந்தப் பெண்ணை விலைபேசி அவளை அவருக்கு எதிராகத் திருப்பிவிட்டார்கள். அவள் சிவசூர்யனைப் பற்றி தவறாகப் புகார் அளிக்கும் படி செய்தார்கள். அது அவருடைய வேலைக்கே ஆபத்தாக முடியும் போல் ஆகிவிட்டது. தன் வேலையை காப்பாற்றிக் கொண்டு, தன் இரண்டு தங்கைகளுக்கும் திருமணம் செய்துவைக்கும் கடமையையும் செய்ய வேண்டியதிருந்தது. அதற்காக தம் தூரத்து உறவினராக இருந்த அன்றைய எம்.எல்.ஏ. இன்றைய அமைச்சரை சந்தித்து உதவி பெற்றார். அதற்குப் பிறகு அவரால் பழைய சிவசூர்யனாக இருக்கமுடியவில்லை. அந்த அமைச்சர் சொன்னதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டியதாயிற்று. வேறு வழியில்லை என்றானது. மனசாட்சி பழையவற்றை நினைவு படுத்தும் போதெல்லாம் மதுவின் உதவியில் அதை மறந்துவிடுவார். தனிப்பட்ட முறையில் பல பேருக்கு உதவிகள் செய்தாலும் அவரால் துறைரீதியில் பழையமாதிரி நேர்மையுடனும் துணிச்சலுடனும் செயல்படமுடியவில்லை.

நேர்மை, துணிச்சல் மிகுந்த நல்ல அதிகாரிகள் பலரும் இப்படி வழி மாற்றப்பட்டதை அவரும் அறிவார். ஒவ்வொருவருக்கும் ஒரு விதமான சூழ்நிலை. வெளியில் சொல்லமுடியாமல் மனதிற்குள் புழுங்கும் பல திறமையான அதிகாரிகளை அவர் கண்டிருக்கிறார்.

# 31

**அ**ந்த வீடு இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் சிரிப்பொலியால் குலுங்கியது. அண்ணாநகர் போலீஸ் குவாட்டர்சில் இருந்த அந்த வீடு ஒரு பெரிய போலீஸ் அதிகாரியின் வீடு. அன்று அவர் மகளின் பிறந்தநாள். ஸ்வேதா என்ற அந்த இளம் பெண்ணின் நண்பர்களும் அவள் அண்ணனான கௌதமின் நண்பர்கள் பட்டாளமும் அந்த ஏரியாவை கலக்கிக்கொண்டிருந்தார்கள். கௌதமின் அம்மா ஜெகதீஸ்வரி பளபளவென்று ஒரு விலை உயர்ந்த பட்டுப்புடவையில் சில தோழிகளுடன், வந்திருந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். ஒரு பெண் "எங்கே உன் வீட்டுக்காரரை காணோம்?" என்றாள் வெகு அக்கறையாக.

ஜெகதீஸ்வரி சிரித்துக்கொண்டே, "என்னிக்கு அவர் எங்க பிறந்தநாளுக்கு வீட்டில் இருந்திருக்கார்? ஏதோ வி.ஐ.பி. விசிட் டூட்டினு போயிட்டார். முடிஞ்சா கொஞ்சநேரம் வந்துட்டு போறேன்னார்! பார்க்கலாம்." என்றபடி அந்தப் பெண்ணுக்கு ஜூஸ் கொடுத்தார். ஸ்வேதாவும் தன் தோழிகளுடன் அமர்க்களமாக புதிய உடைகள் அணிந்து வந்து நின்றாள். அவர் கழுத்தில் ஒரு வைரநெக்லஸ் மின்னியது. அவளின் போன் ஒலித்தது. எடுத்துப் பேசியவள். "அம்மா! டாடி வர ரொம்ப லேட் ஆகுமாம். நம்மை கேட் கட் பண்ணச் சொல்லிட்டாங்க!" என்றாள் சற்று முகவாட்டத்துடன். உடனே அவளது நண்பர்கள் எல்லாம் ஒரு பெரிய கேக்கை கொண்டுவந்து மேசைமேல் வைத்தார்கள். நண்பர்கள், குழந்தைகள் எல்லோரும் 'ஹேப்பி பர்த்டே டு யு' என்று கோரசாகப் பாட, ஸ்வேதா கேக் வெட்டினாள். கௌதம் தன் கேமிராவில் படங்கள் எடுத்துக்கொண்டிருந்தான்.

ஸ்வேதா கேக்கை வெட்டி அம்மாவுக்கும் கௌதமுக்கும் ஊட்டினாள். நண்பர்கள் எல்லோரும் சுற்றி நின்று ஹேப்பி பர்த்டே டு யு என்று பாடி வாழ்த்தினார்கள். எல்லோருக்கும் ஒரு துண்டு கேக்குடன் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. எல்லோரும் பலவாறாக அரட்டையடித்தபடி சாப்பிட்டார்கள். அதில் ஹசன், காதரும்

இருந்தார்கள். அவர்கள் ஜெகதீசுவரியிடம் இயல்பாக பேசியதிலிருந்து, அவர்கள் ஏற்கெனவே பழகியவர்ள் என்பது தெரிந்தது. பார்ட்டிக்கு வந்திருந்த பல பெண்களும் கூட்டத்தில் பளிச் என்று வித்தியாசமாகத் தெரிந்த அவர்கள் இருவரையும் யார் என்று விசாரித்தார்கள். உடனே ஜெகதீஸ்வரி அவர்களை அழைத்து தன் தோழிகளிடம் பெருமையாக அறிமுகம் செய்து வைத்தாள்.

"இந்தப் பசங்க ரெண்டு பேரும் ஹைதராபாத்திலிருந்து வந்து நம்ம கௌதம்கூட காலேஜில படிக்கிறாங்க. ரொம்ப தங்கமான பசங்க. பெரிய பிசினஸ் பேமிலி. நாங்க கூட வரும் லீவுல அவங்க வீட்டுக்கு ஹைதராபாத் பேறாதா இருக்கோம். அவங்களுக்கு காஷ்மீர்ல கூட பிசினஸ் உண்டாம். அங்கே போனாலும் நமக்கு தங்குவதற்கு இடம் இருக்கு" அவர் குரலில் அதிக மகிழ்ச்சி தெரிந்தது.

"அப்போ அடுத்த டூர் காஷ்மீரா?" ஒரு தோழி பொறாமையுடன் கேட்டாள்.

"முடிஞ்சா போகவேண்டியதுதான். தங்குற செலவு தானே ஜாஸ்தி. தங்குறஇடம் ஃப்ரீன்னா ஒரு தடவை போயிட்டு வரலாம் தானே!" என்று இன்னொரு பெண் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து ஹசன், காதர் தன் பெற்றோருடன் தன் பெரிய வீட்டில் இருப்பது போன்ற ஒரு ஆல்பத்தை அவர் தன் தோழிகளிடம் காட்டிக்கொண்டிருந்தார். காதரின் நுணுக்கமான தயாரிப்பு வேலைகளில் அந்த ஆல்பமும் ஒன்று என்பது அங்கு யாருக்குத் தெரியும்?

எல்லோரும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரத்தில் இருந்தார்கள். காதர் மட்டும் தன் கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டான். மணி இரவு ஒன்பது ஆனதும் வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராக புறப்பட்டுச் செல்லத் துவங்கினர். ஹசன், காதர் இருவரும் ஸ்வேதாவிடமும் அம்மாவிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டனர். அப்போது ஜெகதீசுவரி, "தம்பிகளா! கௌதம் சொன்னானா? நாளை மறுநாள் ஸ்வேதாவோட பரதநாட்டியம், நவராத்திரி பங்ஷன்ல இருக்குது. கண்டிப்பா வந்துடணும்" என்றபடியே அனுப்பிவைத்தாள்.

நடக்கும் எல்லாவற்றையும் ஆர்டர்லி போலீஸ் கூர்மையாக கவனித்துக்கொண்டிருந்தான். அவனும் இளைஞன் தான். அவனுக்கு ஏனோ ஹசன், காதரைப் பார்த்த நாள் முதலே பிடிக்கவில்லை. அவர்களின் நடவடிக்கைகளில் அவனுக்கு ஏதோ ஒரு குறை, தவறு இருப்பதாக அவனின் உள்ளுணர்வு சொன்னது.

"தம்பி! நீ வந்து சாப்பிடுப்பா!" என்றபடி ஆர்டர்லிக்கு சாப்பாடு பரிமாறினார்.

"ஆர்டர்லியை உட்கார வைச்சு சாப்பாடு போடுற அதிகாரி மனைவி நீங்க மட்டும்தான்மா!" என்றபடி அவன் சாப்பிட உட்கார்ந்தான்.

"அம்மா! சொல்றேன்னு தப்பா நெனச்சுக்காதீங்க! அந்த ஹைதராபாத் பசங்க நல்லவங்களா தெரியலைம்மா. நம்ம தம்பி ரொம்ப நல்ல பையன். சூது வாது தெரியாம வளர்த்திருக்கீங்க. தம்பியை கொஞ்சம் எச்சரிக்கையாக பழகச் சொல்லுங்கம்மா!"

ஜெகதீசுவரி சிரித்தார். "ஏம்பா எவனாவது பெரிய போலீஸ் ஆபீசர் வீட்டில வந்து ஏமாத்துவானா? மாட்டினால் என்ன நடக்கும்னு அவங்களுக்குத் தெரியாதா? அவங்க சின்னப் பசங்க. கொஞ்சம் விளையாட்டுத்தனமாக இருப்பார்கள். நாம் அதை தப்பா பார்க்கக் கூடாதுப்பா!"

ஆர்டர்லி "என்னம்மா நீங்களும்இப்படிசொல்கிறீர்கள்? என்றபடி சாப்பிட்டான்."

"உங்க ஐயா மாதிரி நீயும் போலீஸ்தானே! எதையும், யாரையும் லேசில நம்பமாட்டீங்க!" என்று சலித்தபடி பரிமாறினார். பெற்றோரைப் பிரிந்து வெகுதூரம் வந்திருந்து ஹோட்டலில் சாப்பிடுகிறார்கள் என்று ஹசன், காதர் மேல் அவருக்கு ஒரு தாயின் பரிவே இருந்தது. அந்த நல்ல மனம் அவர்களைத் துளியும் சந்தேகப்படவில்லை.

**அ**தே சமயம் கடற்கரைச் சாலையில் காதர், ஹசனையும் எதிர்பார்த்து இரண்டு இளைஞர்கள், ரிசார்ட் பார்ட்டியில் கலந்துகொண்டவர்கள், காத்திருந்தார்கள். அவர்கள் கண்ணகி சிலையின் பின்புறம் இருந்த சிறிய சாலையில் இருளில் பைக்கை நிறுத்திவிட்டு காத்திருந்தனர். அவர்கள் அங்கு நீண்டநேரம் நிற்க பயந்தார்கள். ஒவ்வொரு முறை போலீஸ் ஜீப் அவர்களை கடந்து சென்றபோதும் அவர்களுக்கு கொஞ்சம் திகிலாக இருந்தது. காரணம்அவர்கள் கையில் இருந்த பெட்டியில் இருந்த வெடிகுண்டு. அது ஒரு டைம் பாம். 9.00 மணிக்கு சந்திப்பதாக சொல்லியிருந்தவர்கள் வருவதற்கு தாமதமானது, அவர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது. அப்போது ஒரு பைக் அவர்கள் அருகே வந்து நின்றது. அதில் சரியாக 9.30க்கு வந்த ஹசனும் காதரும் அந்த டைம் பாமை வாங்கிக்கொண்டு கிளம்பினார்கள்.

கௌதம் வீட்டில் எஸ்.பி.யின் ஆர்டர்லியாக வேலைபார்த்தவன் ராமசாமி என்ற போலீஸ். ராமசாமிக்கு இருபத்தி ஏழு வயதாகி இருந்தது. அவன் சொந்த ஊர் மதுரை அருகில் உள்ள ஒரு கிராமம். விவசாய குடும்பத்தைச் சேர்ந்த அவன் கஷ்டப்பட்டு படித்து பி.ஏ. பட்டம் பெற்றான். அவனுக்கு, தான் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியாக வேண்டும் என்ற ஆசை சிறுவயது முதலே இருந்தது. அதனால் அவன் வேறு வேலைகளுக்கான தேர்வுகள் எதையும் எழுதாமல் நேராக போலீஸ் வேலைக்கு முயற்சி செய்தான். மதுரையில் ஒரு ஓய்வு பெற்ற பெரிய போலீஸ் அதிகாரி போலீஸ் வேலையில் சேர விரும்புவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பயிற்சியளித்து வந்தார். அவரிடம் போய்ச் சேர்ந்து பயிற்சி பெற்ற ராமசாமி முதல் முறையிலேயே தேர்வு செய்யப்பட்டான். பயிற்சி முடிந்து சென்னைக்கு வேலையில் நியமிக்கப்பட்டான். அவனுடைய பணிவான நடத்தையும் நேர்மை, ஒழுக்கமும் எஸ்.பி.க்கு பிடித்துப்போனதால், அவனை கொஞ்ச காலம் தன்னுடைய வீட்டில் ஆர்டர்லியாக வேலை பார்க்கும்படி சொன்னார். ராமசாமி முதலில் அதை அவ்வளவாக விரும்பவில்லை. இன்னொரு சீனியர் போலீஸ், "இது மாதிரி பெரிய அதிகாரி வீட்டில் கொஞ்சகாலம் வேலை பாரு, பின்னால் உனக்கு அது பல வகையிலும் உதவியாக இருக்கும்" என்று சொன்னதாலும், எஸ்.பி.யின் தன்மையான குணத்தையும் கருதி ராமசாமி அவர் வீட்டில் ஆர்டர்லியாக சேர்ந்தான். பதவி உயர்வு பெற்ற பிறகு தான் திருமணம் செய்துகொள்வேன் என அவன் உறுதியாக இருந்தான்.

கௌதமின் அம்மாவும் ராமசாமியை ஒரு வேலைக்காரனாக நடத்தாமல் இன்னொரு மகன் போல அன்பாக நடத்தினார். அவன் மூன்றுவேளையும் அங்கேயேதான் சாப்பிடவேண்டும் என்று அவர் சொல்லிவிட்டார். கௌதமும் அவன் தங்கை ஸ்வேதாவும் அவனை அண்ணா என்று அழைத்து மரியாதையாகவும் அன்பாகவும் நடத்தினார்கள். இதனால் அவனும் அந்த குடும்பத்துக்காக விசுவாசமாக வேலைகளைச் செய்தான். அவனையறியாமலேயே அந்தக் குடும்பத்தின் மேல் அவனுக்கு ஒரு பற்றும் விசுவாசமும் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் தன்னிடம் அன்புகாட்டுவதைப் போலவே எல்லோரிடமும் பழகுவதைக் கவனித்தான். மற்ற அதிகாரிகள் இதுபோல இல்லை என்பதை அவன் தன் நண்பர்கள் சொல்லக் கேட்டிருந்தான்.

அவர்கள் வீட்டில் அடிக்கடி யாராவது உறவினர்களும் நண்பர்களும் வந்தபடி இருப்பார்கள். கௌதமும் ஸ்வேதாவும் யாராவது தம் நண்பர்களை தினமும் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு

வருவார்கள். அதிலும் வீட்டைவிட்டு வந்து ஹாஸ்டலிலும், வெளியிலும் தங்கியிருக்கும், தம் நண்பர்களை வீட்டுக்கு கூட்டி வந்து சாப்பிட வைப்பார்கள். அம்மாவும் முகம் சுளிக்காமல் அவர்களுக்கு தன் கைப்பட சமைத்து சாப்பிடவைப்பார். சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் இது வழக்கமாக நடக்கும். அங்கு அடிக்கடி வருபவர்கள் ராமசாமியிடம் அன்பாகவே நடந்து கொள்வார்கள். அவர்களை பல சமயங்களில் சினிமா, பீச் போன்ற வெளியிடங்களில் அவன் பார்க்க நேர்வதுண்டு. அப்போதும் அவர்கள் நடந்துகொள்ளும் விதம் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

ஆனால் சமீப காலமாக, சுமார் நான்கு மாதங்களாக அங்கு வந்து செல்லும் இரண்டு வட இந்திய இளைஞர்களை அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர்கள் எல்லோரிடமும் நன்றாக இயல்பாக பழகுவது போல் இருந்தாலும், அவர்களிடம் ஏதோ ஒரு வித்தியாசத்தை அவன் உணர்ந்தான். அவர்கள் அவனிடம் பேசுவதையும் நேருக்கு நேராக பார்ப்பதையும் முடிந்த அளவு தவிர்ப்பதாக அவனுக்குப்பட்டது. வீட்டில் உட்காரும் போதுகூட அவனுக்கு முதுகைக் காட்டியபடி, அவனைத் தவிர்த்தபடி உட்கார்ந்ததை பல நாட்கள் அவன் கவனித்தான். அவனுக்கு அவர்களிடம் ஏதோ ஒரு தவறு, ஒரு கள்ளத்தனம் இருப்பது போல தெரிந்தது. இருந்தாலும் அவர்கள் கௌதமின் வகுப்புத் தோழர்கள். அந்த வீட்டின் விருந்தாளிகளாக வந்து செல்பவர்கள். ஏதோ ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவசரப்பட்டு எதுவும் சொன்னால் தப்பாகிவிடும். அதுவும் அந்த வீடு, தன் மேலதிகாரி வீடு. தப்பாகிவிட்டால் அதிகாரி தன் வேலையில் கை வைத்துவிடுவார் என்றும் அவன் பயந்தான். அதே சமயம் அவர்கள் மேல் இவனுக்கு இருந்த விசுவாசத்தால், நமக்கென்ன என்று இருக்கவும் அவனால் முடியவில்லை. அதனால் பிறகு அவர்கள் வரும்போதெல்லாம் அவர்கள் முன்பாக வராமல் மறைவாக இருந்தபடி கவனிக்க ஆரம்பித்தான். அதில் அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. குழப்பமாக இருந்தான்.

கௌதமிடம் அவர்களின் முகவரியை கேட்டுத் தெரிந்துகொண்டான். அவர்கள் எந்த ஊர் என்பதைவும் மெதுவாகப் பேசி தெரிந்துகொண்டான். ஒரு நாள் விடுமுறையில் இருந்தபோது, அவர்களைப் பின் தொடர்ந்து போகவேண்டும் என்று பலமுறை முயற்சி செய்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் வீட்டில் அவனுக்கு ஏதாவது வேலை சொன்னார்கள். அல்லது அவர்கள்

கௌதமுடன் எங்காவது காரில் போய்விடுவார்கள். ராமசாமியும் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒரு நாள் அம்மாவிடம் காதர், ஹசன் பற்றி மெதுவாகக் குறை சொன்னான். அப்போது அந்த அம்மா இவன் சொன்னதை ஏற்றுக்கொள்ளாமல் "நீயும் உங்க அய்யா மாதிரி போலீஸ் தானே. அப்படித்தான் நினைப்பாய்!" என்று சொல்லி சிரித்துவிட்டுப் போனார். அவனும் "இதற்கு மேலும் நாம் அவர்களை குறை சொல்லிப் பேசினால், நம்மைத்தான் தவறாக நினைப்பார்கள்" என்று பேசாமல் இருந்துவிட்டான்.

ஆனால் அவன் பலவாறாக யோசித்தான்.

"அந்த இரண்டு பேரும் பெரிய பணக்காரர்கள் என்றால் அவர்கள் ஊரிலேயே படிக்காமல் ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டும்?"

"நம்மை ஏன் அவர்கள் தவிர்க்கிறார்கள்?"

மூன்றாவது கேள்வி ஒன்றும் அவனுக்கு தோன்றியது. அதுதான் மிக முக்கியமான கேள்வி. "அவர்கள் இதுவரை ஐயா வீட்டில் இருக்கும் போது ஒரு முறை கூட வந்தது கிடையாது. இது ஏன்? இந்த விஷயத்தை இந்த வீட்டில் இருப்பவர்கள் யோசித்திருக்கிறார்களா?"

"இதில் ஏதோ விஷயம் இருக்கிறது. இந்த இரண்டு பேரிடம் ஏதோ மர்மம் இருக்கிறது. இதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தக் குடும்பத்துக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுவிடும்."

அதே சமயம் தான் அவர்களை சந்தேகப்படுவது அவர்களுக்கு எந்த வகையிலும் தெரிந்துவிடக் கூடாது. சரியான சந்தர்ப்பத்துக்காக ராமசாமி பொறுமையாக காத்திருந்தான்.

# 32

அடுத்த நாள்.

“ஜார்ஜ், சாமிநாதன் நீங்க ரெண்டுபேரும் ரோஸி, ஜென்சி ரெண்டு பேரையும் திருவான்மியூர் மார்க்கெட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க. அங்கே மார்க்கெட்டில் ஒரு கடையில் பூட்டை உடைத்து திருட்டு நடந்திருக்கு. அதுக்கு நம்மை வரச்சொல்லி ஆர்டர் வந்திருக்கு. அதை முடிச்சுட்டு வரட்டும். அவங்க கொஞ்சநேரம் ரிலாக்ஸ்டா இருக்குறது நல்லது. நாளையிலிருந்து அவங்களுக்கு டூட்டி டைட் ஆக இருக்கும். இன்ஸ்பெக்டர் முபாரக் அலி ரோஸியுடனும், ஜென்சியுடனும் அவர்களின் முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டே பேசினார். ரோஸி, ஜென்சி இருவரும் பயிற்சி பெற்ற அனுபவம், திறமை மிகுந்த போலீஸ் நாய்கள். சென்னை போலீசின் டாக் ஸ்குவாடில் சீனியர் வீரர்கள். இந்தியா முழுவதும் அவர்களின் பெயர்கள் பிரசித்தமானவை. ஜார்ஜீம் சாமிநாதனும் மோப்பநாய்களின் பயிற்சியாளர்கள்.”

பயிற்சியாளர் ஜார்ஜ், “சரி சார்” என்றார். பீச் ரோடில் போய் திருவான்மியூர் மார்க்கெட்டுக்கு அரைமணி நேரத்தில போயிடுறோம் சார்!” என்றபடி “கமான் கேர்ள்ஸ்” என்று அவைகளை அழைத்தார். முபாரக் அலியும் பாசத்துடன் முதுகைத் தட்டிக் கொடுத்து அவைகளை அனுப்பினார். இரண்டு நாய்களும் ஜார்ஜிடமும் சாமிநாதனிடமும் வந்து இழைந்தன. சிறிது நேரத்தில் இரண்டு பயிற்சியாளர்களும் ஒரு ஜீப்பில் ஏறி உட்கார்ந்தார்கள். நாய்கள் இரண்டும் குறிப்பறிந்து வேகமாக ஓடி வந்து அந்த ஜீப்பில் ஏறிக் கொண்டன அவர்கள் கமிஷனர் அலுவலக வளாகத்தை விட்டு வெளியேறி, காமராசர், சாலையில் போய் திருவான்மியூர் நோக்கி விரைந்தார்கள்.

ஜீப் காமராசர் சாலையில் வேகமெடுத்துசாந்தோம் சர்ச், பட்டினப்பாக்கம் வழியாக சத்யா ஸ்டுடியோ திருப்பத்தில் ஒரு டிராபிக் சிக்னலில் நின்றது. நாய்கள் இரண்டும் கடல்காற்றை சுகமாக அனுபவித்தபடி சாலையில் ஓடிய வாகனங்களையும் மக்களையும் பார்த்தபடி மகிழ்ச்சியுடன் வந்தன. அப்போது அந்த சிக்னலில்

அவர்களின் ஜீப் நின்றபோது, அவர்களின் பக்கவாட்டில் ஒரு பைக் வந்து நின்றது. அடுத்த நிமிடம் அவற்றின் மகிழ்ச்சி நிலை மாறியது. ஜார்ஜும், சாமிநாதனும் தமக்குள் ஏதோ சிரித்து பேசிக்கொண்டு வந்தார்கள். நாய்களின் மனநிலைமாறி அவை பரபரப்பாவதை அவர்கள் முதலில் கவனிக்கவில்லை.

"என்ன ஜார்ஜ்! நாளைக்கு ஆரம்பிச்சா இந்த பூஜா ஹாலிடேஸ் முடியும் வரை நமக்கு ரெஸ்டே இருக்காது. லீவ் எடுக்கவும் விடமாட்டாங்க."

"ஆமாம்பா! நமக்கு மட்டுமா? இதுங்களுக்கும் தான். பாவம். பேப்பர்லயும் டி.வி.லயும் பாக். தீவிரவாதிகள் சதி! சென்னைக்கு ஆபத்து" அப்படின்னு எதையாவது நாலு வரி எழுதிடுறானுக. நமக்கு பெரிய கஷ்டமாப் போயிடுது. இராப்பகலா சாப்பாடு தூக்கமில்லாமல் போகுது. ஆனால் நம்மளைப் பத்தி எவன் கவலைப்படுறான். அதுவும் நம்ம ஸ்குவாடைப் பத்தி யாரும் வெளில சொல்றதே இல்லை."

ஜார்ஜ் வெகுவாக சலித்துக்கொண்டார்.

"அவனுக நாலைஞ்சு வருசமாவே இதைத்தான் எழுதிட்டு இருக்கானுக. தாக்குறதுன்னா இந்நேரம் செஞ்சுருக்க மாட்டானுகளா! அவ்வளவு தூரத்தில இருந்து இங்க வந்தா பாம் வெக்கப்போறான். எல்லாம் கப்சா! பத்திரிகை விக்கணும். அவனுகளுக்கு வேண்டியது அவ்வளவுதான்."

"ஏம்பா இப்படி சொல்றே! கோயம்புத்தூரில நடக்கலையா?" செய்யணும்னு நெனச்சா செஞ்சுடுவானுகப்பா. அவனுகள்ளாம் உயிரைப்பத்தி கவலைப்படாதவங்கப்பா. ஏதோ நம்பளும் இராணுவமும் இப்படி சாப்பாடு, தூக்கம்னு பார்க்காம வேலை பாக்குறதுனால இதுவரை சென்னையில அவனுகளால எதுவும் செய்யமுடியலை."

அப்போது சாமிநாதன் இரண்டு நாய்களும் அமைதியாகி படு சீரியசாக எதையோ கவனிப்பதைப் பார்த்து, "ஜார்ஜ், அவங்களைப் பார்!" என்றார்.

நாய்களின் காதுகள் விரைந்து செங்குத்தாக இருந்தன. மூக்கு எதையோ மோப்பம் பிடித்தது. பிறகு ஜீப்புக்கு வெளியே தலையை நீட்டி மோப்பம் பிடித்தன. உடனே பயிற்சியாளர்களைப் பார்த்து குரைத்தன. நிறுத்தாமல், வெளியே பார்த்தபடி வேகமாக தொடர்ந்து குரைத்தன. அவர்களும் வெளியே எட்டி, நாய்கள் யாரைப் பார்த்துக் குரைக்கின்றன என்று கவனித்தார்கள். இன்னும் சிகப்பு விளக்குத்தான்

ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஜீப்பை ஒட்டி நெருங்கி இரண்டு பக்கமும் பல பைக்குகளும் கார்களும் இரண்டு பஸ்களும் உறுமியபடி நின்று கொண்டிருந்தன. அதில் நாய்களின் பார்வை ஒரு பைக்கின் மேல் பதிந்ததை அவர்கள் கவனித்தார்கள். அந்த பைக் ஒரு பல்சர் கறுப்பு. அதில் வட இந்திய இளைஞர்கள் இரண்டுபேர் இருந்தார்கள். பின்னால் பில்லியனில் இருந்தவன் மடியில் ஒரு சிகப்புநிற டிராவல் பேக் வைத்திருந்தான். அந்தப் பையைப் பார்த்துத்தான் ரோசியும் ஜென்சியும் குரைத்தன. அவர்கள் முதலில் நாய்களை கவனித்துவிட்டு சாதாரணமாக இருந்தார்கள். பிறகு நாய்கள் தங்களைப் பார்த்தே தொடர்ந்து குரைக்கின்றன என்பதையும் அந்த நாய்கள் இருப்பது போலீஸ் ஜீப்பில் என்பதையும் கவனித்து கலவரமானார்கள். ஆனால் அவர்கள் அவசரத்துக்கு பச்சைவிளக்கு அவ்வளவு சீக்கிரம் வருவதாகத் தெரியவில்லை. பில்லியனில் இருந்தவன் முன்னால் இருந்தவனிடம் மெதுவாக ஏதோ சொன்னான். உடனே அவனும் நாய்களையும் ஜீப்பையும் திரும்பிப் பார்த்தான். சிக்னலைக் கவனித்தான். அது பச்சைக்கு மாறுவதாய் தெரியவில்லை. அவர்கள் கலவரமானார்கள். பைக்கை கிடைத்த இடைவெளிகளில் வேகமாக நகர்த்திக்கொண்டு ஜீப்பிலிருந்து தள்ளிப் போக முயன்றார்கள். அதை ஜார்ஜ் கவனித்துவிட்டார்.

"சாமிநாதா! அந்த பல்சர் பைக்கை கவனிச்சுக்க. நாய்களைப் பார்த்து அவங்க ஏன் கலவரமாகி நகருறாங்க. சம்திங் ராங் பா! நம்பரை நோட் பண்ணு!"

சாமிநாதன் கீழே இறங்க முயன்றார். அவரால் ஜீப் கதவை திறக்க முடியவில்லை. அவ்வளவு நெரிசலாக வாகனங்கள் நின்றன. பின்னால் இருந்த பைக் இளைஞனிடம் சொல்ல அவன் அந்த பல்சர் எண்ணை கவனித்துச் சொன்னான்.

"டிரைவர்! அந்த பல்சர்ல ரெண்டு பசங்க இருக்காங்க பார். அந்த ப்ளூ ஷர்ட், ரெட் டிராவல் பேக் வச்சிருக்கான்ல அதை ஃபாலோ பண்ணு. மிஸ் பண்ணிடாத. அவங்களைப் பார்த்து நம்ம ரோசியும், ஜென்சியும் டென்ஷன் ஆகி குரைக்கிறாங்க. அவங்க பேக்ல ஏதோ விஷயம் இருக்கணும்.!" என்ற ஜார்ஜ் சிக்னல் விழுந்ததும் அந்த பைக் கலவரத்துடன் சீறி மற்றவர்களை முந்திக்கொண்டு விரைவதையும் கவனித்தார். உடனே ஜீப்பிலிருந்த ஒயர்லெஸ் செட்டை கையிலெடுத்து, "ஹலோ கன்ட்ரோல் ரூம், டாக் டிரெய்னர் ஜார்ஜ், ஹியர்!" என்று ஆரம்பித்து, கறுப்பு நிற பல்சரின் எண்ணையும் பயணிகள் அடையாளமும் சொல்லி அதை நிறுத்தச் சொன்னார்.

அதே சமயம் ஜீப் டிரைவரும் பைக்கை தப்பவிடாதபடி. தொடர்ந்து சென்றார். பைக் திருவான்மியூர் கடந்து ஈசிஆர் சாலையில் விரைந்தபோது போலீசார் குறுக்கே தடை போட்டு, திரும்பிச் செல்ல முயன்ற பைக்கை சுற்றி வளைத்து நிறுத்தினர். அந்த இரண்டு பேரும் தப்பி ஓடாதபடி இரண்டு போலீசார் பிடித்துக்கொண்டார்கள். அதே சமயம் ஜீப்பிலிருந்து விரைவாக குதித்து இறங்கி ஓடிய ஜார்ஜ் பில்லியனில் இருந்தவன் வைத்திருந்த டிராவல் பேக்கை பறித்து பார்த்தவர், அதை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு வந்தார். அருகில் ஒருசிறு குளம் இருந்தது. அங்கிருந்த டிராபிக் சார்ஜென்டிடம் ஜார்ஜ், “சார்! அந்த பேக்கில் என்ன இருக்குன்னு பார்க்கணும் சார்! பாம். ஏதாவது இருக்குமோன்னு சந்தேகம் சார்!” யாரும் கிட்டே போகாதீங்க!”

அந்த பைக்கில் வந்த இரண்டு பேர் ஹசன், காதர் உடன் பார்ட்டியில் கலந்து கொண்டவர்கள்தான்.அவர்கள் இருவரும் ஜீப்பில் உட்காரவைக்கப்பட்டார்கள். ஜீப் டிரைவரும் சாமிநாதனும் அவர்கள் இரண்டுபேரும் தப்பிவிடாதபடி காவல் நின்று கொண்டார்கள். சிறிது நேரத்தில் பாம் ஸ்குவாட் வந்து சேர்ந்தது. அவர்கள் டிராவல் பேக்கை வெகு ஜாக்கிரதையாக திறந்து பார்த்தார்கள்; அதிர்ந்தார்கள். அதில் சிறு டிபன் பாக்ஸ்களில் பாம்கள் பொருத்தப்பட்டு ஒன்றின்மேல் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அருகிலிருந்த குளத்தின் கரையில் வைத்து செயலிழக்கச் செய்தார்கள். அதற்குள் செய்தி பரவி போலீஸ் கமிஷனரும் பல அதிகாரிகளும் அங்கே வந்து சேர்ந்தார்கள். டி.வி. ஆட்களும் மற்ற செய்தியாளர்களும் குவிந்துவிட்டார்கள். ஜார்ஜ், சாமிநாதன் இரண்டு பேருடன், ரோஸி, ஜென்சி ஆகியோருக்கும் பெரும்பாராட்டு கிடைத்தது.” எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து மக்களை காப்பாற்றியிருக்கிறார்கள்!” மக்கள் வியப்புடன் பாராட்டினார்கள்.

“நான் முதலில் ஏதோ போதை மருந்து கடத்துகிறார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் சர்வசாதாரணமாக இப்படி பாம் கொண்டு போவாங்கன்னு எதிர்பார்க்கவே இல்லை சார்!”

சாமிநாதனுக்கு இன்னும் திகைப்பு நீங்கவில்லை. அவர் தன் நாய்களை மிகவும் பெருமையுடனும் வாஞ்சையுடனும் முதுகைத் தடவிக்கொடுத்தார். உடனே இன்ஸ்பெக்டர் முபாரக் அலிக்கு தகவல் சொன்னார்.

“இந்த பாம்கள் ஆர்டி எக்ஸ் வகையை சேர்ந்தவை. வெடிக்கும் இடத்தில் கட்டிடங்களை தரைமட்டமாக்கி பெரும் சுற்றளவுப் பரப்பில்

சேதத்தை ஏற்படுத்தக்கூடியவை. இந்த வகை பாம்கள் மொத்தம் ஐந்து அந்தப் பையில் இருந்தன. அவர்கள் இதை யாருக்கோ கொடுப்பதற்காக கொண்டு போகிறார்கள் என்று நினைக்கிறேன்." என்றார் கமிஷனர். ஒருவகையில் அவருக்கு நிம்மதியாக இருந்தாலும், வேறு யாரும் இதுபோல இருக்கிறார்களோ என்பதும், இவர்கள் யாருக்கு கொண்டு போனார்கள் என்பதும் தெரியும் வரை நகரத்துக்கு பெரும் ஆபத்து உள்ளது என்று நினைத்தார். அவருக்கு ப்ரஷர் எகிறியது. ஆயுத பூஜை, நகரமெங்கும் கோலாகலமாக நடக்கவிருக்கும் போது இப்படி ஒரு பிரச்னை வருவதை அவர் கொஞ்சமும் விரும்பவில்லை. அவரின் நிம்மதி பறிபோனது என்று உணர்ந்தார்.

அந்த இரண்டு பேரும் ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பு கொண்டு போகப் போலீஸ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள், ஒரு பாதுகாப்பான இடத்துக்கு விசாரணை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டனர். அந்த இடம் யாருக்கும் தெரிவிக்கப்படாமல் ரகசியமாக வைக்கப்பட்டது.

# 34

**வெ**டிகுண்டை வாங்கி பைக்கில் வைத்துக்கொண்ட காதர் புறப்படத் தயாரானான். அப்போது ஹசன் அந்த இடத்தில் இல்லை. வெடிகுண்டைக் கொடுத்த இரண்டு பேரும் அந்த நிமிடமே அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள்.

அதற்கு சற்றுமுன்பாக, காதரும் ஹசனும் கௌதம் வீட்டிலிருந்து கிளம்பியதுமே மறைந்து நின்றிருந்த ராமசாமியும் தன் பைக்கில் அவர்களை பின் தொடர்ந்தான். இரவாக இருந்ததால் தம்மை ஒருவர் தொடர்ந்து வருவதை இரண்டு இளைஞர்களும் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் பீச் ரோடில் கண்ணகி சிலைக்கு பின்னால் நிற்பதைப் பார்த்து தானும் பைக்கின் வேகத்தைக் குறைத்து நிறுத்தினான். அவர்களை எதிர்பார்த்து நின்ற இன்னும் இரண்டு பேர் அவர்களிடம் ஒரு ட்ராவல் பேகை கொடுப்பதை கவனித்தான். அப்போது காதர் மட்டும் சற்றுத் தள்ளிப் போய் அவர்களிடம் பேக்கை வாங்கினான். ஹசன் பைக் அருகிலேயே நின்று கொண்டிருந்தான். அவனை ராமசாமி கவனிக்காமல், மறைவாக நின்று காதரின் நடவடிக்கை கவனித்துக்கொண்டிருந்தான்.

காதரும் அந்த இரண்டுபேரும் சேர்ந்து நிற்பதை யாரோ ஒருவன் மறைந்து நின்று கவனிப்பதை ஹசன் பார்த்துவிட்டான். அது யாராக இருக்கும் என்பதை தெரிந்து கொள்ள அவன் சற்று பக்கவாட்டில் நகர்ந்து போனான். அது கௌதம் வீட்டில் இருக்கும் சாதாரண போலீஸ் என்பதைப் பார்த்து அவன் அதிர்ச்சியடைந்தான். அவன் மேற்கொண்டு என்ன செய்வது என்று நினைப்பதற்குள்ளாக காதர் பையை வாங்கிக்கொண்டு திரும்பிவந்தான்.

“ஹசன்! வண்டியை எடு! போகலாம்!”

“காதர்! ஒரு நிமிஷம்! அப்படியே மெதுவா நம் வலது பக்கம் நிற்கும் ஹோண்டா ஸ்ப்லெண்டர் பைக்கை எடுக்கிற ஆளைக் கவனி! மெதுவாக!”

காதர் பைக்கை சரியான இடத்தில் வைக்கப் பார்ப்பதுபோல ஸ்பெளெண்டர் பைக்கை கவனித்தான். ராமசாமி வந்து ஸ்ப்ளெண்டர் பைக்கை கிளப்பினான்.

"ஹசன்! இவன் கௌதம் வீட்டு சர்வன்ட் தானேஸ"

"ஆம் காதர்! இவன் நம்மை சந்தேகப்பட்டு பாலோ பண்ணி வந்திருக்கான். இவனுக்கு எப்படி நம் மேல் சந்தேகம் வந்தது? ஆச்சரியமா இருக்கே!"

அவ்வளவு பேரையும் ஏமாற்றி நான்கு மாதத்துக்கு மேல் சென்னையில் உலவி வரும் தங்களை ஒரு சாதாரண வேலைக்கார போலீஸ் சந்தேகப்பட்டதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எதை வைத்து அவன் தங்களை சந்தேகப்பட்டான் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

"ஹசன்! ஆச்சரியப்பட இது சமயம் இல்லை. அவன் தன் சந்தேகத்தை மற்றவர்களிடம் சொல்வதற்கு முன்பாக நாம் செயல்படவேண்டும். அந்த ராமசாமிக்கு நேரம் சரியில்லை போல. அதனால் தான் அவன் நம்மை பின் தொடர்ந்து கவனித்து வந்திருக்கிறான். Poor fellow!"

"சரி! எப்படி முடிப்பது?"

காதர் சிரித்துக்கொண்டே, "அவன் தான் ஸ்ப்ளெண்டர் பைக் வைத்திருக்கிறானே. அவன் அதில் அதிக வேகமாகப் போவான். அப்போது எதிர்பாராமல் குறுக்கே வரும் மணல் லாரியிலோ தண்ணீர் லாரியிலோ அடிபட்டு இறந்து போவான். அப்படித்தான் நடக்கும். நான் சொல்வது சரியா?"

"ரொம்பச்சரி!" என்று ஹசன் ஆமோதித்தான்.

மறுநிமிடம் ஹசன் வண்டியை உதைக்க அவர்கள் தம் இருப்பிடத்தை நோக்கி விரைந்தார்கள்.

போகும்போதே ஹசன், "காதர், ஏற்கெனவே ஒரு நாள் நம்மைப் பற்றி இந்த ஆள் கௌதமிடம் விசாரிச்சதா சொன்னான். நம் அட்ரஸ், நம் சொந்த ஊர், பிசினஸ், எல்லா விபரமும் கேட்டதாகச் சொன்னான்."

"நீ ஏன் இதை என்னிடம் சொல்லவில்லை?" காதர் கோபத்தில் வெடித்தான்."

"சாரி காதர்! நான் அந்த ஆளை ஒரு சாதாரண வேலைக்காரன். கௌதம் வீட்டில் பலரும் நம்மைப் பற்றி ஆச்சரியப்பட்டு விசாரித்தது போல இவனும் விசாரிக்கிறான் என்று நினைத்தேன்."

"ஹசன்! நீ யாரையும் லேசாக எடைபோட்டுவிடுகிறாய்! இத்துடனாவது இதை நிறுத்திக்கொள். புரிகிறதா?

ஹசன் காதரின் கோபத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்தவனாய் அமைதியாக வண்டியை செலுத்தினான்.

**ரா**மசாமி தன்னுடைய பைக்கில் போகும் போதே படு டென்ஷனாக இருந்தான். இந்த இரண்டு பேர் மேலும் அவன் சந்தேகப்பட்டது சரிதான். அவர்கள் இருளில் யாரையோ மர்மமாக சந்தித்து ஏதோ ஒரு பொருளை வாங்கிக் கொண்டு போகிறார்கள். நிச்சயம் அது ஏதோ ஒரு போதைப்பொருள் என்று அவன் முடிவு செய்தான். ஆனாலும் "நாம் அவசரப்படக்கூடாது. இன்னும் சில நாள் இவர்களை இது போலக் கவனித்து ஆதாரத்துடன் எஸ்.பி.யிடம் சொல்லவேண்டும். போலீஸ் அதிகாரி மகனின் நண்பனாக இருந்து கொண்டே போதைப் பொருள் கடத்தினால், எவ்வளவு தைரியம் இவர்களுக்கு?"

பெரிய கடத்தல் கும்பலே தன்னிடம் சிக்கிவிட்டதாகவும், அவர்களைப் போலீஸ் பிடித்துவிட்டால், அதற்கு காரணமான தன் மதிப்பு வெகுவாக உயரும். அது தன் பதவி உயர்வுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் அவன் மகிழ்ந்தான்.

மறுநாள் வீட்டுக்குப்போய் தனக்கு எதுவும் தெரியாதது போல காட்டிக்கொண்டு எப்போதும் போல வேலையைப் பார்த்தான்.

சரியாக இரண்டு நாட்கள் கழிந்தபின் செய்தித்தாள்களில் ஒரு செய்தி வெளியானது.

"மணல் லாரி மோதி போலீஸ் மரணம்." ராமசாமி என்ற போலீஸ் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் வேகமாகப் போனபோது பைக் தன் கட்டுப்பாட்டை இழந்து அந்த வழியே எதிரில் வந்து கொண்டிருந்த மணல் லாரியில் மோதியது. இதில் இராமசாமி உயிரிழந்தார். அவருக்கு வயது 27."

○

# 35

தமிழ்நாடு முழுவதும் போலீஸ் சல்லடை போட்டு தேடிவிட்ட பிறகும் எந்த ஒரு தீவிரவாதியும் சிக்கவில்லை. மீண்டும் ஒரு முறை மாவட்ட அதிகாரிகளின் கூட்டத்தை சென்னை தலைமை காவல் அதிகாரி கூட்டினார். அதில் தலைமைச் செயலாளரும் உள்துறைச் செயலாளரும் கலந்துகொண்டார்கள். அதில் அதுவரை நடைபெற்ற தேடுதல் வேட்டையைப் பற்றி ஆய்வு செய்தார்கள். அதில் மாவட்ட அதிகாரிகள் தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விரிவாக எடுத்துச் சொன்னார்கள். முடிவாக டெல்லியில் இருந்து அனுப்பப்பட்ட படங்களில் இருந்த தீவிரவாதிகள் எவரும் தமிழ்நாட்டில் நுழைந்திருக்க வாய்ப்பில்லை என்று அந்தக் கூட்டத்தில் முடிவு செய்தார்கள். அந்த வேட்டையின் பலனாக பல சிறிய தமிழக தீவிரவாதிகளும், நீண்டநாள் தேடப்பட்ட பல குற்றவாளிகளும் சிக்கினார்கள். அது தான் ஒரே பலன். ஒரு அதிகாரி கேட்டார் "சார்! நாம் எல்லா செக்ஷனையும் செக் பண்றோம். ஆனால் மாணவர்களை சரியா செக் பண்ணலை. என்ஜினீயரிங் கல்லூரிகளில் நிறைய வெளிநாட்டு, வெளி மாநில மாணவர்கள் இருக்காங்க. நாம அந்த ஹாஸ்டல்களையும் செக் பண்ணனும்னு நெனைக்கிறேன்."

சில அதிகாரிகள் அவர் சொன்னதை ஆதரித்தார்கள். தலைமைச் செயலாளரிடம் தலைமை போலீஸ் அதிகாரி "சார்! போலீசை பொறுத்தவரை ஹாஸ்டல்களையும் சோதனை செஞ்சாத்தான் சர்ச் கம்ப்ளீட் ஆகும்னு நினைக்கிறோம். நீங்க அனுமதி கொடுத்தால்...."

அவர் முடிப்பதற்குள், "நோ! நோ!" என்று தலைமைச் செயலாளர் பதறினார். "அதெல்லாம் தேவையில்லை. ஸ்டூடன்ஸ் பிரச்னை பண்ணுவாங்க. அது பொலிடிகல் பிரச்னையாக மாறிடும். அதுக்கெல்லாம் நான் சீஃப் மினிஸ்டர் கிட்டே பேசிட்டு தான் சொல்ல முடியும். சி.எம் அனுமதியெல்லாம் கிடைக்காது சார்."

போலீஸ் அதிகாரிகள் முணுமுணுத்தார்கள்.

உடனே தலைமைச் செயலாளர், "நீங்கள் ஹாஸ்டலில் நுழைய வேண்டாம். வழக்கமாக மாணவர்கள் கூடும் இடங்களில் மெதுவாக

சோதனை செய்வது போல அவர்களையும் சோதனை செய்யலாமே!" என்று யோசனை சொன்னார். பிறகு தாழ்ந்த குரலில் தலைமை அதிகாரியிடம், "சார்! நீங்க தான் இதை பிரச்னை வராமல் சமாளிக்கணும். மாணவர்கள் விஷயம் ரொம்ப சென்சிடிவ் ஆனதுன்னு உங்களுக்கே தெரியும். பார்த்து செய்யுங்க!" என்று சொன்னார்.

அத்துடன் தலைமைச் செயலாளரும் உள்துறைச் செயலாளரும் கிளம்பிவிட்டார்கள். போலீஸ் அதிகாரிகள் தங்களுக்குள் இந்தச் சோதனைகளை மேற்கொண்டு எப்படித் தொடர்வது என்று பேசி முடிவு செய்தார்கள். மாணவர்கள் பெரும்பாலும் சந்திக்கும் இடங்களை ரகசியமாக கண்காணிப்பது எனவும், வழக்கமான சோதனைகள் போல செக் போஸ்ட்களிலும், சிக்னல் நிறுத்தங்களிலும் சந்தேகப்படும்படி இருப்பவர்களை மட்டும் நிறுத்தி சோதனை செய்வது என்றும் முடிவு செய்தார்கள். இவ்வளவு நாள் நடத்தப்பட்ட பல வகையான சோதனைகளில் சிக்காமல் யாராவது இருந்தாலும் இனிமேல் நடைபெறும் சோதனைகளில் எப்படியும் சிக்குவார்கள் என்றும் அதிலும் சிக்காவிட்டால், அப்படிப்பட்ட தீவிரவாதிகள் யாரும் தமிழ்நாட்டில் நுழையவில்லை என்றே அர்த்தம் என்றும் அவர்கள் முடிவு செய்துகொண்டார்கள்.

போலீஸ் கமிஷனரும் தமிழ்நாட்டில் எந்த தீவிரவாதியும் நுழைந்துவிடவில்லை என்று உறுதியாக நம்பினார். அவர்கள் மறைந்திருக்கக்கூடிய அத்தனை இடங்களையும் போலீஸ் சோதனை செய்துவிட்டது. அவர்களுக்கு ஆதரவு தரக்கூடியவர்கள் என்று சந்தேகப்பட்ட அத்தனை பேரும் போலீசின் கண்காணிப்பில் இருந்தார்கள். அதனால் போலீசை மீறி அவர்கள் எங்கும் மறைந்து இருக்க முடியாது. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசாங்கத்திடமிருந்து இதுபோன்ற சுற்றறிக்கைகளும், அறிவுரைகளும் வருவது வழக்கம்தான். அதுபோல்தான் இந்த ஆண்டும் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள் என்று நிம்மதியடைந்தார். இருந்தாலும் போலீசின் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால் அவர் தம் நினைப்பை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அதனால் போலீஸ் சோதனைகள் பல இடங்களில் மாணவர்களிடமும் தீவிரமாக நடந்தது.

அதே சமயம் போலீசின் நடவடிக்கைகளில் ஒரு மாற்றம் வேகம் ஏற்பட்டுள்ளதை ஹசன், காதர் இரண்டு பேரும் உணர்ந்து கொண்டார்கள். சில ஆங்கில செய்தித்தாள்களிலும் சென்னைக்கு தீவிரவாதிகள் குறி! சென்னையில் தீவிரவாதிகளா!! என்ற ரீதியில் செய்திகள் வந்திருந்ததையும் அவர்கள் பார்த்திருந்தார்கள்.

அதே சமயம் மற்ற மாணவர்கள் இதுபோன்ற செய்திகளில் அதிக ஆர்வம் காட்டாமல் காலம் கழித்தது அவர்களுக்கு மிகவும் வசதியாகவே இருந்தது. அவர்கள் இரண்டு பேர் மட்டும் தனியாகப் போவதை குறைத்துக்கொண்டார்கள். சதீஷ், ராஜேஷ், கௌதம் போன்ற போலீசுக்கு நன்றாக அறிமுகமான நண்பர்களின் காரிலேயே அவர்களுடனேயே எங்கேயும் போனார்கள். அவர்களுடன் எப்போதும் தென்பட்டதால் எல்லா சோதனைகளையும் கடந்து சென்றார்கள். அவர்களுடைய நவநாகரீகமான தோற்றமும் இனிமையான பேச்சும் பழக்கவழக்கங்களும், அப்பாவியான முகமும், நுனிநாக்கு ஆங்கிலமும் அவர்களை யாரும் சந்தேகப்படாத அளவுக்கு இருந்தன. சோதனைச் சாவடிகளில் சதீஷ், ராஜேஷ், கௌதம் ஆகியோரின் கார்களை நிறுத்துவதற்கே போலீசார் தயங்கினார்கள். இந்த நிலைமை அதிக நாட்கள் நீடிக்காது என்பது அவர்கள் இரண்டு பேருக்கும் தெரிந்தது. அவர்கள் தங்கள் நிலைமையை நன்றாகச் சிந்தித்தார்கள்.

"காதர், போலீஸ் திடீர்னு ரொம்ப அலர்ட் ஆக மாறியிருக்காங்க. அவங்க நம்மை இதுவரை கொஞ்சம் கூட சந்தேகப்படவில்லை. காரணம் நம்மைச் சுற்றி இருக்கும் இந்தப் பசங்கதான்."

"ஆமாம்! ஆனால் இது எத்தனை நாள் தாக்குப்பிடிக்கும் என்று தெரியவில்லை. நாம் இப்போது ஏதாவது முடிவு எடுக்க வேண்டும்."

"இல்லை காதர்! இன்னும் ஒரு பதினைந்து நாட்கள் மட்டும்தான் நாம் இங்கே இருக்கப்போகிறோம். நாம் ஏற்கெனவே நாள் குறித்துவிட்டோம். அதை நோக்கி எந்த இடைஞ்சலும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறோம். நாம் நினைத்தால் நாளைக்கே இதைச் செய்துமுடித்துவிட்டு வெளியேறிவிடலாம். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி முழு திருப்தி இருக்காது. நம் தலைவர்களும் சந்தோஷப்பட மாட்டார்கள். இவ்வளவு நாள் திட்டமிட்டு உழைத்து காத்திருந்ததற்கு சரியான பலன் இருக்காது. இன்னும் கொஞ்சநாள் சமாளிப்போம்!"

"சரி! ஹசன். நீ சொல்வதும் சரிதான். சரியோ தவறோ நாம் இரண்டு பேரும் இங்கே வந்து கால் வைத்துவிட்டோம். நமது அடி பலமாக இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் திரும்பிப் போகும் போது இயக்கத்தில் மதிப்பு இருக்கும். நாம் யார் நமது சக்தி என்ன என்பதை இங்கே இருப்பவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்."

"நாம் நம் வெளி நடவடிக்கைகளை கொஞ்சம் குறைத்துக் கொள்வோம். அதே சமயம் நாம் கவலைப்படும்படி எதுவும் நடக்கவில்லை."

# 36

**அ**ச்சம்பாக்கத்தில் சில ஆண்டுகளாகவே மழையே இல்லை. இதனால் கண்மாயில் நீர் இருப்பு இல்லை. ஒவ்வொரு ஆண்டும் மக்கள் எவ்வளவு தான் உழைத்தாலும் கடைசியில் மழை பொய்த்து விவசாயம் நசிந்துகொண்டே வந்தது. ஒரு காலத்தில் மூன்று போகம் விளைந்த வயல்கள் இப்போது காய்ந்து கிடப்பதை அந்த ஊர் பெரியவர்களால் தாங்க முடியவில்லை. இளைஞர்களும் விவசாயத்தில் நம்பிக்கை இழந்தவர்களாக மாறி கட்டிட வேலைகளுக்கு போகத் தொடங்கிவிட்டார்கள். ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் அந்த கிராமத்தை சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்தார்கள். வயது முதிர்ந்து உடல் வலுக் குறைந்து போனவர்கள் சென்னை மாநகரின் அடுக்குமாடி வீடுகளிலும் அலுவலகங்களிலும் 'செக்யூரிட்டி'களால் கூனிக் குறுகி வேலைபார்க்க ஆரம்பித்தார்கள். சொந்த நிலங்களில் உழுது விதை விதைத்து, விளைச்சல் பார்த்து அறுவடை செய்தவர்கள், பெருமிதமாய் நிமிர்ந்து வாழ்ந்தவர்கள் குறுகி எடுபிடிகளாய் இருக்கும்படி ஆனது. சொந்த முயற்சியால் முற்காலங்களில் குளங்களை வெட்டி நீர் தேக்கி விவசாயம் செய்தவர்கள், அரசாங்கத்தை நம்பி சோம்பேறிகளாய் மாறி நீர் ஆதாரங்களை பறிகொடுத்து நின்றார்கள்.

அச்சம்பாக்கம் சென்னை ஈசிஆர் சாலையில் அருகில் திருவான்மியூரில் இருந்து பதினைந்தாவது கிலோமீட்டரில் இருந்த கிராமம். விவசாயத்தையே முதலான தொழிலாய்க் கொண்டவர்கள் அந்த மக்கள். வயதான பெரியவர்கள் ஊரின் மத்தியில் இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் கூடிப் பேசி பொழுதுபோக்குவது வழக்கம். ஒரு நாள் சாயங்காலம் பெரியவர்கள் அப்படி கூடிப் பேசும்போது ஒருவர்.

"நாம் ஒழுங்காக கோயில் திருவிழா எடுப்பது இல்லை. ஊர் எல்லையில் இருக்கும் அம்மனுக்கு முன்பெல்லாம் ஊர் கூடிப் பொங்கல் வைத்து, படையலிட்டு மரியாதை செய்வது வழக்கம். நேர்த்திக்கடன் வேண்டி மொட்டை போடுவது, காது குத்துவது எல்லாம் அப்போ தான் செய்வோம். நாடகம், கூத்து, பாட்டுக்

கச்சேரின்னு எதாச்சும் ஒண்ணு நடக்கும். நானெல்லாம் இந்த அம்மன் முன்னால ஒயிலாட்டம் ஆடியிருக்கேன். எல்லாம் சிறப்பா செய்வோம். அப்போ மழையும் நல்லாப் பேஞ்சு விளைச்சலும் நல்லாவே வந்தது. ஊர் நல்லா செழிப்பா இருந்துச்சு. மகிழ்ச்சியாகவே இருந்தோம்" என்றார் வேதனையுடன்.

"திருவிழா நடத்தி ஆறுவருஷம் ஆச்சு" என்றார் இன்னொரு பெரியவர், விரக்தியான குரலில்.

"சும்மா கிடப்பா நீ! மழை பெய்றதுக்கும் நாடகம் நடத்தி பொங்கல் வைக்குறதுக்கும் என்னப்பா சம்பந்தம்? எதையாச்சும் சொல்லி குழப்பாதே!" என்றார் ஒருவர்.

"ஏய்! நீ நல்லா யோசிச்சுப் பாருப்பா! அதெல்லாம் சாமிக்கு முறையா செஞ்சப்போ ஊர் நல்லா இருந்துச்சா இல்லையா? நீ, அப்போ உன்னோட வயல் எப்படி விளைஞ்சது, உன் வீட்டில மட்டுமே பத்து ஜோடி மாடு நின்னுச்சா இல்லையா? உன் மூணு பொண்ணுக்கும் சிறப்பா சீர் செஞ்சு கல்யாணம் கட்டிக்குடுத்தியா இல்லையா?"

எதிர்க்கேள்வி கேட்டவர் அமைதியானார். எல்லோரும் அது போலவே அமைதியாக இருந்தார்கள்.

அப்போது ஒருவர், "அண்ணன் சொல்றதுல ஏதோ ஒரு விஷயம் இருக்குது. யோசிச்சுப் பார்த்தா, காரணம் விளங்காட்டாலும், அது உண்மைனு தான் தோணுது. ஒரு அஞ்சாறு வருசத்துக்கு முன்னாடி திருவிழாவும் நடந்தது. விவசாயமும் நல்லா இருந்தது நாம ஏன் இந்த வருசம் அதே போல பொங்கல் வைச்சு சாமி கும்பிடக்கூடாது? அப்படி செய்யுறதால நல்லது நடக்கும்னு நெனச்சா ஏன் செய்யக்கூடாது?" என்றார்.

உடனே அனைவரும் முக மலர்ச்சியுடன் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். அடுத்த பௌர்ணமியன்று ஊர் எல்லையில், சாலை அருகில் இருந்த அம்மனுக்கு பொங்கல் வைத்து, விழா நடத்தி, சாமி கும்பிடுவதென்றும் அன்றைய தினம் எல்லா குடும்பங்களும் தவறாமல் ஊரில் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. மொட்டை போடுபவர்கள், காது குத்துபவர்கள் எல்லோரும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவேண்டும் என்றும் போர்டு எழுதி ஊர் நடுவே வைக்கப்பட்டது. சில நாட்களிலேயே பணம் வசூலித்து கோவில் சுத்தம் செய்யப்பட்டு, வெள்ளையடிக்கப் பட்டது. திருவிழாவுக்கான வேலைகள் ஆரம்பமானதுமே ஊர்

களைகட்டத் தொடங்கியது. வேலை வெட்டி எதுவும் இல்லாமல் சோம்பிக் கிடந்த ஆண்களும் பெண்களும் கூடிக் கூடிப் பேசி மகிழ்ந்தார்கள். சுறு, சுறுப்பாக ஆகிவிட்டார்கள். கோவில் முன்பு இருந்த அய்யனாரும், குதிரையும், புதிய வர்ணங்கள் பெற்று கம்பீரமாகக் காட்சியளித்தார்கள். ஊருக்குள் துணி வியாபாரிகள், வளையல் வியாபாரிகள் வலம் வர ஆரம்பித்தார்கள். ஊரே புதிய ஊராக மாறிவிட்டது.

திருவிழா நடத்துவது என்று முடிவு செய்த மூன்றாம் நாளே ஆரம்பித்து இரண்டு நாட்கள் நல்ல மழை பெய்தது. ஆந்திராவைப் புரட்டிப் போட்ட புயல், அச்சம்பாக்கம் கிராமத்திற்கும் ஓரளவு மழையைக் கொடுத்தது. பொங்கல் வைத்து சாமி கும்பிட வேண்டும் என்று யோசனை சொன்ன சுப்புத் தாத்தாவை ஊரே பாராட்டியது. ஒரு உழவு மழை பெய்தது இரண்டு உழவு மழை பெய்தது என்று சந்தோஷமாக பேசிக்கொண்டார்கள். உழவு வேலைகளும் ஆரம்பித்து வயல்கள் களைகட்டின. கிராம மக்கள் எல்லோரும் திருவிழாவை ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

அச்சம்பாக்கம் ஊர் மக்களும் பாலாற்றில் மணல் அள்ளும் கான்ட்ராக்டர்களிடம் அன்றாட வேலைகளுக்கு போய்வந்து கொண்டிருந்தார்கள். ஆற்று மணலை அளவுக்கு மேல் வெட்டி எடுப்பதால் தமக்கும் பாதிப்பு ஏற்படுகிறது என்ற விபரமே அவர்களுக்கு தெரியவில்லை. விவசாயம் பொய்த்துப் போன பஞ்சகாலத்தில், தமக்கு வயிறு பிழைக்க வேலை கொடுத்து காப்பாற்றும் மனித தெய்வங்களாகவே மணல் கொள்ளையர்களை அவர்கள் மதித்தார்கள். அந்த ஊர் பெரியவர்களும் ஒரு குழுவாகப் போய் நல்லதம்பியை சந்தித்து கணிசமான ஒரு தொகையை, ரூபாய் பத்தாயிரம், நன்கொடையாக வாங்கிக்கொண்டு வந்தார்கள். நல்லதம்பியின் கொடை வள்ளல் தன்மையை அவர்கள் வெகுவாகப் புகழ்ந்து பேசிக் கொண்டார்கள்.

கிராமத்தில் இருந்த ஒரு சிலர் மணல் வியாபாரிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து கடுமையாக பிரச்சாரம் செய்தார்கள். அவர்களை அந்த மக்கள் வெறுப்புடன் பார்த்தார்கள். கிராமத்தின் ஒற்றுமையையும் அமைதியையும் கெடுத்தார்கள் என்று பெரியவர்கள் அவர்களை திட்டித்தீர்த்தார்கள். மழை பெய்தவுடன் ஆற்றில் தண்ணீர் ஓரளவு ஓடியதால், ஆற்றில் மணல் எடுப்பதும் தற்காலிகமாக குறைந்திருந்தது. விவசாய வேலைகள் துவங்கின. இப்படிப் பல வகைகளிலும், அதுவரை ஓய்ந்து கிடந்த அச்சம்பாக்கம்

சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தது. ஆற்று மணல் பிரச்னையை தற்காலிகமாக மறந்து மக்கள் திருவிழா கொண்டாட்ட மனநிலையில் மகிழ்ச்சியாக இருந்தார்கள். எந்தப் பக்கம் பார்த்தாலும் சிறுவர்கள் உற்சாகமாக விளையாடுவதை பார்க்க முடிந்தது.

இன்னும் சில நாட்களில் தம்முடைய சிறிய ஊர் பெரிய அளவில் செய்தித்தாள்களிலும் டெலிவிஷன் காட்சிகளிலும் இடம்பெற்று பெயர் பெறப் போகிறது என்ற விபரம் அவர்களில் யாருக்கும் அப்போது தெரியாது.

# 37

ஹசன், காதரிடம் வெடிகுண்டு செய்து கொடுத்தவன் சென்னையில் பிறந்து வளர்ந்தவன். சிறு வயது முதலே கெட்ட சகவாசங்களால் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காமல் சிறு சிறு திருட்டுகளில் ஈடுபட்டவன். ஒரு முறை சிறையில் இருக்கும்போது அவனுக்கு தீவிரவாதிகளின் பழக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு அவன் வாழ்க்கை முறையே மாறியது. பணம் கைமாற்றுவது, போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றில் ஆரம்பதில் அவனை ஈடுபடுத்திய தீவிரவாதிகள், அவனை ஒரு சமயம் வட இந்தியாவில் ஒரு கிராமத்தில் வைத்து போலி பாஸ்போர்ட், சர்டிபிகேட்கள் தயாரிப்பது, வெடிகுண்டுகள் செய்வது, சிறு துப்பாக்கிகள் செய்வது போன்றவற்றில் பயிற்சி கொடுத்தார்கள். அவர்கள் கைநிறையக் கொடுத்த பணத்தில் ஒரு சிறிய ரெடிமேட் ஆடைகள் விற்கும் கடையை பெயருக்கு வைத்துக்கொண்டு, அதிலிருந்தபடியே தீவிரவாதிகள் அவ்வப்போது சொல்லும் வேலைகளைச் செய்து வந்தான். நாட்கள் சென்றதும் தன்னைப் போலவே இன்னும் சிலர் தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் இருப்பதை அவன் தெரிந்து கொண்டான். என்றாலும் அவர்கள் யார் யார் என்பது அவர்கள் ஒருவருக்கும் தெரியாது. கை நிறைய பணம் கிடைத்ததால், அவனும் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. தன் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்வதுடன், அவ்வப்போது அவர்கள் சொல்வதையும் செய்து வந்தான். தனக்கு உத்தரவுகளை அனுப்புவது யார் என்று கூட அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு அவர்கள் ஒரு ரகசிய பெயர் வைத்திருந்தார்கள். அந்தப் பெயரைச் சொல்லியே போனில் உத்தரவுகள் வரும்.

அதன்படியே அவனுக்கு பொறியியல் கல்லூரி மாணவர்களான ஹசன், காதர் இருவருக்கும் உதவும்படி உத்தரவு வந்தது. அவனும் முதலில் அவர்களுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் ஏற்பாடு செய்து கொடுத்தான். தங்குவதற்கு வாடகைக்கு ஒரு ப்ளாட் எடுத்துக் கொடுத்தான். அவர்கள் இரண்டுபேரும் கேட்டபடி ஒரு டைம் பாம் செய்து முதல்நாள் இரவு அவர்கள் சொன்ன இடத்தில் கொடுத்தான். இடையில் அவன் வேறு ஒரு தீவிரவாதக் குழுவுடன் தொடர்பு

ஏற்படுத்திக்கொண்டு, அதிகம் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு அவர்களுக்கும் வெடிகுண்டுகள் செய்து கொடுக்க ஆரம்பித்தான். அவனது நண்பன் ஒருவன் இந்த ஆசையை அவனுக்குள் ஏற்படுத்தினான். சினிமாவில் இருந்த ஒரு ஜுனியர் ஆர்டிஸ்ட் ஒரு பெண்ணின் சகவாசமும் அவனிடம் பேராசையை ஏற்படுத்தியது. புதிதாகப் பழகிய ஒரு ஆளுக்கு குண்டுகள் செய்து கொடுக்கப் போகும் போது தான் சிக்னலில் மோப்ப நாய்களால் கண்டு பிடிக்கப்பட்டு போலீசிடம் சிக்கிக்கொண்டான். அவன் நண்பனும் இப்போது சிறையில் மோப்ப நாய்கள் தன்னை இப்படி போக்குவரத்தில் இருக்கும்போது கண்டுபிடிக்கும் என்பதை அவன் கனவிலும் நினைத்ததில்லை.

இன்ஸ்பெக்டர் ஹமீது தரையில் கிடந்த அவர்கள் இரண்டு பேரையும் பார்த்தார். நன்றாக அடிவாங்கி முகம் சில இடங்களில் வீங்கி இருந்தது. வெளிக்காயம் தெரியாதபடி போலீஸ் அடித்த அடிகளால் அவர்கள் உடல் முழுவதும் விண் விண் என்று வலியால் தெறித்தது. ஆனாலும் அவர்கள் வாய்திறந்து எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை. போலீஸ் துரத்தும் போதே தங்களது செல்போன்களில் இருந்த சிம் கார்டுகளை கழற்றி வீசி விட்டார்கள். அவர்களின் புகைப்படங்களை தெரிவித்து எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் விசாரிக்கச் செய்ததில், அன்று மாலையில் தான் அவனது ரெடிமேட் ஆடைகள் கடையையே கண்டுபிடித்தார்கள். ஆனால் போலீஸ் எதிர்பார்த்தது போல் கடையில் அவனைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அங்கு வேலை செய்த ஒரு பெண்ணுக்கும் அவனைப் பற்றி எந்த விபரமும் தெரியவில்லை. “தினமும் காலையில கடையை திறந்து வைத்துவிட்டு, நான் வந்ததும் போய்விடுவார். சில நாட்களில் வராமலேயே இருப்பதும் உண்டு” என்றாள் அந்தப் பெண். “ரொம்ப நல்லவர் சார்” நீங்க சொல்றதை நம்பவே முடியலை சார்! என்று அவள் அதிர்ச்சியடைந்து சொன்னபோது இன்ஸ்பெக்டர் ஹமீதுக்கு சிரிப்பு வந்தது. பிடிபடும் தீவிரவாதிகள் பெரும்பாலோர் இப்படி ஒரு நல்லவன் இமேஜை வளர்த்து வைத்திருக்கிறார்கள் என்பது அவருக்குத் தானே தெரியும்.

ஏற்கெனவே அவர் பல டி.வி. சேனல்களில் அவர்களது புகைப்படங்களைப் போட்டு செய்தி வெளிவரும்படி ஏற்பாடு செய்திருந்தார். தகவல் தெரிந்தவர்கள் உடனே போலீசை தொடர்பு கொள்ளும்படியும் தெரிவிக்க கேட்டிருந்தார்.

**ஹோ**ட்டல் ஈஸ்டன் ஈகிளின் வரவேற்பு அறையில் டி.வி. ஓடிக்கொண்டிருந்தது.

'வெடிகுண்டுகளுடன் தீவிரவாதிகள் கைது!

சென்னையை தகர்க்க சதியா?'

என்ற தலைப்பில் அந்த இரண்டு பேரின் படங்களும் ஒளிப்பரப்பாகிக் கொண்டிருந்தன. அதை அங்கிருந்த மேனேஜர் பார்த்து திடுக்கிட்டார். சுமார் ஒரு மாதம் முன்பு அந்த ஹோட்டல் புல்வெளியில் நடந்த ஒரு பார்ட்டியில். டி.வி.யில் தெரிந்த ஒருவன் கலந்து கொண்டு புகைப்படங்கள் எடுத்தது அவர் நினைவுக்கு வந்தது. தன் உதவியாள் ஒருவரை அழைத்தார்.

"ராமன், இந்த ஆள் நம்ம ஹோட்டலில் நடந்த பார்ட்டிக்கு வந்தவன் தானே!

அது எந்த பார்ட்டின்னு ஞாபகம் இருக்கா?"

"சார்! ஆமாம் சார். அந்த மினிஸ்டர் பையன். குடுத்த பார்ட்டி தான்சார்!"

சட்டென்று அவருக்கு அது நன்றாக நினைவுக்கு வந்தது. உடனே அவர்கள் போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு காரில் விரைந்தார்கள். சிறிதுநேரம் காத்திருந்த பின் அவர்கள் கமிஷனரை சந்திக்க முடிந்தது.

"சார்! அந்த பார்ட்டி சுமார் ஒரு மாதம் முன்னால் நடந்தது. அமைச்சரின் மகனோட பர்த் டே பார்ட்டி சார். எல்லாம் பெரிய இடத்து பசங்களா ஒரு இருபது பேருக்கு மேல வந்திருந்தாங்க சார். அதில இவன்தான் போட்டோ எடுத்தான். அன்னிக்கு ரெண்டு பேர் வேற ஸ்டேட் காரங்க இருந்தானுங்க. அவங்க கூடத்தான் இவன் தனியா பேசிட்டிருந்தான். அதில நம்ம எஸ்.பி. பையனும் இருந்தான் சார். அவன் பேர் கௌதம்."

"எஸ்.பி. யா! எந்த எஸ்.பி.?"

பேரைச் சொன்னார்கள். அப்போது மணி காலை பத்துமணி. "எஸ்.பி.யோட பையனையும் மினிஸ்டர் பையனையும் இங்கே கூட்டிட்டு வாங்க." என்றவர் "இங்கே வேண்டாம். அடையாறு PWD கெஸ்ட் ஹவுசுக்கு கூட்டிட்டு வாங்க." என்று மாற்றிச் சொன்னார்.

"சார்! இந்த போட்டோவைப் பாருங்க. இது அந்தப் பார்ட்டியில கடைசியில் எங்களுக்கு நன்றி சொல்லி எங்களையும் நிக்கவைச்சு அவங்க எடுத்த படம். அடுத்தமுறை வரும்போது ஒரு காப்பி

குடுத்தாங்க. இதில் அதோ அந்த ரெண்டு பையன்களும் இருக்காங்க பாருங்க சார்!"

அவர் ஒரு போட்டோவைக் காட்டினார். அதில் ஹசன், காதர் என்று இரண்டு பேரும் நண்பர்களுடன் சிரித்தபடி இருந்தார்கள். அதைப் பார்த்த இன்னொரு அதிகாரி, "சார் இவனுக இரண்டு பேரும் பல தடவை நம்ம ஆபீசுக்கே வந்திருக்காங்க சார். நம்ம எஸ்.பி. பையன் கௌதம்னு சொன்னேன்ல, அவன் கூடத்தான் இவங்க வருவாங்க. இவங்களோட மினிஸ்டர் பையனும் சேர்ந்து சுத்துவாங்க சார்! இவனுக பெரிய குரூப் சார்!"

கமிஷனர் அதிர்ச்சியடைந்தார்.

இன்னொருவர், "சார்! இவங்க ரெண்டுபேரையும் நம்ம குவார்ட்ஸ்ல பைக்ல அடிக்கடி பார்க்கலாம் சார். எஸ்.பி. வீட்டுக்கு வருவாங்க சார்!"

"என்னய்யா! இவ்வளவு தூரம் வந்திருக்காங்க. இங்கே நம்ம ஆட்களோடயே இருந்திருக்காங்க. யாருக்குமே சந்தேகம் வரலையா?"

கமிஷனர் குரலில் கோபமும் வெறுப்பும் வெளிப்பட்டது.

"சார்! எஸ்.பி. பையனோடவே வாராங்க போறாங்க. அவங்க வீட்டுக்கே கெஸ்டா வந்து போகும் போது யார் சார் சந்தேகப்பட முடியும்? அதுவும் மினிஸ்டர் பையனும் கூடவே வரும்போது?"

கமிஷனர் அமைதியானார். "சரிய்யா! வெடிகுண்டு சப்ளை பண்றவனோட ப்ரெண்டுன்னா, அதுவும் வேற ஸ்டேட் காரன்னா, அவனும் டெரரிஸ்டா தான் இருப்பான். இன்னிக்கு இருக்கிற சூழ்நிலையில நாம அப்படித்தான் நெனக்க வேண்டியதா இருக்கு. என்ன செய்றது? நாம முதலில் அவனுக அலர்ட் ஆகாதபடி நடந்து கொண்டு அவங்களை புடிக்கணும்யா. சின்னதா சந்தேகம் வந்தாலும் அவனுக ஸ்லிப் ஆயிடுவாங்க."

"எஸ், சார்!"

"அதோட அவங்க கையிலும் எதுவும் வெடிகுண்டு இருக்கலாம். பி.கேர்ஃபுல்!"

முதலில் அவங்க இப்ப எங்க இருக்காங்கன்னு டிரேஸ் பண்ணிச் சொல்லுங்க." மேனேஜரிடம், "சார்! நீங்க உங்க மொபைல் நம்பரை ஆபீஸ்ல குடுத்துட்டுப் போங்க. ஏதேனும் தகவல் வேணும்னா வசதியா இருக்கும்."

அதிகாரிகள் கிளம்பியதும் ஹோட்டல் மேனேஜரும் கிளம்பிச் சென்றார். நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்து அவருக்கு பரபரப்பிலும் பயத்திலும் காய்ச்சல் வருவது போல் இருந்தது.

அன்று மாலைதான் விழா நடக்கப்போகிறது. இன்னும் சில மணிநேரங்களே இருந்தன.

ரகசிய இடத்தில் விசாரணை செய்துகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஹமீதுக்கு விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

"டேய்! உங்கள் நண்பர்கள் யார் என்ற விபரம் எங்களுக்கு தெரிந்துவிட்டது. நீங்கள் சொல்லாவிட்டாலும் எங்கள் போலீஸ் கண்டுபிடித்துவிட்டது. முட்டாள்களே!"

அவர்கள் எதுவும் சொல்லாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இன்ஸ்பெக்டர் ஹமீது அவர்கள் முன் டீ டம்ளர்களை வைத்து குடிக்கும்படி சொன்னார். அவர்கள் அமைதியாக குடிக்க ஆரம்பித்தார்கள். அவர்களைப் பார்த்து அவருக்கு கோபமும் பரிதாபமும் ஏற்பட்டது.

"ஏன்டா தம்பிகளா! நீங்கள் முஸ்லிம்கள் தானே! ஏன் இப்படி செய்கிறீர்கள்?

தாயின் காலடியில் தான் சொர்க்கம் உள்ளது. உழைப்பவனுக்கு, அவன் வியர்வை உலர்வதற்குள் கூலியை கொடுத்துவிடவேண்டும். பக்கத்து வீட்டுக்காரன் பசியோடு இருக்கும் போது நீ விருந்து சாப்பிடுவது பாவம். அவன் பசியை போக்கிவிட்டுத்தான் நீ சாப்பிடவேண்டும் என்று சொன்னவர் முகமது நபி. ஏழைகளின் பசியை பணக்காரனும் உணரவேண்டும். பலருடனும் பகிர்ந்து உண்ணவேண்டும் என்பதை உணர்த்த ஒரு ஈகைத் திருநாளைக் கொடுத்தது இஸ்லாம். இது தான் எனக்குத் தெரிஞ்ச இஸ்லாம். ஆனால் நீங்க முஸ்லிம்னு சொல்லிட்டு ஏன் இப்படி செய்றீங்க?"

அவர் குரலில் மிகுந்த வருத்தம் இருந்தது. வார்த்தைகள் துன்பத்தில் தோய்ந்து வெளிவந்தன.

# 38

மறுநாள்.

விழா நடக்கும் மைதானம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. கமிஷனர் அலுவலகத்தின் முகப்பில் வி.ஐ.பிக்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். பக்கவாட்டில் இருந்த இன்னொரு கேட் வழியே மற்றவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். விழா மாலை ஆறு மணிக்கு பூஜையுடன் துவங்குவதாக இருந்தது. ஆனால் அன்று காலை முதலே கூட்டம் இருந்தது. மைதானத்தின் ஒரு பகுதியில் ஆயுதக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பள்ளி மாணவர்கள் கூட்டம் கூட்டமாக அங்கு வந்து பலவகையான துப்பாக்கி வகைகளையும், தோட்டாக்கள், கத்திகள் முதலியவற்றைப் பார்த்து மகிழ்ந்தார்கள். பழைய மாடல் கத்தி, துப்பாக்கிகள், போலீஸ் யூனிபார்ம் ஆகியவை மாணவர்களுக்கு பார்க்க சுவையாக இருந்தன. போலீசார் அவற்றை இயக்கிக் காண்பித்ததால் மாணவர் கூட்டம் அதிகமாக இருந்தது. இன்னொருபுறம் ஒரு சிறிய புத்தகக் கண்காட்சியும் ஓரளவு கூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு மூலையில் சிற்றுண்டிக் கடைகள் சில அமைக்கப்பட்டு அங்கும் கூட்டம் நிறைந்திருந்தது. விழா நடைபெறும் மேடை திறந்த வெளியிலேயே அமைக்கப்பட்டிருந்தது. அலங்கார வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. இன்னொருபுறம் ஒரு அம்மன் கோவில் அழகாகவும் மிகவும் சுத்தமாகவும் இருந்தது. அதில் பெண்கள் கூட்டம் அலைமோதியது. அன்று மாலையில் அம்மனுக்கு பூஜை முடித்தபிறகு விழா நிகழ்ச்சிகள் துவங்கும் என்று அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒரே பரப்பாக அந்தத் திடல் இருந்தது.

அப்போது எஸ்.பி.யின் பொலீரோ ஜீப் உள்ளே நுழைந்தது. அப்போது மணி பிற்பகல் இரண்டு. ஜீப்பிலிருந்து ஜெகதீசுவரி, கௌதம், ஸ்வேதாவுடன் ஹசன், காதரும் இறங்கினார்கள். அவர்கள் இறங்கியதும் டிரைவர் ஜீப்பை மற்ற வாகனங்கள் இருந்த இடத்தில் கொண்டுபோய் வரிசையில் நிறுத்தினார். விழா மாலையில் தான் என்றாலும் தம்முடைய சிறப்பான விழா என்பதால் போலீஸ்

குடும்பத்தினர், காலை முதலே அங்கு வந்து ஏற்பாடுகளில் உதவி செய்தார்கள். ரங்கோலி, கோலம், சிறு சிறு போட்டிகள் ஆகியவற்றை ஆர்வமாக நடத்தினார்கள்.

அன்று மதியம் ஹசன், காதர் இருவரும் பைக்கில் அண்ணா நகர் போலீஸ் குடியிருப்புக்குப் போனார்கள். அவர்கள் கையில் ஒருபெரிய கிப்ட் பாக்ஸ். அதன்மேல் மூடி பசையால் ஒட்டி மூடப்படாமல், எளிதில் தனியே எடுத்து மறுபடி வைத்து மூடும் வகையில் இருந்தது. அதற்கு உள்ளே ஒரு டைம் பாம் மிகச்சிறய அளவில் இருந்தது. அதனுடன் ஒரு உண்மையான கிப்ட் ஆன அழகிய பெரிய சுவர் கடிகாரமும் இருந்தது. எஸ்.பி.யின் ஜீப் ஒரு மரத்தடியில் நின்றது. முதலில் ஹசன் ஜீப் டிரைவரிடம் போய் பேச்சுக்கொடுத்து, பேசியபடியே அவரை அங்கிருந்து மரத்தின் மறுபக்கத்துக்கு கூட்டிக்கொண்டு போனான். அதே நேரம் காதர் சட்டென்று ஜீப்பின் முன்புறம் போய் பானட்டைத் திறந்தான். ஒரு சில நிமிடங்களில் தான் கொண்டு வந்திருந்த டைம்பாமை ஜீப்பின் பேட்டரியின் ஒரு பக்கத்தில் பொருத்திவிட்டு மூடினான். மரத்தின் மறுபக்கத்தில் நின்றிருந்த டிரைவர் இதைக்கவனிக்கவில்லை. அந்த பாம் சட்டென்று பேட்டரியை பார்ப்பவர்களுக்கு தெரியாது. அவன் அதன் ஒரு ஸ்விட்சை அழுத்தியதும் சிறுபுள்ளியாக சிகப்பு ஒளிர்ந்தது. பகலில் அது ஒளிர்வது பளிச் என்று தெரியாது. இனி அதை அவன் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கச் செய்யலாம். அந்த வெடிகுண்டு மைக்ரோ கன்ட்ரோலரை அடிப்படையாகக் கொண்டு புரோகிராம் செய்யப்பட்டது. செல்போன் மூலமே அதை இயக்கி தேவையான நேரத்தில் வெடிக்கச் செய்யலாம். அது வெடித்தால் ஜீப் சிதறுவதுடன் அருகில் நிற்கும் வாகனங்கள் தீப்பற்றி எரியும். கட்டிடங்கள் சிதறும். விஷப்புகை பரவி பெரும் உயிர் இழப்பும் ஏற்படும். காதர் மெதுவாக டிரைவரிடம் வந்து இயல்பாகப் பேசினான். பிறகு அவன் ஹசனை அழைத்துக்கொண்டு கிப்ட் பாக்சுடன் வீட்டுக்குள் போனான். அங்கு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தவர்களுடன் சேர்ந்து அவர்களும் ஜீப்பில் ஏறி விழாவுக்குப் போனார்கள்.

கமிஷனருக்கு அவர்களைப் பற்றிய விபரங்கள் அப்போதுதான் தெரிய ஆரம்பித்தன.

ஜீப்பிலிருந்து இறங்கி அவர்கள் எல்லோரும் உள்ளே போனார்கள். அதே சமயம் சதீஷ், ப்ரியா, ராஜேஷ் இன்னும் இரண்டு நண்பர்களுடன் தன் காரில் அங்கே வந்தான். புதிதாக ஒரு பெண்ணும் வந்திருந்தாள். அறிவிப்புப் பலகையை பார்த்துவிட்டு

சதீஷ் “ராஜேஷ்! ஃபங்ஷன் ஈவ்னிங் ஆறு மணிக்குத் தானாம். அதுவரை இங்கேயே இருந்தா செம போரா இருக்கும். மாயாஜால் அல்லது கோவளம் போயிட்டு கரெக்டா ஆறு மணிக்கு வந்துடலாம்.” என்றான். “இன்னும் நான்கு மணிநேரம் இருக்கே!” என்றான் ராஜேஷும்!”

நண்பர்களும் “இந்த வெயிலில் சாயங்காலம் வரை சுத்த முடியாது. கஷ்டமா இருக்கும். அதற்கு பதில் எங்காவது போய்விட்டு சாயங்காலம் வந்துவிடலாம்.”என்று எண்ணினார்கள். உடனே சதீஷ் வண்டியை திருப்பி போகும் வழியில் ஒரு கே.எப்.சி.யில் நிறுத்தி பர்கர், கோக் ஆர்டர் செய்துவிட்டு உட்கார்ந்தார்கள்.

**க**மிஷனர் ஆபீசில் ஜீப்பை நிறுத்திவிட்டு டிரைவர் இறங்கினார். அப்போது பக்கத்தில் ஒரு ஜீப் வந்து நின்றது. அதன் டிரைவர் அதை ஓரமாக கொண்டுபோய் நிறுத்தினார்.

“ஏன் அண்ணே ஓரங்கட்டி நிறுத்துறீங்க?”

“எங்க பாஸ் ஒரு மூணு நாள் லீவு. ஊருக்குப் போறாரு. வண்டி தேவைப்படாது. அதான்.”

எஸ்.பி. டிரைவருக்கு ஒரு யோசனை வந்தது. “அண்ணே! என் வண்டில பேட்டரி ரொம்ப வீக்கா இருக்குது.”

இன்னொரு டிரைவர், “வேணும்னா இன் சார்ஜ் கிட்ட சொல்லிட்டு இந்த வண்டியை எடுத்துக்கப்பா” என்று சிரித்தார்.

“இல்லை அண்ணே! எங்க ஆளு ரொம்ப கௌரவம் பார்ப்பார். வண்டியை மாத்தவிடமாட்டார். அதனால நான் உங்க வண்டி பேட்டரியை மட்டும் மாத்திட்டு இதை அதில் மாட்டிக்கிறேன். ஒரு மூணு நாளைக்கு மட்டும். அதுக்குள்ளே புதுசா ஒண்ணு வாங்கிரலாம்.”

“அதனாலென்னப்பா! தாராளமா செஞ்சுக்க. ஆனால் மூணு நாள் தான்” அவர் உதவியுடன் பேட்டரிகளை மாற்றிக்கொண்டார்கள். பாம் பக்கவாட்டில் தட்டையாக இருந்ததாலும் அவர்கள் சுவாரசியமாக பேசிக்கொண்டே இருந்ததாலும் அதை அவர்கள் கவனிக்கவில்லை. மேலும் யாரும் வண்டிகளை அந்த வழியில் கொண்டு வரலாம் என்பதால் வேகவேகமாக வேலையை முடித்தார்கள்.

எல்லோரும் உள்ளே போன சிறிது நேரத்தில், ஹசனும், காதரும் நைசாக நழுவி கார்கள் நின்ற இத்துக்கு வந்தார்கள். “வா கௌதம்! அம்மாவும் ஸ்வேதாவும் இருக்கட்டும். நாம கொஞ்சம் அப்படியே போய்விட்டு வரலாம்” என்று சொல்லி அவனையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஹசன் கௌதமுடன் பேசிக் கொண்டிருந்தான். காதர்

மட்டும் போய் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, ஓரமாய் நின்றிருந்த ஜீப்பில் ஏறினான். அதை ஒயர்களை சேர்த்து முறுக்கி ஸ்டார்ட் செய்து வாசலுக்கு ஓட்டி வந்தான். அருகில் கௌதமை உட்காரச் சொல்லி, பின்னால் ஹசனை உட்காரச் சொன்னான். கௌதமிடம் ஏதோ விளையாடுவது போல் வாயில் விரலை வைத்து காதர் 'உஷ்!' என்று சிரித்தபடி சொன்னான் கௌதமும் நண்பர்கள் தம் டிரைவருடன் ஏதோ வேடிக்கை செய்கிறார்கள் போல என்று எண்ணிக் கொண்டு சிரித்தபடி உட்கார்ந்தான். இப்போது காதர் காக்கிச் சட்டையும் போலீஸ் டிரைவர் தொப்பியும் அணிந்திருந்தான். ஜீப்பில் கௌதம் இருந்ததால் கேட்டில் யாரும் எதுவும் கேட்கவில்லை. வண்டி சிக்கலில்லாமல் கேட்டை விட்டு வெளியேறியது. நேராக ஈசிஆர் சாலையை நோக்கி விரைந்தது. கேட்டிலிருந்து வெளியே வந்ததும் அவர்கள் போகும் போது ஒரு ஹோட்டல் முன் சதீஷின் காரைப் பார்த்து கௌதமை அங்கே இறக்கிவிட்டு வேகமாகப் போய்விட்டார்கள்.

கே.எப்.சியிலிருந்து வெளிவந்த சதீஷ், கௌதமைப் பார்த்துஅவனையும் காரில் ஏற்றிக்கொண்டு ஈ.சி.ஆர் சாலையை நோக்கி வண்டியை செலுத்தினான். நண்பர்களிடம் ப்ரியா குறித்த தன் முடிவை அன்று சொல்லவேண்டும் என்று அவன் முடிவு செய்திருந்ததால் அவன் கொஞ்சம் படபடப்பாக இருந்தான். நண்பர்களும் "என்னடா! ஆளே இன்னிக்கு ஒரு மார்க்கமா இருக்கே! எதுனா விசேஷமா?" என்றனர். சதீஷ் சிரித்துக்கொண்டே சமாளித்தான். கார் நூறு கி.மீ. வேகத்தில் சீறிப்பாய்ந்தது.

**ஹோ**ட்டல் மேனேஜர் மூலம் கமிஷனருக்கும் தீவிரவாதிகள் பற்றிய தகவல் தெரிந்த அதே சமயம்.

ரகசிய இடத்தில் இருந்த அந்த இரண்டு பேரும் ஒரு வழியாக வாயைத் திறந்தார்கள். இன்ஸ்பெக்டர் ஹமீது, அவர்கள் கடையில் வேலை செய்த பெண்ணையே தங்களின் துருப்புச்சீட்டாக பயன்படுத்தி, அவளிடம் துருவி துருவி விசாரித்ததில், சில விபரங்கள் கிடைத்தன. அதை வைத்து அவனது அறை ஒன்றை கண்டுபிடித்தனர். அதில் இருந்த கம்ப்யூட்டரை திறந்து பார்த்ததில் அவனைப் பற்றிய விபரங்கள் எல்லாம் கிடைத்தன. அந்தப் பெண்ணை விசாரணை நடக்கும் இடத்துக்கே வரவழைத்தார்கள். அவளைத் துன்புறுத்துவது போல ஒரு நாடகத்தை அவர்கள் முன்பு நடத்தினார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி அதற்குப் பலன் கிடைத்தது. கடைசியில் ஹசன், காதர் இரண்டுபேரிடமும் தான் ஒரு வெடிகுண்டு தயாரித்துக் கொடுத்ததையும் அவர்களின் இலக்கு அன்று நடக்கும் விழா என்பதையும்

தெரிவித்தான். அந்தப் பெண்ணை துன்புறுத்த வேண்டாம் என்பது மட்டுமே அவர்களின் வேண்டுகோளாக இருந்தது. இன்ஸ்பெக்டர் ஹமீது வின் பெருந்தன்மையான பேச்சும் அணுகுமுறையும் அவர்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

கடைசியில் "பல வருடங்களாக எங்கள் இயக்கத்தால் செய்யமுடியாமல் இருந்ததை இன்று நாங்கள் செய்துமுடிக்கப் போகிறோம். இந்நேரம் ஹசனும் காதரும் பாம் செட் பண்ணி வைத்திருப்பார்கள். எந்த இடத்தில் பாம் இருக்கிறது என்பது அவர்கள் இரண்டு பேருக்கு மட்டுமே தெரியும். அதைக் கண்டுபிடிக்க இப்போது உங்களால முடியாது சார். அதுக்கு நேரம் இல்லை" என்றான் அவன்.

ஹமீது உறைந்து போய் நின்றார்.

அடுத்த பத்து நிமிடத்தில் கமிஷனரே அங்கு வந்துவிட்டார். அவர் எவ்வளவோ கேட்டும் அவர்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதும் ஹோட்டல் மேனேஜர் சொன்னதை உறுதிப்படுத்தியதால், கமிஷனரும் தகவலை நம்பினார். உடனே ஹசன், காதரை பிடிக்கச் சொல்லி உத்தரவுகள் பறந்தன. விழா மைதானத்தில் கூட்டம் அதிகம் என்பதால் மக்கள் மிரளாதபடி வெடிகுண்டு இருக்குமிடத்தைத் தேடினார்கள். ஒரு இண்டு இடுக்கும் விடாமல் தேடினார்கள். ரோஸி, ஜென்சியுடன் இன்னும் இரண்டு நாய்களும் களத்தில் இறக்கிவிடப்பட்டன. எங்குமே வெடிகுண்டு இருப்பதற்கான அறிகுறியே இல்லை. நேரம் செல்லச் செல்ல போலீசும் சோர்வடைந்தார்கள். ரோசி மட்டும் திடலின் கேட் வழியே வெளியே வந்து சாலையில் சிறிது தூரம் ஓடிநின்றது. பிறகு நாய்களும் களைத்துப்படுத்துவிட்டன. ஹசன், காதரையும் போலீசால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அவர்களைப் பிடித்தால்தான் வெடிகுண்டு இருக்குமிடம் தெரியும். கமிஷனருக்கு திகைப்பாக இருந்தது. "எவ்வளவு பெரிய கூட்டம்! குண்டு வெடித்தால் என்னாவது?" மைக்கில் சொல்லி விழாவை நிறுத்தி கூட்டத்தைகலைத்துவிடலாமா என்று நினைத்தார். சரியாக அப்போது மேடையில் மைக் ஒலிக்கத் துவங்கியது. விழா துவங்கிவிட்டது. பல பகுதிகளிலும் இருந்த மக்களில் பலரும் அரங்கத்தை நோக்கி வேகமாக போய் இருக்கைகளில் உட்கார்ந்தார்கள்.

கமிஷனருக்கு முகத்தில் வியர்வை அரும்பியது. அதே சமயம் ரோசி திடலை விட்டு வெளியே ஓடிவந்தது அவருக்கு ஒரு நம்பிக்கையை கொடுத்தது. வெடிகுண்டு திடலுக்குள் இருக்காது என்று அவர் நினைத்தார்.

# 39

காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி–என
மேவிய யாறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு

தமிழ்நாட்டின் முக்கிய நதிகளில் ஒன்றாக பாரதியால் சிறப்பாகப் பாடப்பட்டது பாலாறு. கர்நாடாக மாநிலத்தில் கோலார் மாவட்டம் நந்திதுர்கம் என்ற மலையில் உருவாகி 93 கி.மீ. தூரம் மட்டுமே கர்நாடகத்திலும், ஆந்திர மாநிலத்தில் வெறும் 33 கி.மீ. தூரம் மட்டுமேயும் ஓடுகிறது பாலாறு. தமிழகத்தில் தான் அதிக தூரமாக 222 கி.மீ. தொலைவு பாய்ந்து ஒரு பெரிய நதியாக பரிமளிக்கிறது. தமிழகத்தில் வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் பாலாற்றால் வளம்பெற்றன. இறுதியில் அது வங்கக்கடலில் சங்கமிக்கிறது. கர்நாடகம் ஆந்திரம் ஆகிய மாநிலங்கள், பாலாற்றின் குறுக்கே தங்கள் விருப்பத்துக்கு அணைகள் கட்டியதால் தமிழகத்துக்குப் பால்வார்த்த பாலாறு வறண்டு மணல் பரப்பானது. அந்தமணலையும் மணல் கொள்ளையர் விட்டுவைக்கவில்லை. அளவுக்கு அதிகமாக மணல் அள்ளியதால் மழைநீர் சேமிப்புக் குறைந்து அதன் விளைவாக பாலாற்றை ஆதாரமாகக் கொண்டு நீர்பெற்றுவந்த ஏரிகளும் கால்வாய்களும் வறண்டு தம் இருப்பே தெரியாமல் போயின. அவற்றையும் ஆக்கிரமிப்பு செய்தார்கள். ரியல் எஸ்டேட்டில் இருந்த அரசியல்வாதிகள். இங்குள்ளவர்களுக்கு பணத்தாசை காட்டி, அவர்களின் அறியாமையையும் பயன்படுத்தி முழுப் பலனையும் பன்னாட்டு கம்பெனிகள் அறுவடை செய்தார்கள்.

பாலாற்றில் மணல் எடுப்பதிலும் முன்னணியில் இருந்தவர் நல்லதம்பி. ஆந்திரரெட்டியின் பினாமியாக தமிழ்நாட்டில் இந்த வேலையையும் அவர் செய்துவந்தார். இதற்கு வேண்டிய லாரிகள், ஜேசிபிக்கள் முதலான வாகனங்கள், எந்திரங்கள் என்ற எல்லாமும் வாங்க உதவி செய்தார் ரெட்டி. ஆட்களை நல்லதம்பி ஏற்பாடு செய்து கொண்டு தொழிலை அரசாங்கத்தின் மறைமுகமான

ஆதரவுடன் அமோகமாக நடத்திவந்தார். அங்கேயும் எதித்தவர்கள் அடங்கிப் போயினர். அடங்க மறுத்தவர்கள் ஆளே காணாமல் போனார்கள். பாலாறு கொஞ்சம் கொஞ்சமாக பாழாகிக் கொண்டிருந்தது.

**செ**ங்கல்பட்டு.

அன்றும் பாலாற்றில் நல்லதம்பியின் லாரிகள் வரிசை கட்டி நின்றன. அதில் பத்தாவது லாரியாக நின்றது 'தம்பி லாரி சர்வீஸ்' என்ற பெயரில் நின்ற ஒரு லாரி. அதன் கீழ் டயர் அருகே நின்று சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த டிரைவர் தர்மன் அவசரப்பட்டான். அவன் சென்னை முகப்பேருக்குப் போய் லோடு இறக்கிவிட்டு, நந்தனத்தில் இருக்கும் கொழுந்தியாள் வீட்டுக்குப் போக வேண்டும். அங்கே அவன் மனைவியும் குழந்தைகளும் இருந்தார்கள். குழந்தைகளுக்கு விடுமுறை என்பதால் அவன் மனைவி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு தங்கையைப் பார்க்க வந்திருந்தாள். தர்மனுக்கு ஒவ்வொரு நிமிடமும் தாமதமாக ஆக கோபம் அதிகரித்தது. அங்கு மணல் நிரப்பியவர்களிடம் தன் கோபத்தைக் காட்டினான்.

"ஏன்யா! ஒரு லாரி மண் நெரப்புறத்துக்கு எவ்வளவு நேரம் தான் எடுத்துக்குவீங்க! இப்படியே போனா நிக்கிற லாரியெல்லாம் ஒரு வாரம் இங்கேதான் நிக்கணும்!"

மணல் நிரப்பிய ஆள் வேலையை நிறுத்திவிட்டு முறைத்தான்.

"யோவ்! நீ என்ன புதுசா? வேணும்னா நீ வந்து இந்த வேலையைப் பாரு. நேத்து ராத்திரி பத்து மணிக்கு ஆரம்பிச்ச வேலை; இடையில ரெஸ்டே இல்லாம பாத்துட்டு இருக்கேன். இதுக்கு மேல வேகமாக பண்ண முடியாது. அடுத்த ஆள் வர்ர வரைக்கும் நான் தான் பார்க்கணும்."

அவனைப் பார்க்கவும் பரிதாபமாகவே இருந்தது.

அவன் பதிலுக்கு தர்மனை எகிறினான். வேறு வழியில்லாமல் தர்மன் பொறுமையாக இருந்தான். அவன் முறை வந்து லாரி கிளம்பியதும் அவன் கோபத்தையெல்லாம் லாரிமேல் காட்டி அதை கிளப்பினான். அந்த லாரிக்கு கிளீனர் என்று யாரும் கிடையாது. அவன் மட்டும்தான். லாரியை கிளப்பி மணல் பகுதியைக் கடந்து வந்து சிறிய சாலையில் ஏறினான். சாலையும், தொடர்ச்சியாக லாரிகள் போய் வந்ததால் அதிக சேதமாகி ஒரே குண்டும் குழியுமாக இருந்தது. அதனால் அவனால் வேகமாகப் போக முடியவில்லை. அதுவும் அவனைக் கூடுதலாக வெறுப்பேற்றியது. நீண்ட நேரம் டீ கூட குடிக்கமுடியாமல் நின்றதாலும் அவன் எரிச்சலாகவும்

களைப்பாகவும் உணர்ந்தான். மெயின்ரோடு ஏறினால் தான் டாஸ்மாக் சரக்குக் கடையையே பார்க்கலாம். ஆனாலும் இடையில் ஒரு கொட்டகையில் சரக்கு கிடைக்கும். அது ஆந்திரா சரக்கு. அந்த நினைப்பு அவனுக்கு கொஞ்சம் தெம்பைக் கொடுக்க, அவன் லாரியில் இருந்த எஃப்.எம். ரேடியோவில் ஒலித்த பாட்டைக் கேட்டுக்கொண்டே வண்டியை செலுத்தினான். வண்டியிலும் ஏகப்பட்ட சத்தங்கள் பலவிதமாகவும் கரடுமுரடாகக் கேட்டன. வண்டியை இந்த முதலாளிகள் சரியான காலத்தில் சர்வீஸ் செய்யமாட்டார்கள் என்று கெட்ட வார்த்தைகளில் திட்டினான். பல வகைகளிலும் அவன் கோபமாக இருந்தான். அவன் ஓட்டி வந்த அந்த லாரி எந்த வகையிலும் சாலையில் ஓடுவதற்கு தகுதி இல்லாததது. எப்படியோ F.C. வாங்கி ஓடிக்கொண்டிருந்தது. எல்லாம் பணம்.

அவ்வளவு கோபம், எரிச்சலிலும், சாயங்காலம் குழந்தைகளைப் பார்க்கப் போகிறோம், அவர்களுடன் விளையாடப் போகிறோம் என்ற நினைப்பு அவன் முகத்தில் மகிழ்ச்சியை ஏற்றியது. மிகவும் கஷ்டமான இந்த வேலையின் இடையே அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது அவர்களின் நினைப்பு தான்; அவர்களின் சிரித்த முகங்கள்தான். அதனால் தான் தாமதம் ஆவதால் அவன் எரிச்சல்பட்டான். மணி ஆக ஆக வெயிலும் கடுமையாக ஆனது. மத்தியான சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போகமுடியாது என்பது அவனுக்கு தெரிந்தது. வேலையை முடித்துவிட்டு சாயங்காலமாவது வீட்டுக்குப் போய்விட்டால், இரவு சாப்பாட்டை அங்கேயே மனைவி குழந்தைகளுடன் சேர்ந்து சாப்பிடலாம். போகும் போது அவர்களுக்கு திண்பதற்கு ஏதாவது பலகாரங்கள் வாங்கிக் கொண்டு போகவேண்டும்."

இப்படி, குடும்பத்தைப் பற்றிய நினைப்புடன் தன் லாரியை முடிந்த அளவு வேகமாக ஆற்று மணல் படுகையில் கரையை நோக்கிச் செலுத்தினான். மணலில் டயர்கள் பதிந்து விட்டால் வண்டியை எடுப்பது மிகவும் கஷ்டம் என்பதால் அவன் ஒரு சீரான வேகத்தில், லாவகமாக திருப்பி வளைத்து இயக்கினான். லாரி திணறியபடியே மெதுவாகச் சென்றது. அவனுக்கு முன்னால் லாரிகள் வரிசையாக போய்க்கொண்டிருந்தன. பின்னாலும் நூற்றுக்கணக்கில் பல நிறங்களிலும் லாரிகள் ஈமொய்ப்பது போல ஆற்றில் காட்சியளித்து நின்றன.

"இந்த ஆற்றில் எவ்வளவு தான் மண் எடுப்பார்கள்? ஒரு முடிவே இல்லையா?"

தர்மன் ஆச்சரியப்பட்டான்.

# 40

நல்லதம்பி கடும் கோபத்தில் இருந்தார். கோபத்திலும் போதையிலும் அவர் கண்கள் அதிக சிகப்பாக இருந்தன. அவர் ஒரு பெரிய சோபாவில் இருக்க அவரின் எதிரில் இருந்த இன்னொரு சோபாவில் கிட்டத்தட்ட அவரின் நிலையிலேயே இருந்தார் இன்ஸ்பெக்டர் சிவசூர்யன். அவர்கள் முன்பாக இருந்த பெரிய டீபாயில் ஒருபெரிய தட்டில் வறுத்த கோழித் துண்டுகள் முந்திரிப் பருப்பு, ஆப்பிள்,பைனாப்பிள், வெள்ளரித் துண்டுகள் இருக்க அவைகளுக்கு தலைமை தாங்கி ஒரு ரெமி மார்டின் பாட்டின் கம்பீரமாக நின்றது. அதில் முக்கால் பாட்டில் அப்போது காலியாகி இருந்தது. அதன் சக்தி அவர்கள் உடலிலும் முகத்திலும் தெரிந்தது. அவர்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது அதிலிருந்து தெரிந்தது. நல்லதம்பி அன்று காலையில் தான் திருப்பதியிலிருந்து திரும்பியிருந்தார்.

“சார்! முந்தா நாள் இரவு ரெட்டி பேசினார். ‘உடனே கிளம்பி வா’ன்னு சொன்னார். நைட்டே கிளம்பிப் போனேன். ஆளு படு கோபத்திலிருந்தார். கோபமாகவே பேசினார்.”

“எனக்கு சரக்கு வியாபாரத்தில் தமிழ்நாடு முக்கியமான மார்க்கெட். சரக்கை உள்ளே அனுப்புறதும் விக்கிறதும் ரொம்ப ஈ.சி. பத்து ரூபாய் கள்ளச் சாராயத்தை கலர் லேபிள் ஒட்டி கண்ணாடி பாட்டிலில் குடுத்தா நூறு ரூபாய் கொடுத்து வாங்கிக் குடிக்கிறவன் இங்கே மட்டும்தான் இருக்கான். நூறு ரூபாயில் தொண்ணூறு ரூபாய் லாபம். எந்தக் கேள்வியும் இல்லாம பிசினஸ் போயிட்டிருந்துச்சு. அரசாங்கம், போலீஸ் எல்லாம் நம்ம ஆளுங்க. எல்லாம் இப்ப கையை விட்டுப்போன மாதிரி இருக்கு. இதுக்கு காரணம்அந்த பத்திரிகை ரிப்போர்ட்டர். ஒரு தப்பு நடந்து ஒரு இருபது முப்பது பேர் செத்ததை பெரிசாக்கி எழுதி பிரச்னை பண்ணிட்டான். செத்தவங்க புள்ளைகளுக்கு, சொந்தக்காரங்களுக்கு, அதிகாரிகளுக்கு, கோர்ட்டுக்குனு கோடிக் கணக்கில செலவு செஞ்சு பிரச்னை இல்லாம செஞ்சேன். சரி! இனிமேல் பிசினசை தொடர்ந்து

நடத்தலாம்னு நெனச்சேன். ஆனால் எல்லாப் பயலும் பெட்டி பெட்டியா பணத்தை வாங்கிட்டு, இப்ப வேணாம், கொஞ்ச நாள் கழிச்சு நடத்தலாம்"னு சொல்லிட்டான். எல்லாம் நின்னு போச்சு"ன்னு ரெட்டி சொன்னார்.

சிவசூரியன் முகத்தில் கவலை காட்டினார். "ஐயா! அப்புறம்?"

"ரெட்டி எங்கிட்ட அப்படிப் பேசியதே இல்லை சார். எனக்கு ரொம்ப பயமா போச்சு.பக்கத்தில முரட்டு தடியனுங்க ரெண்டு பேர் வேற நின்னானுக. ரெட்டி சொன்னா என்ன வேணும்னாலும் பண்ணுவானுங்க. அங்கே என்ன நடந்தாலும் வெளியே தெரியாது. எனக்கு அங்கே இருந்து உயிரோட வெளிய வந்தா போதும்னு ஆயிடுச்சு."

இதை சொல்லும் போதே நல்லதம்பிக்கு உடல் நடுங்கியது. தைரியத்துக்காக ஒரு சிகரெட்டை எடுத்து பற்றவைத்து நன்றாக இழுத்து, புகையை வெளியே பலமாக ஊதினார். சிவம் நல்லதம்பியை தைரியப்படுத்துவதற்காகவே, "ரெட்டி உங்களை தப்பா சொல்லலையே. அந்த பத்திரிகை ரிப்போர்ட்டரைத் தானே சொன்னார். நீங்க பயப்பட வேண்டியதில்லை அண்ணே!" என்றார்.

நல்லதம்பி சிரித்தார். "அப்படி இல்லையே. எல்லோரும் பணத்தை வாங்கிட்டு யாருமே அவருக்கு விசுவாசமா இல்லைங்கிறது தான் ரெட்டியோட கோபமே! கடைசியில்" "இந்தக் கட்டுரை வந்து நாலு மாசம் ஆச்சு.அதை எழுதினவனை நீங்க என்ன செஞ்சீங்க. ஒண்ணும் செய்யலை. அவன் அடுத்தக் கட்டுரையை எழுதிட்டான். அப்பவே அவன் கையை வெட்டியிருந்தா இப்ப எழுதியிருப்பானா?" என்று கேட்டார்.

சிவம் அமைதியாக தலையை ஆட்டியபடி பாட்டிலை எடுத்து இரண்டு பேருக்கும் கொஞ்சம் கொஞ்சம் ஊற்றினார். அதை மெல்ல உறிஞ்சியபடியே நல்லதம்பி, "சார்! ரெட்டியைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. இங்கே நடக்கிற எல்லாமே ரெட்டியோட பிசினஸ்தான். புழங்குற பணம் முக்கால்வாசி அவர் பணம் தான். அந்த நிருபரை முடிச்சுடணும்கிறது தான் ரெட்டியோட முடிவு. அதை நாம தான் செய்யணும். அதுக்குத்தான் என்னை திருப்பதிக்கு வரச் சொன்னதே. நாம இதைப் புரிஞ்சுட்டு, சீக்கிரம் அவனை முடிக்கணும். இல்லைனா நாம இல்லாமல் போயிடுவோம்."

"அண்ணே! உடனே முடியுமா? கொஞ்சம் டைம் குடுங்க!"

"சிவம்! நாம ரொம்பப் போனால் ஒருமாசம் எடுத்துக்கலாம். எவ்வளவு சீக்கிரமா முடிக்கிறோமா அவ்வளவுக்கு நமக்கு நல்லது.

இல்லைனா யாரையாவது ஒரு ஆளை முடிச்சுட்டு, அது அந்த ரிப்போர்ட்டர் தான்னு சொல்லிடணும்."

"அது எப்படி? பிறகு உண்மை தெரிஞ்சுடாதா?"

"தெரியுறதுக்குள்ளே நாம் உண்மையான ஆளை கண்டுபிடிச்சு போட்டுடணும். நம்ம உயிருக்கு அதுவரைக்கும் டைம் கிடைக்கும் இல்லையா?"

"அது சரிதான்!" என்று சிவம் சிரித்தார். ஆனால் நல்லதம்பி மிகவும் சீரியசாக இருந்தார். அவர் நினைத்தார், "இந்தஆள் எதுக்கு நம்மையும் சேர்த்தே பேசுறார். நமக்கும் ரெட்டிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே!"

"சிவம். இந்நேரம் நம்மை கண்காணிக்க ரெட்டி ஆள் போட்டிருப்பார். நீங்க அதை புரிஞ்சுக்கணும். "நான் ஒரு ஆள் கிட்ட இந்த வேலையை குடுக்குறேன். அவன் பேர் பாக்சர் பாபு. அவன் கச்சிதமா வேலையை முடிச்சுடுவான். நீங்க அவனுக்கு உங்க சைடிலிருந்து இடைஞ்சல் இல்லாமல் பாத்துக்கிட்டா போதும். சரியா!"

"பாக்சர் பாபுவா! எனக்கு அவனைத் தெரியும். சரி; நீங்க சொல்றபடியே செய்யலாம்! அவர்கள் பேசி முடிக்கவும் பாட்டில் காலியாகவும் சரியாக இருந்தது. பிறகு இருவரும் காரில் ஏறி கிளம்பிச் சென்றார்கள். அப்போது மணி இரவு 11.

காரில் போகும் போது ரெட்டி எவ்வளவு பயங்கரமான ஆள் என்பதை விவரமாக சிவசூர்யனுக்கு சொல்லிக்கொண்டே போனார் நல்லதம்பி. "ரெட்டி உள்ளூர் ஆளை வைத்து வெளிநாட்டு ஆட்களைக் கதை முடிப்பான். தன்கூட இருப்பவனைக் கூட சந்தேகப் பட்டுட்டான்னா, அதை உறுதி செய்ததும், வெளி ஆட்களை வைத்து குளோஸ் பண்ணுவான். ஒரு தடவை அவங்களோட முதலமைச்சரைக் கூட கார்ல குண்டுவீசி கொல்லப் பார்த்தான். ஆனா ஆளு தப்பிச்சுட்டாரு! ரெட்டி ரொம்பவே பயங்கரமான ஆளு!"

நல்லதம்பி இப்படி பயந்து பேசி சிவசூர்யன் பார்த்ததே இல்லை.

மறுநாளும் அவர்கள் அதே லாட்ஜில் சந்தித்தார்கள். அப்போது அறையில் பெல் அடித்தது. கதவைத் திறந்து கொண்டு ஒரு வாட்டசாட்டமான ஆள் நுழைந்தான். இரண்டு மூன்று நாள் ஸ்டப்ஸ் உடன் நீண்ட தலைமுடியுடன் இருந்தான்.வெள்ளை நிற அரைக்கை சட்டையும், கறுப்பு ஜீன்சும் கழுத்தில் இரண்டு முரட்டு தங்க சங்கிலிகளும் அணிந்திருந்தான். கையில் ஒரு ஸ்டீல் வளையம் தெரிந்தது. உள்ளே வந்து பவ்யமாக வணங்கி நின்றான். அவன்

கும்பிட்டபோது இடது கையில் மணிக்கட்டுக்கு மேல் ஒரு நீண்ட தழும்பு தெரிந்தது.

"வா பாபு! ரொம்ப நாளாச்சு பாத்து: எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன் அண்ணே! நீங்க தான் என்னை மறந்துட்டீங்க. கூப்பிடுறதே இல்லை!" என்றவன் சற்று கலவரமாக சிவசூர்யனை பார்த்தான்.

"பயப்படாதப்பா! சார் நமக்கு வேண்டியவர்தான்."

"வேலை என்ன அண்ணே!"

'புது உலகம்'னு ஒரு பத்திரிகை இருக்குதுல. அவன் நம்மை ரொம்ப சீண்டிட்டே இருக்கான்பா. நம்ம பிசினஸ்ல நமக்கு எவ்வளவு பிரச்னைனு உனக்கு தெரியும்ல. இவனுகளுக்கு என்ன தெரியும்? கோடிக் கணக்கில பணம் புரளுது. இவனுகளுக்கு பயந்துட்டு எல்லாத்தையும் இழுத்து மூடிட முடியுமா? அதில் நம்மளைப் பத்தி எழுதினவன் இவன்தான். போட்டோவை வாங்குறதுக்கே ரொம்ப கஷ்டமாப் போச்சு!" ஒரு போட்டோவை எடுத்து டீப்பாயில் போட்டார்.

"பாரு, இவன்தான்."

அதை எடுத்துப் பார்த்த பாபு, "ஆளு சூப்பரா ஹீரோ கணக்கா இருக்கான். சுத்தமா முடிச்சுடனுமா?" என்று கேட்டான்.

"ஆமா! அதுக்குத்தான் பாபுவை கூப்பிட்டது. ஆக்சிடெண்ட் மாதிரி இருக்கலாம். வழிப்பறி மாதிரி இருக்கலாம். காதல் தகராறாக இருக்கலாம். திட்டமிட்ட தொழில் முறை மர்டர் மாதிரி தெரியக் கூடாது. தெரியுதா?"

ஒரு சில ஐநூறு ரூபாய் கட்டுகளை எடுத்துப்போட்டார்.அவன் எடுத்து பனியனுக்குள் போட்டுக்கொண்டான்.

இதில அம்பது இருக்கு. முடிச்சுட்டு என்ன வேணுமோ கேட்டு வாங்கிக்க.

"சீக்கிரம் முடிக்கணும் பாபு! ரெட்டி மேட்டர்! புரியுதா!"

பாபு சற்று ஜெர்க் ஆகி, தலையை பவ்யமாக ஆட்டிவிட்டு கிளம்பினான். சாதாரண ரிப்போர்ட்டரைக் கொல்ல இவ்வளவு பெரிய தொகையா? ஆள் ரொம்ப ஆபத்தானவனாக இருப்பானோ? என்று எண்ணியபடி பாபு கிளம்பி தன் பைக்கை உதைத்தான். அவன் சட்டைப் பாக்கெட்டில் தலை படிய வாரப்பட்ட, ப்ரெஞ்ச்தாடி இல்லாத ராஜ்குமாரின் படம் இருந்தது.

பாக்சர் பாபு ஒரு ஏழைக்குடும்பத்தில் இரண்டாவது பையனாகப் பிறந்தவன். குடிகார அப்பா. அம்மாவை கொடுமைப்படுத்துவதை சகிக்க முடியாமல், ஒரு நாள் அரிவாளை எடுத்துஅவரை கழுத்தில் வெட்டிவிட்டு, வீட்டை விட்டு ஓடியவன். அப்போது அவனுக்கு பத்து வயது. மதுரைப் பக்கத்தில் ஒரு கிராமம் தான் அவனது சொந்த ஊர். அங்கிருந்து பம்பாய்க்குத் திருட்டு ரயில் ஏறினான். சுமார் பத்துவருடங்கள் பம்பாயில் ஒரு தாதாவின் பராமரிப்பில் இருந்தான். போதை மருந்துகள் விற்றான். சிறு சிறு திருட்டுகளில் தாதா அவனை பழக்கினான். பாபுவின் தைரியம், கோபம், உடல் வலிமை ஆகியவற்றைப் பார்த்து தாதா அவனை அடுத்த கட்டத்துக்கு தயார் படுத்தினான். பாபுவும் தானாகவே சில சண்டைகள் ஆயுத பிரயோகங்களைப் பழகிக்கொண்டான். தாதாவின் உத்தரவுப்படி சில கொலைகளையும் செய்தான். தாதா தன்னை ஏமாற்றி வெறும் அடிமையாகவே பயன்படுத்துவதையும், கிடைக்கும் பணம் முழுவதையும் தன் மகனுக்கே கொடுப்பதையும் பார்த்த பாபு, ஒரு நாள் சொல்லிக் கொள்ளாமல் சென்னைக்கு வந்துவிட்டான். சென்னையில் சிலரை தன்னுடன் சேர்த்துக்கொண்டு, வெகு சீக்கிரம் ஒரு பெரிய தலைவனாக மாறினான். சில்லரை வேலைகள் எதுவும் செய்வதில்லை; பெரிய அரசியல்வாதிகள், தொழிலதிபர்களுக்கு மட்டுமே பாபுவின் சேவை கிடைக்கும். பாபுவின் ஹாபி, பேஷன் எல்லாமே பாக்சிங் என்பதால் அவன் பாக்சர் பாபு ஆகிவிட்டான். ஒரு வேலையை முடித்துவிட்டால் அடுத்த மூன்று மாதங்களுக்கு அவன் யார் கண்ணிலும் படமாட்டான். தேர்ந்தெடுத்த ஆட்களைக் கொண்டு வேலைகளை திட்டமிட்டு மிகவும் கச்சிதமாக செய்ததால் மிகவும் பெரிய ஆட்கள் மட்டுமே அவனை அணுகினார்கள். அவனுடைய இருப்பிடம் அடிக்கடி மாறும் என்பதால் அவன் எங்கு இருக்கிறான் என்பது யாருக்கும் தெரியாது.

# 41

ரசூலின் உயிரற்ற உடல் தன் ட்ரக்கில் இருப்பது தெரியாமல் டிரைவர் அதை ஓட்டிக்கொண்டு போய் ஒரு இடத்தில் நிறுத்தி டீ குடித்து, நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். அந்த டிரைவர் ஒரு இருபது வயது இளைஞன்தான். மாலை செய்தித்தாள் ஒன்றில் "வீட்டில் தனியாக இருந்த ஓய்வுபெற்ற அதிகாரி கழுத்தறுத்து கொலை" என்ற செய்தியைப் படித்துவிட்டு டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். விவாதித்துக் கொண்டிருந்தார்கள். "என்னப்பா இது கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடக்காத நாளேஇல்லைனு ஆயிடுச்சே!" என்று ஒருவர் சலித்துக்கொண்டார்.அவள் சலித்துக் கொண்டதைப் போல அதே செய்தித்தாளின் இன்னொரு பக்கத்தில், "சௌகார் பேட்டையில் நகைக்கடை ஒன்றில் உரிமையாளரை கழுத்தை அறுத்து 3 கிலோ எடையுள்ள தங்கக் கட்டிகள் கொள்ளை! கொலையாளிகளைப் படிக்க போலீஸ் தீவிர தேடுதல் வேட்டை" என்ற செய்தி தென்பட்டது.

சிறிதுநேரம் அங்கே பேசிக்கொண்டிருந்துவிட்டு அந்த ட்ரக் டிரைவர் தன்னுடைய ஸ்டேன்டில் வண்டியை நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டான். காலையில் ஆறரை மணிக்கெல்லாம் அவன் வீட்டுக் கதவு பலமாக தட்டப்பட்டது. சிலர் அவனை பெயரைச் சொல்லி பலமாக கூப்பிடுவதும் கேட்டது. அப்போது அவன் நன்றாக ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். வீட்டில் அவன் அம்மாவும் இல்லை. அந்த நேரத்தில் அவனுக்கு வேலை ஒன்றும் இல்லை என்பதால், வந்திருப்பது யாராக இருக்கும் என்று நினைத்தபடியே வந்து கதவைத் திறந்தான். ட்ரக் ஸ்டாண்டிலிருந்து இரண்டு பேர் வந்திருந்தார்கள். "ஏம்பா! உன் வண்டில ஒரு டெட்பாடி கிடக்குதுப்பா. ஸ்டாண்டில ஒரே கூட்டமா இருக்கு. சீக்கிரமா வா! போய்ப் பாக்கலாம்!" என்றான் ஒருவன்.

உடனே அவன் ஓட்டமும் நடையுமாக ஸ்டேன்டை நோக்கிப் போனான். டிரக்கைப் பார்த்தான். ரசூலின் உடல் அதில் கிடந்தது. இரத்தம் இன்னும் முழுவதும் காயாமல் ட்ரக்கில் வடிந்து தேங்கியிருந்தது. ஈக்கள் மொய்க்க ஆரம்பித்திருந்தன.

ரசூல் கொலை செய்யப்பட்டு அவனுடைய மினி ட்ரக்கில் அவனது உடலை யாரோ போட்டிருக்கிறார்கள் என்று அவன் தெரிந்து கொண்டான். உடனே டிரக் டிரைவர் ஹோட்டல் மேனேஜருக்கு போனில் தகவல் சொன்னான். பதறிய மேனேஜர் உடனே அந்த ட்ரக் நின்ற இடத்துக்கு போனார். உடலைப் பார்த்துவிட்டு போலீசுக்கு தகவல் சொன்னார். அரைமணி நேரம் கழித்து போலீஸ் வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பல புகைப்படங்களை எடுத்துக்கொண்டு அந்த ட்ரக்கிலும் வந்த வழியிலும் தடயங்கள் ஏதும் இருக்கின்றனவா என்று சோதனை செய்தார்கள். பிறகு உடல் போஸ்ட் மார்டம் செய்வதற்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ட்ரக் டிரைவர் அதிகம் பயந்து போய் இருந்தான்.

ஹோட்டல் மேனேஜர், ரசூல் இறந்தற்காக மிகவும் வருந்தினார். "ரசூல் ரொம்ப நல்லவன். அவன் இறந்து போனது ஒரு பக்கம். இப்படி கொலை செய்யப்பட்டு இறந்து போயிட்டானே! அதுதான் எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்குது. எப்போதும் தன்னாலான உதவிகளை கூட இருக்குறவங்களுக்கு செஞ்சுக்கிட்டே தான் இருப்பான்!"

இன்ஸ்பெக்டர் அவரிடம். "சார்! அவன் சமீபத்தில் யாருடனும் சண்டை, தகராறு எதுவும் செய்தானா? அவனுக்கு வேண்டாதவர் என்று யாராவது?"

"இல்லை சார். அவனுக்கு வேண்டாதவர் என்று ஒருவர் கூட கிடையாது. இருக்க முடியாது! அவன் இங்கே வேலைபார்த்த ஐந்து வருடங்களில் ஒரு ஆளிடம் கூட சண்டை போட்டது இல்லை. என்றவர். "சார் ஒரு விஷயம். இந்த மூன்று நாட்களாக ஏனோ அவன் ஒரு கவலையில் இருந்தது போல் தெரிந்தது. எதையோ நினைத்து அவன் கவலைப்பட்டான்."

"சமீபத்தில், அதாவது நீங்கள் சொல்வது போல இரண்டு மூன்று நாட்களுக்குள் இங்கு ஏதாவது விசேஷமாக நடந்ததா? உங்கள் ரெஜிஸ்டரைக் காட்டுங்கள்!"

மேனேஜர் ஒரு பெரிய ரெஜிஸ்டரை எடுத்துக்கொண்டு வந்தார். "சார் சில தினங்கள் முன்பு இங்கு புல்வெளியில் அமைச்சர் மகன் பிறந்த நாள் விழாவை அவர் நண்பர்களுடன் இரவு கொண்டாடினார். அப்போதிலிருந்து தான் ரசூல் இது போல மாறினான்."

"சரி! அவன் உங்களிடம் எதுவும் விபரம் சொல்லவில்லையா?"

"இல்லை சார்! எதுவும் சொல்லவில்லை. சில நாட்களில் சரியாகி விடுவான் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் இப்படி ஆகிவிட்டது."

“ஏன் சார்! நீங்க அவனைக் காணோமே என்று தேடவில்லையா?”

“இல்லை சார். நைட் சீக்கிரம் தூங்கிட்டான்னு நெனச்சோம். காலைல பாத்ரூம் போயிருக்கலாம்னுதான் நினைச்சோம். அவன் இல்லைனு நாங்க நினைக்கிறதுக்குள்ள இப்படி போன் வந்துடுச்சு சார்!”

“சரி! நாங்கள் கூப்பிட்டால் ஸ்டேஷனுக்கு வந்து விளக்கம் சொல்லணும். நான் வருகிறேன்.”

போலீஸ் ஹோட்டலில் இருந்து கிளம்பிச் சென்றார்கள்.

மேனேஜர், “நிம்மதியா வேலையை பார்த்துட்டு இருந்தோம். இப்போ ஒரு நல்ல மனுசனை அநியாயமா கொன்னுட்டாங்க பாவிகள். நாமும் வேறு ஸ்டேஷன், கோர்ட்னு அலையணும்.” என்று சலித்துக் கொண்டார்.

ட்ரக் டிரைவரையும் போலீஸ் துருவித் துருவி விசாரித்தார்கள். அவன் ஹோட்டலில் இருந்து வெளியேறிய நேரம், கேட்டில் பதிவு செய்த விபரம் எல்லாவற்றையும் சொன்னான். போலீஸ் அவற்றை சரி பார்த்துக் கொண்டார்கள். அவனை ஸ்டேஷனில் அன்று முழுவதும் இருக்க வைத்தார்கள். மேனேஜரின் உத்தரவாதத்தின் பேரிலேயே அவனை வீட்டுக்குப் போக அனுமதித்தார்கள்.

அன்று மாலைச் செய்தித் தாள்களில் ‘நட்சத்திர ஹோட்டல் பணியாள் படுகொலை!’ கொலையாளிகளுக்கு போலீஸ் வலை வீச்சு!” என்று தலைப்பிட்டு ரகூல் கொலைச் செய்திகளை வெளியிட்டன. ஆளுக்கு ஒரு வகையாக கொலைக்கான காரணங்களை சொல்லியிருந்தன. வெளியாட்கள் யாருடனும், கொலையான அன்று அல்லது சில நாட்கள் முன்பும் பேசியதில்லை என்பதால், ஹோட்டல் பணியாட்களாலும், யாரைப் பற்றியும் எதுவும் சொல்லமுடியவில்லை. அன்று வந்த வாகனங்களின் எண்களை வைத்தும் போலீஸ் விசாரணை செய்தார்கள். அதில் ஒரு பைக்கின் எண் போலி என்பது தெரியவந்தது. அவர்கள் அனேகமாக கொலையாளிகளாக இருக்கவேண்டும் என்ற போலீஸ் சந்தேகப்பட்டார்கள். எனவே அதில் வந்தது யார் என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். சரியான ஒரு தடயமும் அவர்களுக்கு சிக்கவில்லை. நிருபர்களிடம் “ஒரு தனிப்படை அமைத்து கொலையாளியை தேடி வருகிறோம். விரைவில் அவன் சிக்கிவிடுவான்” என்று இன்ஸ்பெக்டர் பொதுவாக சொல்லிவைத்தார்.

# 42

பெசன்ட் நகரில் நியூ ராயல் மருத்துவமனை, சென்னையின் ஓரளவு பெயர் பெற்ற தனியார் மருத்துவமனைகளில் அதுவும் ஒன்று. அங்கே குருமூர்த்தி ஒரு அறையில் படுத்திருந்தான். அவனுக்கு காலில் சிறு கட்டி வந்து செப்டிக் ஆகிவிட்டதால் அங்கே அட்மிட் ஆகியிருந்தான். அவன் ராஜ்குமாரின் நண்பன். ராஜ்குமார் அப்போது தான் வந்து நண்பனின் அருகில் உட்கார்ந்தான். "என்னடா திடீர்னு! ரெண்டு நாள் முன்னமே கூட பார்த்தேன். நல்லாத்தானே இருந்தே!"

அறையில் டி.வி.யில் பழைய கவுண்டமணி செந்தில் ஜோக் ஓடியது. அதில் கவுண்டர் காலில் அடிபட்டு படுக்கையில் இருக்க, செந்தில் ஜாலியாக பேசிக்கொண்டிருந்தார்.

"ஆமாம்டா! சின்ன கட்டி தானே! சரியாயிடும்னு நெனச்சேன். இப்படியாயிடுச்சு!"

என்று சிரித்தான். "ஒரு ரெண்டு நாள்ல வீட்டுக்குப் போயிடலாம்."

"அது சரி! பக்கத்து ரூம்ல என்ன ஒரே அமர்க்களமா இருக்கு! யாரும் வி.ஐ.பி.யா?"

"வி.ஐ.பி.யா! போய்ப்பாரேன் அந்தக் கொடுமையை! ஒரு வயசானவர். பாவம் பரம ஏழை! அவர் பாட்டுக்கும் காலைல ரோட்டோரமா சைக்கிளல போயிட்டு இருக்கும்போது நம்ம அமைச்சர் பையன், காரை விட்டு மோதி தூக்கிட்டானாம். கார் ஓட்ட இன்னும் முழுசாப் பழகவில்லை. செல்வாக்கை வெச்சு லைசன்ஸ் வாங்கிட்டான்போல. கார் கன்ட்ரோல் வரலை. பிரச்னையாகாம இருக்கனும்னு அவரை இங்கே சேர்த்து ட்ரீட்மென்ட் குடுக்குறாங்க. ஒரே அமர்க்களம்தான். மினிஸ்டர்மட்டும்தான் வரலை. பி.ஏ. தான் நேரில் வந்து கவனிச்சுக்கிறாரு!"

"சரி! பெரியவர் யோகக்காரர் தான்."

இரண்டுபேரும் சிரித்தார்கள்.

சிறிது நேரம் இருந்துவிட்டு ராஜ்குமார் நண்பனிடம் சொல்லிக்கொண்டு வெளியே வந்தான். ஒரு ஸ்டாலில் டீ

சொல்லிவிட்டு நின்றான். அப்போது ஒரு போலீஸ் ஜீப் அங்கே வந்து நின்றது. அதிலிருந்து கௌதம், ஹசன், காதர் இறங்கினார்கள். அடுத்த சில நிமிடங்களில் சதீஷின் டஸ்டர் கார் வந்து அருகில் நின்றது. சதீஷிடன் பி.ஏ.வும் வந்திருந்தார். அவர்கள் எல்லோரும் உள்ளே போனார்கள். சிறிது நேரத்தில் ஹசனும் காதரும் மட்டும் வெளியே வந்து ஸ்டாலில் டீ குடித்துக் கொண்டே தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அவர்களில் ஹசன் வலது கையை ஒரு விதமாக வீசி நடந்தது ராஜ்குமாருக்கு சிரிப்பை வரவழைத்தது. அவர்கள் இருவரும் காஷ்மீர் மொழியில் பேசியது அவனது கவனத்தை ஈர்த்தது. "இவர்கள் காஷ்மீரிகளா?" அவனுக்கு அது சாதாரணமாகப் படவில்லை.

"காஷ்மீரி இளைஞர்கள் சென்னையில் என்ன செய்கிறார்கள்? அவர்கள் எப்படி போலீஸ் ஜீப்பில் சர்வசாதாரணமாக வந்து இறங்குகின்றார்கள்? அவனுக்கு இது வித்தியாசமாகவும் ஏதோ ஒரு வகையில் சரியில்லாததாகவும் தோன்றியது. போலீஸ் ஜீப் டிரைவரிடம் நைசாக பேசினான். அதில் அவர்கள் எஸ்.பி.யின் மகனுடைய கல்லூரித் தோழர்கள் என்பதையும் அவர்கள் ஹைதராபாத் காரர்கள் என்றும் அவர் மூலம் தெரிந்தது. ஹைதராபாத் காரர்கள் ஏன் காஷ்மீரியில் பேசிக்கொள்கிறார்கள் என்பதையும் அவன் யோசித்தான். மீண்டும் அவர்களைப் பார்த்தான். அவர்களின் காஷ்மீரி மூக்கு தனியாகத் தெரிந்தது. சந்தேகமில்லை. அவர்கள் காஷ்மீரிகள் தான். அமைச்சர் மகனும் அவர்களுடைய தோழன் என்பதையும், அவனால் காரில் அடிபட்டிருந்த பெரியவரை பார்க்கவே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதையும் அவன் ஊகித்துக்கொண்டான்.

மருத்துவமனைக்குள்ளே போன சதீஷும் கௌதமும் வெளியே வந்தார்கள். உடனே ஹசனும் காதரும் அவர்களுடன் ஜீப்பில் ஏறிக்கொள்ள காரும் ஜீப்பும் புறப்பட்டுப் போயின. ராஜ்குமார் டீயைக் குடித்தபடி தீவிரமாக யோசித்தான். அப்போது டி.வி.யிலும் செய்தித்தாள்களிலும் பார்த்த ஹோட்டல் பணியாள் கொலையைப் பற்றி விசாரிக்க நினைத்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. உடனே தன் கைக்கெடிகாரத்தில் மணியைப் பார்த்துக் கொண்டு, ஈசிஆர் சாலையில் பைக்கை வேகமாக விரட்டினான். ஏதோ ஒரு பெரிய முக்கியமான மர்மத்தை தான் நெருங்குவதாக அவன் உள்ளுணர்வு அவனுக்குச் சொன்னது. அதே சமயம் ஒரு பெரிய ஆபத்து வளையத்துக்குள் அவன் நுழைவதை அவன் உணரவில்லை."

“புது உலகம் அந்த வார இதழில் மணல் மாஃபியாவைப் பற்றிய இரண்டாவது கட்டுரை வெளிவந்ததும், ராஜ்குமாரை பெங்களூர் போய் ஒரு மாதம்இருக்கும்படி ஆசிரியர் சொல்லியிருந்தாலும், ராஜ்குமாருக்கு அதில் உடன்பாடில்லை. அவரிடம் “எஸ் பாஸ்” என்று சொன்னாலும் அவன் பெங்களூர் போகாமல் சென்னையில்தான் இருந்தான். தான் கஷ்டப்பட்டு, அலைந்து ரிஸ்க் எடுத்து எழுதிய கட்டுரைக்கு ரெஸ்பான்ஸ் எப்படி என்பதை தெரிந்து கொள்வதில் ஒரு த்ரில் இருந்தது. அதை அனுபவிக்க அவன் விரும்பினான். அதே சமயம் தன்னுடைய பாதுகாப்புக்காக, தன் இருப்பிடம், செல் நம்பர், பைக் ஆகியவற்றை மாற்றியதுடன் ஹேர் ஸ்டைலை கொஞ்சம் மாற்றிக்கொண்டு, ப்ரெஞ்ச் தாடியுடன் மாநகரச் சாலைகளில் ஹெல்மட் அணிந்து திரிந்தான். அவனைப் பார்த்தால் எளிதில் யாருக்கும் அடையாளம் தெரியாதபடி ஓரளவு மாறியிருந்தான். அது மட்டுமே அவனுக்கு பாதுகாப்பு.

அவன் பைக்கில் போகும் போதே அந்தக் காஷ்மீரி இளைஞர்களின் விவகாரம் ஏதோ விபரீதத்தைக் காட்டுவதாக நினைத்துக்கொண்டே போனான். அவர்கள் சென்னைக்கு ஏதேனும் ஒரு திட்டத்துடன் வந்திருப்பார்களோ என்று அச்சப்பட்டான். தனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரிகளிடமும், ஆசிரியரிடமும் இது பற்றிப் பேசவேண்டும் என்று நினைத்தான். ஈசிஆர் சாலையில் இருந்த ஈஸ்டரின் ஈகிள் ரிசார்டில் நுழையும் போதே அவனை சந்தேகமாகவே பார்த்தார்கள். அவன் முதலில் பைக்கை பார்க் செய்தவுடன் நேராக மேனேஜரிடம் போய் தன் விசிட்டிங் கார்டைக் காட்டினான். அதைப் பார்த்ததும் மேனேஜர் சற்று மிரண்டார். ஆனால் ராஜ்குமாரின் நட்பான தோற்றத்தைப் பார்த்து “உட்காருங்கள்” என்று ஒரு சேரைக் காட்டினார். பணியாளை கூப்பிட்டு ‘காபி’ என்றார்.

சிறிது நேரத்தில் காபி வந்தது. குடித்துக்கொண்டே பேசினார்கள்.

“சார்! நான் உங்களுக்கு எந்த வகையிலும் கஷ்டம் கொடுக்கவரவில்லை. ஏதாவது உதவி செய்ய முடியுமா என்றுதான் வந்திருக்கிறேன்.” “ஒரு சில கேள்விகள் மட்டும்தான். அதுவும் கூட உங்கள் நன்மைக்காகத்தான்.”

அவர் ‘சரி’ என்று தலையசைத்தார்.

“ரகூலைப் பற்றி, அவர் எப்படிப்பட்டவர், சொந்த ஊர் போன்ற விபரங்களை சொல்லுங்கள்!”

மேனேஜர் விவரமாகச் சொன்னார். அது அவனுக்கு திருப்தியாக இல்லை.

“சார்! ரசூல் ஏதாவது வித்தியாசமான அனுபவம், ஆட்கள் பற்றி எப்போதாவது பேசியிருக்கிறாரா?”

மேனேஜர் யோசித்தார். முடிவில் ‘ரசூல் ஒரு முறை காஷ்மீரில் சுற்றுலா போயிருந்த போது தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிபட்டு, பிறகு நமது இராணுவத்தால் காப்பாற்றப்பட்டானாம்.’ என்றார். ஆனால் அது அஞ்சு வருஷத்துக்கு முன்னால நடந்தது.”

ராஜ்குமாருக்கு இதில்தான் ஏதோ விஷயம் இருப்பதாக மணி அடித்தது. பிறகு அந்த மாத நிகழ்ச்சிகளின் விபரங்களை கேட்டுத் தெரிந்துகொண்டான். அமைச்சர் மகன் பிறந்தநாள் விழாவுக்கு மறு நாளிலிருந்து தான் ரசூல் டல்லாக ஏதோ சிந்தனையுடன் இருந்ததையும் சொன்னார். அந்த விழாவில் எடுக்கப்பட்ட படத்தை அவனிடம் மேனேஜர் காட்டினார். அதில் அசன், காதர் இருந்தார்கள். “ரைட். நான் நினைத்தது சரிதான்!” அவன் மனம் படபடத்தது.

அவர்களைக்காட்டி, “இந்த இரண்டு பேரும் யார் தெரியுமா?” என்றான்.

“தெரியாது. அவர்கள் இரண்டு பேரும் அமைச்சர் மகனின் நண்பர்களாக இருக்கும். பல மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் அன்று வந்திருந்தார்கள். எல்லோரும் மிகவும் கண்ணியமாகவே நடந்துகொண்டார்கள். எந்த பிரச்னையும் செய்யவில்லை.”

“சரி! ரசூல் கொலையான அன்று இங்கு வந்தவர்களைப் பற்றிய சி.சி.டி.வி கேமரா படங்களைப் பார்க்க முடியுமா?”

அவர் அறையில் இருந்த டி.வி.யில் ராஜ்குமார் சி.சி.டி.வி பதிவுகளைப் பார்த்தான். அதில் இரண்டு பேர் ஜீன்ஸ், ஜெர்கின்ஸ், கையுறைகள் அணிந்து இருந்தார்கள். அவர்கள் முகத்தை கிரிக்கெட் தொப்பி மறைத்திருந்ததால் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அவர்களும் தம் முகத்தை நன்றாக நிமிரவில்லை. அது இயல்பாக இல்லை. தம் முகத்தை யாரும் பார்க்கக்கூடாது என்று அவர்கள் நினைத்தது போல தெரிந்தது. முதலில் ஒருவன் எழுந்து வெளியே நடந்துபோனான். அவன் வலது கையை வித்தியாசமாக வீசி நடந்தான். அவன் ராஜ்குமார் மருத்துவமனையில் பார்த்த அதே ஆள்தான். அடுத்ததாக ரசூல் அவனைத் தொடர்ந்துவேளியே போனான். சிறிது நேரத்தில் பில் செட்டில் செய்துவிட்டு மற்றொருவனும் வெளியேறினான்.

ஆக ரசூல் கொலை செய்யப்பட்ட நாளில் அந்த காஷ்மீரி இளைஞர்கள் இரண்டு பேரும் அந்த ரிசார்ட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பது உறுதியானது. டாக்டர்கள் கொலை நடந்த நேரம் என்று

சொன்ன நேரத்தில் அவர்கள் அங்குதான் இருந்திருக்கிறார்கள். 'அவர்கள் ஏன் ரசூலை கொலை செய்யவேண்டும்?' இது அடுத்த கேள்வி.

'ரசூல் ஒரு முறை காஷ்மீரில் தீவிரவாதிகளால் பணயக் கைதியாக கடத்தப்பட்டிருந்தானாம்' என்று மேனேஜர் சொன்னதை நினைத்தான். எல்லாம் ஓரளவு சரியாகப் பொருந்தி வருவதாக ராஜ்குமாருக்குப் பட்டது. அவனுக்கு லேசாக வியர்த்தது. கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்தான். "எவ்வளவு திறமைசாலிகள் இந்த தீவிரவாதிகள்? அரசாங்கத்தின் போலீஸ் முதல் பல துறைகளையும் சாமர்த்தியமாக ஏமாற்றி உள்ளே வந்து, தம்மை அடையாளம் கண்டுகொண்ட ஆளையும் கொன்றுவிட்டு, எதுவும் தெரியாத அப்பாவி மாணவர்கள் போல நடமாடிக்கொண்டிருக்கிறார்களே!" ராஜ்குமாரால் தன் வியப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ராஜ்குமார் தான் தெரிந்து கொண்டதை மீண்டும் ஒரு முறை கோர்வையாக்கிப் பார்த்தான். காஷ்மீரில் பல ஆண்டுகளுக்கு முன்பு ரசூல் கடத்தப்பட்டபோது அவர் இரண்டு தீவிரவாதிகளையும் பார்த்திருக்கவேண்டும். இங்கு சென்னைக்கு அவர்கள் ஏதோ திட்டத்துடன் தான் வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில் அமைச்சர் மகன் பிறந்தநாள் விருந்தில் அவர்களை எதிர்பாராமல் ரசூல் பார்த்துவிட்டார். தம்மை அடையாளம் கண்டு மற்றவர்களுக்குச் சொல்லிவிடக்கூடாது என்று உடனே அவரைக் கொன்றுவிட்டார்கள்." இது எவ்வளவு தூரம் சரியானது என்பதை அவனால் உறுதியாக சொல்லமுடியவில்லை. இதை போலீசிடம் சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள். "இதற்கெல்லாம் என்ன ஆதாரம்?" என்று கேட்பார்கள். 'அந்த இரண்டு காஷ்மீரிகளையும் பிடித்து விசாரித்தால் தான் ஆதாரம் கிடைக்கும். அது என்ன அவ்வளவு எளிதான காரியமாகவா இருக்கும்? என்ன ஆனாலும் நாம் இதை செய்துதான் ஆகவேண்டும்" என்று அவன் துணிந்தான்.

தண்ணீர் குடித்துக்கொண்டே யோசித்தவன்; மேனேஜரிடம், "சார்! விஷயம் நான் நினைத்ததை விட பயங்கரமாய் இருக்குது." அந்த ரெண்டு பேரும் சாதாரண இளைஞர்கள் கிடையாது. அவர்கள் மாணவர்களே இல்லை. அவர்களை இப்போது உங்களுக்கு அடையாளம் தெரியும். அதனால் நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ரொம்ப நன்றி!"

மேனேஜர் வாசல்வரை வந்து அவனை வழியனுப்பினார்.

இப்போது மேனேஜர் ரொம்பவும் கலவரம் ஆகியிருந்தார். சொல்லப்போனால், ராஜ்குமாரும் பயந்துபோய்த்தான் வெளியே வந்தான். அவனையும் யாரோ பின்தொடர்வது போல பிரமை ஏற்பட்டது. மருத்துவமனையில் தான் அவர்களை அருகில் நின்று கவனித்ததை அவர்கள் அறிந்திருப்பார்களோ என்ற பயம் ஏற்பட்டது. அத்தோடு அவர்களுக்கு இங்கு யாரும் ரகசியமாக உதவி செய்யாவிட்டால் அவர்களால் இப்படி சுதந்திரமாக நடமாட முடியாது என்பதை நினைத்தால் அவன் உடல் நடுங்கியது.

உடனே அவன் மனதை தைரியப்படுத்திக்கொண்டான். "இந்த முக்கியமான சமயத்தில் தான் நாம் துணிச்சலுடன் செயல்பட வேண்டும்" என்று முடிவு செய்தான். 'முதலில் அந்த இரண்டு பேரும் எங்கு இருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று நினைத்தவனாய் கமிஷனர் ஆபீஸ் பக்கம் தன் வண்டியை ஓட விட்டான்.

# 43

ராஜ்குமார் கமிஷனர் ஆபீசுக்குள் போகவில்லை. எதிர்புறம் பீச்சில் மர நிழலில் தன் பைக்கை நிறுத்திவிட்டு தானும் அருகில் இருந்த சிமெண்ட் சுவரில் உட்கார்ந்து கொண்டான். சில நிமிடங்கள் இருந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். தான் தெரிந்துகொண்ட விஷயங்கள் அவனுக்கு பிரமிப்பைக் கொடுத்தன. தன் நண்பன் குருமூர்த்தியை எதிரில் காந்தி சிலைப் பக்கம் வரவழைத்துப் பேசினான். தனக்குத் தெரிந்த விபரங்களைப் பற்றி எதுவும் ராஜ்குமார் அவனிடம் முதலில் காட்டிக்கொள்ளவில்லை.

"என்னடா! போன இஷ்யூவில் பெரிய வெடி குண்டைப் போட்டுட்டு ஆள் எங்கே போனே? இப்போ சத்தமில்லாம இங்கே இருக்கே! இங்கே பெரிய பெரிய தலையெல்லாம் உன்னால பெரும் பிரச்னைல மாட்டிக்கிட்டு ஒரே ரகளையா இருக்குடா!" குருமூர்த்தி சிரித்தான்.

"நம்மளை ரொம்பத் தேடுவானுக. அதான் சத்தமில்லாம இருக்கேன். என்னை இங்கே பார்த்ததை யார்கிட்டயும் சொல்லாதே! சரி. வேற என்ன சேதி?"

"மாப்ளை உனக்குத் தெரியாதா? ஒருத்தன் ரெடிமேட் ஸ்டோர்காரன், தன் ப்ரெண்டுடன் பீச் ரோட்ல ஒரு பேக்கில் வெடிகுண்டோட பைக்ல வந்து சிக்னல்ல நிற்கும்போது டாக் ஸ்குவாட்கிட்ட சிக்கிருக்கான். புடிச்சு விசாரிச்சா, ஒரு பயங்கரமான தகவல் அவன் சொல்லிருக்கான்."

"ரெடிமேட் ஸ்டோர் காரனா? என்ன தகவல் சொன்னானாம்?"

ராஜ்குமாருக்கு பதற்றமானது.

"அவன் நண்பர்கள் இன்னிக்கு சென்னை சிட்டியில் வெடிகுண்டு வச்சிருக்கிறாங்களாம். போலீஸ் சிட்டில பல இடங்களிலும் தேடுதல் வேட்டை நடத்துறாங்க. இதுவரைக்கும் ஒண்ணும் கிடைக்கலையாம்."

"ஐயோ! அப்புறம்? இன்னும் எத்தனை பேர் இருக்காங்களோ!"

"அந்த நண்பர்கள் யார்? எங்கே இருக்காங்க என்ற ஒரு விபரமும் தெரியலை! டிபார்ட்மென்டே தவிக்குதுடா"

"குரு! அந்த ரெண்டு பேரும் யார்னு எனக்குத் தெரியும்! அவங்க இந்த நிமிஷம் எங்கே, என்ன பண்ணிட்டு இருக்காங்கன்ற விபரம் தெரியலை. அவங்களைப் பிடிச்சாத்தான் வெடிகுண்டுகள் எங்கே

வெச்சிருக்காங்கன்னு நமக்குத் தெரியும்! அதுக்காகத்தான், உங்க கமிஷனரை நான் பாக்க வந்தேன்!"

"என்னடா ராஜீ! நீ சொல்றது ரொம்ப பயங்கரமா இருக்கே!"

"குரு, இப்போ என்ன தான் உங்க டிபார்ட்மென்ட் பண்ணிட்ருக்கு?"

"கமிஷனரே நேர களத்தில– இறங்கிட்டார். பல இடங்களுக்கும் அவரே நேரில் போய் நிலைமையை மானிட்டர் பண்றாராம். இன்னும் பிரஸ்காரங்களுக்குத் தெரியாது. நீ தான் எப்படியோ மோப்பம் பிடிச்சு வந்து நிக்கிறே. எப்படிடா நீ கண்டுபிடிச்சே!"

"தற்செயலாகத்தான்! ஹாஸ்பிடல்ல அமைச்சர், எஸ்.பி. மகன்களோட ரெண்டு பேர் போலீஸ் ஜீப்பில் வந்தார்கள். அவங்க காஷ்மீரிகள் மாதிரி இருந்தார்கள். தனியா அவங்க இரண்டுபேரும் டீ குடித்துக்கொண்டே தங்களுக்குள் காஷ்மீரி மொழியில் பேசிக் கொண்டதை தற்செயலாக நான் கேட்டேன். கொஞ்சம் சந்தேகம் வந்தது. அதற்கு சில நாள் முன்பாகத்தான் ஹோட்டல் பணியாள் கொலை நடந்தது. ஒரு சின்ன ஸ்பார்க்; ஒரு சந்தேகம். ரெண்டையும் இணைத்துப் பார்த்தேன். ஹோட்டல் சி.சி. டி.வி. பதிவுகளைப் பார்த்தேன். அதில் அவனுக ரெண்டுபேரும் இருந்தாங்க. என் கணிப்பு சரியாக இருந்தது. அவ்வளவுதான்."

"ஓ! கிரேட். பெரிய விஷயம்டா! யாருக்கும் ரிப்போர்ட் பண்ணினியா?" "இல்லை. யாருக்கும் சொல்லலை. உனக்கு மட்டும் தான் சொல்றேன். பயங்கரமா இருக்குடா! அது சரிடா! உங்க ஆட்கள் கூடவே இவனுக சுத்திட்டிருந்திருக்காங்க. யாருக்குமே சந்தேகம் வராதாடா? அப்பாவிகளை போட்டு பாடா படுத்துவீங்க. இவனுகளை எல்லாம் சந்தேகப்படவே மாட்டீங்க! அப்படித்தானே!"

"அப்படியில்லை! பசங்க கூட படிக்கிறவங்களை யாராவது சந்தேகப்பட முடியுமா! நீ ப்ரெஸ்காரன், ஏதாச்சும் மேட்டர் கிடைக்குமான்னு பாத்திருப்பே!

உன் கணிப்பு சரியாகவே இருந்துருக்கு. ஆனால் நீ சொல்லுற எல்லாத்துக்கும் ஆதாரம் கேப்பாங்களே!"

"ஆதாரமெல்லாம் அந்த காஷ்மீரிகளை பிடித்தால்தான் கிடைக்கும். அதை முதலில் நாம் செய்யணும்.

குருமூர்த்தி சத்தமாக சிரித்தான்.

"அதில பாருடா, அவனுக ரெண்டு பேரும் அங்க தப்பிச்சு இங்க தப்பிச்சு கடைசியில் நாய்கிட்ட போய் மாட்டிருக்கானுங்க!"

ராஜ்குமாரும் தன் டென்ஷனை மறந்து வாய்விட்டுச் சிரித்தான்.

# 44

ஹசன், காதர் இரண்டுபேரும் எங்கே குண்டு வைத்திருக்கிறார்கள் என்ற விபரத்தை போலீஸ் எவ்வளவோ முயற்சி செய்தும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. சிக்கிய உள்ளூர் தீவிரவாதி அவர்கள் ஆயுதபூஜை சாமி கும்பிடும் அன்று குண்டு வெடிக்கும்; பயங்கரமான சேதமும் உயிரிழப்பும் ஏற்படும் என்று மட்டும் தெரிவித்துவிட்டு மயங்கிவிட்டான். எந்த இடத்தில் நடக்கும் விழாவில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தங்களுக்கே தெரியாது என்று சொல்லிவிட்டான். உண்மையிலேயே அவர்களுக்கும் தெரியாது. அன்று நகரின் எல்லா தொழிற்சாலைகள், அலுவலகங்களிலும் ஆயுதபூஜை நடைபெறுவதாக இருந்தது. இதில் எந்த இடம் என்று முடிவு செய்வது? ஒரு வேளை பல இடங்களிலும் குண்டு வைத்திருப்பார்களோ? நினைக்கவே ராஜ்குமாருக்கு பயங்கரமாக இருந்தது.

"டேய் மாப்ளை! நாம உடனே போய் கமிஷனரை பார்க்கணும். முடியுமா?"

"முடியாது. கமிஷனர் இப்போது ஆபீசில் இல்லை. அதனால் தான் நானே கொஞ்சநேரம் வெளியில் வர முடிந்தது. அவர் தான் நேரே களத்தில் இறங்கிட்டார்னு சொன்னேனே!"

"சரி! எல்லா நிகழ்ச்சிகளிலும் பெரிய நிகழ்ச்சி உங்கள் அலுவலக நிகழ்ச்சிதான். அதனால நாம உடனே அங்கே தான் போகணும்.

ராஜ்குமார் தன் நண்பனுடன் கமிஷனர் அலுவலகத்துக்குப் போனான். அங்கு நேரே பரபரப்பாக இருந்தது. நீண்டநேரம் வெடிகுண்டைத் தேடியும் அது எங்கும் கிடைக்கவில்லை என்பதால் விரக்தியிலும் கோபத்திலும் போலீஸ் இருந்தார்கள். ராஜ்குமார் அங்கிருந்த ஒரு போலீசிடம் விசாரித்தான். அவர் படுகோபத்தில், "எவனோ ரெண்டு பேர் இங்கே நிறுத்தி வச்சிருந்த என் ஜீப்பை திருட்டுத்தனமா எடுத்துட்டுப் போயிட்டாங்க. வேணும்னு செஞ்சாங்களா இல்லை தெரியாமல் மாத்தி எடுத்தாங்களான்னு தெரியலை!"

"சார்! அதெப்படி தெரியாமல் எடுப்பாங்க? சாவி உங்ககிட்ட தானே இருக்கு!"

“ஆமாம் தம்பி! என் கிட்ட தான் இருக்கு. திருட்டுத் தனமாத்தான் எடுத்துட்டு போயிருக்கணும்.”

“சரி சார்! ஜீப் நம்பர் என்ன?”

அவர் நம்பரைச் சொன்னார். உடனே குருமூர்த்தி அதைக் குறித்துக்கொண்டு ட்ராபிக் போலீசில் விசாரித்து “டேய்! ஈ.சி.ஆர். ல தான் அந்த ஜீப் போகுதாம்!” என்றான்.

உடனே “மச்சான்! வெடிகுண்டு எங்கே வச்சிருக்காங்கன்னு போலீசால இது வரைக்கும் கண்டுபிடிக்க முடியலை. அப்படின்னா அது இந்த கேம்பஸ்ல இல்லைன்னு தான் நான் நினைக்கிறேன். நமக்குச் சரியான தகவல் தெரியணும்னா, உடனே நாம அந்த ஜீப்பை மடக்கி அந்த ரெண்டு தீவிரவாதிகளையும் பிடிக்கணும்.”

அப்போது கமிஷனர் பாம் ஸ்குவாட் ஆட்களுடன், மோப்ப நாய்கள் சகிதமாக அந்த வழியே நடந்து போவதைப் பார்த்தான். உடனே ராஜ்குமார் அவரை நோக்கி வேகமாக ஓடினான்.

“வணக்கம் சார். நான் ராஜ்குமார். புதுஉலகம் நிருபர். குண்டு வச்ச தீவிரவாதிகளை எனக்குத் தெரியும் சார். நான் அவர்களை பார்த்திருக்கிறேன். அவர்களைப் பிடித்தால் தான் எங்கே குண்டு வைத்திருக்கிறார்கள் என்பது தெரியும்.”

கமிஷனர் ராஜ்குமாரை ஒரு முறை கூர்ந்து பார்த்தார். அவனை பேச அனுமதிப்பது போல தலையசைத்தார்.

“அப்படியா!” அவர்கள் உங்களால் அடையாளம் காட்ட முடியுமா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள் இப்போது? தெரியுமா?”

“அவர்கள் தான் ஹோட்டல் பணியாளர் ரகூலைக் கொலை செய்தவர்கள். அவர்கள் இப்போது போலீஸ் ஜீப்பை திருடிக்கொண்டு அந்த ஜீப்பில் ஈசிஆர் சாலையில் போய்க்கொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரி வழியாக ஆந்திராவுக்குப் போய் தப்பிவிடலாம் என்று திட்டமிட்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.”

உடனே கமிஷனர் “பாண்டிச்சேரி போலீசுக்கு தகவல் கொடுத்து அந்த ஜீப்பை மடக்கிப்பிடித்து வைக்கச் சொல்லுங்கள். ம் உடனே!” என்று கூட இருந்த அதிகாரியிடம் உத்தரவிட்டார். குண்டு வெடிப்பைத் தடுக்க முடியாவிட்டால் கூட பரவாயில்லை. குண்டு வைத்தவர்களை யாவது பிடித்துவிடவேண்டும் என்று அவர் நினைத்தார்.

அப்போது ஒரு போலீஸ் வந்து “அந்த ஜீப்பில் நம்ம எஸ்.பி. ஐயா வோட மகனும் இருந்ததா தகவல் ஐயா!”

கமினருக்கு இதைக்கேட்டதும் பயங்கரமான கோபம் வந்தது. இருந்தாலும் அடக்கிக்கொண்டார். “இருக்கலாம். அவன் ஜீப்பில்

இருந்ததால் தான் அவர்கள் கேள்வி இல்லாமல் ஜீப்பில் வெளியேற முடிந்திருக்கிறது." ராஜ்குமார் கூறியதை ஆமோதித்தார் கமிஷனர். "இந்தப் பசங்களை கைக்குள் போட்டுக்கொண்டு தான் அந்த தீவிரவாதிகள் இவ்வளவு தூரம் விளையாடிட்டாங்க. ஏன்யா! ஒருத்தனுக்குமே சந்தேகம் வரலையா?"

அதிகாரிகள் தலைகுனிந்து நின்றார்கள்.

"இவ்வளவு ஆள், ஆயுதம், வாகனங்கள், எலக்ட்ரானிக் கருவிகள்னு ஏராளமா இருந்தும், கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழிச்சாலும், கடைசியில் இரண்டு நாய்கள் தானே வெடிகுண்டு கொண்டு போனவனை பிடிச்சுச்சு! தற்செயலாக இருந்தாலும் அவைகள் கண்டுபிடிக்கலைன்னா யாருக்குமே தெரிஞ்சிருக்காதே! மை காட்!"

ராஜ்குமார் கமிஷனரிடம், "சார் ஒரு விஷயம். வெடிகுண்டுகள் சப்ளை செய்யப் போனவனைத் தான் போலீஸ் பிடிச்சுட்டாங்களே! அதனால வேற எங்கேயும் குண்டுகள் வெச்சிருக்க முடியாதுன்னு நான் நினைக்கிறேன்."

கமிஷனர் "நீ நினைக்கிறது சரியாக இருக்கணும்னு நான் கடவுளை வேண்டிக்கிறேன்!" என்று சிரித்தார்.

உடனே மளமளவென்று வயர்லெஸ் ஆணைகள் பறந்தன. பல போலீஸ் ஜீப்புகள் ஈசிஆர் சாலையில் அந்த ஒரு ஜீப்பைத் தேடி கிளம்பின. உடனே ராஜ்குமார், "சார்! ஏற்கெனவே ஒரு ஜீப்பைத்தான் நாம் தேடுறோம். அதனால் தேடுபவர்களை பைக்குகளிலும், கார்களிலும் போகச் சொல்லுங்கள். ஜீப் வேண்டாம். நெறய ஜீப் போனால் குழப்பம் ஆகிவிடும்" என்றான்.

அவனை ஆமோதித்த கமிஷனர் உடனே அதை உத்தரவாகச் சொன்னார்.

அடுத்த வினாடி ராஜ்குமாரும் தன் பைக்கில் ஏறி அதை உதைக்க அதுவும் ஈசிஆர் சாலையை நோக்கி சீறிப் பாய்ந்தது. இன்னும் சில அம்பாசடர், இன்னோவா கார்களிலும், பைக்குகளிலும் போலீசார், கடத்தப்பட்ட ஜீப்பைத் தேடிக் கிளம்பினார்கள்.

இந்தத் தேடுதல் வேட்டைகளைப் பற்றி மக்களுக்கு எந்த விபரமும் தெரியாதபடி போலீஸ் நடவடிக்கைகள் இருந்ததால், விழா எந்த இடைஞ்சலுமின்றி அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது.

# 45

நல்லதம்பியிடம் பணத்தையும் ராஜ்குமாரின் படத்தையும் வாங்கிக்கொண்டு வந்த பாபு அவன் ஆட்கள் சிலரை தன் இடத்துக்கு வரவழைத்து, "உடனடியாக இந்த படத்தில் இருக்கும் ஆளை கண்டுபிடிக்கணும்டா! ஆந்திரா ரெட்டியிடம் இருந்து ஆர்டர். லேட் பண்ணக்கூடாது." அவன் நல்லதம்பியின் பெயரை சொல்லவில்லை. ரெட்டியுடன் தனக்கு தொடர்பு இருப்பதாக அவன் காட்டிக்கொள்ள பிரியப்பட்டான்.

"ஆள் கண்ணில பட்டா முடிச்சுடலாமா?" என்றான் ஒருவன்.

"இல்லை. முதலில் கண்டுபிடிக்கணும். நாம முடிச்சமாதிரி இருக்கக்கூடாதாம். வழிப்பறிக் கொலை, காதல் கொலை, ஆக்சிடென்ட் இந்தமாதிரி இருக்கணுமாம். அதனால கொஞ்சம் ப்ளான் பண்ணி செய்யணும். ஆள் பத்திரிகைக்காரனாம். கொஞ்சமும் தடயம் இல்லாம செய்யணும். புரியுதா?"

"சரிண்ணா! அப்படியே செஞ்சுரலாம்."

உடனே பாபு அவர்களிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து போட்டோ நகல்களையும் கொடுத்து அனுப்பினான். இரண்டு நாட்கள் கழித்து அவர்கள் "நீ சொன்ன ஆள் சிட்டில இருக்கா மாதிரி தெரியலையே! ஒருவேளை எங்கேயாவது வெளியூருக்கு போயிட்டானா?" என்று கேட்டார்கள்.

"இன்னும் ரெண்டு நாள் தேடிப் பார்க்கலாம். அப்புறம் முடிவு செய்யலாம்."

அவர்கள் சந்தித்துப் பேசிய இடம் ஈசிஆர் சாலையில் இருந்த ஒரு சிறிய ஹோட்டல். அப்போது அங்க ஒருவன் பைக்கில் வந்து இறங்கினான். முதலில் அவனைப் பார்த்த பாபு எதுவும் நினைக்க வில்லை. பிறகு திடீரென்று ஏதோ தோன்ற தன் பாக்கெட்டிலிருந்த போட்டோவை எடுத்துப் பார்த்தான். உடனே பைக்கிலிருந்து இறங்கியவனையும் பார்த்தான். சந்தேகமே இல்லை. இது அவன்தான். "ஹேர் ஸ்டைலை மாற்றி, ப்ரென்ச் தாடியும் வெச்சுக்கிட்டா மவனே

உன்னைக் கண்டுபிடிக்க முடியாதாடா?" பாபு தன் திறமையை மெச்சிக்கொண்டான்.

தன் ஆட்களை அவனைப் பார்க்கும்படி கண் காட்டினான். அவர்களும் பார்த்து முதலில் விளங்காமல், பிறகு கொஞ்சம் யோசித்து தலையசைத்தார்கள்.

ராஜ்குமார் ஒரு டீ சொல்லிவிட்டு நின்றான். டீ வந்ததும் குடித்துவிட்டு ஒரு சிகரெட் பற்றவைத்தான். பாதி முடிந்ததும் கீழே போட்டு மிதித்துவிட்டு பைக்கில் ஏறி கிளம்பினான். எப்படியும் தீவிரவாதிகள் மாநில எல்லையை தாண்டிச் செல்லவே முயற்சி செய்வார்கள் என்பதால் போலீஸ் செக்போஸ்ட்களில் அதிக அளவில் நின்று சோதனை செய்தார்கள். ஒரு செக் போஸ்டைக் கடந்து அவன் போய்க்கொண்டிருந்தான். குளிர்ந்த காற்று 'விஷ் விஷ்' என்று வேகமாக வீசியது.

கொஞ்சதூரம் சென்றதும் இரண்டு பைக்குகள் தன்னை உரசியபடி வருவதை ராஜ்குமார் கவனித்தான். சற்று இடைவெளி விட்டு இன்னும் இரண்டு பைக்குகள் வந்து தன்னை முந்திக்கொண்டு சீரான இடைவெளிவிட்டும் அவனை மடக்கியபடி போவதையும் பார்த்தான். பைக்குகளில் வந்தவர்கள் கைகளில் இப்போது நீண்ட வீச்சரிவாள்கள் தெரிந்தன. அவர்கள் அவனை நெருங்கியதும் ஒருவன் அரிவாளால் அவனை வெட்டினான். வண்டிகளின் நகர்வால் வெட்டு ஹெல்மட்டில் விழுந்தது. உடனே ராஜ்குமார் தன் பைக்கை அவர்களை முந்திக்கொண்டு வேகமாக ஓட்டினான். உடனே பின்னால் வந்தவர்களில் ஒருவன் அரிவாளை அவனை நோக்கி வீசினான். அது குறி தவறி 'க்ளிங்' என்ற சத்தத்துடன் சாலையில் விழுந்தது. முன்னால் போன பைக்கில் இருந்த ஒருவன் அவனை ஒட்டி வந்து தன் பட்டாக்கத்தியால் வெட்டினான். ஒரு வெட்டு அவனது இடது தோளில் விழுந்தது. மறுபடியும் இரண்டு முறை வெட்டுக்கள் தோளில் விழுந்தன. ராஜ்குமாருக்கு பயம் அதிகரித்தது. இருந்தாலும் தன் தைரியம் முழுவதையும் சேர்த்துக்கொண்டு, பைக்கை அவர்களிடமிருந்து விலக்கி விலக்கி வேகமாக ஓட்டினான். அதே சமயம் அவர்களை கவனித்தபடியே ஒரு கறுப்பு ஸ்கார்ப்பியோவும் பின்னால் வருவதை அவன் கவனித்தான். தன்னை யாரோ அடியாட்களை அனுப்பி தீர்த்துக்கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்பதையும் அவர்கள் தான் அந்த ஸ்கார்பியோவில் இருக்கிறார்கள் என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். ஸ்கார்பியோ அவர்களை நெருங்கி வந்தபோது, அதிலிருந்த ஒருவன் அவர்களுக்கு

உத்தரவுகள் சொன்னதையும் அவன் கவனித்தான். ஆசிரியர் இதையெல்லாம் கணித்துத்தான் தன்னை பெங்களூருக்கு போகச் சொன்னார் என்பதையும் அவன் புரிந்துகொண்டான். அந்தச் சாலையில் ஐந்து பைக்குகளும் படுவேகமாகப் பறந்தன. அவர்கள் தம் பைக்குகளில் இன்னும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக ராஜ்குமாருக்குத் தெரிந்தது. இரண்டு மூன்று அரிவாள்களை வீசிய பின்னும் புதிதாக அரிவாள், கத்திகளை பைக்கிலிருந்து உருவி எடுத்தார்கள். ஒருவன் அரிவாளை அவன் மேல் வீச, அவனது வலது காலில் ஒரு வெட்டு விழுந்தது. தோளில் விழுந்த வெட்டுக்கள் ஜெர்கின் அணிந்திருந்ததால் அவன் உடம்பில் ஆழமாக பதியவில்லை. திடீரென்று அவன் மேல் ஒரு பைக்கை மோதி அவனை விழ வைத்தார்கள். மோதியவனும் சரிந்து தரையில் கிடந்தான். விழுந்தவுடன் அவனை வெட்டிவிடலாம் என்பது அவர்கள் கணக்கு. ஆனால் அவன் விழுந்த வேகத்தில் எழுந்து கீழே கிடந்த ஒரு அரிவாளை எடுத்து கீழே விழுந்து கிடந்த ஒருவனை வலது தோள் பட்டையில் ஓங்கி கொத்திவிட்டு இன்னொருவனைக் காலில் வெட்டிவிட்டு ஓடினான். அவர்களும் பைக்குகளில் இருந்து இறங்கி அரிவாள், கத்திகளை ஓங்கியபடி அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். அவனுக்கு எந்தப் பக்கம் ஓடி, எப்படி இவர்களின் கொலைவெறியிலிருந்து தப்பிப்பது என்றே தெரியவில்லை. அப்போது சாலையிலும் யாரையும் காணவில்லை. சாலை போடுவதற்காக ஓரங்களில் குவிக்கப்பட்டிருந்த கருங்கற்கள் அவன் கண்களில் அப்போதுபட்டன. சட்டென்று நின்று அந்தக் கற்களை எடுத்து சரமாரியாக அவர்கள் மேல் எறிந்தான். அவர்களின் தலைகளை குறி வைத்து வலுவாக எறிந்தான். பல முனைகளை உடைய பெரிய கற்களில் பல அவர்களின் தலைகளில் சரியாகத் தாக்கின. சிலவற்றை அவர்கள் கைகளால் தடுத்தபோது கைகளிலும் வலுவாக தாக்கின. ஒருவன் முகத்தில் ஒரு கல் தாக்கி அப்படியே உட்கார்ந்தான். இதனால் அவர்களால் அவனை நோக்கி வேகமாக முன்னேற முடியவில்லை. சற்று நேரத்தில் அவனுக்கும் கைகள் சளைக்க ஆரம்பித்தன. வேகம் குறைய ஆரம்பித்தது. அவர்கள் முன்னேறி வர ஆரம்பித்தார்கள். கார் மட்டும் சற்றுத் தள்ளியே வந்தது.

அப்போது, ஒரு பெரும் சத்தம் கேட்டது. அவர்கள் திரும்பிப் பார்த்த போது சற்று தூரத்தில் ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. அது ஒரு ரிசர்வ் போலீஸ் பேருந்து. ஏதோ கலவரம் என்று செங்கல்பட்டுக்கு போய்க் கொண்டிருந்தார்கள். அடியாட்கள்

சட்டென்று ஆயுதங்களை பின்னால் மறைத்துக்கொண்டு நின்றார்கள். சட்டென்று ராஜ்குமாருக்கு ஒரு யோசனை தோன்றியது. கை நிறைய கற்களை எடுத்துக்கொண்டு சாலையின் நடுவில் நின்றுகொண்டு பேருந்து அருகில் வந்ததும் சரமாரியாக கற்களை எறிந்து பஸ் கண்ணாடிகளை உடைத்தான். சில கற்கள் உள்ளே இருந்த போலீசார் சிலரையும் தாக்கின. பேருந்து கிரீச் என்று பிரேக் அடித்து அவன் முன்பாக நின்றது.

இதைத்தான் ராஜ்குமார் எதிர்பார்த்தான். பேருந்து நின்றதும் சில போலீசார் மளமளவென்று இறங்கி அவனை நோக்கி கோபமுடன் ஓடிவந்தார்கள். சுதாரித்துக்கொண்ட ராஜ்குமார் வேகவேகமாகத் தன் அடையாள அட்டையை எடுத்துக்காட்டினான். அதற்குள் ஒரு அவசரப்போலீஸ் அவனை ஓங்கி ஒரு அடி அடித்துவிட்டார். “சார்! நான் ‘புதுஉலகம்’ நிருபர் சார். பேர் ராஜ்குமார். டாஸ்மாக் கள்ளச் சரக்கு, மணல் மாஃபியா பத்தியெல்லாம் கட்டுரை எழுதினதால அவங்க ஆட்களை அனுப்பி என்னை கொல்லப்பாக்கிறாங்க சார். ப்ளீஸ்! என்னைக் காப்பாத்துங்க சார்!”

அடையாள அட்டையைப் பார்த்த போலீஸ் சிலர் அவனை உடனே தம் பேருந்தில் ஏற்றிக்கொண்டார்கள். சிலர் அந்த அடியாட்களை நோக்கி ஓடினார்கள். உடனே அடியாட்கள் ஓடிப்போய் தங்கள் பைக்குகளை எடுத்துக்கொண்டு தப்பி ஓடினார்கள். அந்த கருப்பு ஸ்கார்பியோவை சாலையிலேயே காணவில்லை. வெகுதூரத்தில் ஒரு சிறிய கறுப்புப் புள்ளியாக அது போய்க் கொண்டிருந்தது. ராஜ்குமார் தன் மொபைலை எடுத்து அந்த வாகனங்களின் இரண்டின் எண்களைப் பதிவு செய்து கொண்டான். போலீசிடம் “நான் உங்கள் பேருந்தை நிறுத்துவதற்காகத்தான் உங்கள் மேல் கற்களை எறிந்தேன். எனக்கு வேறு வழி தோன்றவில்லை. சாரி” நீங்கள் வண்டியை நிறுத்தலைன்னா என்னை வெட்டிக் கொன்றிருப்பார்கள். என்னைக் காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றி சார்!”

அவனை அடித்த போலீஸ் அவனிடம் “சாரி!” சொன்னார்.

“ஓ! நீங்க தான் அந்தக் கட்டுரைகளை எழுதினதா? சூப்பர் சார்! இவனுகளை இப்படியே விட்டுவைக்கக் கூடாது சார்! இந்தப் பிரைவேட் என்ஜினீரிங் காலேஜ்களைப் பத்தியும் கொஞ்சம் நீங்க எழுதணும் சார்! கொள்ளை யடிக்கிறானுக!” என்றார் ஒருவர்.

“சார்! வாங்க! உங்களுக்கு முதலில் ட்ரீட்மென்ட் குடுக்கணும். ரொம்பவும் இரத்தம் வழியுது பாருங்க.”

பேருந்தில் இருந்த முதலுதவிப் பெட்டியை எடுத்து சிகிச்சை அளித்து இரத்தம் வராமல் கட்டுப்போட்டார்கள். பேருந்து மேலும் கொஞ்சம் தூரம் போனது. அச்சம்பாக்கம் கிராமத்திலிருந்து இரண்டு பர்லாங் தூரம் இருக்கும்போது சாலை சந்திப்பில் பயங்கரமான வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு கார் வெடித்துச் சிதறியது போல தெரிந்தது. அவர்கள் திடுக்கிட்டார்கள். வேகமாக இன்னும் கொஞ்சம் தூரம் போனதும் ஒரு லாரியும் காரின் அருகே எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்தார்கள். பேருந்தை சற்று தள்ளியே நிறுத்திக்கொண்டார்கள். அப்போது இரண்டாவதாகவும் ஒரு பயங்கரமான வெடிச்சத்தத்தைக் கேட்டார்கள். அது முதலில் கேட்டதைக் காட்டிலும் பல மடங்கு பெரியதாகவும் கேட்டது. ஒரே நெருப்பும் புகையுமாக அந்த இடம் காட்சியளித்தது.

# 46

**மா**நகருக்கு வெளியே மேகம் ஓரளவு மூட்டமாக இருந்தது. குளிர்ச்சியான காற்றும் வீசியது. சதீஷ் ஓட்டிவந்த டஸ்டர் திருவான்மியூர், நீலாங்கரை, பனையூர் கடந்து கானாத்தூரையும் இடந்தது. காரில் ப்ரியா, ராஜேஷ், கௌதம் மற்றும் சில நண்பர்கள் அரட்டையடித்தபடியே படு ஜாலியாக வந்தார்கள். ப்ரியா மட்டும் வழக்கமான கலகலப்பு இல்லாமல் கொஞ்சம் சிந்தனை வசப்பட்டவளாக இருந்தாள். காரின் ஸ்பீக்கர்களின் ஸ்டீரியோ எபெக்டில் பாடல் அதிர்ந்து கொண்டிருந்தது.

கௌதம், “டேய்! சதீஷ் இப்ப மணி மூணு ஆகுது. நாம் ரிசார்ட்டில கொஞ்சநேரம் இருந்துட்டு ஈவினிங் பங்ஷன் ஆரம்பிக்கும் போது சரியா அங்கே இருக்கணும்டா. ஒரு நாலு மணிக்கெல்லாம் கிளம்பிடணும்! இல்லையானா அம்மாவுக்கு பதில் சொல்லவே முடியாது. ஸ்வேதாவும் வருத்தப்படுவாள்!”

“ஓகே டா! கண்டிப்பா நாம ஆறுமணிக்கு முன்னாலேயே அங்கே இருப்போம். டோன்ட் ஒரி!” சதீஷ் சிரித்தபடியே சொன்னான்.

“ஸ்விம்மிங் பூலில் ஒரு ஒன் அவர் இருந்துட்டு உடனே திரும்பிடலாம்.” இது ராஜேஷ். அப்போது சதீஷ், “இங்கே போற வழியில் ஏதேனும் கோவில் இருந்தா சொல்லுங்கடா.”

“கோவிலா? எதுக்குடா. நீ கோவிலுக்குலாம் போவியா! அவ்வளவு நல்லவனா நீ?” கௌதம் அவனை கலாய்த்தான்.

சதீஷ் மௌனமாய் சிரிக்க மற்றவர்கள் அதிர்ந்து சிரித்தார்கள். அவர்கள் வரும் வழியில் வாகனங்களில் போலீஸ் சோதனை அதிகம் இருந்தது. சதீஷுன் வண்டியையும் போலீஸ் நிறுத்தினார்கள். முதலில் அவர்களை சரியாக கவனிக்காமல் வண்டியை பாம் டிடெக்டர் கொண்டு சோதித்தார்கள். ஒரு வேளை அந்த போலீசாருக்கு காரில் இருந்தவர்களை யாரென்று தெரியாமல் இருந்திருக்கும். பிறகு ஒரு சார்ஜென்ட் வந்து எட்டிப்பார்த்துவிட்டு

“என்ன தம்பி! நீங்களா! எங்கே இந்தப் பக்கம்?”

“ஒரு கோவில் வரைக்கும், அங்கிள்!”

“சரி தம்பி! நீங்க கிளம்புங்க!” என்று கையசைக்க அவர்களின் டஸ்டர் சீறிக்கிளம்பியது. அவர்கள் அந்த இடத்திலிருந்து கிளம்பிய மறு வினாடி அந்த சார்ஜெண்ட் கன்ட்ரோல் ரூமுக்கு ஒரு டஸ்டர் காரில் அமைச்சர் மகனுடன், ராஜேஷ் ஆகியோர் அந்த வழியே போவது பற்றி தகவல் அளித்தார். அந்தத் தகவல் கமிஷனருக்கும் கிடைத்தது. அவர் உடனே அந்த காரைத் தொடர்ந்து சென்று கவனிக்கும்படி உத்தரவிட்டார். உடனே ஒரு பைக்கில் இரண்டு டிராபிக் போலீசார் கிளம்பினார்கள்.

அந்த இடத்தில் சாலை ஓரம் நின்றிருந்த சைன்போர்டில் அச்சம்பாக்கம் 3 கி.மீ. என்று இருந்தது. டஸ்டர் அதை மின்னலெனக் கடந்து சென்றது.

நல்லதம்பியும் சிவசூர்யனும் அமைச்சருக்கெனக் கட்டப்பட்டு வந்த அந்த பிரமாண்டமான மாளிகையில் நுழைந்தார்கள். செக்யூரிட்டி திடீரென அவர்களைப் பார்த்ததும் பதறி ஓடி வந்தார். “ஐயா! வாங்க! ஐயா வாங்க” என்று பதறினார்.

“என்னய்யா! ஒருத்தரையும் காணலை!” நல்லதம்பி சுற்றிலும் பார்த்தபடி கேட்டார்.

“ஐயா! இன்னிக்கு வேலை நடக்கலை. அதான் யாரும் வரலை. ரெண்டு நாளாவே வேலை நடக்கலை ஐயா!”

“அப்படியா! சரி! இங்கே சமீபத்தில், அதாவது ஒரு பத்துப் பதினைந்து நாளுக்குள்ளே, யாராவது புதுஆள் வந்து கட்டிடத்தைப் பார்த்தாங்களா? யாராச்சும் வந்து போட்டோ எதுவும் எடுத்தாங்களா? யோசிச்சுப் பாத்து சொல்லுங்க!”

நல்லதம்பி பெரியவரிடம் சற்று கனிவாகவே கேட்டார். அதனால் அவரும் கொஞ்சம் தைரியமாக பேசினார்.

“ஒரு நாள் ஒரு ஆள் வந்து யாரோ ஒரு ஜட்ஜ் வீடு எதுன்னு கேட்டார். நான் ஜட்ஜ் வீடு இது இல்லை. இது மினிஸ்டர் வீடு. ஜட்ஜ் வீடு எதுன்னு வேற பக்கம் போய் விசாரிச்சுக்குங்கன்னு சொன்னேன். அப்ப அவர் குடிக்க கொஞ்சம் தண்ணி வேணும்னு கேட்டார். நான் தண்ணி பாட்டிலை எடுத்துட்டு வந்து குடுத்தேன். குடிச்சுட்டுப் போயிட்டார். போட்டோலாம் எடுக்கலை.”

“அவன் கையில கேமிரா எதுவும் வச்சிருந்தானா?”

“இல்லைங்க! செல்போன் மட்டும் வச்சிருந்தார்.”

“ஓ! அப்படியா! அப்ப உங்களுக்குத் தெரியாம அதை வச்சு போட்டோ எடுத்திருக்கான். நீங்க அதை கவனிச்சிருக்க மாட்டீங்க.”

"இருக்கலாமுங்க. ஐயா என்னை மன்னிக்கணும்!" பெரியவர் பயந்தார்.

"சரி சரி! அன்னிக்கு வந்தவனுக்கு வயசு என்ன இருக்கும்? எதில வந்தான். கார்லயா பைக்லயா? ஞாபகம் இருக்கா?"

கொஞ்சம் யோசித்தார் பெரியவர், "அவர் வரும்போது நான் பார்க்கலை. போகும் போது பார்த்தேன். நடந்து தான் போனார்." அவருக்கு ஒரு இருபத்தி அஞ்சு இருபத்தாறு வயசுதான் இருக்கும்."

பெரியவர் சாதாரணமான விஷயம் போல பேசியது சிவசூர்யனுக்கு பிடிக்கவில்லை. "ஏன்யா! முன்னே பின்னே தெரியாத ஒருத்தனை எப்படிய்யா நீ வீட்டுக்குள் வரவிட்டே? ஏதாச்சும் ஒரு நூறு ரூபா குடுத்திருப்பான். நீ அன்னிக்கு குவார்ட்டருக்கு ஆச்சுனு உள்ளே விட்டுட்டே அப்படித்தானே!"

அவர் கோபமாய் மரியாதையில்லாமல் பேசினார். அதைக் கவனித்த நல்லதம்பி அவரை அமைதியாக இருக்கும்படி கை காட்டினார்.

"அவன் மறுபடி இங்க வந்தான்னா, நம்ம ஆளுங்க கிட்ட சொல்லி புடிச்சுக் கட்டிவைச்சிடுங்க. இல்லைனா அடிச்சுக்காலி பண்ணிடுங்க."

அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். சாலை ஓரம் இருந்த சைன் போர்டில் அச்சம்பாக்கம் 3 கி.மீ. என்று இருந்தது.

❍

# 47

"போலீஸ் ஜீப்பில் ஈ.சி.ஆர். சாலையில் வந்து கொண்டிருந்த ஹசனும் காதரும் திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை கடந்ததும் ஒரு செக்போஸ்டில் போலீஸ் குவிந்திருப்பதைக் கண்டார்கள். உடனே ஜீப்பை ஒரு ஓரமாக நிறுத்தினார்கள். காதர், ஹசன் மட்டும் கீழே இறங்கிச் சென்று எதிரே வந்த ஒருவரிடம் விசாரித்தான். அவர் எரிச்சலுடன் "யாரோ இரண்டு தீவிரவாதிகள் சிட்டில வெடிகுண்டு வச்சிட்டு ஈ.சி.ஆர். ரோட்டில் தப்பிச் செல்வதாக போலீசுக்கு தகவல் கிடைச்சதாம். அவங்களத் தான் தேடுறாங்களாம்."

"வெடிகுண்டை கண்டுபிடிச்சுட்டாங்களாமா?"

"இல்லையாமே. தேடுறாங்களாம். இவனுங்களைப் பிடிச்சால் தான் பாம் இருக்கும் இடமே தெரியுமாம். குண்டு வெச்சவனுகளை வசதியா தப்பிக்க விட்டுடுவானுங்க. சும்மா வரவன் போறவனைப் பிதுக்கி எடுத்திருவானுக!"

அவர் கடுப்புடன் பேசிவிட்டு நகர்ந்தார்.

ஹசன் ஜீப்பில் ஏறி "இன்னும் குண்டு இருக்கும் இடம் தெரியலையாம்" என்றான். அதைக் கேட்டு காதர் சத்தமாக சிரித்தான். "ஆடிட்டோரியத்தில் பாம் இருந்தால்தானே கிடைக்கும் அந்த ஜீப் பேட்டரியை நல்லா வெளிச்சத்தில பார்த்தா கிடைக்கும்" அவ்வளவு அக்கறையா எவன் பார்க்கப்போறான்?"

ஹசனும் சிரித்தான்.

அவர்கள் அந்த செக்போஸ்டை தவிர்க்க விரும்பினார்கள். உடனே இடது பக்கம் ஒரு சிறிய சாலைக்குள் நுழைந்துபோய் அடுத்த இணையான சாலையில் திரும்பி வந்து ஈசிஆர் சாலையில் மறுபடியும் சேர்ந்துகொண்டார்கள். வழியெங்கும் சோதனை இருக்கும் என்பதால் அவர்கள் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சிறு கிராமங்கள் வழியாக சுற்றிக்கொண்டு போய் ஒரு கிராமத்திலிருந்து சிறிய சாலையில் நின்று பிரதான சாலையை கவனித்தார்கள். அந்த கிராமத்தின் பெயரைப் பார்த்தார்கள் அச்சம்பாக்கம் என்று இருந்தது.

அவர்கள் சற்று நின்று ஒரு கடையில் தண்ணீர் வாங்கிக் குடித்தார்கள். பிறகு பிரதான சாலையை நோக்கி மெல்ல ஜீப்பை செலுத்தினார்கள். அவர்கள் பிரதான சாலையை அடைந்து அங்கிருந்து பாண்டிச்சேரிக்குப் போய்விடலாம் என்று முடிவு செய்திருந்தார்கள். பிரதான சாலை, ஒரு நான்கு சாலைகளின் சந்திப்பாக இருந்தது.

அன்று அந்த கிராமம் திருவிழாக் கோலத்தில் இருந்தது. ஆனால் பிரதான சாலையில் கூட்டம் இல்லை. அந்த ஈசிஆர் சாலைக்கு சற்று அருகில் ஒரு சிறிய கோவில் இருந்தது. அந்தக் கோவிலில் தான் விழா நடக்கிறது என்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அந்தக் கோவில் முன்பாக கிராமத்து மக்கள் கூட்டமாக இருந்தார்கள்.

அச்சம்பாக்கம் மக்கள் கோவிலின் முன்பாக மகிழ்ச்சியாகக் கூடியிருந்தார்கள். பெண்கள் எல்லோரும் புத்தாடைகளிலும் பளபளக்கும் நகைகளிலும் இருந்தார்கள். ஆண்கள் புதுவேட்டி சட்டைகளில் இருந்தார்கள். கிட்டத்தட்ட நூறு அடுப்புகள் வைக்கப்பட்டு பெண்கள் பொங்கல் வைத்துக்கொண்டு கூட்டமாக இருந்தார்கள். ஆண்கள் ஒரு ஓரமாக நிழலான இடங்களில் உட்கார்ந்து சீட்டு விளையாடிக் கொண்டும் சரக்கு அருந்திக் கொண்டும் பொழுதுபோக்கிக்கொண்டு இருந்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன் பெய்த மழையில் விறகுகள் எல்லாம் நனைந்து இருந்ததால், அடுப்புகளிலிருந்து அடர்த்தியாக புகை கிளம்பி, காற்றில் பிரதான சாலையை நோக்கி போய்க்கொண்டிருந்தது. பெண்கள் புகையை விரட்டி நெருப்பை எரியவைக்க பெரிய போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். பிரதான சாலையில் சிறிது தூரத்துக்கு புகை அடர்த்தியாக மூடியிருந்தது. சிறுவர்கள் பட்டாசுகளை வெடித்து விளையாடினார்கள். ஒலி பெருக்கிகளில் சீர்காழியின் கணீர்க்குரலில் பக்திப்பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. கோவில் சார்பாக அதிர்வேட்டுகள் அவ்வப்போது வெடித்து சப்தம் எழுப்பின. மழை மேகங்களும் ஓரளவு கூடி வெயிலின் கடுமையைக் குறைத்தன.

சதீஷ் அந்தக் கோவிலுக்கு ஒரு பர்லாங் தூரத்தில் வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் அச்சம்பாக்கம் அம்மன் கோவிலைப் பார்த்துவிட்டன. உடனே அவன் “ராஜேஷ்! அதோ அங்கே ஒரு கோவில் இருக்கிறது. அங்கே முதலில் போகலாம்.” என்றான். ஆனால் காரின் வேகத்தை அவன் குறைக்கவில்லை. அப்போது அவனுக்கு சாலையில் புகை மண்டியிருந்ததால் பாதை

சரியாகத் தெரியவில்லை மேகமூட்டமும் ஓரளவு இருந்தது. சாலையும் ஒரே குண்டும் குழியுமாக படுமோசமாக இருந்தது. முதல் நாள் இரவு பெய்த மழைநீர் சாலையின் பள்ளங்களில் தேங்கி நின்றது.

“சே! ஒரே புகை மண்டலமா இருக்கே!” என்றவன் அந்த புகைக்குள் குத்துமதிப்பாக காரை செலுத்தினான். திடீரென்று புகை மண்டலத்தின் ஊடே ஏதோ வருவது போல தெரிந்தது. சட்டென்று அவனுக்கு மூச்சடைப்பது போல தெரிந்தது. எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. “ஆ! என்று அலறினான். அருகில் இருந்த ராஜேஷூம் அதைக் கவனித்தான். அவன் “லெப்டில் ஓடிடா!” என்றபடி ஸ்டீரிங் வீலை இடது புறம் திருப்பினான். திரும்பிய வீல், சாலையில் இருந்த ஒரு பெரிய வெடிப்பில் இறங்கி அதில் சிக்கிக்கொண்டது. கார் அதிவேகமாக வந்ததால் அந்த 1800 சிசி என்ஜின் வேகத்தை உடனடியாக நிறுத்தமுடியவில்லை. கார் நிலைகுலைந்து வேகமாக உருண்டது.

**கொ**ட்டகையில் கொஞ்சம் சரக்கு அடித்துவிட்டு, தர்மன் மீண்டும் தம்பி டிரான்ஸ்போர்ட்ஸ் லாரியில் ஏறினான். ஒரு வழியாக அவன் பிரதான சாலையில் ஏறிவிட்டான். “இனிமேல் ரோடு நன்றாக இருக்கும். வேகமாக வண்டியை விரட்டலாம்” என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். அந்த நேரத்தில் டிராபிக் அதிகம் இருக்காது என்பது அவனுக்குத் தெரியும். பழக்கமான பாதை என்பதால் அவன் FM- ல் பாட்டைக் கேட்டபடியே ஆக்சிலேட்டரை மிதித்தான். முழு பாரத்துடன், சுமார் ஒன்றரை டன் எடையுள்ள அந்த லாரி தன் முழு பலத்துடன் ஒரு ராட்சஷனைப் போல முரட்டு வேகத்துடன், பெரும் இரைச்சலுடனும் பாய்ந்தது. சிறிது தூரம் போனதும் ஒரு பெரிய புகை மண்டலம் தெரிந்தது. அதன் ஊடே தர்மன் கவனித்துப் பார்த்தான். மேகமூட்டமும் அதிகமாக இருந்ததால் கவனித்துப் பார்ப்பதே சிரமமாக இருந்தது. ஒரு பெரிய கார் வேகமாக வருவது தெரிந்தது. ‘நல்லவேளை’ என்று எண்ணிக் கொண்டு வேகத்தைக் குறைக்காமலேயே ஒரு ஓரமாகப் போகலானான். ஆனால் என்ன இது! திடீரென்று அந்தக் கார் பல்டி அடித்தது போல உருண்டு லாரி போன திசையில் நேர் எதிராக வந்தது. தர்மன் பிரேக் பிடித்துப் பார்த்தான் ஆனால் வண்டி உடனே நிற்கவில்லை. அதற்குமேல் தர்மனால் எதுவும் செய்ய முடியவில்லை. அவனுக்கு நெஞ்சை அடைப்பதுபோல வந்தது. அடுத்த சில வினாடிகளில் ஒரு மாபெரும் சத்தத்துடன் அந்தக் கார் மேல் லாரி முழுவேகத்துடன் மோதியது.

அதற்கு மேல் என்ன நடந்தது என்பது தர்மனுக்குத் தெரியவில்லை. அந்தக் காரில் வந்தவர்களுக்கும் தெரியாது. பெரிய சப்தம் கேட்டு நெருப்பு எரிந்ததும் தர்மன் உடலிலும் நெருப்பு பரவியது. அவன் சிரமப்பட்டு லாரியின் பக்கக் கதவைத் திறந்து கொண்டு குதித்தான்.

இந்த விபத்து நடந்த சில நிமிடங்களில் அந்தச் சாலைகளின் சந்திப்பில் நல்லதம்பியும் சிவசூர்யனும் வந்த வெள்ளை ஸ்கார்பியோ வந்தது. அங்கு நடந்த கோரத்தைப் பார்த்து அவர்கள் அதிர்ந்து நின்றார்கள். காரில் வந்தது யார் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு லாரியும் காரும் மோதிக்கொண்டு விபத்து என்பது மட்டும் அவர்களுக்குத் தெரிந்தது. பக்கச் சாலையிலிருந்து பிரதான சாலையில் ஏறினார்கள்.

அதே சமயம் பயங்கரமான சப்தமும் மக்களின் பலவகையான அலறல் சத்தத்தையும் கேட்ட ஹசனும் காதரும் தாங்கள் இருப்பது போலீஸ் ஜீப் என்பதையும் மறந்து வேகமாக விபத்து நடந்த சாலை சந்திப்புக்கு ஜீப்பைச் செலுத்தினார்கள். அவர்களை அந்தச் சந்திப்பில் பார்த்த நல்லதம்பி மேலும் ஆச்சரியமடைந்தார். "இவர்கள் எதற்கு இங்கே வந்தார்கள்? அதுவும் ஒரு போலீஸ் ஜீப்பில்? இவர்கள் உண்மையில் யார்?" அவருக்கு லேசாக தலை சுற்றுவது போல இருந்தது. மெதுவாக அவர் அந்த ஜீப்பை நோக்கி நடந்தார். சிவசூர்யன் காரிலேயே உட்கார்ந்திருந்தார்.

டஸ்டர் காரும் லாரியும் தீப்பிடித்து கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தன.

தர்மன் ஒருபுறம் காயத்துடன் குதித்து காட்டை நோக்கி உயிர் பிழைக்க ஓடினான். பிடிபட்டால் மக்கள் அவனை அடித்தே கொன்றுவிடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

அச்சம்பாக்கம் மக்கள் திருவிழாவை அப்படியே விட்டுவிட்டு பிரதான சாலையை நோக்கி பலவாறாக கூச்சலிட்டபடி ஓடினார்கள். அதே சமயம் படுபயங்கரமான சத்தத்துடன் ஹசன், காதர் இருந்த போலீஸ் ஜீப் வெடித்துச் சிதறியது. அந்த வெடியின் சக்தியால் அருகில் எரிந்துகொண்டிருந்த லாரியும் காரும் பல துண்டுகளாகச் சிதறி தூக்கி வீசப்பட்டன. ஹசன், காதரை நோக்கி நடந்து சென்ற நல்லதம்பியும் தூக்கி வீசப்பட்டார். சிவசூர்யன் மட்டும் காரில் இருந்தார். அந்தக் காரும் உடைந்து தூக்கி வீசப்பட்டது. விழுந்தபோது அவரின் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்தது. அவர் மயங்கிக் கிடந்தார்.

விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடிவந்த மக்கள் இரண்டாவது வெடிச்சத்தத்தைக் கேட்டு திகைத்து நின்றார்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சில இளைஞர்கள் சுதாரித்துக் கொண்டு போலீசுக்கும் ஆம்புலன்ஸ் அவசர உதவிக்கும் போன் செய்தார்கள்.

அப்போது டஸ்டர் காரைப் பின் தொடர்ந்து வந்த ட்ராபிக் போலீஸ் பைக்கும், அதை தொடர்ந்து ஒரு போலீஸ் ஜீப்பும் அந்த இடத்தில் வந்து நின்றன. அவர்கள் கன்ட்ரோல் ரூமுக்கும் கமிஷனர் அலுவலகத்துக்கும் உடனே தகவல் தெரிவித்தார்கள். சென்னை விழாத் திடலில் வெடிக்க வேண்டிய பயங்கர வெடிகுண்டு ஏதோ ஒரு தவறால் மாநகருக்கு வெளியே ஒரு சாலை சந்திப்பில் வெடித்துவிட்டது என்பதையும் போலீஸ் தெரிந்துகொண்டனர். அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

சிறிது நேரத்தில் மூன்று ஆம்புலன்ஸ் வண்டிகள் சர்சர் என்று அங்கு வந்து நின்றன. மிகுந்த பிரயாசைப்பட்டு கருகிக்கிடந்த உடல்களை ஏற்றிக்கொண்டு சென்றன. ராஜ்குமார், படுகாயப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்த சிவசூரியனை டாக்டர்களிடம் காட்டி காப்பாற்றும்படி கேட்டான். ஒரு ஆம்புலன்சில் அவரை ஏற்றிக் கொண்டார்கள். அவர் படுகாயமடைந்திருந்தாலும் தெளிவாகப் பேசினார். அந்த அதிர்ச்சியிலும் அவர் நல்லதம்பியைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் நல்லதம்பி உடல் கருகிய நிலையில் பிணமாகக் கிடந்தார். டஸ்டர் காரில் வந்தவர்களும், போலீஸ் ஜீப்பில் வந்தவர்களும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லாதபடி தீ ஜுவாலைகள் முழுவதுமாக கோர தாண்டவம் ஆடியிருந்தன. தீயணைப்பு வண்டிகள் வந்து நீரைப் பீச்சினாலும் உடனே பயனில்லை. டயர்கள் எரிந்து பல பக்கமும் கரும்புகையை பெரு நாற்றத்துடன் பரப்பின. ராஜ்குமார் எரிந்து கிடந்த ஜீப்பின் அருகில் போய் அது தீவிரவாதிகள் கடத்திவந்த ஜீப்தான் என்று தெரிந்துகொண்டான்.

அந்த இடத்தில் செடிகொடிகள், மரங்கள் கூட தீயில் எரிந்து கருகிக்கிடந்தன. அங்கு அருகில் மேய்ந்து கொண்டிருந்த சில ஆடுகள், மாடுகளும் கருகிக் கட்டையாய்க் கிடந்தன. புகை மண்டலம் கருப்பாக பரவி சாலையை மறைத்தது. மக்கள் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாமல் “ஐயோ,” “பாவிகளா” “இப்படி ஆயிடுச்சே” என்று பலவகையிலும் பதை பதைத்தபடி நின்றார்கள். பெரும் போர் நடந்த இடம் போல அந்த இடம் ஆகிவிட்டிருந்தது. அந்த வழியே

வந்த பல பேருந்துகளும் நின்று, அவற்றில் இருந்த மக்களும் இறங்கிப் பார்க்கத் துவங்கினார்கள். போலீசுக்கு மக்கள் கூட்டத்தை ஒழுங்கு செய்து பாதுகாப்பதே பெரும்பாடாக இருந்தது.

சரசரவென்று தொலைக்காட்சி வண்டிகளும் வரிசையாக வந்து நின்றன. சிறிது நேரத்தில் எல்லா தொலைக்காட்சிச் சேனல்களிலும் இந்த விபத்து பற்றிய செய்திகள் தெரியத் துவங்கின. சில மணி நேரங்களில் அச்சரப்பாக்கம் என்ற சிறிய கிராமம் இந்தியா முழுவதும் தெரிந்த ஊராகிவிட்டது. அந்தக் கிராம மக்களின் பேட்டிகளும் எல்லாச் சேனல்களிலும் ஒளிபரப்பாயின.

# 48

**ரா**ஜ்குமார் அமைதியாக நின்று சுற்றிலும் நடப்பதை கவனித்தான். அவன் மனம் வேதனையில் மூழ்கியது. கண்கள் கலங்கின. இது யாருடைய தவறு? இத்தனை உயிர்கள் நிமிடங்களில் பலியானதற்கு காரணம் யார்? அதிகாரத்தில் இருப்பவர்களின் பேராசைதான் முதல் காரணம். ஆரம்பத்தில், படித்த இளைஞர்களாக லட்சிய வேட்கையுடன் தான் அரசியலில் நுழைகிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றினால் தான் மக்களுக்கு சேவைகளை செய்யலாம், நல்ல மாற்றங்களை உருவாக்கலாம் என்றுதான் ஆட்சியைப் பிடிக்கிறார்கள். அதிகாரம் பணத்துக்கு வழிகாட்டி அவர்களைக் கெடுக்கிறது. மாற்றத்தை விரும்பியவர்களை, அதிகாரம் வேறு வழியில் மாற்றுகிறது. அவர்கள் பணக்காரர்களாக மாறுகிறார்கள். தம் நிலையைத் தக்கவைக்கவும், தம்மை அகற்ற நினைக்கும் எதிரிகளை சமாளிக்கவும் அவர்களுக்கு பணபலமும் அடியாள் பலமும் தேவைப்படுகிறது. தனக்குத் துணையாக வரக்கூடிய தவறான அதிகாரிகளைத் தேடுகிறார்கள். நேர்மையாக இருக்கும் நல்ல திறமையான அதிகாரிகளையும் தவறு செய்ய வைக்கிறார்கள். ஒரு முறை தவறு செய்த அதிகாரிகள், தூண்டிலில் சிக்கிய மீன்கள் ஆகி விடுகிறார்கள். அவர்கள் செய்த தவறுகளைச் சொல்லியே, அவர்களைப் பயங்காட்டி, தொடர்ந்து தவறுகளைச் செய்ய வைக்கிறார்கள் நாளடைவில் நல்ல அதிகாரிகளுக்கும் உணர்வுகள் மரத்துப்போய் ஊழல் அதிகாரிகளாகி விடுகிறார்கள். இந்த அதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லோரையும் பெரும் பண முதலைகளும், தொழில் அதிபர்களும் தங்களின் பிடிக்குள் வைத்துக்கொள்கிறார்கள். பிறகு இது ஒரு ஆரம்பமும் முடிவும் கண்டுபிடிக்க முடியாத வட்டமாகவும், மாயச் சுழலாகவும் ஆகிவிடுகிறது. எங்கே தொடங்குகிறது எங்கே முடிகிறது, யார் தவறுகளை ஆரம்பிக்கிறார்கள் என்பதே. தெரிவதில்லை.

அன்று அந்த இடத்தில் பலியானவர்களைப் பற்றி அவன் நினைத்துப்பார்த்தான். அந்த இளைஞர்களின் உடல்களுடன், அவர்களின் அன்பு, காதல், ஆசைக் கனவுகள் என எல்லாமே

எரிந்து போயின. அவர்கள் குறித்த அவர்களின் அன்னைகளின் ஆசைக்கனவுகள், அப்பாக்களின் திட்டங்கள் எல்லாம் தகர்ந்து கிடந்தன. அவர்கள் என்னவெல்லாம் செய்ய ஆசையுடன் அங்கே வந்திருப்பார்கள். எல்லாமே பாதியில் முடிந்துவிட்டனவே. எவ்வளவு ஆசையாய் பற்பல கனவுகளுடன் அவர்களை பெற்றோர் வளர்த்திருப்பார்கள் என்று நினைத்தபோது அவனுக்கு துக்கத்தை அடக்கமுடியவில்லை. அவன் நிற்கும்வரை ஆம்புலன்ஸ் அங்கேயே நின்றது. சிறிது நேரத்தில் கார்கள் சில சர் சர் என்று அங்கு வந்து நின்றன. அதிலிருந்து ஒரு அமைச்சர், துறைச் செயலாளர், ஒரு எஸ்–பி., ஒரு ஆர்டிஓ, ஒரு ஜட்ஜ் என்று பலரும் அழுதபடி இறங்கினார்கள். அங்கிருந்த போலீஸ் அதிகாரி விபரம் சொன்னதும், அவர்கள் ஆம்புலென்ஸ்களில் போய்ப்பார்த்தார்கள். சிவசூர்யன் அவர்களிடம் விவரங்களைச் சொன்னார். உடல்கள் இருந்த நிலையில் அவரவர் தம் குழந்தைகளை மிகவும் கஷ்டப்பட்டு, உடலில் இருந்த சில நகைகள், வாட்ச்கள் முதலியவற்றைக் கொண்டு அடையாளம் கண்டுபிடித்தார்கள். இளைஞர்களின் தாயார்கள் கதறி அழுததைப் பார்த்த மக்களில் பலரும் உடைந்துபோயினர். ஹசன், காதரை போலீஸ் மட்டும் தேடினார்கள். அவர்களுக்காக கண்ணீர் விட ஒருவரும் இல்லை.

கனத்த மனதுடன், கண்களை துடைத்தபடி ராஜ்குமார் ஆம்புலன்சில் ஏறினான். அவனுக்கு மயக்கம் வருவது போல் உணர்ந்தான்.

அன்று இரவு முழுவதும் சென்னையிலும் சுற்றி இந்த பகுதிகளிலும் மழை விடிய விடிய பெய்து தீர்த்தது. மறுநாள் காலையில் மருத்துவமனையில் ராஜ்குமார் கண்விழித்தபோது அவன் எதிரில் Boss அமைதியாக உட்கார்ந்து அவனையே பார்த்தபடி இருந்தார். அப்போது மணி 10.45 ஆகியிருந்தது. “இதெல்லாம் நடக்கக் கூடாதுன்னு தான் நான் உன்னை கொஞ்சநாள் பெங்களூரில் போய் இருன்னு சொன்னேன்! நீ கேட்கலையே!” அவர் முகத்தில் வேதனை.

அவன் சிரித்தான். “Boss!” ரசூல் கொலையானதும், மருத்துவமனையில் காஷ்மீர்காரங்களை பாத்ததும் எனக்கு ஏதோ விபரீதமா நடக்கப் போகுதுன்னு தோணுச்சு! தொடர்ந்து விசாரிச்சா, அவனுக குண்டு வச்சிட்டு ஈசிஆர் ரோடில தப்பிச்சுப் போறதாகவும் தெரிஞ்சுச்சு! அதான் பின்னாடியே போனேன்! “சரி! இப்ப என்ன நிலைமை?”

அவன் மிகவும் களைப்பாக இருந்ததால் பலவீனமான குரலில் பேசினான்.

“டாப் லெவல்ல நெறய பேரை மாத்திட்டாங்க. புது செகரட்டரி, அது அமைச்சர், இன்னும் நெறய மாத்தியிருக்காங்கடா!”

“அப்படியா Boss?” நம்ம உழைப்புக்கு பலன் கிடைச்சிருக்கு”

“ம்! ஆனால் எதுவுமே மாறாது. அதே வேலைகளை வேற ஆட்கள் மூலம் செய்வாங்க. நாமும் நமது அதே வேலையை தொடர்ந்து செய்வோம்! நம் கடன் பணி செய்து இப்படி கிடப்பதே!”

Boss சிரித்தார். தொடர்ந்து,

“சரி! நீ இன்னிக்கு சாயங்காலம் டிஸ் சார்ஜ் ஆகிறாய். நான் இங்கே இருந்து உன்னை என் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகலாம்னு இருக்கேன். வீட்டில ஒரு வாரம் இருந்துட்டு பிறகு உன் அறைக்கு நீ போய்க்கலாம்.”

Boss அவனை தட்டிக்கொடுத்தார். ராஜ்குமாருக்கு அது மிகவும் ஆறுதலாகவும் மனதுக்கு தெம்பாகவும் இருந்தது.

**போ**லீஸ் கமிஷனர் தன் சகாக்களுடன் மருத்துவமனைக்கு நேரில் வந்து ராஜ்குமாருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார். அவனுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கவேண்டும் என்று தலைமை மருத்துவரிடம் கேட்டுக்கொண்டார். மாநகருக்கு வரவிருந்த பயரங்கரமான ஆபத்து நீங்கி மக்கள் காப்பாற்றப்பட்டதில் அவருக்குப் பெரிய நிம்மதி. இந்த முயற்சியில் தன் உயிருக்கு ஆபத்து இருந்தும் வெகு துணிச்சலாக செயல்பட்ட ராஜ்குமாருக்கு அவர் பாராட்டுச் சான்றிதழ் அளித்தார்.

அன்றைய செய்தித் தாள்களில் இறந்துபோன இரண்டு தீவிரவாதிகளின் புகைப்படங்களுடன் அவர்கள் எவ்வளவு கொடியவர்கள் என்பது பற்றிய விபரங்கள் வெளிவந்திருந்தன. அவர்கள் பற்றி இந்திய இராணுவ அதிகாரிகளும் பல பயங்கரமான தகவல்களைத் தெரிவித்திருந்தார்கள். அதன்படி அவர்களின் உண்மையான பெயர்கள் ரியாஸ் அகமது சயிதி மற்றும் சலீம் இஸ்மாயில் அஷ்பாக் என்பதாகும். அவர்கள் சாதாரண தீவிரவாதிகள் இல்லை என்பதும் தீவிரவாதக் குழுவின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் என்பதும் தெரிந்தது. அவர்கள் இவ்வளவு தூரம் ஊடுருவி வந்திருந்ததும். இங்கே மணல் மாஃபியாவினரும் அவர்களுக்கு உதவி செய்திருப்பதையும் அறிந்து அரசாங்கமே அதிர்ச்சியடைந்தது.

முதலமைச்சர் உடனே ஒரு அவசரக்கூட்டம் நடத்தி அதில் அமைச்சர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகள் தம் துறை அதிகாரிகளை விழிப்புடன் கண்காணிக்கவேண்டும் என்றும், அவர்களும் தம்முடன் தொடர்பில் இருப்பவர்களைப் பற்றி முழு விபரமும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். தலைமைச் செயலாளர், அதை வலியுறுத்திப் பல சுற்றறிக்கைகளை எல்லாத் துறைகளுக்கும் அனுப்பினார்.

அடுத்த ஒரு மாதம் முழுவதும் எல்லாப் பத்திரிகைகளிலும் இதுபற்றிய செய்திகளும், கட்டுரைகளும் கருத்துகளும் வந்தன.

# 49

ஒரு மாதம் போனபின், ஒரு நாள்.

அதே ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறை.

மாசிலாமணி சிகரெட் புகைத்தபடி சோபாவில் உட்கார்ந்திருந்தார். அவரின் வலதுபுறம் ஒரு சோபாவில் புதிய செயலாளர் இருந்தார். மாசிலாமணிக்கு எதிரிலிருந்த சோபாவில் புதிதாக ஒருவர் இருந்தார். அவர் கழுத்தில் தடிமனான முறுக்கு தங்கச் சங்கிலியும் கை விரல்களில் அகன்ற பருமனான மோதிரங்களும் பளிச்சென் தெரிந்தன. சட்டைப் பாக்கெட்டில் ஒரு கடவுள் படம் இருப்பது தெரிந்தது. அவர் அணிந்திருந்த வெள்ளை வேட்டி, சட்டையும், தங்க நகைகளும் அவரின் கறுத்த உடம்பிற்கு எதிராக பளிச்சென தெரிந்தன. அவர் ஒரு பெரிய ஒப்பந்தகாரர்; மணல் வியாபாரியும் கூட.

மாசிலாமணி அந்த ஆளை தீர்க்கமாகப் பார்த்தார். "கோவிந்தராஜ், நீங்க ஒண்ணும் நமக்கு புதிய ஆள் இல்லை. உங்களை எனக்கு முன்னாலயே தெரியும். என்ன, அந்த நல்லதம்பி தான் ரெட்டிகிட்ட உங்களைப் பத்தி தப்பா சொல்லி, கான்ட்ராக்டை உங்களுக்கு கிடைக்காமல் செஞ்சுட்டாரு. இப்ப எல்லாம் க்ளியர் ஆயிடுச்சு. நோ ப்ராப்ளம்!"

கோவிந்தராஜன் என்ற அந்த நபர் புன்னகை செய்தார். டீபாயில் ஏற்கெனவே அவர் எடுத்து வைத்திருந்து ரெட் லேபிள் விஸ்கி சிரித்துக்கொண்டிருந்தது.

"அண்ணன் பாத்து அந்த வேலையை எல்லாம் அப்படியே நானே பாக்கிற மாதிரி பண்ணிடுங்க. நல்லதம்பி என்ன செஞ்சானோ அதைக் காட்டிலும் கூடுதலா நான் பண்றேன். அட்வான்ஸ் இப்பவே தந்திடுறேன். நீங்க தான் மனசு வைக்கணும்!" ரெட்டியை பார்த்து போறதுக்கு நான் ஏற்பாடு செஞ்சிருக்கேன்."

மாசிலாமணி புது செயலாளரைப் பார்த்தார். "சார்! உங்களுக்கு எல்லா விபரமும் தெரியும். உங்களையும் கோவிந்தராஜன் கவனிச்சுடுவார். எல்லா வேலைகளையும், நல்லதம்பி விட்ட இடத்திலிருந்து இவரே செய்யுற மாதிரி ஆர்டர் குடுத்துடுங்க. அமைச்சர்கிட்டே நான் ஏற்கெனவே பேசிட்டேன். நீங்க இன்னிக்கு பேசிக் கேட்டுக்குங்க."

சில நிமிடங்களில் அட்வான்ஸ் பெட்டிகள் வந்து சேர்ந்தன.

இந்தச் சந்திப்பு முடிந்ததும் முதலில் செயலாளர் வெளியில் வந்தார். இவரும் வெளியில், வட இந்தியாவிலிருந்து வந்தவர்தான். மிகவும் நம்பிக்கையான அதிகாரி என்று பெயர். சிறிதுநேரம் கழித்து கோவிந்தராஜன் கீழே வந்தார். செயலாளர், அவர் கீழே வரும் வரை காத்திருந்தார். அவர் கீழே வந்ததும் செயலாளர் அவர் அருகில் வந்து "மிஸ்டர் கோவிந்தராஜ், ஒரு விஷயம்!" என்றார்.

கோவிந்தராஜன் "சொல்லுங்க சார்!" என்று பவ்யம் காட்டினார். "ஒண்ணுமில்லை. என் பையன் ஒரு மினி கூப்பர் கார் வேணும்னு ரொம்ப தொந்தரவு பண்றான். ஒண்ணு அரேன்ஜ் பண்ண முடியுமா?"

சில வினாடிகள் யோசித்த கோவிந்தராஜன், "அதுக்கென்ன சார் செஞ்சுடலாம்! நான் இன்னிக்கே சொல்லிடுறேன். ஆர்டர் கையில் கிடைக்கும் போது மறு நிமிடம் கார் உங்க வீட்டு போர்டிகோவில் நிற்கும். நீங்க பையனோட ஷோ ரூம் போய் புக் மட்டும் பண்ணிடுங்க."

அவர் மனதிலும் ஏற்கெனவே பல கணக்குகளைப் போட்டு வைத்திருந்தார். அதன்படி இது அவரின் பட்ஜெட்டுக்கு உள்ளாகவே இருந்தது.

"லைசன்ஸ், பேன்சி நம்பர் எல்லாத்துக்கும் நம்ப ஆர்டிஓகிட்டே சொல்லிடலாம். எல்லாம் நம்ப ஆள் தான்! ஒண்ணும் பிரச்னை இல்லை."

"வெரிகுட்!" என்றபடி செயலாளர் தன் காரில் ஏறினார். அது அரசாங்கத்தால் அவருக்கு வேலைக்காக கொடுக்கப்பட்டிருந்த வெள்ளை நிற புதிய கார். சொந்தத்தில் அவருக்கு ஏற்கெனவே இரண்டு கார்கள் இருந்தன.

**இ**ன்னும் போட வேண்டிய சாலைகளும், கட்ட வேண்டிய பாலங்களும் நிறைய உள்ளன. ஆறுகளிலும் கடற்கரைகளிலும் வெட்டி எடுத்து விற்க ஏராளமாக மணல் உள்ளது. பல குன்றுகளும் மலைகளும் குவாரிகளாக மாறுவதற்கு தயாராக இருக்கின்றன. பன்னாட்டுக் கம்பெனிகளும், அவற்றுக்கு ஏவல் செய்வதற்குத் தயாராக நம் முதலாளிகளும் இவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்து பட்டுக்கம்பளம் விரிக்க நம் தலைவர்களும் அதிகாரிகளும் இவர்கள் எல்லோருக்கும் உழைத்து ஓடாய்ப் போவதற்கு நம் மக்களும் தயாராக இருக்கிறார்கள்.

எனவே, சந்திப்புக்கள் தொடரும்.

○

# சந்திப்



SSP
ஸ்ரீ செண்பகா பதிப்பக

